## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

(தொலைத் தொடர் கல்வி இயக்ககம்)

திருநெல்வேலி – 12

# புனைகதையும் உரைநடையும்

முதுகலைத் தமிழ் முதலாமாண்டு

**முனைவர் மு.ஜெகதீசன்**

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை,

திருவள்ளுவர் கல்லூரி,

பாபநாசம் – 627 425,

திருநெல்வேலி மாவட்டம்.

# புனைகதையும் உரைநடையும்

## பொருளடக்கம்


அலகு 1 – சிறுகதை

பாரதி கிருஷ்ணகுமார் – அப்பத்தா

சிந்தனைச் சிறுகதைகள் (13L)

அலகு 2 – சிறுகதையும் புதினமும்

இரா.நடராஜன் – ஆயிஷா

ஜெயமோகன் – பனிமனிதன் (12L)

அலகு 3 – புதினம்

பொன்னீலன் – பிச்சிப்பூ

ராஜம் கிருஷ்ணன் – வனதேவியின் மைந்தர்கள் (14L)

அலகு 4 – உரைநடை

திரு.வி.க. – முருகன் அல்லது அழகு

தொ.பரமசிவன் – பண்பாட்டு அசைவுகள் (11L)

அலகு 5 – உரைநடை

நா.வானமாமலை – உரைநடை வளர்ச்சி

எஸ். ராமகிருஷ்ணன் – சிறியன சிந்தியாதான் (10L)

(Totel 60L)

## அலகு – 1

# அப்பத்தா

**- பாரதி கிருஷ்ணகுமார்**

மற்றவர்களின் திறமைகளைக் கண்டறியத் தனி ஆற்றல் வேண்டும். கண்டறிந்த திறமைகளைக் கொண்டாட, ரொம்பப் பெரிய மனது வேண்டும். எழுத்தாளர், கந்தர்வனுக்கு அது எப்போதும் இருந்தது. அது விஷயத்தில், மானுடக் களங்கம் சிறிதுமற்ற கந்தர்வனாகவே அவர் எப்போதும் இருந்தார்.

எழுதுவதற்கு ஏகப்பட்டது இருக்கிறது. விதவிதமான களங்களும், மனிதர்களுமாக விரிந்த சமவெளியொன்றை எனக்குப் பாத்தியதையாக்கி இருக்கிறது வாழ்க்கை. அந்தப் பரந்த சமவெளியிலும்கூட மேடு பள்ளங்கள், பறவைகள், தேவதைகள், விரியன் பாம்புக் குட்டிகள், வேதாளங்கள், பூக்காத காய்க்காத மலட்டு முருங்கை மரங்கள், கனி குலுங்கும் சோலைகள், சுனைகள், சுடுகாடுகள் என்று எல்லாமும் காணக்கிடைக்கிறது. நான் இயங்கிக் கொண்டே, நகர்ந்து கொண்டே இருப்பதாக எனக்குத் தோன்றுவது பிரமை தான் போலிக்கிறது. பிறந்த இடத்திலேயே நிற்பதாக, சமயங்களில் தோன்றுகிறது. களமும், காட்சியும், கதாபாத்திரங்களும் மாறிக் கொண்டே இருப்பது மட்டுமே துல்லியமாகத் தெரிகிறது. நடந்து கொண்டே யிருக்கிறது. நாடகம் எப்போது வேண்டுமானாலும் திரை விழலாம். அதுவரை, மனம் ஒப்புகிற வேலைகளைச் செய்து கொண்டே இருந்தாகணும் வாழ்வின் ஒற்றை விருப்பம் அது மட்டும் தான் என்று பாரதி கிருஷ்ணகுமார் தம் முன்னுரையில் சுட்டுகிறார்.

அப்பத்தா சிறுகதையும் அத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளும் சிறந்த கதை சொல்லி என்பதை நிரூபணம் செய்கிறது. பல்வேறு இதழ்களில் வெளியிடப்பட்டு வந்த சிறுகதைகளைத் தொகுத்து அப்பத்தா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது. இது அவரது முதல் சிறுகதைத் தொகுதியாகும். நான்கு விருதுகளைப் பெற்ற இத்தொகுதி வாசகனின் பயணத்தில் தனித்துவமான அனுபவங்களைத் தரவல்லன. அம்மாவும், அந்தோன் சேக்கவும், அறம் வளர்ந்த நாதன், ஊத்து, தெய்வநாயகம் சார், லுங்கி, அப்பத்தா, கிணறு, கோடி, துறவு, கல்பனா ஆகிய கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. அக் கதைகளின் சுருக்கங்கள் வருமாறு:

**அம்மாவும், அந்தோன் சேக்கவும்** அம்மா ஒரு முறை கூட, தன் தேவைகளுக்காகப் பிறர் உதவியை நாடியது கிடையாது. அந்த ராத்திரியில் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டு, எழுப்பியது ஆச்சர்யமாக இருந்தது. ரொம்பத் தொண்டையெல்லாங் காஞ்சு போச்சு, எத்திரிக்க முடியாம தாகம் அமுக்குது… தம்பீ, தண்ணீ கொண்டாடா என்றாள்.. வீட்டில் முதல் ஆளாய் எழுந்திருக்கும் அம்மா ஏழு மணிக்குப் பிறகும் உறங்குவதால் அப்பா அதிர்ந்து போயிருந்தார். தலையணையில் இருந்த தலை இறங்கி, அம்மா வினோதமாகப் படுத்திருப்பதாக வேலம்மா வந்து சொன்னதும் எல்லாம் துயரம் மிக்கதாக மாறிவிட்டது. டாக்டர் உறுதி செய்ததும், வேலைகள் துவங்கி விட்டன.

உடனே குளிப்பாட்டி, சுத்தம் செய்து வைப்பதற்காக அழுதபடி பெண்கள் கூட்டம் கொல்லைப் புறத்தில் சேர்ந்திருந்தது. எல்லோருக்கும் ஆள் அனுப்புகிற வேலைக்கு ஆள் தேடிக் கொண்டிருந்தார்கள். இரண்டாவது தெருவில் இருந்த சித்தி, அம்மாவின்

முகத்தோடு முகம் வைத்து அழுது கொண்டிருந்தாள். “எப்படியும் சாயங்காலம் அஞ்சு, அஞ்சரைக்கு எழுத்துரணும். அக்கம் பக்கத்துல், குழந்தைங்க நிறைய இருக்கு. இப்ப கோவில் பூட்டுனாலும், ராத்திரி சாமிக்குச் சாப்பாடு வெக்கணும் குழந்தைகளையும், சாமியையும் பட்டினி போட்டுறக் கூடாது” என்றார் மாமா.

”தலைமுடி இறக்கணும் தம்பி, என்று சொல்லிவிட்டு சித்தப்பா கூர்ந்து பார்த்தார். சம்மதம் என்று தலையசைத்தேன். எங்க முடியாதுன்னு சொல்லிருவியோன்னு பயந்தேன். நம்ம புள்ளைங்க பாசமானதுங்க” என்று சொல்லிக் கொண்டே போனார். ஏதோ வேலையாக, வீட்டுக்குள் போவது மாதிரி, அம்மாவைப் பார்க்கப் போனேன். அறையின் மய்யத்தில் அம்மா. என்ன வேலை சொன்னாலும் உடனே அதைச் செய்யத் தயாராக இருப்பதாக, இருந்தது முகம். வாயின் வலது புறமிருந்து லேசாகப் பால் கசிந்து கொண்டிருந்தது. இடது நாசியின் முகப்பில் வேர்வைத் துளிகள் மாதிரி ரத்தம் பூத்திருந்தது. என்னை பார்த்த அத்தை. என்னைக் காட்டி அம்மாவிடம் ஏதோ நியாயம் கேட்டது. அத்தையின் அழுகைக்குள் அமிழ்ந்து மூழ்கியது அவளது நியாயம். என்ன வேலை சொன்னாலும் … அதிலும் அப்பா என்ன சொன்னாலும் உடனே ஒப்புக்கொண்டு சம்மதிக்கிற அதே முகத்துடன் அம்மா.

ஒரு முறைகூட மறுத்துப் பேசியதில்லை. அம்மா அக்காவுக்கும், எனக்கும் அது தீராத ஆச்சர்யம். அம்மா மாதிரி சொன்னதை மட்டும் செய்கிற ஒரு பெண் கிடைத்தால், அப்பா மாதிரி நிறைய சம்பாதிக்க முடியும் என்று உறவில், எல்லோரும் சொன்னார்கள்.

அக்காவின் திருமணத்திற்குப் பிறகு, எனக்கும் அப்பாவுக்கும் இடையில் அதிகரித்த இடைவெளிகள் வீட்டின் நிம்மதியைச் சீர்குலைத்தது.

வலி என்பது வலியைப் பற்றிய ஓர் உயிர்த்துடிப்புள்ள எண்ணமே ஆகும். மனவலிமையின் துணை கொண்டு அந்த எண்ணத்தை விட்டொழித்தால் வலி மறைந்து போகும். என்று அறிந்து உணர்ந்த டாக்டர் ஆந்திரேய் எபிமிச்சும்.. மூலக்கரை மயானத்தில் திரிந்தார்கள்.

கதை முடிந்ததும், எல்லோரும் மௌமாக கலைந்து போனார்கள். நான் மீண்டும் அம்மாவிடம் வந்தேன். இறந்து கிடந்தது அம்மாவே அல்ல. அச்சு முறிந்து கிடந்த அப்பாவின் அதிகாரம்.

**அறம் வளர்த்த நாதன்** அவன் பெயரே, அவனுக்கு விருப்பமானதில்லை. அந்தப் பெயரைத் தனக்கு வைத்ததற்காக, தன் அப்பாவை எப்போதும் கரித்துக் கொட்டுவான். பள்ளி நாட்களில் இருந்து, பணிக்குச் சேர்ந்த பின்னும் கூட, பெயரில் உள்ள முதல் எழுத்தான A காரணமாக தான் முதலிலேயே அழைக்கப்படுவதாகவும், அதனாலேயே தனக்குக் குறைந்த மதிப்பெண்கள் தரப்படுவதாகவும், குறைபட்டுக் கொள்வான். மையமான M என்கிற எழுத்தில் துவங்குவது மாதிரி பெயர் முடியுமென்றும், திடமாக நம்பினான். அதைவிடவும், எல்லா மனுக்களிலும், ஆங்கிலத்தில் பெயரை எழுதுவதற்குப் பதினைந்து கட்டங்களே இருப்பதாகவும், தம் பெயரில் பத்தொன்பது எழுத்துக்கள் இருப்பது தனக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பதாகவும் உணர்ந்திருந்தான். ரயிலில் முன் பதிவு செய்து, பயணம் புறப்படுகிறபோது ரயில் பெட்டியில் ஒட்டப்படும் அட்டவணையில் ARAM

VALARTHA என்று மட்டுமே பெயர் எழுதப்பட்டிருப்பது அவனைச் சங்கடப்படுத்தியது. பரிசோதகர் வந்து, எல்லார் முன்பும் ARAM VALARTHA என்று கூவியதும், இவனே பதறி முழுப் பெயரையும் சொல்லுகிற போது நிலை குலைந்து போவான். உறவினர்களும் நண்பர்களும் தன்னை AVN என்று கூப்பிட வேண்டும் என்று மனதார விரும்பினான். மிக முக்கியமானவர்களையும், தலைவர்களையும் இனிஷியல் சொல்லித்தான் அழைப்பார்கள் என்கிற தவறான எண்ணமும் அவனுக்கு இருந்தது. ஆபிஸில் தனக்குக் கீழே பணிபுரிகிறவர்கள் தன்னை AVN சார் என்று அழைக்க வேண்டும் என்று கூட உத்தரவிட்டிருந்தான். அது ஒரு போதும் அமலுக்கு வரவில்லை. அமலாக்க மேற்கொண்ட முயற்சிகளும் பலன் தரவில்லை. சார் என்று மட்டுமே கூப்பிட்டார்கள். அதை எப்படி எதிர்ப்பது என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. மற்ற அனைவரும், அறம் வளர்த்த நாதன் என்று அழைப்பது தன்னை அவமானம் செய்வதற்காகவே என்றும் கருதினான். தபால் காரர், பால்காரர், கேபிள் காரர் என்று தேடி வந்த எல்லாருமே சொல்லி வைத்த மாதிரி முழுசாக அறம் வளர்த்த நாதன் என்று கூப்பிடுவது மேலும் இம்சையுறச் செய்தது.

விதி அவன் பாட்டியின் வடிவில் அவனைத் துரத்தியது. கொழந்தைகளுக்குச் சாமி போது எதுக்கு வைக்கிறது? ....நல்லா முழுசா, வாயார அறம் வளர்த்த நாதன்னு கூப்பிடுங்க... வெட்டி வெட்டி சின்னச் சின்னப் பேராக் கூப்பிடறதுக்கு அதென்ன நாய்குட்டியா? என்று சண்டைக்குப் போய் விடுவாள். தன் பெயரை எப்போதும் நீளமானதாகவே ஆக்கி விட்டுப் போன பாட்டியின் மீது பிரியங்களைக் கடந்த கோபம் எப்போதும் இருந்தது.

ரொம்பப் பெரிய பேரா இருக்கு என்று சொன்னால்கூட சமதானப்பட்டிருப்பான். ரொம்பச் சின்னப் பேரு சார் இவ்வளவு சின்னதாக யாருக்கும் பேர் வைக்க முடியாது என்கிற கிண்டல் மட்டுமே. இதுவரை வாய்த்த வரம். அவனைப் பிரியமுடன் அறம் என்று கூப்பிடுகிற ஒரே ஆளாக நான் மட்டுமே இருந்தேன். அதுவே என்னிடத்தில் தீராத கிளர்ச்சியையும் ஈடுபாட்டையும் அவனுக்குத் தந்திருக்க வேண்டும். வேற பிரச்சனைங்க என்று காரணம் சொன்னால், எதிர் வினைகள் முற்றிலும் வேறு வேறாக இருந்தது. அது சரி எத்திரி குழந்தைங்க? என்பதுதான் முதல் கேள்வி. இரண்டு என்றதும் கேட்பவர் முகம் தச கோணலாகி விடும். குழந்தைங்கதான் முக்கியம்.. என்று கனிவுடன் உபதேசம் துவங்கும்.

பிணக்குகள் ஏதுவும் படுக்கை அறைக்குள் நுழைந்ததில்லை. ஊடலுக்குப் பிந்திய காமத்தில், ஊடலின் கரையாத வண்டல் என்று எதுவுமே மிஞ்சியதில்லை. இளம் பச்சை நிறத்தில் இருந்த படுக்கை அறையின் சுவர்களும், திரைச் சீலைகளும், விரிப்புகளும் வசீகரமானவை. எல்லா இடைவெளிகளையும் இட்டு நிரப்புகிற ஒரு காற்று அந்த அறைக்குள் எப்போதும் உயிர்ப்புடன் சுழன்று கொண்டே இருந்தது. அன்பைத் தவிர, வேறு எதுவும் தெரிந்திராத அப்பாவின் தனி அறையாக இருந்தது. வீட்டு மாப்பிள்ளையாக இவன் வந்ததும், அப்பா தன் புத்தகங்களுடன் ஹாலுக்கு இடம் மாறிக் கொண்டார். இடமாற்றம் ஒன்றரை மாதமே அப்பாவை விட்டு வைத்தது. என் திருமணம் நடந்த சந்தோசத்தில் தான் அப்பா இறந்தார் என்று அம்மா சொல்லிக் கொண்டாள். குடியிருக்கும் வீட்டைத் தவிர வேறொன்றும் இல்லை. வாங்கும் சம்பளம் அவனுக்கு சரியாக இருந்தது.

ஆபிஸில் நடந்த கையாடலில், குற்றமற்ற தானும் பணம் கட்ட வேண்டும் என்றான். கையாடலில் நடந்த அலுவலகக் கோப்புகளில் நால்வரில் ஒருவராகத் தானும் கையெழுத்துப் போட்டதாகவும், மற்ற மூவரும் தன்னை மட்டும் ஏமாற்றி விட்டுக் கையாடல் செய்து விட்டதாகவும் புலம்பினான். தப்பு செய்யாதவங்க எதுக்குப் பணம் கட்ட வேண்டும். எதுத்துப் போராடிப் பாத்துரலாம் என்ற போது அறம் வளர்த்த நாதன் அறம் வளர்த்த நாதன், அறம் வளர்த்த நாதன் ன்னு தானே முணு தடவை கூப்பிடுவான். உசுரு போயிரும். இந்த வயசுல கச்சேரி, கோர்ட்டுன்னு போயி நிக்க முடியாது என்று பேசிக் கொண்டே இருந்தவன். முட்டுச் சந்தில் போய் நின்றவன் மாதிரி பேச்சை நிறுத்திக் கொண்டான். தன் பெயரைத் தானே மூன்று முறை முழுமையாகச் சொன்னது. நினைவுக்கு வந்து பதறினான். பகல் முழுவதும் இதே பேச்சுத்தான் சாயங்காலம் வீட்டை விற்று விட அம்மா சம்மதித்திருந்தாள். வீட்டை விக்கக் கூடாது என்றேன் நான் உங்கம்மாவே சரின்னப்புறம் நீ யாரு? என்றான்.

எல்லாக் காயங்களையும் மருந்தின்றி குணப்படுத்தும் மருத்துவம், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் எப்போதும் இருக்கிறது. நொடிகளின் அந்நதரங்கமான இடைவெளிகளில் எல்லாத் துயரங்களும் கரைக்கப்பட்டுவிடும். இயற்கை நிகழ்த்தும் தடையற்ற பேரின்பம், எல்லா விதச் சிறுமைகளையும் அடித்துக் கொண்டு போகிறது. மற்றவர்களும் அது எப்படியோ? எனக்கும், அவனுக்கும் அது அப்படித்தான் இருந்தது. அன்று வரை.

மாலையில் வெளியே போனவன், பின்னிரவில்தான் வீடு திரும்பினான். பேசாமல், உடை மாற்றிக் கொள்ளாமல் படுத்துக் கொண்டான். முத்தமிட்டுக் கொள்ளாமல் உறங்கப் போனதேயில்லை. முத்தமிடும் வரை காத்திருக்காமல், முகம் திருப்பிப் படுத்துக் கிடந்தவனை அணைத்துப்பின் கழுத்தில் முத்தமிட்டேன். இளம் சூடாய் இருந்தான். அது அவனுக்கு மட்டுமேயான சூடு. என் குளிர்ச்சியும், அவனது வெப்பமும் ஒன்றுக்கொன்று இசைவானவை. ஒன்றையொன்ற அவிக்காது, வீழ்த்தாது, இரட்டை நாதஸ்வர இசையருவியாய்ப் பயணிப்பது தனித்துவமானது. மெதுவாக, என் பக்கம் திருப்பினேன். திரும்பினான். உதடுகளில் முத்தமிட்டேன். உதடு குளர்ந்து விறைத்திருந்தது. அரை இருட்டில், அவன் கண்களைத் தேடினேன். மூடி இருந்தது. மூர்க்கமாக, இயங்கத் துவங்கினான். எதிர்ப்பேதும் காட்டவில்லை. முத்தமிட்டான். உதட்டின் உறைந்த குளிர்ச்சி எனக்குள் இறங்கியது. என் மீதான கோபத்தைத் தீர்க்கும் வன்மம் அவனது அசைவுகளில் வெளிப்பட்டது. வலித்தது. திகைப்பில், இருபுறமும் வீழ்ந்த கிடந்த கைகளை, அவனது சினத்தைச் சிறுமைப்படுத்துவதற்காகவே ஆரத் தழுவினேன்.

சத்தம் போடாத.... குழந்தைங்க தூங்குது என்ற இயந்திரம்.. பிறகு அதுவே சந்தோஷத்தக் கட்டுப்படுத்திக்கத் தெரியணும் என்றும் சொன்னது.

**ஊத்து** அத்தியூர் கூட்டு ரோட்டுக்கு வடக்கே முப்பது ஏக்கர் புஞ்சைக்காடு சல்லிசாகக் கிடைத்தது. நாப்பது அம்பது அடியில் தண்ணீர் தட்டுப்படுமென்றார்கள். வேப்ப மூடு, கல்லூர், மல்லாங்கிணறு, சூரன்பட்டி, சுத்தமடம் என்று ஐந்து ஊர் ஆட்கள் வந்து நீரோட்டம் பார்த்தும், பெரிய்ய பள்ளங்கள் தான் மிச்சம். மூடுவதற்கான செலவு மூச்சோடு

சேர்ந்து கொண்டது. அப்பா விடுவதாக இல்லை. நீரோட்டம் பார்க்க ஆள் தேடிக் கொண்டேயிருந்தார். பக்கவாதம் வந்து படுத்துக் கிடந்த தாத்தா, குழறிய மொழியில், புஞ்சைக் காட்டிற்குத் தன்னை, அழைத்துப் போகச் சொன்னார்.

பத்தாவது அடியில் தரை நசநசத்தது. கையில் இருந்த கடப்பாரை விலகத் தண்ணீர் தலை காட்டியது. மேட்டில் நின்றவர்களைக் கூடத் திரும்பிப் பார்க்க வைத்து நர்த்தனமாடியது. மேஸ்திரி கும்பிட்டார். வேப்ப மரத்தின் பின்புறம் இருந்த அப்பா, கண்கள் விரிய இரண்டு கைகளையும் தலைக்கு மேல் நிறுத்தி, தாயே மீனாட்சி என்று கூவினார். மதியம் வரை சிலுப்பிக் கொண்டிருந்து விட்டு, மாலையான போதுதான் தன் தரைக்கு இறங்கியது. தண்ணீர் ஓர் அமானுஷ்ய உயிர்த் தாகத்துடன் தண்ணீரைப் பருகுவது போன்ற ஓசையை உருவாக்கிய படியே, தண்ணீர் ஏழடிக்கு ஏறியது. கழுகுமலை போய் கல் வாங்கி வந்து, சுற்றுச்சுவர் பதித்ததில் படித்துறை பூட்டிய சிறுகுளம் போலானது கிணறு. மழைக்காலத்தில், மோட்டார் போடாத வெள்ளாமை என்பது முன்னூறு பஞ்சாயத்துக்கும் மூணு வருட அதிசயம்.

கிணற்றில் விட்ட விறால் குஞ்சுகள், வளர்ந்த அழிச்சாட்டியம் செய்ய ஆரம்பித்து விட்டன. அத்தியூர் ஜனமெல்லாம் குடிநீருக்கு வந்தார்கள். எல்லாச் சாதி ஆளுங்களும் ஒண்ணாத் தண்ணி எடுக்கலாம் என்று அப்பா சொல்லி விட்டார். அதுதான் அப்பா. அப்படியெல்லாம் ஒண்ணுமண்ணா விட்டுறக் கூடாதுங்கன்னு ஊர்க்காரர்கள் என்று கூட்டம் வந்தது. வேத்துமையெல்லாம் ஒன்னும் இல்லைன்னு புத்தகத்தில போட்டிருக்கு படிச்சுப்பாருங்க

என்று புத்தகத்தை ஆயுதமாக்கிக் கொடுத்தார். அடுத்த முறை வந்தாலும் அதுதான் ஆயுதம் என்றார்.

இரண்டாவது வருசம் மழையின்றி பஞ்சம் வந்த போது கூட தண்ணீர் இறங்கவே இல்லை. விறால்கள் தண்ணிக்கு மேலே தாளம் போடுவதை ஒவ்வொண்ணும் தொடத் தண்டி என்று பேச்சாய் இருந்தது. அண்ணாச்சி வந்து கிணற்றைப் பார்த்தார். கண்கள் சுழலப் பார்த்துக் கொண்டே இருந்தார். மீன ஏலத்துக்கு விட்டா ஒரு காசு வரும் அந்த காசிலேயே பத்தடிக்குத் தோண்டீட்டா, தண்ணிய பாட்டில்ல போட்டுப் பெருங்காசு பாத்துறலாம். என்றார். நாமளே மீன் பிடிச்சு வித்தா இன்னும் கூடக் காசு கிடைக்கும் என்றாள் பெரியம்மா. யாரு போயி தலையில தூக்கி, கடை போட்டு விக்குதாம்? என்று வந்த போது, தாத்தா வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. பெரியவரு என்ன சொல்றார்ன்னு கேப்பம் என்று அப்பா சொன்னதும் பெரியம்மா அப்பாவை ஜாடையில் கூப்பிட்டபடியே தனியே சென்றாள்.

ஏலத்தொகை பெரிதுதான் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். விறால் குஞ்சுகளில் பெரிய மீன்களைப் பிடிக்க முடியவில்லை. தூரு வாரி மீனைப் பிடிப்பதென்று முடிவானது. பருத்தி அரைக்கிற குழவியைச் சாக்கில் சுற்றி, ஊற்றுக் கண்ணை அடைக்க, ஊற்றுத் தண்ணீர் மட்டுப்பட்டது. இளஞ்சகதியில் மண்ணை அளைய, அளைய ஜோடியாக விறால்கள் அகப்பட்டன. தண்ணீர் பிதுங்க ஆரம்பித்தது. குழவி சரிந்தது. கண்மூடித் திறப்பதற்குள் கணுக்கால் உயர்ந்தது. மண் சரிந்து உள்வாங்கியது. தண்ணீர் உள்வாங்கிப் பின்னேறியது. ஊற்றுக் கண்ணுள் வெப்பமாய் ஒரு காற்று தெறித்தது. மண்

பொறுக்குடன் காற்று வெளியேறிது. பெரியம்மாவின் பெரு மூச்சாய், தாத்தாவின் இறுதி மூச்சாய் தண்ணீரைப் போலவே வெப்பமும் விரிந்தது.

**அப்பத்தா** உப்புக் காகிதத்தைக் கண்ணாடியில் அழுத்தித் தேய்க்கிற சத்தம் போல் இருந்தது. நெஞ்சுக் குழிக்கும், தொண்டைக் குழிக்கும் உயிர் ஊசாடியது. ஆறு நாளாய் மல்லுக்கட்டுகிறது அப்பத்தா. காய்ச்சல், தலைவலி என்று ஒரு நாள் கூட படுத்ததில்லை. மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகளும் பால் ஊற்றினார்கள். பால் இரங்கிக் கொண்டே இருந்தது. குரல்வளை அறுந்து போகிற மாதிரி, சத்தம் கூடியதே தவிர. குறையவில்லை. ஆஸ்பத்திரிக்கு வேண்டாமென்று சுப்பையா டாக்டர் சொல்லிவிட்டார். நாடி படுத்து விட்டது. முழுசாக அடங்கவில்லை. தாத்தா தலைமாட்டிலேயே இருந்தார். உயிர் பிரியும்போது பக்கத்தில் ஆள் இருந்தா ஆன்மா அலையாது என்று நம்பினார். கண்ணெல்லாம் சிவந்து இரண்டு கைகளையும் கூப்பியபடியே, கஷ்டப்படாம போயிரணும் என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

கல்யாணமான நாளில் இருந்து இன்று வரை கண்ணீர் சிந்தாமல் காப்பாற்றி இருக்கிறார். சேர்ந்துதான் பொழுதைக் கழிப்பார்கள். குளிக்கப் போனாலும் சேர்ந்து தான் போவார்கள். முதுகு தேய்த்துதான் குளிப்பார்கள். அப்பத்தா படுக்கையில் விழுகிற வைர அதுவே நடைமுறை. இரண்டு பெண்ணும், மூன்று ஆணும் என்று ஐந்து கைவிரல் போல ஒற்றுமையான பிள்ளைகள்.

எல்லாரும் படித்து மனதாரச் சம்பாதிக்கிறார்கள். அப்பத்தாவும் தாத்தாவும் இன்றைக்கும் தனியறையில் தான் தூங்குவார்கள். பர்மா தேக்கில் செய்த இரட்டைக் கட்டில். இன்றும்

அப்பத்தா அதில்தான் படுக்கப் போட்டிருந்தது. செவனம்மா கட்டிலை விட்டு இறக்கித் தரையில் போட்டால், கஷ்டப்படுத்தாம, ஆறு நாழிகைக்குள் அடங்கிவிடும்ட என்றது. பாய் விரித்து மெத்தை போட்டு அப்பத்தாவைப் படுக்க வைத்தார்கள். ஆறு நாழிகையல்ல. ஆறுநாளாகியும் அப்பத்தா மல்லுக்கட்டிக் கொண்டே இருந்தது.

செல்லூர் சித்தப்பா பார்த்த ஜோசியன் அமாவாசையில் முடிந்து போகும் என்றான். திருநீறு கொடுத்து அதைத் தண்ணீரில் கலந்து மூணு தரம் கொடுக்கச் சொன்னான். எது வேணும்னாலும் செய்யுங்க தாத்தா சொன்னார். கண்ண மூடுனாலும் பரவாயில்லை. கஷ்டப்படக் கூடாது என்பது தான் தாத்தா திரும்பத் திரும்பச் சொன்னது.

முட்டைக் கரண்டியில் மூணு கரண்டி நல்லெண்ணெய் கொடுத்தா அடங்கும் என்று யாரே சொன்னது. இரைப்பு அதிகமானதே தவிர குறையவில்லை. குடித்த எண்ணெய் கொடுத்த பால் என்று எதுவுமே வெளியேறாமல் உள்ளுக்குள் நின்றது. கண்ணைத் திறந்து பார்க்கவே இல்லை.

யோசிக்காம தலையில் நல்லெண்ண, வேப்பெண்ண, விளக்கெண்ண மூணும் சேத்துக் குளிப்பாட்டுனா ஒரு முடிவு வரும் என்று ஒரு கிழவி சொன்னது. குளிப்பாட்டி, உடை மாற்றிப் படுக்க வைத்ததும் அப்பத்தா முகத்துக்குக் கூடுதல் பொலிவு வந்ததே தவிர, எதிர்ப்பாத்த வேறு எதுவும் நடக்கவில்லை. தாத்தா அப்பத்தா தலை மாட்டிலேயே படுத்துக் கிடந்தார். ஊர் உலகத்தில் புருஷனுக்குப் போட்டது போக, மிச்ச மீதி சாப்பிடுவது பெண்களின் வழக்கமென்றால், அப்பத்தா அதற்கு நேர் எதிர் அப்பத்தா சாப்பிட்ட பிறகுதான் தாத்தா சாப்பிடும். அப்பத்தா கண்ணசைத்த பிறகுதான் தாத்தா

சாப்பிட உட்காருவார். ரெண்டும் ரொம்பத்தான் பண்ணிக்குதுங்க என்று அறிந்தும் அறியாமலும் மற்றவர்கள் பேசுவதைத் தாத்தா கூட சமயங்களில் பொருட்படுத்துவார். அப்பத்தா பொருட்படுத்த மாட்டார். கண்டதைச் சாப்பிட்டு அரை நாளு அவுக முடியாம படுத்தா யாரு பாப்பா என்று உறக்கச் சொல்லிவிடும். தாத்தா தலைவலி என்று படுத்தால் ஊரையே ஊமையாக்கிடும் அப்பத்தா.

கல்யாணமான போது, அப்பத்தாவுக்குப் பத்தொன்பது வயசு. தாத்தாவுக்கு இருபத்தி ஏழு. எட்டு வருட வித்தியாசம். பாத்தால் சொல்ல முடியாது. கல்யாணமாகி, மூணாவது நாள் இந்த வீட்டுக்கு வந்த அப்பத்தா. திரும்ப ஒரு முறைகூட பொறந்த வீட்டுக்குப் போகவேயில்லை. ஆடிக்குப் பெண் தாய் வீட்டுக்குப் போக வேண்டுமென்று பேச்சாக இருந்தது. தாத்தா சம்மதிக்கவில்லை. ஆடி மாசம் சேர்ந்து புள்ள சித்திரை மாசம் பொறக்கும் குடும்பத்துக்கு ஆகாது என்றார்கள். சித்திர மாசம் புள்ள பொறக்காம பாத்துக்கறது எம் பொறுப்பு என்று எல்லார் முன்னேயும் தாத்தா சொன்னது. இப்போதும் அப்பத்தா சொல்லிச் சொல்லிச் சிரிக்கும்.

அப்பத்தாவுக்கு பதினைந்து வயசாக இருக்கிறபோதே, நெருங்கிய சொந்தத்தில் கண்ணுச்சாமியைப் பேசி முடித்திருந்தார்கள். கண்ணுச்சாமி படிப்பு முடிந்ததும் கல்யாணம் என்பது இருவீட்டார் சம்மதம். கண்ணுச்சாமிக்குக் காதல். அப்பத்தாவுக்கு அப்படியெல்லாம் எதுவும் கிடையாது. நாலு வருடத்தில் கண்ணுச்சாமி குடும்பம் பெரும் பள்ளத்தில் விழுந்தது. அந்த சம்பந்தம் வேண்டாமென்று தாத்தாவைப் பேசி முடித்தார்கள். அப்பத்தா கல்யாணத்தன்று கண்ணுச்சாமி பழனி சென்று மொட்டைப் போட்டுக்

கொண்டார் என்றும் அதன் யாரையும் திருமணம் செய்யப் போவதில்லை என்று ஊரறிய கண்ணுச்சாமி செய்த சத்தியம் அப்பத்தாவை அதிரச் செய்தது. காசு பணத்துக்காகத் தாயும், தகப்பனும் செய்த படுகொலை அப்பத்தாவின் ஈரக்குலையைக் கலக்கி விட்டது.

எல்லோரும் உறங்கப் போகும் போது மணி இரண்டரை ஆகிவிட்டது. அன்றைய இரவு களைப்பும், கண்ணீரும், துயரும் மிக்கதாக இருந்தது. விடியற்காலை வீடு முழுவதும் தேடி தாத்தாவைக் காணவில்லை. தாத்தாவை அனைவரும் தேடினர். நாலாதிசையும் தேடினர். தட்டுப்படவில்லை. தாத்தா வரும் வரை அப்பத்தாவுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்று சாமி கும்பிட்டனர்.

மறுநாள் பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. கைத்தாங்கலாக ஒருவர் தாத்தாவை அழைத்து வந்து கொண்டிருந்தார். கூட வந்தவருக்குத் தாத்தா வயது தான் இருக்கும். எல்லோரும் தாத்தா வைக் கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்தனர். தாத்தாவும் குனிந்த தலை நிமிராமல் அழுதுகொண்டே இருந்தார். குல்லூர்ச் சந்தை விலக்கு ரோட்டில் தாத்தா நின்று கொண்டிருந்தாகவும், தற்செயலாகப் பார்த்துப் பேச்சுக் கொடுத்து விலாசம் அறிந்து கூட்டிவந்தாகவும் வந்தவர் சொன்னார். தாத்தாவுக்கும் வந்தவருக்கும் உணவு பரிமாறினர். தாத்தா அப்பாத்தா அருகில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தார். வந்தவர் எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்தார். பின் தாத்தாவுக்கு பக்கத்தில் போய் படுத்துக் கொண்டார்.

முத பஸ் அரைமணிக்கு முன்னதாகவே வந்தவரைத் தாத்தா தொட்டார். தொட்டவுடன் அவரும் எழுந்துவிட்டார். இருவரும் உறங்கவில்லை என்பது அப்போது புரிந்தது. அவரை

அப்பத்தா அருகில் அழைத்துப் போனார். இரண்டு கைகளையும் கூப்பியபடி வந்தவர் அப்பத்தாவைப் பார்த்தபடியே நின்றார். குடிப்பதற்குத் தலைமாட்டில் வைத்திருந்த தண்ணீரை எடுத்து, அவர் கையில் கொடுத்து அப்பத்தாவுக்கு ஊற்றச் சொல்லி சைகை காட்டினார் தாத்தா. அப்பத்தாவின் மீது விரல் படாமல் வந்தவரும் ஸ்பூனில் தண்ணீரை எடுத்து ஊற்றினார். இரண்டாவது தண்ணீர் ஊற்றியதும். புளக் என்ற ஓசையுடன் தொண்டைக் குழியில் இறுகிக் கிடந்த கையளவு காற்று அப்பத்தாவிடம் இருந்து தெறித்து வெளியேறியது. வந்தவர் கொடுத்தத் தண்ணீர் கடைவாய் வழியே வெளியேறிக் கொண்டிருந்தது. வந்தவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டத் தாத்தா என் செல்லமே என்று அப்பத்தாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுத குரல், அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த அப்பத்தாவின் மூச்சுக் காற்றோடு சேர்ந்து கரைந்தது. காலடித் தடம் தேய்ந்து மறைய, கலங்கிய கண்களுடன், முத பஸ்ஸுக்குப் போய்க் கொண்டிருந்தார். தாத்தா போய்க் கூட்டிக் கொண்டு வந்த கண்ணச்சாமி.

## சிந்தனைச் சிறுகதைகள்

சிறுகதைகள் சமூகத்தை அடித்தளமாகக் கொண்டு எழுதப்பட்டவை. சமூகத்தின் இயக்கம், மனித மனங்கள் பதிவுகள், வாழ்வியல் சிக்கல்கள், மனிதனின் உணர்வுகளில் கலந்த உயர்திணை, அஃறிணை உயிர்களின் பிணைப்பு போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு அமைவன. சிறுகதை சமூகக் கடமையாற்றும் வடிவம். மனித அறிவில் தோன்றிய எண்ணம், மனிதர்களிடேயே ஏற்படும் உரையாடலில் சமூக வாழ்வியல், மனப்பதிவு, உலகியல் அறிவு, நாட்டார் கதையாடல்கள், தனிமனித மாண்புகள், அதனை பாதுகாக்கும் முக்கியத்துவம் உள்ளிட்ட கருத்தமைவுகள் சிறுகதைக்கு வளம் சேர்க்கிறது. வாசகர்களின் விருப்பு வெறுப்புக்கு ஆட்பட்ட உணர்வுகள் சமூகத்தின் உணர்வுகளாகப் பிரதிபலிக்கிறது. இதனை, படைப்பாளனின் ஆழ்மன ஓட்டங்களாகவும் அடையாளம் காணப்படுகிறது. இத் தன்மையில் காஞ்சனை, செவ்வாழை, தனிமை, கடைசிப் பார்வை, தொண்டன், வேர்கள், வைக்கோல் கன்றுகள், பெரிதினும் பெரிது கேள் ஆகிய கதைகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### காஞ்சனை (புதுமைப்பித்தன்)

'கலைமகள்' இதழில் 1943 ஜனவரியில் வெளிவந்த சிறுகதை 'காஞ்சனை'. ஓர் எழுத்தாளனின் கதையாகும். வீடுதான் இந்தக் கதையின் களம். பழைய காலத்து வீடு, விளக்குத் தண்டு தொடங்கி வெற்றிலைச் செல்லம் வரையில் பெரிதும்

மனவோட்டமாகவே எழுதப்பட்டுள்ளது. மனைவி சகதர்மிணி, பிச்சைக்காரி, மந்திரவாதி, எழுத்தாளர் ஆகிய பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

அன்று முழுவதும் தூக்கம் பிடிக்கவே இல்லை. காரணம் என்னவென்று சொல்ல முடியவில்லை. மனசுக்குக் கஷ்டமும் இல்லை. அளவுக்கு மிஞ்சிய இன்பமும் இல்லை. இந்த மாதிரி தூக்கம் பிடிக்கமால் எல்லோரையும் போலத்தான் நானம். ஆனால் என்னுடைய தொழில் எல்லோரையும் போல அல்ல. நான் கதை எழுதுகிறேன். என்னுடையது அலங்கரிக்கப்படும் பொய். அதாவது – கடவுள், தர்மம் என்று நாம ரூபங்களுடன் உலக மெஜாரிட்டி அங்கீகாரத்தைப் பெறுவது. இதற்குத்தான் சிருஷ்டி, கற்பனா லோக சஞ்சாரம் என்றெல்லாம் சொல்லுவார்கள். இந்த மாதிரி பொய் செல்லுபவர்களையே இரண்டாவது பிரம்மா என்பார்கள். சட்டென்று சொல்லிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

பக்கத்துக் கட்டிலில் மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள். கனவில் உதட்டுக் கோணத்தில் புன் சிரிப்பு விளையாடியது. அவர் மூன்று மாத கர்ப்பிணி.

எப்போதும் இருட்டில் உங்கார்ந்திருந்தேன். நினைவுச் சுகத்தில் இருட்டில் சிறிது அதிகமாகச் சுண்ணாம்பு தடவிவிட்டேன் போலும்! நாக்கு சுருக்கென்று பொத்துக் கொண்டது. சீ என்ன நாற்றம்! ஒரே பிணவாடை அடிக்கிறது?

துர்நாற்றம் தாங்க முடியவில்லை. உடல் அழுகி, நாற்றம் எடுத்துப் போன பிணம் போல, என்னால் சகிக்க முடியவில்லை. கட்டிலை விட்டு இரண்டடி எடுத்து வைக்கவில்லை.

நாற்றம் அடியோடி மறைந்து விட்டது. திரும்பக் கட்டிலுக்கு வந்தேன் மறுபடியும் நாற்றம். அதே துர்நாற்றம். கட்டிலின் அடியில் ஏதேனும் செத்துக் கிடக்கிறதா? எனப் பார்த்தேன். தூசிதான் தும்மலை வருவித்தது.

நாற்றம் இப்போது ஒருவித வாசனையாக மாற்றியது. ஊதுவத்தி வாசனை. அதுவும் மிக மட்டமான ஊதுவத்தி. பிணத்திற்குப் பக்கத்தில் ஏற்றி வைப்பது.

உனக்கு இங்கே ஒரு மாதிரி வாசனை தெரியுதா? என்று கேட்டேன்.

ஒண்ணும் இல்லையே என்றாள்.அவள் மூன்று மாதக் கர்ப்பிணி.

ஏதோ லேசா ஊதுவத்தி மாதிரி வாசனை வருது. எங்காவது ஏற்றி வைத்திருப்பார்கள். விளக்கை அணைத்து விட்டுப் படுங்கள் என்றாள்.

விளக்கை அணைத்தேன். லேசான வாசனை இருந்து கொண்டுதான் இருந்தது. ஜன்னலருகே எட்டிப் பார்த்தேன். நட்சத்திர வெளிச்சம் தான்.

லேசாக வீட்டிலிருந்த ஜன்னல், வாசல், கதவுகள் எல்லாம் படபடவென்று அடித்துக் கொண்டன. ஒரு வினாடிதான். அப்புறம் நிசப்தம். துர்நாற்றமும், வாசனையும் அடியோடு மறைந்தன.

மறுநாள், பிச்சைக்காரியை வேலைக்காரியாக மனைவி சேர்த்துக் கொண்டாள். அவள் வேண்டாம் என்று மறுத்தேன். மனைவி கேட்கவில்லை. என்னவோ, படு ஆபத்து என்று தான் மனசு படக்கு படக்கு என்று அடித்துக் கொண்டது. மறுபடியும் எட்டி அவள்

பாதங்களைப் பார்த்தேன். எல்லோரையும் போல் அவள் கால்களும் தரையில் தான் பாவி நடமாடின. இது என்ன மாயப்பிரமை! சற்றுமுன் தோன்றிய பயம் என்னையே கேலி செய்தது.

பிச்சைக்காரி சூனியக்காரன், மந்திரம், தந்திரம், எந்திரம் கற்றவனின் கதை சொன்னாள். அவர் கையில் உள்ள புத்தகத்திலும் அதே சாயலில் கதை உள்ளது. "அந்த மந்திரவாதிக்கு அது தெரிந்துவிட்டது" என்ற சொற்றொடர் ஆங்கிலப் புத்தகத்தில் அவர் படித்துக் கொண்டிருக்கிறார். தமிழில் அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

திடீரென்று ஒரு பேய்ச் சிரிப்பு. மனசைக் கவ்வி உறிஞ்சியது. நிலைக் கண்ணாடியில் கோர உருவம். பல்லைத் திறந்து உன்மத்த வெறியில் சிரித்துக் கொண்டிருந்தது. இந்த மாதிரி கோர உருவத்தைப் பார்த்ததே இல்லை. குரூபமெல்லாம் பற்களிலும் கண்களிலும் தெறித்தது. கண்களில் ரத்தப் பசி. பற்களில் சதைப் பிய்த்துத் தின்னும் ஆவல். தோற்றம் கணத்தில் மறைந்தது.

உன் பெயர் என்ன என்று என் மனைவி கேட்க பிச்சைக்காரி. காஞ்சனைன்ன தான் கூப்பிடுங்களேன். கதெலே வர்ற காஞ்சனை மாதிரி. எப்படிக் கூப்பிட்டா என்ன! ஏதோ ஒரு பேரு. என்றாள் பிச்சைக்காரி.

அனைவரும் சாப்பிட்டுப் படுத்தோம். நாங்கள் இருவரும் மேலே படுத்திருந்தோம். காஞ்சனை கீழே முன்கூடத்தில் படுத்திருந்தாள்.

இன்று மறுபடியும் அந்த வாசனை வரப் போகிறதோ என்று மனம் படக்கு படக்கென்று எதிர்ப்பார்த்தது.

எங்கோ ஒரு கடிகாரம் பன்னிரண்டு மணி அடிக்கும் ஓசை.

எங்கோ கதவு கீரிச்சிட்டது.

திடீரென்று எனது கைமேல் கூரிய நகங்கள் விழுந்து பிறாண்டிக் கொண்டு நழுவின.

நான் உதறியடித்துக்கொண்டு எழுந்தேன். நல்ல காலம். வாய் உளறவில்லை.

கீழே சென்று பார்க்க ஆவல். ஆனால் பயம்.

போனேன். மெதுவாகக் கால் ஓசைப்படாமல் இறங்கினேன்.

ஒரு யுகம் கழிந்த மாதிரி இருந்தது.

கால்கள் எனக்குத் தரிக்கவில்லை. வெடவெடவென்று நடுங்கின.

மாடி ஜன்னலருகில் நின்று நிலா வெளிச்சத்தை நோக்கினேன்.

மனித நடமாட்டம் இல்லை.

எங்கோ ஒரு நாய் மட்டும் அழுது பிலாக்கணம் தொடுத்து ஓங்கியது.

வெளியே பார்க்கப் பார்க்க பயம் தெளிய ஆரம்பித்தது. என்னுடைய மனப்பிரமை அது என்று நிதானத்துக்கு வந்தேன்.

அப்போது காஞ்சனை பாயில் உட்கார்ந்திருந்தாள். என்ன தூக்கம் வரவில்லையா? என்று முனுமுனுத்துக் கொண்டே மாடிப் படிகளில் ஏறினேன்.

இருட்டுக்கும் பயத்துக்கும் ஒளிவிடம் இல்லாத பகலிலே எல்லாம் வேறு மாதிரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால் மனசில் ஆழத்திலே அந்த பயம் வேழூன்றி விட்டது.

என் மனைவி, காஞ்சனை, இன்றைக்கு மாடியிலேயே நமக்கு அடுத்த அறையில் படுத்துக் கொள்ளப் போகிறாள் என்று கூறிவிட்டாள். இன்று தூங்குவதே இல்லை. இரவு முழுவதும் உட்கார்ந்தே கழிப்பது என்று தீர்மானித்தேன்.

நானும் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போனேன். சற்றுப்படுக்கலாம் என்று உடம்பைச் சாய்த்தேன். பன்னிரண்டு மணி அடிக்க ஆரம்பித்தது.

இதென்ன வாசனை!

பக்கத்தில் படுத்திருந்தவள் வீரிட்டுக் கத்தினாள். காஞ்சன என்ற வார்த்தை ஒன்றுதான் புரிந்தது.

சட்டென்று விளக்கைப் போட்டுவிட்டு அவளை எழுப்பி உருட்டினேன்.

ஏதோ ஒன்று என் கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சின மாதிரி இருந்தது என்றாள்.

கழுத்தைக் கவனித்தேன். குரல்வளையில் குண்டூசி நுனி மாதிரி ரத்தத்துளி இருந்தது.

பயப்படாதே, எதையாவது நினைத்துக் கொண்டு படுத்திருப்பாய் என்று மனமறிந்து பொய் சொன்னேன்.

கர்ணகடூரமான குரலில் ஏதோ ஒரு பாட்டு.

அதிகாரத் தோரணையில். காஞ்சனை! காஞ்சனை! என்ற குரல்.

என்வீடே கிடுகிடுத்துப் போகும்படியான அலறல்! கதவுகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

அப்புறம் ஓர் அமைதி. ஒரு சுடுகாட்டு அமைதி.

நடுத்தெருவில் ஒருவன் நின்றிருந்தான். இங்கே வா என்று சமிக்ஞை செய்தான்.

போகும்போது காஞ்சனை அறையைப் பார்த்தேன். நான் எதிர்பார்த்தபடி அவள் இல்லை.

தெருவிற்குப் போனேன்.

அம்மா நெத்தியிலே இதைப் பூசு. காஞ்சனை இனிமேல் வர மாட்டாள். போய் உடனே பூசு. அமமாவை எழுப்பாதே” என்றான்.

விபூதி சுட்டது.

நான் அதைக் கொண்டு வந்து பூசினேன். அது வெறும் விபூதிதானா. எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.

காலையில் காப்பி கொடுக்கும்போது, இந்த ஆம்பிளைகளே இப்படித்தான்! என்றாள். என் மனைவி. இதற்கு என்ன பதில் சொல்ல?

இப்படியாகக் கதை முடிகிறது. வெற்றிலையில் கூடுதலாகவே சுண்ணாம்பு தடவி விட்டதையும் நாக்கு பொத்துக்கொண்டதையும், வாசனை மயக்கங்கள், பாதங்கள் மறையும் மாயம், கேட்டுக்கொண்டிருக்கும் கதையே கையில் இருக்கும் புத்தகத்திலும் அச்சாகியிருப்பது, கண்ணாடியில் தெரியும் கோர உருவம், கனவில் விழுந்து பிராண்டும் கூரிய நகங்கள், மனைவியின் கழுத்தில் ரத்தச் சுவடுகளுடன் பதிந்த பல்தடங்கள், சுடும் திருநீறு, கண்களை ஏமாற்றும் சேமக்கலம் என்று பயத்தினைத் தூண்டும் வார்த்தைகளாக உள்ளன.

ஆனால், கடைசியில் ‘இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான்’ என்ற ஒரு வாக்கியம் இந்தக் கதை முழுவதையுமே திரும்பவும் படிக்க வைத்துவிடுகிறது. இந்தக் கதையாடல் பாணி நவீனத்துவ இலக்கியப் பண்புகளை முன்னிலைப்படுத்திச் செயல்பட்டிருக்கிறது. கதையின் நடுவில் நிலைக்கண்ணாடி பற்றிய விவரணையொன்று வருகிறது. கதைசொல்லி வீட்டின் முன்கூடத்தில் அமர்ந்திருக்கிறார். பின்னறையொன்றில் அவரது

மனைவியும் அவர்கள் வீட்டில் அன்றைக்குச் வேலைக்குச் சேர்த்த வேலைக்காரியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நடுக்கூடத்தில் ஒரு கண்ணாடி. அதில் அவர்களின் முகங்களைக் கதைசொல்லியால் காணமுடிகிறது.

வேலைக்காரி சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் கதைசொல்லி இதே கதையை தன் கையிலிருக்கும் ஆங்கிலச் சரித்திரப் புத்தகத்தில் வாசித்துக்கொண்டுமிருக்கிறார். “அந்த மந்திரவாதிக்கு அது தெரிந்துவிட்டது” என்ற வாக்கியத்தை வாசிக்கும்போது அதையே தெரிவிக்கும் வாக்கியத்தைக் கேட்கவும் செய்கிறார். செவிப்புலனும் கட்புலனும் ஒரேநேரத்தில் எதிர்கொள்கிற தகவலாக இருக்கிறது அது.

எழுத்தாளரின் தினவாழ்க்கை. பலரும் வாழ்வதைப்போன்ற சாதாரண வாழ்க்கைதான் அது என்பதுபோல எழுந்திருத்தல், பல்துலக்குதல், காப்பி குடித்தல், சமைத்தல் போன்ற அன்றாட நடவடிக்கைகள் சித்தரிக்கப்படுகின்றன.

“காஞ்சனைன்னுதான் கூப்பிடுங்களேன். கதலெ வர்ற காஞ்சனை மாதிரி” என்று கூறுகிறாள் வேலைக்காரி. கதையின் கடைசியில், மந்திரவாதி “காஞ்சனை இனி மேல் வரமாட்டாள்” என்று அவள் காஞ்சனைதான் என்று அவள் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறான். கதாபாத்திரங்களில் காஞ்சனையும் மந்திரவாதியும் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குக் கணப்பொழுதில் சென்றுவிடக்கூடியவர்கள் என்று கருதமுடிகிறது.

## செவ்வாழை (பேரறிஞர் அண்ணா)

செவ்வாழை கதை ஆண்டான் – அடிமை சிக்கலை வெளிப்படுத்துகிறது. உழைப்பும், உழைப்புச் சுரண்டல் என்ற மனோபாவத்தைக் காட்டிலும், தன்னிடம் உழைப்பவனிடம் இருக்கும் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளும் மேட்டிமை மனோபாவம் வெளிப்படுகிறது. அவளது உணர்வுகள், குடும்பம், அவன் குழந்தைகளின் உணர்வுகள் என்று எதையும் பொருட்படுத்தாது. தன் ஆதிக்கத்தைச் செலுத்தும் முதலாளியின் செயல்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தவிர தன்னிடம் உழைப்பவர்களிடம் இருக்கும் பொருள்கள் அனைத்தும் தன்னிடமிருந்துத் தனக்குச் தெரியாமல் சென்றிருக்கக்கூடும் என்ற முதலாளியின் குரூர மனப்பான்மையும் புலப்படுகிறது. அதன் பலன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தனக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணும் முதலாளி அவனது குழந்தைகளையும் துச்சமாக மதிக்கும் மாண்பு காட்டப்பட்டுள்ளது.

உழைப்பாளிகளின் உழைப்பை உறிஞ்சுவதோடு மட்டுமல்லாமல் அவன் குடும்பத்தின் உழைப்பை உறிஞ்சுவதும். அதைக் கடையில் விற்கும் போது அவர்களுக்கே அது மறுக்கப்படுவதும் கண்கூடு. பண்டையார் என்ற ஆதிக்க பலத்தில் அபகரித்த பொருளை விற்பனைச் சந்தையில் அது உயர்ந்த பொருளாக, ஏழைகளால் எளிதில் வாங்க முடியாத பொருளாக அவதரித்துள்ளது. மாறாக, சூட்சமக்காரர்களுக்கு அது எளிதாகவும், இலவசமாகவும் கிடைக்கிறதில் சமூக அடுக்கப் புரிந்துகொள்ள முடிகிறது. செவ்வாழையைப் பண்ணையாருக்குக் கொடுத்துவிட்டோம், இளங்கன்றை பாட்டிக்குப் பாடைக் கட்டக் கொடுத்துவிட்டோம் என்ற சிறுவனின் கூறும் தற்பெருமையைச் சமூகம்

ஒருபோதும் கண்டுகொள்வதில்லை என்பது நிதர்சனம். அவன் குரலில் விலை உயர்ந்த அரிதான, அவர்கள் பகட்டிக்கும் கொள்ளும் உயரிய பொருளையே நாங்கள்தான் உற்பத்தி செய்து தருகிறோம் என்பதில் பெருமைப்படும் மனோநிலை உணர்த்தப்படுகிறது.

**செவ்வாழை கதை**

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால், கரியனிடம் - அவனுடைய முதல் பையன், காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டு கிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடுகீடு வந்து வாழையை மிதிச்சிடப் போகுது, ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று-ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும். உருண்டையாகவும் இருக்கும்--- ரொம்ப ருசி--- பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப்

போதும்; பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமை யாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள். அதுமட்டுமா-பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமை யைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும். அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப் பற்றிப் பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைர மாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன்', 'செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்' என்று சொல்லுவான்".

"ஒண்ணுக்கூட எனக்குத் தர மாட்டாயாடா-நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும். வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன்; கவனமிருக்கட்டும்" என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதிங்க. ஆமா பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துவிடுவாங்களோ, யாரு கண்டாங்க" என்று சொல்லுவான்-வெறும் வேடிக்கைக் காக அல்ல திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை, உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான்- செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள் பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது. கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடு பட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்-குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப்பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதிலே பங்கு பெற,

பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்துவரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்டபாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல, புகைப்படலம் போல், அந்த எண்ணம் தோன்றும், மறையும் செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி. செங்கோட னுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமைபோல், அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டுவிட்டது

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?' கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை'.

"இரண்டு மாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று. செங்கோடனின நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்த்து பார்ப்பான், குலையை, பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்து விஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைர மாலையைக்கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்கமாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின வைரமாலையைவிட விலைமதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும் ஓங்கி வளரலாயிற்று. "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரததிலேயே இருப்பது?' என்று கேட்பான் பையன். செங்கோடன் பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம். இடையே தரகர் இல்லை முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது. அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும். அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான். பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால், மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது. பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர் பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது. ஆனால் உழைப்பு நம்முடைய தாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது. எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது. இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம். பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில், குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி,' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு

எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்ணையார்.

"ஏனுங்க பழம்-கடையிலே நல்ல பழமே இல்லை. பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?-- வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க அதைக் கொண்டுகிட்டு வரலாம்" என்றான் . 'சரி' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக்குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம் பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று-நாக்குக் குழறிற்று. வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்த நாள் பூஜை. என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை. அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை. இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல். எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா!-என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன்-மாடு மிதித்துவிடாத படி பாதுகாத்தேன்-செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டுபோல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய், அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்த தல்லவா!' என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக் கண்களுக் குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான், 'அப்பா, குலையை வெட்டப் போறாரு. செவ்வாழைக்குலை' என்று ஆனந்தக்

கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான். உள்ளே கொண்டு வந்தான். அரிவாளைக் கீழே போட்டான். 'குலையைக் கீழேவை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள், கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன், "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன். அழாதிங்க. இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான். அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள், செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்...!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல. ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு...? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான். எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள். எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஓரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்கலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள், பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான். அவன் விற்றான் கடைக்காரனுக்கு அதன் எதிரே ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே. காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா போடா?" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது; கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான்', வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன். "ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு! பாடையைச் சுற்றி அழுகுரல்! கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா," என்று.

“எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக்குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்து விட்டோம். மரத்தை வெட்டி பாடையிலே கட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன் தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

## தனிமை (ராஜம் கிருஷ்ணன்)

பெண்களின் உணர்வுகளையும் உறவுகளும், சமூகமும் தனிமைப்படுத்தி வைத்திருக்கும் தன்மைகளை ராஜம் கிருஷ்ணன் தனிமை கதையின் வழி எடுத்துரைக்கிறாள். கணவனை இழந்த பிரேமா என்ற தன் வயோதிக காலத்தில் வெளிநாடுகளில் வேலை செய்யும் குழந்தைகளால் தனிமையில் விடுப்பட்டுள்ளதை உணர்கிறாள். கீதா என்ற குழந்தையின் தாய் தந்தை இல்லாததைச் சுட்டிக்காட்டிய போது இவ்வுலகில் என்னைப் போல் இருக்கும் அனைவரும் அனாதைகள் என்பது சுட்டிக்காட்டுகிறாள். தனிமை பன்முகப்படுத்து சூழ்நிலை என்பதைக் கதை முழுவதும் இளையோட்டமாக உணர்த்தப்பட்டு வருகிறது.

தனிமை கதைக்கரு

ஓர் அழைப்பு மணி ஒலிக்கிறது. காலை பத்து மணி. குக்கரில் சமையல் வேலை செய்து கொண்டிருந்த பிரேமா கதவைத் திறக்கிறாள். வெளியில் அழகிய பூங்கொத்துடன் கீதா நிற்கிறாள் என்று கதை தொடங்குகிறது. அழகிய பூங்கொத்துடன் கதவைத் தட்டுகிறாள். மரியாதையாக பெரியம்மா என்று அழைத்துப் பூங்கொத்தைக் கொடுக்கிறாள். சைக்கிள் மோதி அப்பா அடிபட்டுக் கிடந்த போது அவர்கள் விசாரிக்காமல் ஹோமில் சேர்ந்து காப்பாத்தினாங்க என்று அம்மா சொன்னதாகக் குழந்தை சொல்கிறாள்.

சிறுமியின் கழுத்தில் முத்தமிட்ட பிரேமா இன்னும் குளிக்கவில்லை. அதனால் உன்னை அழுக்கு பன்னிட்டேன் என்கிறாள். பெரியம்மா எனக்கு உங்களை ரெம்பப் பிடிக்கும். அந்தப் பூங்கொத்துகளைக் கணவர் படத்துக்குக் கீழே வைக்கிறாள். தாவர இயல் மூலிகை ஆசிரியரான தன் கணவர் மலைக்காடுகளில் மூலிகை தேடிச் சென்றிருக்கிறார். அப்போது நச்சுப்பாம்பு கடித்து உயிரை விட்டார் என்பதை நினைத்துக் கொள்கிறாள். இந்த அடுக்குமாடியில் கீழ்த்தளம் வேண்டும் என்று வாங்கி ஒரு மாதம் தங்கவில்லை. அதற்குள்ளாக இறந்து விட்டாள். அவர் இறந்து தனிமைப்பட்டதைவிட அவள் மகள்களைப் பிரிந்து தனிமை அடைந்தது தான் மிகக் கொடுமையானது. இவர் தான் பெரியப்பா வா? கீதா கேட்கிறாள். கண்ணீருடன் ஆமாம் என்கிறாள். இரண்டு புகைப்பட ஆல்பங்களை எடுத்து அவளிடம் கொடுக்கிறாள். சிறுமி ஆவலுடன் புரட்டுகிறாள்.

கீதாவின் தந்தையை அவள் அதற்குமுன் பார்த்தது இல்லை. மோதி எறியப்பட்ட வேகத்தில் முழங்காலில் அடி அவள் உடனே ஓர் ஆட்டோவை அழைத்து தெருவோரம் மருத்துவமணையில் சேர்த்தாள். வண்டி மோதியிருந்தால் போலீஸ் கேசு என்று

வயித்தியம் பார்க்க மாட்டார்கள் என்பதால் படியில் இறங்கி வரும்வழியில் விழுந்துவிட்டார் என்று கூறி வயித்தியம் பார்த்தாள். அதன்பின் தகவல் கூற முடிவுசெய்த போது தெருவின் கோடியில் குடிசை வீட்டில் குடியிருக்கின்றனர். கீதாவின் தந்தை உயிர்நிலைப் பள்ளியில் பணியாளராக இருந்தார். தாயும் சத்துணவு ஊழியராக இருந்தார். வழக்கு இல்லாமல் ஐந்நூறு ரூபாய் செலவில் ஆபத்து முடிந்துவிட்டது.

பிரேமாவின் மகள் உதயா, கம்ப்யுட்டர் சாப்ட்வேர் இஞ்சினியர். கலிபோர்னியாவில் இருக்கிறாள். இன்னொரு மகள் ரஜனி பி.எச்.டி முடித்து அவங்க அப்பாவைப் போல் ஆராய்ச்சி செய்கிறாள். அவர்களுடன் பிரேமாவை வெளிநாட்டிற்கும் அழைத்தும் அவள் செல்லவில்லை. அங்கு அவர்களை அனைவரும் வேலைக்குச் சென்றுவிட்டால் அங்கேயும் தனியாகத்தான் இருக்கவேண்டும். யாருமே இல்லாத இடத்தில் தனியாக இருப்பதைவிட மனதிற்குப் பிடித்த இடத்தில் தனியாக இருக்கலாம் என்ற எண்ணத்தில் இங்கே இருக்கிறாள். தன் கணவர் இறந்தபோது ரஜனி முதுகலை இறுதியாண்டும், உதயா கல்லூரி இளங்கலை இரண்டாம் ஆண்டு படித்தனர். இவர்களின் அத்தை மகன் மணி. அவன் மருந்து விற்பனை நிலையத்தில் வேலை செய்வதாகச் சொல்லிக் கொண்டு திரிபவன். அவனைத்தான் ரஜனிக்குத் திருமணம் செய்யவேண்டும் என்றும், ஆண் பிள்ளைகள் இல்லாததால் அவன்தான் உன் தந்தைக்குக் கொல்லி போடவேண்டும் என்றும் அத்தை கூறினாள்.

ரஜனி கோபப்பட்டால் என்னது என் அப்பாவிற்கு உன் பிள்ளைதான் கொள்ளி போடனுமா? என்று கத்தினாள். அந்தக் கத்தல் பிரேமாவின் நெஞ்சுக்குள் அம்புபோல்

பாய்ந்தது. ஏண்டி! எங்கோ கண்காணாத இடத்தில் கோரமா உசிரை விட்டிருக்கான். அவன் நல்லகதி அடைய வேண்டாமா?... நல்ல வேளை சோமு வந்திட்டான். சோமு, சீக்கிரமாக் குளிச்சிட்டுப் வாப்பா புரோகிதர் காத்திருக்கிறார். சிகரெட் வாடையும் சிவந்த கண்ணும் மீசையும் கிருதாவும் கொண்டு அந்திமக் கிரியை செய்யத் தயாராக இருந்ததைப் பார்த்த ரஜனி வெறிக்கூச்சல் போட்டாள்.

என்னம்மா? இவங்க அப்பாவுக்கு யாரு? ராத்திரி பார்ல குடிச்சிட்டு இப்ப கிரியை பண்ண வாரான்? "ஏண்டி? என்ன சொன்ன பெண்ணாய்ப் பிறந்தவ அடக்கமா இருக்கணும். ஒருத்தங்கிட்ட வாழ்ந்து பேரெடுக்கணும்."

நீ சொல்ல வேண்டாம். உன் பிள்ளைக்கு நான் கழுத்தை நீட்டுவேன்னு கனவு காணாதே!

பிரேமா இது கொஞ்சம் கூட சரியா இல்ல. உன் பெண்களை இப்படி அடக்கமில்லாம வளர்த்திருக்கே. அது வாயை மூடச் சொல்லி நடக்கிற காரியத்தை பாரு.

பாருடி! அப்பாவுக்கு இவ செய்யும் மரியாதையா? ரகள பண்ணாம போ! பெண்ணாப் பிறந்திருந்திட்டு... அவளை ஓர் அறையில் சாத்தினர். அவள் கதவை உடைத்தாள். கத்தினாள். பிறகு நடந்ததை இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை. ஈமக் கடன்களை அவன் சோமு செய்தான். சடலம் கிடக்கையில், நான்கு பேர் முன் பிரேமா, ஆண் மக்களைப் பெற்றிருக்கவில்லை என்று அவமானப்படுத்தப்பட்டாள்.

பெற்ற தகப்பனுக்கு அந்திமம் செய்யப் பெண்ணுக்கு உரிமை இல்லை என்று அந்தப் புரோகிதனைக் கழுத்தை நெறித்திருப்பேன்! என்ன சமூகம்! என்ன விதி!

அடுத்த ஆண்டுக்குள் இந்த மண்ணைவிட்டுச் செல்ல திட்டமிட்டு ஆராய்ச்சி படிப்பென்று அமெரிக்க சென்றுவிட்டாள். இளையவளைக் கண் வைத்து சோமுவும் அவன் தாயும் வரத் தொடங்கினர். “வயது முப்பதாகப் போகுது. எப்ப கல்யாணம் பண்ணி? எப்ப அவன் கொடிக்கு ஒரு வாரிசு வரது? ஒண்ணுக்குள்ள ஒண்ணு சோமு ஜாதகப்படி அவன் உறவில் கல்யாணமாகி, ஆண் வாரிசு வரும் இருக்கு.

இதையறிந்த மூத்தவள், இவளையும் ஸாப்ட்வேர் படிச்சவருக்கு உகந்த இடம் என்று தீவிரமாக மண்ணைவிடச் செய்துவிட்டாள்.

பையன்களுக்கு வயதானாலும், நடத்தை கெட்டுப் போனாலும், பெண்கள் கிடைத்து விடுகிறார்கள். ஆனால் பெண்ணின் படிப்பு, திறமை, நேர்மை, துணிவு இவை யாவும் அவள் ஒரு துணையைத் தேடிக்கொள்ள முட்டுக்கட்டை யாக இருக்கின்றன....

பெண் குடும்பத்துக்காக மனித உறவுகளை மேம்படுத்தும் சக்தியாக இயங்க, பல்வேறு அழுத்தங்களையும் சிக்கல்களையும் தாங்கிய காலம் இல்லை இது. அவளை ஆதிக்கத்துட்படுத்த முனையும் சமுதாயத்தை அவள் எதிர்த்துப் போராடும் காலம் இது. இந்தப் போராட்டத்தில் பெரும்பாலும் அவள் தனிமைப்படுத்தப்படுகிறாள்.

தன் தனிமையை அவள் சுமக்கவில்லை. எண்ணெய் தீர்ந்து சுடரும் அவிந்த திரியொத்த தனிமை இது. ஆனால் .... அது சுடருக்கு வழியில்லாத தனிமை.

கீதா சுற்றும் பார்த்து தயங்கிவளாகக் கேட்கிறாள். இவர்கள் உங்கள் சொந்த பொண்ணு தானே! என்று...

உங்க அப்பாவுக்கு நீ சொந்தப் பொண்ணு போல இவங்களும் எங்க வீட்டுப் பொண்ணுங்க. ஏன்னா, எங்க அப்பா அம்மாவுக்கு நான் சொந்தப் பொண்ணு இல்லை. நான் சின்னப் பாப்பாவா இருக்கிறப்ப. என்னைப் பெத்த அம்மா அப்பா ரெண்டுபேரும், இந்தம்மா கிட்ட என்ன விட்டுட்டு ஆட்டோவில் போனாங்களாம். லாரி மோதி ரெண்டு பேரும் செத்துப் போயிட்டாங்களாம். இந்த அப்பா அம்மாவுக்கு குழந்தை இல்லையாம். என்னைய குழந்தையா வச்சிட்டாங்களாம்..

ஊரில் இருந்து ஒரு பாட்டிவரும். அது அம்மாகிட்ட எப்பவும் சண்ட போடும்.. ஏண்டி அறிவு கெட்டவளே.. புள்ள இல்லைன்னா நல்லதா ஓர் ஆம்புள புள்ளய எடுத்து வளப்பாங்க. இந்த மூதேவி எதுக்கு? ஒட்டா? உறவா? இது உனக்குக் கஞ்சி ஊத்துமா? கொள்ளிக்குக் கூட ஒதவாத பொட்ட. ஒரு நா அப்பா அதத் திட்டி விரட்டினாரு. இனிமே இந்த வீட்டுப்பக்கம் வந்தா தெரியும்" ன்னு துரத்தினாரு.

எத்தினி வயசானாலும் அவங்கக் கூட தான் இருப்பேன். அவங்கள நல்லா வச்சிப்பேன்.. பெரியம்மா பொண்ணுன்னா ஏன் மட்டமாப் பாக்குறாங்க? ஆற்றாமை வெடித்து வருகிறது. இல்லேடி கண்ணு நா அப்படி நினைக்கல. அப்படி யாரும் நினைக்காம நாம பண்ணுவோம்" என்று மார்போடு கீதாவை பிரேமா அனைத்துக் கொள்கிறாள்.

## தொண்டன் (டி.செல்வராஜ்)

சிறுகதைகள் படைப்பாளர்கள் வாழ்வியல் சூழலைப் பிரதிபலிப்பது. சமூகம் தனி மனிதனுக்குக் கொடுத்திருக்கும் அடையாளங்களைச் சிறுகதைகள் மையக்கருவாகக்

கொண்டுள்ளன. தலித்திய அடையாளங்கள் உயர்நிலை மனோபாவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தலித்திய அழகியலை உயர்சமூகம் ஏற்றுக்கொள்ளாத விரும்பாத நிலையை உணர்த்துவதாக அமைகிறது. ஆனால் தலித்திய அழகியல் மனித வாழ்வின் அன்றாடங்களின் கருத்துநிலைகளை விளக்குகிறது.

டி. செல்வராஜ் முதல் தலித் படைப்பாளி என்று சொன்னால் அது மிகையாகாது. திருநெல்வேலி மாவட்டத்தில் மாவடி எனும் சிற்றூரைச் சார்ந்தவர். புதுமைப்பித்தன், தொ.மு.சி. ரகுநாதன், வல்லிக்கண்ணன், கு.அழகிரிசாமி போன்ற எழுத்தாளர் நிறைந்த பகுதியில் தலித் மக்களை வாழ்க்கையை தம் படைப்பில் எழுதியுள்ளார். மலரும் சருகும் என்பது முதல் தலித்திய நாவலாகும். இவரது கதைகள் செம்மலர், சரஸ்வதி, சாந்தி, தாமரை போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. இவர், தோல் நாவலுக்காக தமிழக அரசின் விருதினையும், சாகித்ய அகாதெமி விருதினையும் பெற்றுள்ளார். தம் எழுத்தில் ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் அவலங்களைத் தொடர்ந்து எழுதியவர்.

**தொண்டன் கதை**

ஆறுமுகம் சிறந்த காந்தியவாதி. நாட்டிற்காக உழைத்து மக்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து மனைவி பிள்ளையை இழந்து தனித்து வாழும் ஆறுமுகம் ஒரு சிறந்த காந்தியவாதி. தேங்காய் வியாபாரியாக இவர் இருந்தபோது தெருத்தெருவாக முறுக்கு விற்றலைந்த பழனியப்பப் பிள்ளையோ, இன்று பெரும் பணக்காரர்களில் ஒருவர், ஆனால் ஆறுமுகமோ தேசத்திற்காக தனதத்தனையும் இழந்து நிற்பவர். இப்படிப்பட்ட

உத்தமனான தொண்டரைப் பார்த்துப் பழனியப்பப்பிள்ளை இவ்வளவு காலமா உழைச்சு நீ சாதிச்சதுதான் என்ன? எனக் கேட்கும்போது ஆடிப்போகிறார் ஆறுமுகம்.

அந்தக் கேள்வி தொண்டர் ஆறுமுகத்தை ஒரு உலுப்பு உலுப்பி விட்டது. தொண்டர், குடிசையின் மேற்குப் பகுதிச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த காந்திஜியின் படத்தை ஏறெடுத்துப் பார்த்தார். களங்கமற்ற அந்த மகான் தொண்டரைப் பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்தார்.

பழனியப்பப் பிள்ளை சொன்னதில் ஏதோ உண்மை இருப்பது போல் பட்டது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவரிடம் ஓர் அணாவுக்குத் தண்டனிட்டு கெஞ்சிய பழனியப்பன் சொல்வதில் ஏதோ ஒரு தத்துவ உண்மை புதைந்து கிடப்பது போல் அவருக்குப் பட்டது. ”பெரிய மனுசன். அவுஹ சொல்லுததிலே நியாயம் இல்லாமலா இருக்கும்? ஆறுமுகத்தின் மனதில் திரும்பவும் இந்த கேள்வி எழுந்தது.

பழனியப்ப பிள்ளை வெறும் பழனியப்பனல்லவே. அன்று தொண்டர், தேங்காய்க் கடை ஆறுமுகம் பிள்ளை என்ற பட்டப்பெயருடன் சந்திப் பிள்ளையார் கோயிலுக்கெதிரில் தேங்காய் வியாபாரம் செய்து கொண்டிருந்த காலத்தில், தெரு தெருவாக “லோலுப்பட்ட” வண்ணம் கூடை முறுக்கு விற்றுக்கொண்டலைந்த பழனியப்பல்லவே. இப்போது அவர் ஊரார் மதிக்கும் ஆலவிருட்சம் அல்லவா? பெரிய மனிதனாக வளர்ந்து கொண்டிருப்பவர்.

தேங்காய்க் கடை ஆறுமுகம் பிள்ளை, சந்தி விநாயகர் கோவிலுக்கு எதிரில் தேங்காய் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். இப்படி யாதொரு மாற்றமும் இல்லாத அளவில் வாழ்வு நடந்து கொண்டிருக்கும்போது தான் ஒரு நாள் “வந்தே மாதரம்” என்ற

கோஷத்தைக் கேட்டார். பிறகு தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையின் ஆவேசம் பிரசங்கத்தையும் கேட்டார். அன்று கடையை விட்டுக் கால் எழும்பி வந்து அன்னையின் விடுதலைப் படையில் தொண்டனாகத் தன்னை இணைத்துக் கொண்டவர்தான். அப்பா, அம்மா உற்றார் உறவினர் வந்து எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப் பார்த்தார்கள். மனைவி வள்ளியம்மை காலைக் கண்ணீரால் நனைத்துக் கழுவினாள். தொண்டரே உள்ளத்தைக் கல்லாக்கினார்.

நான் ஒத்துக் கொண்ட வேலை குடும்ப வேலையை விடப் பெரிசு. என்று மௌனமாகச் சொல்லிவிட்டார். அந்த ஊரில் எந்த ஓர் ஊர்வலம் ஏற்பாடான போதும். எந்த ஓர் இயக்கம் நடந்த போதும் யார் வந்தாலும் வராவிட்டாலும் தன்னந்தனியனாக வேணும் கதர்க் கொடியை ஏந்திய வண்ணம், போலோ மகாத்மா காந்திக்கு ஜே" என்று வின் அதிர முழங்கிய வண்ணம் சித்திர வீதியை வலம் வருவார்.

பையனை வைத்துக்கொண்ட பக்கத்து வீடுகளில் வேலை செய்து தானும் வாழ்ந்து கணவனுக்கு படியளந்த வள்ளியம்மை என்னும் யந்திரம் பழுதுற்றுச் சாய்ந்துவிட்டது. இந்த நிலையில் தான் தொண்டர் போர் களத்தை நோக்கிப் புறப்பட்டார். "சாகிறனோ, பிழைக்கிறேனோ இன்னெக்கி ஒரு நா மட்டும் போகவேண்டாம்" என்று வள்ளியம்மை ஆறுமுகத்தைக் காலைப் பிடித்து கெஞ்சிக் கதறினாள். கர்ம வீரனான் பிள்ளையோ மனைவியின் பரிதாபமான நிலைமையைக் கூடப் பொருட்படுத்தாமல் போர்களத்தில் குதித்தார். போலீஸார், அவர் மண்டையைப் பிளந்து ஜெயிலுக்குள்ளும் தள்ளினார்கள்.

இரண்டு மாதம் கழித்து அவர் எதிர்பார்த்த சேதி கிடைத்தது. “வள்ளியம்மாளும் செத்தாள். பையனும் செத்துப் போய் விட்டான்” என்று அவரைப் பார்க்க வந்த ஒரு பெரிய மனிதர் சொன்னார். “கடமையைச் செஞ்சாச்கு, ஆண்டவன் அமைப்பு அவ்வளவு தான்” என்று மனதிற்குள் சொல்லிச் சமாதானப்பட்டுக் கொண்டார் பிள்ளை.

உண்மையிலேயே ஆறுமுகம் தான்டா உண்மை காங்கிரஸ் தொண்டன். எந்தத் தொழிலையும் மோசமின்னு நினைக்க மாட்டார்” என்று இருபது ஆண்களுக்கு முன்னால் யாரோ ஒருவர அவர் முதுகைத் தட்டிக் கொடுத்த வண்ணம் சொல்லி பெருமையடித்துக் கொண்டது அவர் நினைவில் வந்தது.

மகாத்மாவின் ஒவ்வொரு உபதேசத்தையும் அப்படியே கடைபிடித்த தொண்டர் ஒருநாள் திடீரென்று நான்கைந்து ஹரிஜனங்களைக் கூட்டிக்கொண்டு ஆலயப் பிரவேசம் செய்தார். பலன் என்னவெனில் வாய்க்கால் கரையில் ஊர் வாலிபர்களால் மூர்ச்சித்து விழும்வரையில் உதைக்கப் பட்டதோடல்லாமல், ஜாதி பிரதிஷ்டமும் செய்யப்பட்டார். ஊரில் யாரும் தாகத்திற்குத் தண்ணீர்க் கூட தர மறுத்து விட்டார்கள். கடைசியில் வீட்டையும் காலி பண்ண வேண்டியதாயிற்று.

தேசம் விடுதலை அடைவதற்கு முன்னால் தொண்டரால் தொடங்கப்பட்ட அப் பள்ளிக்கூடத்திற்கு, தேசம் விடுதலை அடைந்ததும் யோகம் பிறந்தது. ஓலை கட்டடமாக இருந்த இடத்தில் காரைக் கட்டடம் கால் பரப்பி எழுந்தது. ஆறுமுகம் தன்னந்தனியாய் நின்று சேரிப் பிள்ளைகளிடத்தில் மாரடித்த இடத்தில் ஐந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். திறப்பு விழா அன்றைக்குத் திருவிழாக் கோலமாக இருந்தது.

பள்ளிக்கூடம் எழுவதற்குப் பெரும் முயற்சி எடுத்தார் என்று வார்டு கவுன்சிலருக்கு மாலை அணிவித்தார்கள். தொண்டர் எல்லாரையும் போல் தரையில் உட்கார்ந்து தான் வித்திட்ட பள்ளிக்கூடம் விருட்சமாய் மலர்வதைக் கண்டு சந்தோசப்பட்டார்.

நாடு விடுதலை எய்திய பிறகும் தொண்டர் ஆறுமுகம் சாதாரணத் தொண்டராகவே இருந்தார். ஐயா, சேரி ஓரமா சாக்கடை தேங்கி நிக்கிது. நாத்தம் அடிக்குது. எல்லாம் சர்க்காரைக் கேவலமாய்ப் பேசிட்டுப் போறங்க" என்று மட்டும் உதடு அசங்காமல் சொல்லுவார். பலதடவையும் நினைப்பூட்டியும் அவர்கள் கண்டுக்கவே இல்லை என்றால் கோபப்பட மாட்டார்.

"அவுஹளுக்கு எவ்வளவு வேலையோ ஒரு தேசத்தை நிர்வாகம் பண்ணுவதுன்னா சும்மாவா" என்று தனக்குள்ளேயே சொல்லிச் சாந்தப்பட்டுக் கொள்வார். தியாகிகளுக்கெல்லாம் நிலம் கொடுக்கிறார்கள் என்று கேட்டதும், சொந்தகாரர்கள் எல்லாம் தொண்டரை வந்து வளைத்துக் கொண்டார்கள். நிலத்திற்காக எழுதிப் போடும்படி வற்புறுத்தினார்கள். "ம் இந்தாங்கையா..... என் தியாகத்தை நான் விலை பேசப் பிரியப்படவில்லை" என்று உறுதியாகச் சொல்லிவிட்டு விறுவிறு என வேகமாக நடந்துவிட்டார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு தொண்டர் தனது முழு நேரத்தையும் ஹரிஜன தொண்டிலேயே பெரிதும் செலவு செய்தார். அதிலும் தான் ஆரம்பித்த பள்ளிக்கூடத்தில் படித்த பிள்ளைகளை எல்லாம் பாஸான உடன் உயர்நிலைப் பள்ளிக்கு இழுத்துக் கொண்டு சேர்ப்பார். பிறகு நடைநடையாக நடந்து அவர்களுக்கு இலவசப் படிப்பிற்கும்

சாப்பாட்டிற்கும் ஏற்பாடுகளைச் செய்வார். இராப்பகலாக அலைந்து அவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் வாங்கிக் கொடுப்பார். இரண்டொரு மாணவர்களுக்கு உயர்ந்த சர்க்கார் உத்தியோகம் கிடைத்தது, அவர்களைக் கூப்பிட்டு ஆசீர்வதித்து புத்திமதி கூறியனுப்புவார். அவர் கூறும் புத்திமதியெல்லாம் சேரியையும், தாய் பூமியையும் மறந்துவிடக் கூடாது என்பது தான். ஆனால் அவ்வாறு உயர்பதவிக்குப் போனதும் அவர்கள் செய்த முதல் காரியம் சேரியை மறந்தது. இரண்டாவது காரியம் சேரிக்கு வெளியே புதிதாகக் கட்டப்பட்ட பனகல் நகரில் வீடுகள் வாங்கிக் கொண்டது.

இப்படியான தொண்டர் உடம்பில் தெம்பற்றுப் போய்விட்டது. புத்தகங்கள் படிப்பதும், கிழிந்த வேட்டியைத் தைத்து உடுத்துவதும், தேசிய பாடல் பாடுவதும் நூல் நூற்பதிலும் ஈடுபட்டார். காங்கிரஸ் அலுவலகம் வாரத்தில் இரண்டொரு நாள் மட்டும் போவார். யாருடனும் எந்த ஒரு சமாச்சாரத்துடன் இணையாமல் தன்னந்தனியாக வாழ்ந்த வந்த தொண்டரை இப்போது ஊரே மறந்து விட்டது என்று கூட சொல்லலாம். உண்மையில் இரண்டு ஆண்டு வாழ்க்கை தொண்டரின் மனத்தில் வெறுப்பை உண்டு பண்ணுவதாகவே இருந்தது. வாழ்ந்த வீட்டில் மழைக்காலங்களில் இம்மி இடமில்லாமல் ஒழுக்கல், கிழக்குப் பக்கத்துச் சுவர் நொண்டியடித்துக் கொண்டிருக்கிறது. கண்களோ இரவும், பகலும் ஒன்றாகத் தெரிம் அளவுக்கு மங்கிக் கொண்டிருந்தது. சமையல் செய்யும் போதே கண் சுழன்று ஆயாசம் வேறு எற்படுகிறது. சில நாட்கள் சமையலும் நடப்பதில்லை.

இந்த சமயத்தில் தான் அந்த கேள்வி தொண்டரை உலுப்பி விட்டது.

எசக்கியம்மாளின் உடம்பில் வழக்கம்போல் தொங்கும் அழுக்கேறிய கந்தல் உடையைக் காணவில்லை. மாறாக புத்தம் புதிய கண்டாங்கிச் சேலை அலங்கரித்தது.

இது என்ன எசக்கி?

கும்பிடறேன் சாமி" இவ்வாறு சொல்லிக் கொண்டே தட்டை அவர் முன்னால் வைத்துவிட்டு, அவர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தாள்.

என்ன? என்ன, இது என்ன எசக்கி? தொண்டர் ஆறுமுகத்தின் நா குழறியது. வார்த்தைகள் தெளிவற்று வந்தன.

சாமி, நீங்க இதைக் கட்டாயம் ஏத்துக்கிடணும். வேண்டாண்ணு சொல்லப்படாது" என்று தொண்டரைப் பார்த்துக் கெஞ்சினாள் எசக்கி.

என்ன? இவ்விதம் கேட்டுவிட்டுத் திரும்பும் முன்னால் அவர் கழுத்தில் செவ்வந்திப் பூமாலை ஒன்று விழுந்தது. "எம்மவன் பட்டணத்திலேருந்து வந்திருக்கான் சாமி" என்றாள் எசக்கி. எதிரே அவன் மகன் வேலாயுதம் நின்று கொண்டிருந்தான்.

"என்னவோ சாமி நீங்க மட்டும் எம்மவனைப் பள்ளிக் கூடத்திலே கொண்டு சேர்த்திருக்காட்டிக்கு இன்னெக்கி நாங்களெல்லாம் நடுத் தெருவிலேதான்" என்றாள் எசக்கி. "ஆமாங்க" என்று தலையை அசைத்து ஆமோதித்தான் அவன் மகன். பட்டணத்திற்குப் பிழைப்புத் தேடிப் போய் விட்டான் என்று கேள்விப்பட்டதும் ஞாபகத்திற்கு வந்தது. "பட்டணத்திலே ஒரு ஆபிஸ்லே பியூனா வேலை கிடைச்சிருக்கு"

என்றான் அவன். ஐயா வேண்டாம்னு சொல்லிறப் படாது என்று கெஞ்சும் பாவனையில் சொன்னான் அந்த வாலிபன்.

தட்டும் தட்டில் பழமும் வேட்டியும் மட்டும் அவர் முன்னால் இருந்தன. ஒரு கணம் அதையே உற்றுப்பார்த்தார். முப்பது வருட வாழ்க்கையில் ஏற்படாத ஒரு மனநிறைவு அவர் உள்ளத்தில் ஏற்பட்டது. அந்தப் பொருட்கள் அனைத்தையும் தட்டுடன் எடுத்துக் கொண்டுபோய் மகாத்மாஜீயின் படத்தின் முன்னால் வைத்தார். மூலையில் நெம்பாங்கியில் கிடந்த ஊதுவத்திகளை எடுத்துப் பற்ற வைத்தார்.

கோபமோ, சாந்தமோ, வெறுப்போ, எதுவுமே தோன்றாத அந்த கிழட்டு முகத்தில் ஒரு தனி தேஜஸ் தென்பட்டது. உதடுகளில் புன்முறுவல். கடந்த முப்பது ஆண்டுகாலாமாகக் கண்ணீரே வராத அந்தப் பஞ்சடைந்த கண்களின் கோடியில் இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிகள் பனித்துத் தேங்கித் தயங்கி நின்றன.

“போலோ, மகாத்மா காந்திக்கு ஜே” என்று வாய்விட்டு கோஷமிட்டார் தொண்டர் ஆறுமுகம்.

## வேர்கள் (இளசை சுந்தரம்)

எட்டையபுரத்தில் பிறந்த இளசை சுந்தரம் சிறந்த சொற்பொழிவாளர், எழுத்தாளர், நகைச்சுவையாளர், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எனப் பணி செய்தவர். ஆன்மிகம், தத்துவம், தன்னம்பிக்கை, வாழ்வியல் போன்ற சிந்தனையாளர். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் பல பட்டிமன்றங்களில் பங்கேற்று நடத்தியுள்ளார்.

சாதகப் பறவை, பாரதி காட்டும், சமுதாயம், தியாகி கக்கன், தோழர் ஜீவா, நகைச்சுவை நந்தவனம் பெருந்தலைவர் காமராசர் போன்ற நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வேர்கள் கதைக்கரு**

ஹோட்டலுக்குள் நுழையும் அவரைக் கண்டதும், கல்லாவில் உட்கார்ந்திருந்த என்னை ஆச்சரியம் சூழ்கிறது. அனிச்சைச் செயலைப் போலச் சட்டென்று எழுந்து கொள்கிறேன்.

நான் தான் சார் உங்க குமார்! சின்னப்பட்டிக் கிராமத்துல ஒங்க வீட்லயிருந்து படிச்சேனே…!

அவர் முகத்தில் பிரகாசம். என்னைக் கூர்ந்து பார்க்கிறார். "குமார்! காலம், மனுஷ உடம்பில் எப்படியெல்லாம் ரசவாதம் பண்ணுது பாத்தியா? என்னோட கண்ணே பட்டுடும் போலிக்கு"

சின்னப்பட்டிக் கிராமத்தில் உலகம்மன் கோவிலை ஒட்டியிருந்தது. அந்த ஓலைப் பள்ளிக்கூடம். ஆனா ஆவன்னாவை மணல் தரையில் விரலால் எழுதிப் பழகியது இன்னும் நினைவிருக்கிறது.

திருட்டு ராஸ்கல்! போக்கிரி தறுதலை….! இந்த வசவுகள் என்னை ஒன்றும் செய்து விடவில்லை. எனக்கும் பள்ளிக் கூடத்துக்கும் இருந்த உறவைக் கொஞ்சமேனும் காப்பாற்றி வந்தது அங்கு கிடைக்கும் மதிய உணவுதான். எட்டாம் வகுப்புப் படிக்கும் போது சினிமா பார்க்க, சீட்டாட, பீடி குடிக்க இதற்கெல்லாம் கூட காசு தேவைப்பட்டது.

அப்போது அந்த நடுநிலைப் பள்ளிக்குத் தலைமையாசிரியராக வந்தவர் தான் நல்லமுத்து வாத்தியார். பிரச்சனைக்குரிய மாணவர்களின் மேல் தலைமையாசிரியனின் தனிக்கவனம் கவியத் தொடங்கிய போது நானும் அதில் சிக்க நேர்ந்தது.

அன்றொரு நாள், புளியந்தோப்பில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வெளியூர்ப் பருத்தி வியாபாரிகளிடம் கைவரிசைக் காட்டி, அகப்பட்டுத் துணியாய்த் துவைபட்டுக் கொண்டிருந்த போது, தற்செயலாக அங்க வந்த தலைமையாசிரியர் என்னை அவர்களிடமிருந்து மீட்டார்.

உலகம்மன் கோவிலை எடுத்துக் கட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த கருங்கல்லில் அமர வைத்து. இப்படித் தப்புப் பண்ணிட்டு நாலு பேரு கிட்ட அடி வாங்குறதும் அவமானப் படுறதும் உனக்குக் கேவலமாத் தெரியல? எனது முதுகை இதமாகத் தடவிக் கொடுத்துக் கண்களை மறைத்துக் கிடந்த தலைமயிரை ஒதுக்கிவிட்டார்.

“வயிறு பசிச்சா, அதுக்காகத் திருடித்தான் சாப்பிடணுமா? வறுமையைக் காரணம் காட்டித் திருடுறது ரொம்பத் தப்பு. நீ விரும்பினா நல்ல மனுஷனா மாற என்னால் உதவ முடியும். உனக்குச் சம்மதமா?

அப்படியும் வாழ்ந்து பார்க்கலாம் தான். ஆனால் என்னை நம்பி யார் வேலை கொடுப்பார்கள்? அவர் தொடர்ந்து சொன்னார். “உனக்கு உழைக்கணும் ஆசை வந்தாப் போதும். வேலை கொடுக்க நான் தயார். உனக்குச் சம்மதம் னா வீட்டு வேலை செய்து கொண்டு, வீட்டுக்குப் பின்னால் இருக்கின்ற தோட்டத்தையும் கவனித்துக் கொண்டு என் வீட்டில் சாப்பிடலாம். ஒழுங்கா பள்ளிக்கூடம் வரணும். ஓய்வு நேரத்தில் வேலை

செஞ்சாப் போதும். நீ நல்லாப் படிச்சா மேல் படிப்புக்கும் நானே ஏற்பாடு பண்றேன் என்ன சொல்லற?"

கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பும் போது சீட்டாட்டக் கூட்டாளி கருப்பையா சந்தித்தான். நானில்லாமல் சீட்டாட்டமே சோபிக்கவில்லையாம். ரம்மி ஆட்டம் கண்முன் விரிந்து வெறியை மூட்டியது. இன்றைக்கு மட்டும்.... மனம் கெஞ்சியது.

அன்றிரவு! சீட்டாட்டத்தில் சரியான அடி. கருப்யைாவிடம் முப்பது ரூபாய்க்குக் கடன் பட்டுவிட்டேன். ஏல குமாரு! நாளைக்குச் சாயந்தரத்துக்குள்ள ரூவாயக் குடுத்தி, இல்லாட்டி ஒன்னோட வாத்தியார் கிட்ட சொல்லிக் குடுத்திருவேன். உலகம்மன் கோவில் உண்டியலை உடைத்துக் கால்சட்டைப் பைகளை நிரப்பிக் கொண்டு நிமிருகையில் ஊர்ப்பெரியவர் காளியப்பன் கையும் களவுமாக என்னைப் பிடித்துவிட்டார். வேப்பம் மரத்தில் கட்டி வைத்து புளியம் விளாறு சுழன்ற போது தலைமையாசிரியர் வந்து சேர்ந்தார். "வாத்தியாரையா! சொல்றனேன்று கோவிக்கப்படாது நீங்க குடுக்குற செல்லத்தில தான் பயம் இம்புட்டு தூரம் துணிஞ்சுட்டான்" அவர் கைக்கு மாறிய புளியம் விளாறு என்னை சட்டை சட்டையாக உரித்தது.

இவன யாரும் அவுத்து விடாதீங்க! கழுதை இப்படியே கெடந்து சாவட்டும் என்று உறுமினார். கூட்டம் கலைந்தது. என் கண்ணையே நம்ப முடியாத தலையாசிரியர் வந்தார். கட்டுக்களின் தழும்புகளை இதமாகத் தடவிக் கொடுத்தார். வீட்டுக்குக் கூட்டிப் போனார். எனக்கு முன்னால் வைக்கப்பட்ட சோற்றை பார்க்க முடியாமல் கண்ணீர்

மறைத்தது. சாப்பிடுப்பா! கனிவான அவர் குரல். இன்னும் இரண்டு உதைக் கொடுத்தாலும் தாங்கியிருப்பேன்.

இந்த கிராமத்தில் இருக்கிற வரை பழிபாவங்களோடு, படுகுழி நண்பர்களோடு, அவர் உருவாக்க நினைக்கும் நல்ல மனுஷனா மாறுவது இயலாதென்று தோன்றியது.

சாப்பிட்டு முடிந்ததும் தலைமை ஆசிரியர் வெற்றிலை போட்டுக் கொள்கிறார். சார்! இப்ப நீங்க சாப்பிட்ட சாப்பாடு என்னோட நேர்மையான உழைப்பில் உருவானது. அன்னிக்கு அந்த கிராமத்தை விட்டுக் கிளம்பி எங்கெல்லாமோ சுத்திட்டு இந்த ஊர்ல ஓர் ஓட்டல்ல வேலைக்குச் சேர்ந்தேன். ஆரம்பத்தில் மேஜை துடைச்சேன். உழைச்சி சம்பாரிச்சா ஒழுக்கா வாழலாம்னு சொன்னீங்களே அதை வேத மந்திரமாகவே ஒத்துக்கிட்டேன். படிப்படியா முன்னேறி ஒன்பதாண்டு உழைப்பில் கொஞ்சம் சேமித்த பணத்தைக் கொண்டு சொந்தமாகச் சின்ன ஓட்டல் தொடங்க ஆசைப்பட்ட போது முதலாளியும் கொஞ்சம் பண உதவி செய்து நேற்று தான் இந்த ஹோட்டலை ஆரம்பிச்சு வச்சாரு. வாழ்க்கையில ஒரு நெலமைக்கு வந்த பிறகுதான் உங்களைத் தரிசிக்கணும்னு நெனைச்சேன். அதுக்குள்ள தெய்வம் இங்க வந்து சேர்த்திடுச்சு.

சார் நீங்க இங்க தங்கத்தான் வேணும். ரெஸ்ட் எடுங்க. ஆமாப்பா இப்போ இருக்குற நெலமையில ரெஸ்ட் தேவைதான்.

மாலைப் பேப்பரில் வந்த செய்தி! சின்னப்பட்டி உலகம்மன் கோவில் சிலை திருட்டு இருவர் கைது. தலைமறைவாகிவிட்ட உள்ளூர்ப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் நல்லமுத்துவைப் போலீஸ் தேடுகிறது…..”

குமார் என்னை மன்னிச்சுடப்பா! நேர்மையாவே வாழ்ந்திட்டு இருந்த என்னைப் பண நெருக்கடி இப்படி மாத்திடுச்சு. "வறுமையைக்காரணம் காட்டி திருடுகிறது தப்பு. இது நீங்க சொன்னது தானே?

வாஸ்தவம் தான். இப்பவும் அந்த எண்ணத்தில எனக்கு மாற்றமில்லை. சமூகச் சூழ்நிலையும் அதுக்கு ஒத்துழைக்கணும்னு அப்புறம்தான் தெரிஞ்சுது.

தப்பு செஞ்சது மட்டுமில்லாமல் அதுக்கு நியாயம் கற்பிக்கிறது பெரிய தப்பில்லையா?"

நான் நியாயம் கற்பிக்க விரும்பல சூழ்நிலையைத் தான் சொல்றேன். எனக்குத் திருமண வயதில் நாலு பெண் பிள்ளைகள். படிக்கவும் வச்சேன். கல்யாணத்துக்கான பணத்தேவையின் பயங்கரம் எனக்குப் புரிஞ்சது. பொண்ணு பார்க்க வர்றவங்க யாரும் என்னோட நேர்மையைப் பார்க்கல. அதிகபட்சம் என்ன வரும் னு தான் பார்த்தாங்க. பொண்ணுகள காலாகாலத்தில் கரையேத்திரனும் என்ற தவிப்பு. கட்டுக்குள் காவல் காக்கிற கவலை ஒரு பக்கம்.

இந்த சூழ்நிலையில் தான் சிலை திருடர்கள் சந்தித்தார்கள். ஒத்துழைப்பு கேட்டார்கள் கணிசமான தொகை தர்றதாகச் சொன்னார்கள். அந்த நொடி சபலத்தில விழுந்தேன். அவங்க சொன்னபடி ஆட வேண்டியதாப் போச்சு. ஓ! காலம் எப்படியெல்லாம் ரசவாதம் செய்கிறது.

“சார்! என்ன தான் சொன்னாலும் உங்க வாதம் ஏத்திக்கிட முடியாதது. சமுதாயம் ங்கற ஆலமரத்துல விழுதுகள் பழுதுபடலாம். ஆனா வேர்கள் பழுதுபடலாமா? என்னுடைய கேள்வி அவரை ஆழமாகத் தாக்கியிருக்க வேண்டும்.

“குமார் உன்னோட நேர்மையின் பிரகாசத்துல சமீப காலமா என்னை மூடியிருந்த இருட்டு விலகிறதை உணர்றேன். நீ புது மனுஷனாயிட்டே. ஆனா நான் பழைய மனுஷனா மாற வேண்டியதிருக்கு. நேர்மைக்கு மிஞ்சுனது இந்த உலகத்துல ஒண்ணுமே இல்லை. இப்பவே. போலீஸ்ல சரணடைஞ்சி அந்த சிலை திருட்டோட உண்மையை சொல்லி தண்டனை அனுபவிக்கத் தயார். ஆனா என் குடும்பம்…..

அதைப் பத்தின கவலை இனிமே உங்களுக்கு வேண்டாம். நான் உங்க மூத்த பிள்ளை. நம்ம குடும்பத்தைக் காப்பத்தறதும் தங்கைகளுக்குத் திருமணம் பண்றதும் இனிமே என்னோட பொறுப்பு.

கொஞ்ச நேரத்தில் இருவரும் போலீஸ் ஸ்டேசனை நோக்கி நடக்கிறோம்.

## வைக்கோல் கன்றுகள் (வெ.இறையன்பு)

இரவு முழுவதுமாய்த் தன் முக்காட்டை விலக்காமலிருந்தது. காற்று மண்டலத்தில் கரைகின்ற புகையாய் இருட்டு கரைந்து கொண்டிருந்தது. விடியலை வரவேற்றவாறு கிறீச்சிட்டுப் பறவைகள் கூட்டினின்று கிளம்பிக் கொண்டிருந்தன.

வாயில் வேப்பங்குச்சியை மென்றவாறு பண்ணையார் நடந்துகொண்டிருந்தார். ஆசானுபாகுவாய், கம்பீரத்தை உயர்த்திப் பிடிக்கும் உருவத்துடன் பூமியை அழுந்த நடக்கும் அவர் நடை அந்தப் பண்ணையின் வளம் முழுமையும் அவரது ஆளுமைக்

குட்பட்டது.என்பதை உணர்த்துவதாய் இருந்தது. பம்புசெட் அறைக்கு வந்ததும் “பொன்னா! மோட்டரைப் போடுப்பா!” என்று குரல் கொடுத்தார்.

“ஐயா! இதோ வந்துடறேனுங்க மாட்டுக்குத் தீனி வச்சிக்கிட்டிருக்கேனுங்க” தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் குனிந்து பார்த்தபோது ஒரு சின்ன அணிற்பிள்ளை கீழே கிடப்பது தெரிந்தது. இறந்து விட்டதா என்று அறியப் புரட்டிப் பார்த்தபோது உயிரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

பைனாகுலரில் அதிகாரி விஷ்ணுராம்! எவ்வளவு தொலைவு வரை தெரியும் விந்தை!

கொடுங்கரைப்பள்ளம்.. கஞ்சிப்பள்ளம்.. இங்கிருந்து தான்

வேகமாய்க் கீழே இறங்கிப் போன ரங்கன் ஒரு பாறை மீதேறி நின்றவாறே ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டுகிறான். ஏதோ ஒரு மிருகம் செத்துக்கிடக்கிறதா? கண்கள் விரியச் சுட்டிக்காட்டியவன், சேம்புக்கரையைச் சேர்ந்தவன்! ரங்கன் அவன் பிறந்தது வளர்ந்தது எல்லாமே இந்தக் காட்டில்தான் அவன் காலடி படாத இடம் கிடையாது. எந்த அதிகாரி வந்தாலும் அவர்களை வழிநடத்திச் செல்வது ரங்கனாகத்தான் இருப்பான்.

ரங்கன் நின்று பார்த்துக்கொண்டிருந்த பாறை மீதே இவர்களும் ஏறினார்கள். இப்போது வாடை இன்னும் அதிகமாய்

என்ன ஆச்சரியம்.. ஒரு யானை! ஐம்பது அறுபதடி தூரத்தில் மிகவும் இளைத்துப்போய் ஏன் எலும்பும் தோலுமாய் என்று தான் சொல்லவேண்டும். நின்று கொண்டிருந்தது. கற்சிலையோ காதுகளைக்கூட ஆட்டுவதற்குச் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறதே.. தும்பிக்கைக்கு அடுத்த வாய்ப்பகுதியில் கீழ்த்தாடையில் சீழ் ஒழுகிக் கொண்டிருக்கிறது.. அதிலிருந்துதான் வீசி வந்த நாற்றம்.

யானை அசைவற்றுப் பலம் இல்லாமல் இருந்ததால் பயம் தெளிந்திருந்தது… அருகே போகலாமா

வேண்டாம் ஒரு நாள் பொறுத்திருப்போம்.

இரண்டு மூன்று நாட்களாகவே வன அதிகாரி விஷ்ணுராமுக்கு ஒரு கவலை மனதில் இழையோடிக்கொண்டிருந்தது. காலையில் அவசரத் தணிக்கையின் பொருட்டுப் பெருமாள்முடி வரவேண்டியதாகிவிட்டது. இல்லாவிட்டால் தானும் மனைவி வித்யமாலாவுடன் மருத்துவமனை சென்றிருக்க வேண்டும். வித்யமாலாவிற்கு ஒருதடவையல்ல மூன்றுதடவை! இப்படி ஆகிவிட்டது. நமக்கே இவ்வளவு துக்கம் சூழும்போது அவளுக்கு எப்படியிருக்கும். வார்த்தைகளால் வடிவம் கொடுத்துவிட முடியுமா?

முழுசாய் ஐந்து ஆண்டுகள் நிறைய பேர் திருமணமாகி ஒரு வருடத்திற்குள்ளேயே மக்கள் மெய்த்தீண்டல் உடற்கின்பம் பெற்று விடும் பாக்கியம் ஆனால் விஷ்ணுராம் வித்யமாலா தம்பதிகளுக்கு தம் பொருள் என்று போற்றுவதற்குரிய மக்கள் செல்வம் கிடைப்பதற்கு ஏற்படும் தாமதத்தின் பொருட்டு விழைந்திடும் மனஏக்கம் எத்தனை மருத்துவர்கள் எத்தனை மருந்துகள் இந்த முறை தள்ளிப் போனது தக்க வைத்துவிடும் என்று அழுத்தம் நிறைந்த நம்பிக்கை… ஏமாற்றி விடுவதுதான் வாடிக்கையோ?

மகப்பேறு மருத்துவர் அம்சவிலோசினியின் நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள் நம்பிக்கையோடு பயணம் செய்யும் காலம்…

ரங்கன் யானை நிற்கும் இடம் வரை சென்று பார்த்து அலைபேசியில் அழைத்த பிறகே விஷ்ணுராம் யானை மருத்துவர் சகிதம் புறப்பட்டார்கள் யானை இருக்கும் இடம் நோக்கி

“விஷ்ணுராமிந்த யானையைக் குணப்படுத்த நிறைய தொகை செலவாகும் நிதி நிலை எப்படி என்று சொல்ல முடியாது” யானை மருத்துவர் சரவணன் வேறு என்ன சொல்ல முடியும்?

யானை மருத்துவர் சரவணனின் வார்த்தைகளைக் கேட்ட விஷ்ணுராம் யோசிக்கலானார் ஆமாம் நிதி ஆதாரம்?

“சரி இப்படி நோய்வாய்ப்பட்டுள்ள யானையைப் பார்த்து விட்டோம் சிகிச்சையளிகாமல் விட்டுவிட முடியாது பணம் பார்த்துக்கொள்ளலாம் கடவுள் நம் பக்கம்”

பட்டியல் தயாராகிறது

ஆண்டிபயாடிக் மாத்திரைகள் காப்ஸ்யூல்கள் பிடித்தமாக குழைய வேகவைத்த சோறு மாத்திரைகள் காப்ஸ்யூல்கள் எல்லாம் பொடியாக்கி ஒரு தட்டில் உள்ள சோற்றுடன் கலந்தாகிவிட்டது டானிக் சூரணம் எல்லாம் சேர்க்கப்பட்ட கலவை அசையாமல் நின்றிருக்கும் யானை முன்னால் எப்படி வைப்பது? நீளமான மூங்கில் தப்பை அதில் ஒரு முனையில் தட்டை வைத்து ஆணியடித்துச் சரி பண்ண, இப்போது யானைக்கான உணவு வைக்க தட்டு தயார்! சோற்றுக் கலவை அதில் வைத்துப் பத்தடி நீளமுள்ள மூங்கில் தப்பையைத் தூரமாக நின்றுகொண்டு நகர்த்த இப்போது யானை முன்னால் சோற்றுக் கலவை.

ஒரு வாரம் கழிந்திருந்தது.

தட்டில் உள்ள மருந்துக் கலவையுடன் கூடிய சோற்றை நன்கு சாப்பிடப் பழகிக்கொண்டது. ஒவ்வொரு நாளும் கரும்பு வெல்லம் என்று கலந்து கொடுக்க கசப்புடன் கூடிய மாத்திரைகள் உள்ளே செல்லச் செல்ல இந்த ஒரு வாரத்திற்குள் கீழ்த்தாடையில் கசிந்து கொண்டிருந்த சீழ் சுத்தமாய் நின்றுவிட்டது. நாட்கள் செல்லச் செல்ல தினமும் சுவையான வேகவைத்த சோறு, பாசிப்பருப்பு, ராகி உருண்டை என்று

சாப்பிட ஒரு மாத்த்திற்குள் காயம் சுத்தமாய் ஆறிவிட்டது இளைத்த உடல் தேறி மறுபடி புஷ்டியான யானையாகி விட்டது.

விஷ்ணுராமிற்கு யானையைக் கவனித்து சிகிச்சையளித்தது பற்றி மனசெங்கும் பூரிப்பு பெருமிதம்! மனதிற்குள்ளேயே மருத்துவர் சரவணன் மீது நன்றித் தூவல் பண நெருக்கடி என்கிற இடரைத் தூளாக்கிய வன உயிரின ஆர்வலர்களின் ஆர்வப் பெருக்கு நட்பின் பெருக்கம்! மத்தளம் கொட்டும் மனிதநேயம்.

பலநாட்களுக்குப் பிறகு இன்றுதான் விஷ்ணுராமிற்கு நிம்மதி வித்யமாலா பற்றி கவலை நோய்வாய்ப்பட்டிருந்த யானை பற்றிய கவலை எல்லாம் மறந்து நல்ல தூக்கம் தன் குடியிருப்பில் தூங்கிக் கொண்டிருந்தபோது யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் எழுந்து யாரென்று பார்த்துக் கதவைத் திறக்கலாமென்றால் உடம்பெங்கும் யாரென்று பார்த்து கதவைத் திறக்கலாமென்றால் உடம்பெங்கும் வியாபித்து நிற்கும் வலி வித்யமாலாவும் அவள் அம்மா வீட்டில் இருக்கிறாள் மறுபடியும் மறுபடியும் கதவு தட்டுகிறாற்போல்

படுத்தவாறே மணியைப் பார்த்தால் அடே மனி ஆறாகிவிட்ட்தே! யார் கதவைத் தட்டுவது? லுங்கியைச் சரிசெய்து கொண்டே ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தால் ஒரு யானை தான் கதவை முட்டிக் கொண்டிருக்கிறது.. விஷ்ணுராம் என்ன தான் அதிகாரியாக இருந்தாலும் உடலெங்கும் வியாபித்து நிற்கும் பயம்.. குப்பென்று வியர்க்கும் வியர்வை அடே நோயிலிருந்து மீண்ட யானை அலைபேசியில் கதவைத் திறக்காமல் டாக்டர் சரவணனிடம் பேசினார் மற்றவர்களிடமும் பேசினார்.

கடந்த பல நாட்களாக வழங்கிய அறுசுவை உணவும் மருந்தும் வேலை செய்திருக்கிறது ருசி கண்டுவிட்டது.... எல்லோரும் சேர்ந்து செய்த ஆலோசனையின் பேரில் உணவு கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.நோய்வாய்ப்பட்டிருந்த போது உடல் நலிந்து உடலை அசைக்கக்கூட முடியாமல் இருந்தது.... அப்போதிருந்த நிலை வேறு ஆனால்

இப்போது பலசாலியாகிவிட்ட யானை உதவி செய்தவர்களைத் தேடிவந்து வீட்டுக் கதவைத் தட்டுகிறது என்றாலும் யானை.. யானைதானே!

எத்தனை நாட்களுக்குப் பயந்தும் ஒளிந்துகொண்டும் அதற்கேற்றாற்போல் ருசியான கொள்ளும் வேகவைத்த பாசிப்பருப்பும், வெல்லமும்,கரும்புத் துண்டுகளும் கொடுப்பது? இரவானால் பயம் சூழ்ந்துகொள்கிறது! எப்போது யானை வரும் கதவைத் தட்டும்... இப்போது கதவைத் தட்டுகிற யானைகதவை உடைக்காது என்பதில் என்ன நிச்சயம்? ரௌத்ரம் சூழ்ந்துவிட்டால்....

விதயமாலா வீட்டிற்கு வரக்கூடப் பயப்படுகிறாள்... நீங்களும் உங்க யானையும்

நல்லவேளை! பகலில் யானையை வேறு எங்கும் தேட வேண்டிய அவசியம் இல்லை... முதலில் எந்த இடத்தில் யானையைப் பார்த்தார்களோ அதே இட்த்தில் இப்போதும் பார்க்கலாம்.

யானை எப்போதும் நின்றிருக்கிற இடத்திலிருந்து ஐநூறு அடி தூரத்தில் ஒரு சிறிய பள்ள இருந்தது. லாரியை அங்கு கொண்டுவந்து  நிறுத்துகிற அளவிற்குச் சரிவாக்கினார்கள் லாரியை அந்தச் சரிவில் இறங்கி நிறுத்தினால் தரைமட்டமும் லாரியின் பாடி மட்டமும் ஒரே சம அளவு மட்ட்த்தில் இருந்தது. ஒரு சிறுவன் கூட தரையில் நடந்து வந்து லாரியில் ஏறி உட்கார்ந்துகொள்வான். அந்த அளவிற்குச் சமமான அளவு யானை வசதியாய் நிற்கும் அளவில் இடைவெளி விட்டு மூங்கில்களால் லாரியில் தடுப்பு கட்டப்பட்டுள்ளது.

கும்கி யானையும் வந்தாயிற்று நோயிலிருந்து மீண்ட யானை நிற்குமிடம் வந்த கும்கி யானையிடம் இழு இழு என்றான் பாகன் கிருஷ்ணன் கும்கி யானை நோயிலிருந்து மீண்ட யானையைத் தனது தும்பிக்கையால் இழுத்தது. காட்டு யானை பிளிறியது. கும்கி

யானையும் பிளிறியது. எங்கே இரு யானைகளுக்கிடையே யுத்தம் வந்துவிடுமோ என்ற அச்சம் விஷ்ணுராம், சரவணன் என்று எல்லோரும் இருக்கிறார்கள். பிளிறலால் எல்லோருமே பின்வாங்குகிறார்கள்.

காட்டுயானை முரண்டு பிடிக்கிறது. நோயிலிருந்து மீண்டு வந்தால் புது ரத்தம் பாய்ந்தது பொன்ற உத்வேகம்! இந்த இடமும் ஒவ்வொரு நாளும் கரும்பு, வெல்லம் சகிதம் கிடைக்கும் சுவையான உணவும் பழக்கப்பட்டுவிட்டதால்... இந்த வசதிகளையெல்லாம் துறக்கவைத்துக் காட்டைவிட்டு வெளியேற்றிவிடுவார்களோ ரணமாயிருந்த காயத்தைக் குணப்படுத்தி எலும்பும் தோலுமாக இருந்த உடம்பை புஷ்டியாக்கி, வேகவைத்த கொள்ளும் அரிசியும், கரும்பும், வெல்லமும் கலந்து சாப்பிடு சாப்பிடு என்று இதற்குத்தான் கொடுத்தார்களா?

எனக்குப் போட்டியாய் இந்த யானை இங்கே வந்தது புதியதாய் ஒரு மனிதன் மேலே உட்கார்ந்துகொண்டு ஏதோ சொல்லிக் கால்களால் அழுத்துகிறானே இந்த யானை எப்படி இவனுக்குக் கட்டுப்படுத்துகிறது.

மறுபடியும் தன் தும்பிக்கையால் இழுக்கிறானே.. விடமாட்டான் போல் இருக்கிறதே.. சரி..என்னைக் குணப்படுத்தியவர்கள் ஏதாவது நல்லதுதான் செய்வார்கள்.. எனக்குப் போட்டியாக வந்த என்னை அழைத்துப் போக வந்த இவன் இழுத்த இழுப்புக்குக் கட்டுப்பட்டுப் போகவேண்டியது தான் இவன் எவ்வளவு சுத்தமாக இருக்கிறான். தினமும் குளிப்பானா.. குளித்து விடுவார்களா?இவனோடு போவதால் தினமும் என்னையும் குளிக்கவைத்து விடுவார்களோ சரி போய்த் தான் பார்ப்போமே!

விஷ்ணுராமிற்குக் காட்டு யானையைப் பிடித்து முகாமிற்கு அனுப்பிவைத்த அந்த நிமிடம் அப்பாடா என்று பெருமூச்சுவிட வைத்தது. இரவு தூங்கப் போன நேரம் வரைதான் தூக்கம்தான் வர மறுக்கிறது. கண்களை மூடினால் யானை கால்களைத் தூக்கிக்கொண்டு பிளிறுகிற மாதிரி ஒரு பிரமை… கதவைத் தட்டுமோ காலை வந்தால்.

கீழ்த்தாடையில் சீழ்பிடித்துப் புரையோடிப்போன ரணமும் அதிலிருந்து வந்த நாற்றமும்! என்புதோல் போர்த்திய உடம்பாய் இருந்த நிலையிலிருந்து இன்று கும்கி யானையோடு ஒண்டிக்கொண்டி சண்டமாருதம் செய்ய எத்தனித்த சண்டித்தனம் வரை யானைக்குச் சிகிச்சையளித்த நிலையும் சேர்ந்து ஒவ்வொரு கட்த்திலும் என்னென்ன கஷ்டப் பட்டிருக்கிறோம்.

யானை குணமடைய வேண்டி வன உயிரின ஆர்வலர்களெல்லாம் ஒன்று சேர்ந்து மருதமலை முருகனுக்குப் பாலாபிஷேகம் செய்து பால்காவடி எடுத்த நிகழ்வு வரை மனசில் நிழலாடியது.

காட்டு யானை யாருக்கு என்ன தொல்லை கொடுத்தது? முகாமிற்கு அனுப்பிவைத்து விட்டோமே…

சோறுபோட வக்கில்லை.. அப்பட்டித்தானே கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறதே ம்ம்..ம்கூம்..காட்டு ராசா.. திரும்பி வந்து விடேண்டா ச்சே.. என்ன இது ஒரு வன அலுவலராய் இருந்து கொண்டு இப்படியா..

ஆர்வலர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சங்கம் அமைந்திருக்கிறார்களே.. அவர்களிடம் சொல்லியிருந்தால் ஒரு வருஷத்திற்கு ஆகிற அளவுக்குக் காட்டு யானைக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து குவித்திருப்பார்களே…

சாப்பாட்டுச் செலவிற்காகப் பயந்தோம்…ச்சே..ச்சே என்ன இருந்தாலும் யானை ஒரு மிருகம் என்பதால்தானோ.. நீண்ட நேரப் போராட்டத்திற்குப்பின் அப்படியே தூங்கிப் போனார் விஷ்ணுராம்.

காலம் உருண்டோட யானை பற்றிய நினைவு மெல்ல மெல்ல மனக்குகையிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தது. உத்தியோகத்தில் சந்திக்கிற அனுபவங்களில் செய்கின்ற பணிகளில் அதுவும் ஒன்று என்றாகிவிட்டது.

உத்தியோக மாற்றங்கள் ஏற்படுத்திய மகிழ்ச்சி புதிய புதிய வாகனங்களில் பயணிக்கும் அனுபவத்தால் ஏற்பட்ட மன நெகிழ்ச்சி வித்யமாலாவின் அழுகையை மட்டும் அடக்க முடியாமை தள்ளிப் போகும் பீரியட்கள்…

ஆறுமாதங்கள் கழிந்திருந்தது

வன உயிரினம் பற்றிய ஒரு மாதப் பயிற்சி வன அகாடமியில் இடையிடையே களப்பணி விஷ்ணுராமிற்கு பிடித்த பயிற்சி….

கோழி கமுத்தி வரகளியார் யானை முகாம், முதுமலை தெப்பக்காடு யானை முகாம்களுக்குக் கல்விச் சுற்றுலா

அதில்வரகளியார் யானை முகாம்…

மனித வள உயிரின மோதலை எதிர்கொள்வது எப்படி கும்கி யானைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? வன உயிரினங்களால் வேளாண் நிலங்களில் ஏற்படும் சேதத்தைத் தடுக்கக் கும்கி யானைகளின் பங்கு என்ன…

ஒன்பது பேர் பயிற்சியாளர்கள்

எல்லோரும் அவரவர் கையேடுகளில் ஏதோ குறிப்புகளைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். விஷ்ணுராமின் தோளை யாரோ தொட்டுத் தழுவுகிறாற்போல்..

திரும்பிப் பார்த்தால் கம்பீரமாய் யானை மறுபடியும் தலை மீது தும்பிக்கையை வைத்துத் தடவி முகம், தோள், உடம்பு என்று அழுத்தமான தழுவல் என்ன அதிகாரியாய் இருந்தாலும் எல்லோரும் விலகுகிறார்கள். விஷ்ணுராம் உடலெங்கும் வியர்வை.

”சார் பயப்படாதீங்க நீங்கதான் இந்த யானை காயத்துடன் அவஸ்தைப் பட்ட்டுக்கொண்டிருக்கும்போது பொறுப்பு எடுத்துக் கொண்டு காப்பாற்றியவர்” என்றான் பாகன் கிருஷ்ணன்

“இப்படி யானை என்னை மறவாமல் அடையாளம் கண்டு தழுவுகிறதே இதனருகே போய் என்ன செய்தேன்… ஆ.. மாத்திரைகள், காப்ஸ்யூல்கள் கலந்து இனிப்பு உணவை முதன் முதலில் தட்டில் வைத்து யானைக்குக் குடுத்தேன் தன்னைக் காப்பாற்றியதற்கு மூல காரணம் இவர்தான் என என்னைத் தெரிந்து வைத்துக் கொண்டதோ இல்லாவிட்டால் குடியிருப்புக் கதவை எப்படி அடையாளம் கண்டு தட்டியிருக்கும்? இல்லை யானைக்கு யானை மருத்துவர் சிகிச்சை அளிக்கும்போதும் பணியாளர்களிடம் இதைச் செய்யுங்கள் அதைச் செய்யுங்கள் என்று உத்தரவு போட்டு கொண்டிருந்ததைப் பார்த்து இவர்தான் முக்கியமானவர் என்று புரிந்திருக்குமோ இல்லை கும்கி யானையை வைத்து வண்டியில் ஏற்றிப் பயணிப்பதற்காக லாரி ஓட்டுநரிடமும், பாகனிடமும் பணம் கொடுத்தும், பழங்கள், கரும்பு,வெல்லம் மற்றும் பாசிப்பருப்பு சகிதம் கொடுத்து பார்த்துப் பார்த்து என்று பதனம்

சொல்லியனுப்பியதைப் பார்த்து இவர்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பானவர் என்று புரிந்திருக்குமோ”

“ஆமாம் நீ தான் குழந்தை இல்லை குழந்தை இல்லை என்று வருத்தப்பட்டிருக்கிறாயே இதோ பார்” சக பயிற்சியாளர் ராஜசேகரன் யானையின் செயல் பற்றிச் சொன்னபோது தான் நினைவிலிருந்து மீண்டார் விஷ்ணுராம்

“உனக்கு நான் குழந்தை எனக்கு நீ குழந்தை” என்று தாமும் விதயமாலாவும் பரிமாறிக்கொள்ளும் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. பயம் முழுவதுமாய் விலகிப்போயிருந்தது. சிறிய பிளிறலோடு தும்ப்[இக்கையால் தன்னைத் தழுவிக் கொண்டிருக்கும் காட்டு யானையாக வந்து கும்கியாக மாறிய யானையைப் பார்த்தார்.

தனக்கும் வித்யமாலாவிற்கும் இது ஒரு குழந்தையோ என்ற நிலையில் மனம் எங்கும் பாசம் நிறைந்து வழிய பிரமாண்டமாய் நிற்கும் யானையைப் பார்த்துக்கொண்டே நின்றார். பெரிதும் பெரிது கேள்.. என்பதன் பொருள் இதுதானோ என்று நினைத்தவாறே ஆமாம் யானை தனக்கு முதல் குழந்தை வித்யமாலாவின் வயிற்றில் கருவாய் இருக்கும் குழந்தை விஷ்ணுராமின் இரண்டாவது குழந்தைதானே!.

## பெரிதினும் பெரிது கேள் (ஆட்டணத்தி)

பெருமாள்முடியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்த போதே பொழுது சாயத் தொடங்கியிருந்தது. சூரியனின் கிரணங்கள் மரக் கூட்டங்களின் தடையையும் மீறி ஆங்காங்கே தரையைத் தழுவிக் கொண்டிருந்ததால் வெளிச்சம் கொஞ்சம் இருந்தது. வெளிச்சம் மங்குவதற்குள் காட்டைவிட்டு வெளியேறியாக வேண்டும்.... வன அதிகாரி

விஷ்ணுராம்.. இன்னும் ஆறு வன அலுவலர்களுக்கு மத்தியில் இந்த எண்ணமே மேலோங்கியிருந்தது.

உய் உய்.. என்று காற்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்தன மரங்களின் பச்சைக் குடைகள்.

வீசியடித்த காற்றில் குப்பென்று ஒரு வாடை மூக்கைத் துளைப்பதாய்…

மேலேயிருந்து பார்க்கும்போது ஆனைக்கட்டி தடாகம்… தார்ச் சாலையில் செல்லும் வாகன்ங்கள்… மாங்கரை வன ஓய்வு விடுதி…. ஆயுர்வேதத்திற்கென்றே உருவான கல்லூரி சின்னச்சின்னதாய்த் தெரியும்..

எங்கிருந்து வருகிறது இந்த நாற்றம்…

பொன்னா இங்கே உடனே வாப்பா

ஐயா என்னங்கய்யா?

"இதோ பாரு. இந்த அணில் குட்டி மயங்கிக் கிடக்குது. அசையாம எடுத்துகிட்டு வீட்டுக்குப் போ"

"நானும் எத்தனையோ மிருகங்களுக்கு வைத்தியம் பார்த்திருக்கேனுக ஆனா அணிலுக்கு இதுதாங்க முதல் தடவை" இந்த ஊர் கால்நடை வைத்தியர் வியந்துகொண்டார். அணில் தொடையில் ஊசி ஏறியது. சிறிது நேரத்தில் அணில் விழித்தது. பண்ணையாருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

பொன்னா இதுக்குக் கிண்ணத்தில் பால் வைப்பா பூங்குட்டியா இருக்கும் போல நீ இன்னைக்கி முச்சூடும் பக்கத்துலேயே இருந்து பார்த்துக்க பூனை ஏதாவது வந்து கவ்விடப் போகுது.

கொஞ்ச நாட்களில் அந்த அணில் பண்ணையாருடன் ஒட்டிக்கொண்டது. அணிலுக்காகப் புத்தக ஷெல்ஃப் ஒதுக்கி தரப்பட்டது. பழம், பால் எல்லாம் அங்கேயே தரப்படும். காலையில் தோட்ட்த்திற்குப் போக வேண்டுமென்றால் கிறீச் கிறீச் எனக் கத்தும். அவர் சன்னல் அருகில் போய் நிற்பார். அவர் தோள் மீது ஏறி சன்னல் வழியே குதித்து வயலுக்குப் போய்விடும். மாலை ஐந்து மணியளவில் பண்ணையார் அது திரும்பி வருவதற்கு வசதியாக ஜன்னல் பக்கத்தில் நிற்க வேண்டும்.

அணில் திரும்புவதற்குக் கொஞ்சம் தாமதமானாலும் பண்ணையாருக்குக் களேபரம் ஆகிவிடும். அவர் அதைத் தடவிக் கொடுக்கும்பொழுது அது வாஞ்சையாய் உடம்பையும், வாலையும் வைத்துக்கொள்கின்ற அழகே தனி, எங்கேயாவது வெளியூர் சென்றால் திரும்பி வருகின்ற பொழுது “பொன்னா அணில் வந்து சேர்ந்துவிட்டதா? என விசாரிப்பார். அந்தக் குரலில் ஓர் ஆர்வமும், வந்து சேர்ந்திருக்க வேண்டுமே என்கிற பயமும் கைகளைக் கோர்த்துக்கொண்டிருக்கும்.

”பொன்னா! நம்மை நம்மை நம்பி வந்துட்டா நாம்ப கடைசிவரைக் காப்பத்தணும்பா”

ஐயா நீங்க அதைச் சொல்லவேண்டியதேல்லீங்க நானே உங்க காலடியில் இந்த அணில் மாதிரி தானுங்க வந்து சேர்ந்தேன்.

பொன்னன் கண்களில் வழிந்த கண்ணீர் அவனது இறந்த காலங்களை ஞாபகப்படுத்தியது.

முப்பது வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சாய்ந்தர நேரம் ஐயா ஒரு வாய் சாப்பாடு குடுங்கய்யா. பசி உயிர் போகுதுங்கய்யா வாசலில் உட்கார்ந்திருந்த பண்ணையாருக்குச் சற்றுத் தொலைவில் ஒரு சின்னப் பையனின் முகம் மங்கலாகத் தெரிந்தது. அவன் சாப்பிட்டு முடிந்ததும் பொறுமையாகக் கேட்டார் “நீ யாருப்பா?”

“நானு பக்கத்து ஊருங்க எனக்கு ஆதரவாக இருந்த எல்லாரும் போயிட்டாங்க இப்ப சோத்துக்குக் கூட வழியில்லை”

“உம் பேரு என்னப்பா?”

“பொன்னனுங்க?”

“இனிமேல் இங்கேயே இருந்துடுப்பா பொய் புரட்டு மட்டும் கூடாது. உனக்கு ஏதாவது வேணுமின்னா என்னைக் கேக்கணும்.”

கொஞ்சம் கொஞ்சமாகப் பொன்னனுக்குப் பண்ணையாருடைய பெருந்தன்மையும் மனிதநேயமும் புலப்பட்டது. அவர் மனைவி திருமணமான ஒரு வருடத்துக்குள் மரண மடைந்ததும் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவில்லை. கிராமத்தில் அவரது கம்பீரத்திற்கும் பணத்திற்கும் அவரை மடக்க நினைத்த பெண்களையெல்லாம் ஏறெடுத்துக் கூடப் பார்த்ததில்லை.

“ஐயா உங்களை விட்டா க்கு யாருய்யா இருக்காங்க?” பொன்ன்ன் அடிக்கடி சொல்லுவான். பொன்னனுக்குத் திருமண வயது வந்ததும் அவரே முன்நின்று அவன் வேண்டாமென்று கெஞ்சியும் பண்ணி வைத்தார். “ஐயா உங்க நிழலிலேயே இருந்துடறங்க”

“நீ சொல்ற மாதிரியே, கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகும் இங்கேயே தாம்பா இருக்கப் போற!”

”வேலைக்காரப் பையனுக்கு யோகத்தைப் பாரு ஜாம் ஜாம் னு சும்மா ஜமீந்தார் மகன் மாதிரிக் கல்யாணம் நடக்குது!” என்று ஊரார் வியந்தனர்.

பண்ணையிலேயே தனியே வீடு கட்டிக் கொடுத்து குடித்தனம் வைத்தார். இரண்டு மகன்களைப் பெற்றெடுத்து விட்டு பொன்னன் மனைவியும் அல்பாயுசில் போய்விட்டாள். பண்ணையார் அவனை வற்புறுத்தி நகரத்தில் இருக்கின்ற ஹாஸ்டல் வசதியுள்ள பள்ளியில் அவன் மகன்களைச் சேர்பித்தார்.

“பொன்னா இந்தக் கிராமத்துச் சூழ் நிலையில் படிக்கறது கஷ்டம்பா. உம்பசங்க நல்லா படிக்கணும் அவங்க எனக்குப் பெரப் பசங்க மாதிரி. விவசாயம் பண்ணறது நல்லதுதான். ஆனாலும் படிச்சிட்டு விவசாயம் பண்ணினா அதுக்குக் கௌரவமே தனிதான்.”

பொன்னன் உருகிப் போவான் ஐயா ஐயா என்று அவர் கால்களையே சுற்றி சுற்றி வருவான். அவருக்கு நாக்குக்குச் சுவையாய் சமைத்துப் போடுவான். வாரத்திற்கு ஒருமுறை உடம்பு முழுவதும் செக்கில் குளிப்பாட்டியது மாதிரி நீவிநீவி எண்ணெய் தடவி விடுவான். ஒரு தப்புத் தண்டா செய்த்து கிடையாது. பண்ணையாருக்குத் தெரியாமல் ஒரு பைசா கூட எடுத்தது கிடையாது. பண்ணையார் வலுக்கட்டாயமாய் அவனை நகரத்திற்கு அனுப்பி மகன்களைப் பார்த்துவிட்டு வரச் சொல்வார். அவரும் அவ்வப்போது நகரத்திற்குப் போகும்போது பார்த்து செலவுக்குப் பணம் கொடுத்து நன்றாகப் படிக்க வேண்டும் என உற்சாகப்படுத்தி விட்டு வருவார்.

அணிற்குட்டி இப்போது முழுமையாக வளர்ந்து விட்டிருந்தது. பண்ணையார் உடால் மீது ஏறி ஒரே குறும்பு “இதுக்கு நல்ல பழமெல்லாம் கொடுப்பா, வெளியே போயி ஏதோ அட்டகாசம் பண்ணிட்டு வந்திருக்கு போல, வயிறு பெருசாயிருக்கு. அநேகமா வயித்துல குட்டி இருக்குமுன்னு நெனைக்கிறேன். கண்ட இடத்துல புடுச்சித் தூக்காத வலிக்கப் போகுது”

“ஐயா! குட்டியெல்லாம் போட்டா நம்மை விட்டுப் போயிருங்க”

“இதோ பாருப்பா! அது எவ்வளவு நாள் இங்கே இருக்கணுமுன்னு அதுக்குத் தோனுதோ அதுவரைக்கும் இங்கே இருக்கட்டும். இந்த இடத்தை விட்டு இனிமேல் போனாலும் அதுக்கு ஆபத்தில்லை. அதுபோதும்” என்று சொல்லிக் கொண்டே அதைத்தடவிக் கொடுத்தார்.

ஒருநாள் காலையில் ஷெல்ஃபைத் திறந்தபோது பழங்களையெல்லாம் சாப்பிடாமல் அது படுத்துக் கிடந்தது. மூன்று குட்டிகள் பக்கத்தில் கண் விழிக்காமல் கிடந்தன.

“பொன்னா! இங்க வாப்பா அணில் குட்டி போட்டிருச்சிப்பா இதுக்குப் பால் ஏதாவது குடு. உடம்பு தெம்பா இருக்கும். இல்லேன்னா மிக்ஸி ஏதாவது ஜூஸ் அடிச்சு ஒரு கிண்ணத்துலவை. குடிக்கட்டும்.”

பக்கத்திலேயே இருந்து பண்ணையார் கவனித்துக் கொண்டார். ஒரு வாரம் வெளியே கூட போகவில்லை. குட்டிகள் கண்விழித்துப் பால்குடிப்பதை நிறுத்தி பழங்களைச் சாப்பிட ஆரம்பித்தன.

பழையபடி அணில் தன் குட்டிகளைக் கூட்டிக்கொண்டு பண்ணையார் தோள்மீது ஏறி சன்னல் வழியாகக் குதித்து வெலியே போக ஆரம்பித்தது. மாலையில் குட்டிகளோடு திரும்பும்.

பண்ணையாருக்கு அந்த அணிலுடைய விசுவாசத்தை நினைத்துப் பூரிப்பு ஏற்படும்”பொன்னா! இந்த வாயில்லாத ஜீவனுக்கு எவ்வளவு விசுவாசம் பாத்தியா நாம்ப தான் நன்றி மறந்துட்டு நடந்துக்கிறோம்”.

உங்களை நம்பி வந்துட்டா ஓர் எறும்புக்குக் கூடத் தீங்கு ஏற்படாம பாத்துக்குவீங்களே. உங்க மேல யாருக்கு நம்பிக்கை ஏற்படாமப் போகும்?மனதில் நினைத்துக்கொண்டான் ஆனால் சொல்லவில்லை.

“பொன்னா, இன்னிக்குப் பசங்க படிப்பை முடிச்சுட்டு வர்றாங்க இல்லையா?”

‘ஆமாங்க’

“ஏன் மசமசன்னு நிக்கற.பஸ் ஸ்டாண்டுக்கு மாட்டுவண்டி கட்டிக்கிட்டுப் போய் அவர்களைக் கூட்டிக்கிட்டு வந்துடுப்பா நம்ப வீட்டில நல்ல விருந்துக்கு ஏற்பாடு பண்ணு வடை, பாயசம் எல்லாம் ஜோரா இருக்கணும் பசங்க எவ்வளவோ பெரிய படிப்பு படிச்சுட்டு வர்றாங்க நமக்கு வேணும்னா நம்ம பசங்களா இருக்கலாம் புரியுதா”

“அப்படியே செய்யறேங்க ஐயா”

மதியம் அந்த வீடே கோலோகலப்பட்டது ஆரத்தி எடுத்து வரவேற்க வைத்தார். அவர்கள் இருவருக்கும் பரிமாறச் சொல்லி அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்தார். பாவம் பசங்க டவுனில் என்னா இருந்தாலும் வீட்டு சாப்பாடு மாதிரி விடுதிச் சாப்பாடு இருந்திருக்குமா? என்ன கஷ்டப்பட்டாங்களோ ? என மனதில் நினைத்துக் கொண்டார்.

“ஏம்மா இன்னும் கொஞ்சம் பாயாசம் போடுமா வடை இரண்டு வைம்மா” எனப் போதும் போதுமென அவர்கள் கதறும் வரை உபசாரம் செய்தார்.

“தம்பி நீங்க ரெண்டு பேரும் நெறயா படிச்சி பட்டம் வாங்கி இந்தக் கிராமத்துக்குப் பெருமை சேர்த்திருக்கீங்க படிச்சவங்கெல்லாம் நகரத்துக்குப் போய் தங்கிடறதுனாலதான் கிராமங்கள் முன்னேறாம அப்படியே இருக்குது. நீங்க ரெண்டு பேராவது இந்தக் கிராமத்துலேயே தங்கிப் புதுப்புது நுணுக்கங்களைக் கொண்டு வந்து ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தணும்”

பண்ணையார் உற்சாகமிகுதியில் கூறியதைக் கேட்காதது போல் அந்த இருவரும் நடந்துகொண்டார்கள். தங்களுக்கு அவர் சொன்னதில் உடன்பாடு இல்லை என்பது

போல் முக பாவனைகள் இருந்தன. பொன்ன்ன் அவர்களது மெத்தனத்தைக் கண்டு பதறிப் போனான்.

“ஐயா நீங்க சொல்றபடி தான்யா நடப்பாங்க அவங்க உடம்புல ஓடறது நீங்க போட்ட உப்பு தாங்கய்யா”

அந்தச் சூழல் அங்கு நீடித்த மௌனத்தால் கெட்டு விடாமல் அவன் பார்த்துக்கொண்டான்.

“போய் நல்லா ரெஸ்ட் எடுத்துக்கங்கப்பா பிறகு பேசலாம்” எதுவுமே நடக்காத்து போல் பண்ணையார் அவர்களை அனுப்பி வைத்தார்.

பொன்ன்ன் மகன்கள் ஊருக்கு வந்து இரண்டு மூன்று நாட்களாயின அப்பா இந்த வீட்டுல ஒரு பாத்ரூம் இல்லை. கக்கூஸ் இல்லை. ரொம்பக் கஷ்டமாயிருக்குது. காட்டு மிராண்டித் தனமா சொம்பைத் தூக்கிட்டு வாய்க்காலைத் தேடிப் போய்க் கிட்டு இருக்கமுடியாது. பெரியவன் சொன்னான்.

”ஏம்பா! நம்ப பண்ணையார் கூட அப்படித்தான் போறாரு?”

“இதொ பாருப்பா எதுக்கெடுத்தாலும் அவரு பேரைச் சொல்லாதே. அவரு வளர்ந்த விதம்வேற. சீக்கிரம் ஒரு பாத் அட்டாச்டு ரூமுக்கு ஏற்பாடு பண்ணு”

சரிப்பா

பொன்னனுக்குப் புரியவில்லை. எப்படி பசங்களால் இப்படி நடந்துகொள்ள முடிகிறது? பண்ணையாருக்குச் சாப்பாடு பரிமாறும் பொழுது ஜாடைமாடையாகச் சொன்னான்.

“அது அது இருக்க வேண்டிய இட்த்துல இருக்கணுங்கய்யா நாம்ப வசதி செஞ்சி கொடுத்தா அவகளுக்குப் படறதில்லீங்க”

”ஆம்பா அப்படிச் சொல்லற நாம எதையாவது எதிர் பார்த்தா செய்யறோம்? நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கணு மேன்னுதான இப்படிச் செய்யறோம்?”

“அப்பா! நாங்க ரெண்டு பேரும் டவுனுக்குப் போகப் போறோம்”

“எதுக்குப்பா?”

“அங்க போயி வேலை தேடப்போறோம்”

“ஏம்பா!அதுக்கெதுக்கு டவுனுக்குப் போறீங்க பண்ணையார் இன்னும் பத்துபேருக்கு இங்கேயே வேலை கொடுப்பாரே. உங்க ரெண்டு பேரையும் வச்சி நம்ப கிராமத்துல ஒரு நல்ல பள்ளிக்கூடமா ஆரம்பிக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தாருப்பா”

பாத்தியா அவரு எதுக்காக எங்களைப் படிக்க வச்சிருக்காருன்னு தாம் பெயர்ல ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கணும்னும் இவருக்கு நாங்க காலமெல்லாம் ஊழியம் பண்ண்ணும்னும் நெனைச்சிருக்காரு

அவருக்கு ஊழியம் பண்ண வேணாம்பா இந்த ஊர்ப் பசங்க நல்லாப் படிக்கணும்னு ஆசைப்படறாரு அதைப் புரிஞ்சிக்குங்க

“நீ என்னதான் சொன்னாலும் எங்களால இந்தக் கிராமத்துல இருக்கமுடியாது”

“ஏம்பா நன்றி கெட்டத்தனமாய் பேசறீங்க? அவருதானப்பா உங்க ரெண்டு பேரையும் படிக்க வச்சாரு”

“சும்மாவா படிக்க வச்சாரு நீ காலமெல்லாம் அவருக்குச் செருப்பாத் தேஞ்சு ஊழியம் பண்ணுறியே ஒரு பைசா கூட ஏமாத்தாம அதுக்குக் கூலி அவ்வளதான் நாங்க இங்க இருந்தா நீ அவரை முழுசாக் கவனிக்க மாட்டேன்னு நெனைச்சி எங்க மேல கரிசனம் காட்டற மாதிரி டவுனுக்கு அனுப்பி வச்சாரு இதப் புரிஞ்சிக்க உனக்கு வேணுமின்னா சக்தியில்லாம இருக்கலாம்” பெரியவன் பேசினான்.

"அப்பா நீ வேணுமின்னா ஒண்ணு செய் இந்த ஆளுகிட்ட கிடந்து ஏன் சிரமப்படறே எங்கப்பா எடுபிடி வேலை செய்யறதும், உன்னை அவர் ஏவிகிட்டே இருக்கறதும் எங்களுக்கு அறவே பிடிக்கலே எங்களுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்க சான்ஸ் இருக்கு. நீயும் எங்களோடு கிளம்பி வந்துடு" சின்னவன் அறிவுரை சொன்னான்.

அதுவரை பேசாமலிருந்த பொன்னனுக்கு ஆத்திரம் உச்சியை எட்டியது.

"நாய்களே வெளியே போங்கடா! நன்றி கெட்ட ஜென்மங்களே ! இந்த உயிர் பண்ணையார் காலடியில் தாண்டாப் பிரியும் உங்கள மாதிரி வீட்டுக்குப் பாதகம் நெனைக்கிறவன் இல்ல நானு. அனாதையா ஒருவேளை சாப்பாடு வந்த எனக்கு வாழ்க்கையையே அமைச்சிக் கொடுத்த தங்கமானவரு அவரு அவரைப் பத்தி ஏதாவது பேசினீங்க கொலையே விழும்"

அவன் மகனகள் ஏதோ சொல்ல வாயெடுத்தார்கள்

"வாயைத்திறக்காதீங்க வெட்டிப் போட்டிருவேன். நான் மிருகமா மாறுவதற்குள்ள மரியாதையா வீட்டைக் காலி பண்ணுங்க இன்னியோட உறவு போயிடுச்சி நீங்க என்னோட மகனுங்க இல்லை. நானும் உங்க தகபனில்லை இந்த வீட்டுப் பக்கம் நான் செத்தாக்கூட வரக்கூடாது"

பொன்ன்ன் வாழ்நாளில் அப்படிக் கோபப்பட்டதேயில்லை. அவர்கள் சாமான்களை வெளியே எடுத்து எறிந்தான், அவர்கள் வாங்கி வந்திருந்த பொருட்களைத் தூக்கி உடைத்தான்.

மகன்களை வீட்டை விட்டு விரட்டிய பிறகுதான் அவனுக்கு நிம்மதி கிடைத்தது.

வெளியூருக்குக்  பரும்பு வியாபாரம் விஷயமாகப் போயிருந்த பண்ணையார் அன்று மாலை திரும்பி வந்தார்.

“பொன்னா! பசங்க எங்கப்பா? அவங்களுக்குத்துணி வாங்கிட்டு வந்திருக்கம்பா”

“ஐயா அவங்களை நானு துரத்திட்டேங்க”

நடந்ததை எல்லாம் சொன்னான் பண்ணையார் வருத்தப்பட்டார். “ஏம்பா! அவசரப்பட்டே”

“இல்லீங்க ஐயா நன்றி கெட்ட ஜென்மங்களை நான் எப்பயோ தலை முழுகிட்டேன்ய்யா உலகத்துல நீங்க ஒருத்தர்தான் முக்கியம்” பொன்ன்ன் அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினான். சின்னக் குழந்தைகளைப் போல் அவன் தேம்பியது பண்ணையாருக்குக்கூட விழிகலில் கண்ணீரை வரவழைத்து விட்டது.

“அழாதேப்பா அணில் வந்துடுச்சா?”

“இன்னும் வரலீங்கய்யா அதுக்கு மட்டும் நன்றி இருக்கப் போவுதா குட்டி குடும்பம்னு ஆயிருச்சி இனிமேல் வருமா?

திடீரென சன்னல் பக்கம் கிறீச் எனச் சத்தம்

அவர் போய் சன்னலருகில் நின்றார். அணில் அவர் தோள் மீது ஏறிக் குதித்து உள்லே வந்தது. வாஞ்சையுடன் அவர் வருடலை எதிர்பார்த்திருந்த்து. குட்டிகள் வருகின்றனவா எனப் பார்த்தார் அவற்றைக் காணவில்லை. இனி மேல் குட்டிகள் வராது எனப் புரிந்துகொண்டார் அணில் வழக்கம் போல் ஓடி புத்தக ஷெல்ஃபுக்குள் படுத்துக்கொண்டது. அவர் விழிகளில் தாரை தாரையாக வழிந்த நீர் அவர் சட்டையை ஈரமாக்கியது.

## அலகு – 2

# ஆயிஷா

- இரா. நடராஜன்

<u>**நாம் கண்ட பள்ளிக்கூடந்தான். அதில் நாம் காணாத ஒரு பக்கம் இந்தக் கதை.**</u>

**ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை**

இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலையும், இவ்வரிசையில் வர இருக்கும் இன்ன பிற பன்னிரண்டு நூல்களையும் தமிழில் எழுதத் தூண்டியது ஆயிஷாதான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் என் ஆயிஷாவைத் தெரிந்து கொள்ளுங்கள் ஏனெனில் இந்தப் புத்தகமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள்தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது.

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப்போகுமாறு கண்ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய ஒரு தேர்ந்த விஞ்ஞானவாதிக்கும், ஆயிஷாவின் கதையை எழுதிக்கொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில் தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும்போது மட்டும் இப்படி குழந்தை மாதிரி துக்கம் கொப்பளிக்க அழ நேர்கிறது எனக்கு

எனக்கு முதன் முதலில் தெரியவந்த ஆயிஷாவுக்கு 15 வயது நான் அறிவியல் ஆசிரியையாகப் பணியாற்றிய ஒரு கிறிஸ்துவப் பள்ளியில் பத்தாம் வகுப்பு – பி பிரிவில் ஐம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி. அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள

யுவதிகளில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்கு சற்றேறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப்போயிருந்தது.

நாங்கள் எட்டு பேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதன் மூலம் இந்தச் சூழல் வாழ்விலிருந்து தப்புவோர்,அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியதோர் தங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்கத் தொடங்கும் அப்பணியிடத்தில் சற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தப்பிப்போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத் தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானாள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியையும் இல்லை. வருகைப் பதிவேட்டை சரிசெய்யவும், ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாப்பில்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன் முதலில் அவளை அறிய நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன்.எனக்கு சிலிர்க்கிறது. பல ஆண்டுகளாக ஒரு வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப்போயிருந்தேன். சில வேளைகளில் சில பாடங்களை நட்த்தினோமா என்ற ஞாபகமே இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன்.

இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரிதாக மாறிவிட்டது? காலையில் எழுந்து பல்துலக்குவதை உற்சாகத்தோடவா செய்கிறோம்?

எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட் இங்கே அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி ஒரே செல் பிரிதல் புதிதாகத் தெரிந்துகொள்ளும் ஆர்வமற்று ஓர் எந்திரமாய் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்து பாடம். பூமி எப்படி ஒரு காந்தமாக உள்ளதென விளக்கிக்கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவக் காந்தம் அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. காந்தத்தின் வட நோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாரையும் உறங்க வைத்துவிடும் என் தொனியில் கரும்பலகையில் சில கிறுக்கல்களுடன் நட்த்திக்கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

மிஸ் என்றொரு குரல்

கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் என்ன வாந்தி வருதா? என்றேன். வகுப்பே கொல்லெனச் சிரித்தது. சரியான முட்டாள் நான். எப்பேர்ப்பட்டவள்? என் ஆயிஷாவைப் போய் எப்படி சொல்லி இருக்கிறேன்.

இல்ல மிஸ் சந்தேகம்

இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது சட்டென முகம் சுருக்கி சுள்ளென எரிந்துவிழும் குரலில் என்ன என்றேன். கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப்பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காண முடிந்தது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்காரவைக்கும் முயற்சி. பின் மறுபடியும் என்ன என்றேன்.

மிஸ்.. அந்தக் காந்தத்தை ரெண்டே வெட்டினா என்ன ஆகும். மிஸ்?

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்துவிட்ட இந்த ஆறு ஆண்டுகளில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தைப் பற்றி யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்று பொறி தட்டியது.

ரெண்டு காந்தம் கிடைக்கும் சரி பதில் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக் கடினப்பட்டு புன்னகைக்க முயற்சி செய்தாள்.

அந்தக் காந்தத்தை வெட்டிக்கிட்டே போனா? உதாரணமாக நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா?

ரொம்ப சிம்பிள்மா முடிவுறா எண்ணிகையில் காந்தம் கிடைக்கும்

மீண்டும் நிசப்தம் லேசாக வியர்க்கிறது அவளுக்கு வகுப்பு உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே உட்காரு என்றேன். பின் நடந்துகொண்டிருந்தேன். ஏதேதோ பாவனையாகப் பேசிக்கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும்வரை அலைந்துவிட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

அடுத்த வகுப்பறையைத் தாண்டியிருக்க மட்டேன்.கூடவே வந்தது நிழல். மிஸ் பிளீஸ் மிஸ் ஒரே ஒரு நிமிஷம் மிஸ் அப்படி சொல்லும்போது அவள் முகத்தை பார்க்க வேண்டும் நீங்கள் அதற்கு மேலும் புறக்கணிக்க முடியவே முடியாது.

என்ன சொல்லு

காந்தம் பத்திதான் மிஸ்

சொல்லும்மா டயம் ஆச்சில்ல?

முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர் கோட்டில் வெச்சா எதிர் துருவங்களைக் கவரும் அதன் இயல்பு என்ன ஆகும்.

ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்தின் தெற்கை இழுக்கும் ஆனால் அழுபடும் காந்தத்தின் வடக்கே அடுத்துள்ள காந்தம் ஏற்கனவே இழுத்துகிட்டிருக்கும் இல்லையா மிஸ்?

ஆமா அதுக்கென்னன்ற?

என் சந்தேகமே அங்கதான் இருக்கு. எல்லாக் காந்தங்களின் கவர்திறனும் ஒன்றெனக் கொண்டால் அவை ஒட்டிக்கொள்ளத்தான் வாய்ப்பே இல்லையே.. எப்புறமும் நகராமல் அப்படியே தானே இருக்கும்.

ஏன் நாம இந்தப் பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்க்கோட்டில் வைத்தது போல் அமைக்கப்பட்டதா வெச்சிருக்கக் கூடாதா? அந்தக் கோணத்தில் பூமிங்கற காந்தத்த ஆராயலாம் இல்லையா?

பதிமூன்று வருடப் பள்ளி வாழ்க்கை. பின் மூன்றாண்டு இயற்பியல் பல்கலைக்கழகத்தில் இப்படியொரு கேள்வியை நான் கேடுக்கொண்ட்தாக நினைக்கவில்லை. எங்கோ படித்ததாக ஞாபகம் என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே

The truth of magnets வெட்ரோட் ஸ்டுடண்ட் கிங்லீங் எழுதியது அருமையா இருக்கு... படிக்கிறீங்களா மிஸ்

இந்த புத்தகமெல்லாம் நீ படிக்கிறாயா? அவ்வளவுதான் என் ஆயிஷா கிடைத்துவிட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்றுவரை மீள முடியவில்லை. அறை வங்கியவளைப் போல புத்தகத்தை வாங்கிக்கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.

இப்போதும் சொல்கிறேன். அந்த நிமிட்த்திலேயே ஆயிஷா என்னை முழுதாக வென்றுவிட்டாள். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதன்பின் அவளை நான் வெறுத்ததே இல்லை. ஒரு செக்கு மாட்டிற்கு இதைவிட அமர்க்களமாய் யார்தான் சூடு போட முடியும்?

இரவில் எனது விடுதி அறையில் புத்தகத்தைப் புரட்டியபோது மேலும் பல அதிர்ச்சிகள் முதலில் அது மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. பின் அதில் ஆயிஷா அடிக்கோடிட்டிருந்த முறை ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள். எல்லாமே முறை ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள் எல்லாமே அவளைக் குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும் ஆச்சரியக்குறிகளை கூட்டிக் கொண்டிருந்தன. ஆயிஷா ஒரு குழந்தை இல்லை. அவள் யாரோ மனுஷி கூட இல்லை. வேறு ஏதோ ஒரு பிறவி. கடவுளே நான் ஒரு நிமிடம் கூடத் தூங்கவில்லை.

விடுதியில் காலை வேளையில் அவள் வகுப்புப் பெண்களை அழைத்துப் பேசத் துடித்தேன். அவளைப் பற்றி அறிய வேண்டும். இத்தனை நாட்கள் அவளை அறியாதுபோனது ஒரு குற்றவுணர்வை ஏற்படுத்தியிருந்தது. புத்தகமோ என் அறையே கனத்துப்போகும்படி என்னை திடுக்கிட வைத்துக் கொண்டிருந்தது. வேலைகள்

ஓடவில்லை. இத்தனைக்கும் எல்லாவற்றையும் படிக்கவில்லை. அப்பெண் அடிக்கோடிட்டிருந்த வரிகளையும் அவளது அடிக்குறிப்புகளையுமே படித்து விழி பிதுங்கிப் போயிருந்தேன்.

முதல் பாடவேளையில் வகுப்பேதும் இன்றி ஆசிரியர் ஓய்வறையில் அமர்ந்து இருந்தேன். கையில் புத்தகம் ஓய்வறையில் ஆசிரியைகள் புதிய புடவை டிசைன்களைப் பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும் ரெஜினா மிஸ்ஸுக்கும் இதேதான் வேலை. இல்லையென்றால் நடிகைகளின் வித்தியாசங்கள், ஒரு நாள் புருவம், மறுநாள் மச்சம். இப்படிப் பேசிப் பேசிக் களைத்து பாடம் நட்த்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள். ஆரம்பத்தில் இது எரிச்சலூட்டுவதாக இருந்தது. பிறகு மரத்துப்போனது. இப்போது புதியவளாக இருந்தேன். அவர்களைப் பார்த்து எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகி இருந்தது.

திடீரென்று மாணவியர் பக்கம் பேச்சு சென்றது. ரெஜினா ஒவ்வொரு பெண்ணாகக் கேலி செய்துகொண்டிருந்தாள். அவளது கொண்டை குலுங்க அவள் அதைச் செய்தாள். குதிரைமூஞ்சி, நரிவால்,எலிவால் என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பெயர் வைத்திருந்தாள். அவளது அருவருப்பான வேடிக்கைகளை சரோஜினி ரசித்துக் கொண்டிருந்தாள், ரெஜி..ரெஜிமா… கொன்னுட்டடி என்ற ஆராதனைகள் வேறு.

பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. நானும் அவர்களது கூட்ட்த்தில் ஒருத்தியா? எல்லாமே முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள், அவற்றிற்கு நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள் வகுப்பறையில் ஆசிரியர்கள் ஓய்வெடுக்கிறார்கள்.

வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரமாய் (அதுவும் முக்கிய கேள்விகளுக்கு விடைகளை மட்டும்) மாணவர்கள் உருமாற்றம் அடைந்துவிட்டன.

எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு வரிசை,எண், தேர்வு எண்,பெற்றெடுக்கும் மதிப்பெண்கள் எங்கும் எண்கள், எண்களே பள்ளிகளை ஆள்கின்றன.எல்லா ஆசிரியர்களுமே ஏதாவது ஒரு வகையில் மாணவரின் அறிவை அவமானப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டேன். அவர்களில் ஒருத்தியா நான்? என் மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று ஒரு பெண், அறிவார்த்தமான ஒரே ஒரு கேள்வியால் என்னை எப்படி யோசிக்க வைத்து விட்டாள்?

"ஒரு கேஸ் இன்னிக்கு பிடிபட்டுது இத கேட்டியோ" என்று அங்கலாய்த்தபடி என்னிடம் வந்தாள் சுகுணா மிஸ் மேல்நிலைக்கு கணக்கு நடத்துபவள்.விடுதிக் காப்பாள யுவதிகளில் ஒருத்தி. எந்த உற்சாகமுமின்றி என்ன என்றேன்.

வினோதமான கேஸ்.. லெவன்த் வீட்டுக் கணக்கு திருத்திக்கிட்டிருந்தப்போ கஷ்டப்பட்டு பிடிச்சேன். பாதிப்பேர் நோட்ல ஒரே கையெழுத்து அதுவும் ஒரு லாஜிக் சம் முதல்ல காப்பினு நினச்சேன். அப்புறம் ஒருத்திய பிடிச்சி செமத்தியா குடுத்தேன். உண்மையைக் கொட்டிட்டா"

"கொஞ்சம் நிமிந்து உட்கார்ந்தேன். அவள் என்னைக் காத்திருக்க வைத்தாள். நான் திடுக்கிட வேண்டுமென விரும்புபவள் போலிருந்தாள். "ம் சொல்லு என்றேன்.

நம்ப மாட்ட ஒரு டென்த் ஸ்டாண்டர்டு படிக்கிற பெண் லெவன்த்துக்கு வீட்டுக் கணக்கு போட்டுத் தந்திருக்கு"

டென்த்தா…? எழுந்து நின்றிருந்தேன்.

ஆமாம் கஷ்டப்பட்டு கண்டுபிடிச்சேன் நேரா ஸிஸ்டர்ட்ட போயிட்டேன்.. எனக்கு ஊர்ஜிதமாகிவிட்டது போலானது.என்னா பண்ணினாங்க அந்தப் பெண்ண

அது ஒரு ஆயி அப்பன் இல்லாத கேஸ்

அர்ப்பன்ஸ் ஹோமா?

சித்தி வீடோ என்னமோ கார்டியனை வரச் சொல்லியிருக்காங்க மோஸ்ட்வி டி.சி யாத்தான் இருக்கும்.

நான் எப்படித் தவித்தேன் என்பதை என்னால் இங்கு எழுத முடியாது. பிரின்ஸ்பால் அறைக்கும் ஒய்வறைக்கும் இருப்புக் கொள்ளாமல் நான் அலைந்தேன். பதினொன்றாம் வகுப்பு மாணவியர்க்கு டென்த் மாணவி வீட்டுக் கணக்குச் சொல்லித் தருகிறாள் என்றால் அவள் என்ன நம்ப முடியாத பிறவி? இங்கு வந்து ஏன் பிறந்து தொலைத்தாள்? அம்மா அப்பா இல்லாதவளாமே… கடவுளே எங்கள் குழந்தைகளை ஆசிரியர்களிடமிருந்து காப்பாற்றும்.

அவளது வகுப்பிற்கு நான் போன நேரத்தில் அவளது இடம் காலியாக இருந்தாது. விசாரித்தேன். “செம அடி மிஸ்” என்று கலங்க அடித்தார்கள்.ஏதோ ஆகிப்போயிருந்தேன்.எதுவும் நட்த்தப்பிடிக்காதவ்ளாய் இருக்கையில் அமரப்போனேன்.

"மே.. அய்.. கம்.. இன்.. மிஸ்" ஆயிஷா நின்றிருந்தாள். கலைத்தெறியப்பட்ட கனவு போல், வெள்ளைப் படுதாவுடன் இரண்டு இசுலாமியப் பெண்கள் உடன் நின்றிருந்தனர். ஒருத்தி  எனக்கு முகமன் செய்தாள்.

"நான் ஆயிஷாவோட சித்தி"

வாங்க எப்படி படுத்தறா பார்த்தீங்களா… இவ என்னோட அக்கா பொண்ணு. இவப் பொறந்த நேரமே சரியில்லே. இந்தச் சனியன் வேணும்னு யார் அழுதா தறுதல மக"

என் கண் முன்னால் ஆயிஷாவை அடிக்க முயன்றாள்

கொஞ்சம் பாத்துக்கங்க புத்தி சொல்லுங்க என் புருஷன் கூட இங்க  இல்ல துபாயில இருக்காரு தனியா அவஸ்தைப்படறேன். இது இப்படி இருக்கு படிப்ப நிறுத்திடலாம்னா சரி இவ்வளவு வருசம் படிச்சது படிச்சாச்சு. ஒரு எசெல்சி முடிச்சிடட்டுமேனு பாக்கேன்"

அன்று வகுப்பிலிருந்து கிளம்பும்போது சொன்னேன்.

ஆயிஷா ஈவினிங் ஹாஸ்டல்ல வந்து என்னப் பாரு

எஸ் மிஸ்

என் ஆயிஷா அப்பட்டிப்பட்டவளாக இருந்தாள். ஆம், ஒரு விஞ்ஞானியின் தேர்ந்த குணத்தோடு கேள்விகள் அவளுக்குள்ளேயிருந்து வந்தன. ஒரு மெழுகுவர்த்தியில் ஒளி அதிகமாகவும் வெப்பம் குரைவாகவும் உள்ளது.ஆனால் ஒரு அடுப்பில் எரியும் நெருப்பில் ஒளி குறைவாகவும் வெப்பம் அதிகமாயும் இருக்குதே ஏன் மிஸ்? நான்

கேட்டுக்கொண்டேன். இந்தக் கேள்வி கேட்கும் மாபெரும் வித்தையை அவள் எங்கேயிருந்து கற்றாள்? அது அவளது உதிரத்தில் உள்ளதா?

வகுப்பறை என்றல்ல ஒரு நாள் நான் எனது ஆடைகளை துவைத்துக் கொண்டிருக்கும்போது கேட்டாள். “துணி துவைக்கிற சோப் அழுக்கை அகற்றுவதற்கும், குளியல் சோப் அழுக்கை அகற்றுவதற்கும் இடையிலான வித்தியாசம் என்ன”? கடவுளே, இந்தப் பெண்… கேள்விகளால் இந்தப் பிரபஞ்சத்தை உலுக்கவே பிறந்திருக்கிறாள்.

ஒருநாள் The most dangerous Man in America என்ற பெஞ்சமின் பிராங்க்ளின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தைக் கொண்டு வந்தாள். அதிசயிக்கத்தக்க வகையில் என்னையும் ஒரு புத்தகப்புழுவாக மாற்றிக்கொண்டிருந்தாள். “மின்னலில் மின்சாரம் உள்ளதை நிரூபித்த பிராங்க்ளின் பட்டம் ஒரு பட்டுக் கைக்குட்டையால் செய்யப்பட்ட்து மிஸ்” என்றாள். எனக்கு அதுவரை தெரியாது. ஒரு கேள்வியை எழுப்பிக்கொள்வது பிறகு அதற்கொரு விடை தெரியும்வரை ஓயாது தேடுதல் என்கிற தேர்ந்த விஞ்ஞானியின் தகுதி ஆயிஷாவிடம் இயல்பிலேயே இருந்தது.

“மிஸ் நியூட்டன் அறிவியல் சோதனைகள் நடத்த ஆரம்பிச்சப்போ அவருக்கு வயது பன்னிரண்டு. பிராங்க்ளின் தன் முதல் சோதனையை 40 வயசுலதான் செய்திருக்காரு. வயதா பிரச்சினை… ரெண்டு பேரும் விஞ்ஞானிகள்தான்”

“…..”

“மிஸ்… இந்த புத்தகத்துல சில பக்கங்கள் நல்லா புரியுது சிலது புரிய மாட்டேங்குது”

“ போகப் போகப் புரியும். அது அதுக்கு ஒரு வயது வேண்டாமா”

என்ன மிஸ் நீங்க எனக்கு இங்கிலீஷ்தான் பிரச்சினை

அதுவும் ஒரு பிரச்சினைதான்

ரொம்பக் கஷ்டமாயிருக்கு மிஸ் நம் மொழியிலேயே வரணும்”

யாரு எழுதறாங்க சொல்லு

நீங்க எழுதலாமே மிஸ்

இப்படிப் புத்தகங்களைத் திருடிட்டு வர்றியே..மாட்டிக்கிட்டா?

நான் தான் படிச்சிட்டு எடுத்த இட்த்திலேயே வெச்சிடறேனே

தப்பும்மா

சொல்லுங்க மிஸ்

என்ன சொல்லணும்?

நீங்க ஏன் தமிழ்ல இதையெல்லாம் எழுதக் கூடாது?

பாக்கலாம்.. அதெக்கெல்லாம் நிறைய விஷயம் தெரியணும்

பிறகு வழக்கமான வேகத்தோடு கேட்டாள்

மிஸ் மின்னலிலிருந்து மண்ணை மின்சாரம் தாக்கும் இல்லையா? மரம் கூட விழுவதுண்டு. கம்பியிலுள்ள மின்சாரத்திற்கும் அதுக்கும் என்ன வித்தியாசம்?எப்படி மின்சாரம் பரவுது?

என் ஆயிஷா அப்படிப்பட்டவர்களாக இருந்தாள். என் பழைய ரெக்சின் பையில் அவளது சின்ன ஆய்வுக்கூடப் பொருட்கள் இருந்தன. ஒரு லென்சுக் கண்ணாடி வட்ட வடிவக் காந்தம்… மருத்துவரின் ஊசி சிரிஞ்சு ஒன்று மற்றும் ஒரு பழுதடைந்த டிரான்சிஸ்டர் வானொலி. அதனைச் சரிசெய்யும் முயற்சியிலேயே அவளின் பல விடுமுறை நாட்கள் கழிந்தன.

நானே நிறைய மாறிக்கொண்டிருந்தேன். எவ்வளவு மோசமானவளாக இருந்திருக்கிறேன்? எனது சொந்தத் துறை மீதே எவ்வித அக்கரையும் இல்லாமல் சொரணையற்ற பிண்டமாக ஆறு ஆண்டுகள் வெறுமனே தள்ளியிருக்கிறேன்.

ஆயிஷாவின் உறவில்தான் நான் உணர ஆரம்பித்தேன். எவ்வளவு தூரம் விஞ்ஞானமற்ற முறையில் நாம் நம் குழந்தைகளுக்கு விஞ்ஞானம் போதிக்கிறோம் என்று நாம் எங்கே குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உணர்ந்து கேள்வி கேட்க அவகாசம் தருகிறோம்? அவர்கள் கேட்கத் தொடங்கும் முன்னரே நாமாக முன் தயாரிக்கப்பட்ட கேள்விகளால் அவர்களை மூழ்கடித்து விடுகிறோம். அறிவும் வளருவதில்லை. பள்ளியில் பள்ளியில் ஆசிரியர்கள் அதிகம் சொல்வது எதை? கையக் கட்டு… வ்ஆயைப் பொத்து”

விரைவில் புரிந்துகொண்டேன். என் ஆயிஷாவுக்கு நாலுபுறமிருந்தும் பிரச்சினைகள் முளைத்தன. ஆனால் பயித்தியக்காரி நான். உணரத் தலைப்படவில்லை. அவளை அவளின் அறிவை, அது எந்தத் திசையில் செலுத்தும் என்று ஒரு நாள் சட்டென்று கண்ணில் பட்டது அது. ஆயிஷாவின் பின்காலில் பட்டை பட்டையாக வீக்கம் தடித்துப் போகுமளவு அடி வாங்கியிருந்தாள். இப்போது அவள் என்னிடம் மிகவும்

நெருங்கியிருந்தாள். அவளைத் தொடாமல் என்னால் பேசவே முடியாது. அவள் மீது அவ்வளவு அன்பூறும்படி அவள் செய்திருந்தாள். அருகில் அழைத்து விசாரித்தேன்.

கெமிஸ்ட்ரி மிஸ் அடிச்சாங்க

ஏன்… ஏன் ஆயிஷா?

பேப்பர் வந்தது மார்க் சரியா போடல. கேட்டேன் சொந்த சரக்குக்கெல்லாம் மார்க் கிடையாதாம். நோட்ஸ்ல இருக்கிறத அப்படியே எழுதணுமாம் டென்த்துன்னு மிரட்டுறாங்க மிஸ்.. நோட்ஸ்ல தப்பாயிருந்தா என்ன பண்றதுனுட்டு கேட்டேன்" பேச முடியவில்லை, அவளால் காணச் சகிக்கவில்லை. அழும் போது அவள் குழந்தையாக இருக்கிறாள்.

முன்பு ஒரு முறை சரோஜினியிடம் வாங்கிக்கொண்டு வந்தாள். இதே நோட்ஸ் பிரச்சினை… கடவுளே.. அவரவர் அறிவைப் பயன்படுத்த அனுமதியுங்களேன். எபேர்பட்ட பெண்.அவளை அடிப்பது என்றால் எப்படி மனசு வருகிறதோ ராட்சசிகள்.

தவிற வேறுவிதச் சிக்கல்கள் டியூசன், கிட்டத்தட்ட எல்லா ஆசிரியைகளுமே வீட்டில் தனியாக டியூசன் நடத்தி வந்தனர். பணம் எல்லாம் அது படுத்தும் பாடு போட்டா போட்டி சண்டை வீட்டிற்கு படிக்க வருவோர்க்கு விசேஷச் சலுகை, சட்டங்கள், வகுப்பில் ராஜ மரியாதை.. வினாத்தாள்கள் முன்பே அறியும் உரிமை. எவ்வளவு குமட்ட வைப்பது அது. வெட்கமில்லாமல் இதை அவர்கள் செய்தே வருகிறார்கள். வருமான வரியில் சேராத வருமானம் யார்தான் விடுவார்கள்?

ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் பழி வாங்கப்பட்டாள். வகுப்பிலும் கேள்விகள் கேட்டு குழப்பி விடுபவளாக இருக்கிறாள் அல்லவா?தொழிலைக் கடினமாக ஆக்குபவளை யார்தான் விரும்புவார்கள்? விரைவில் எனது போராளி தினமும் உதை வாங்கிவரத் தொடங்கினாள்.

வரலாற்றுப் பாடவேளையில் ஜெர்சி மிஸ் என்ன செய்தாள்?

அசோகரை புத்த மதத்துக்கு மாற்றியது யார் மிஸ்?

புத்த பிட்சு ஒருத்தர்

இல்ல, அவர் பெயர்?

”……”

”அவரது பெயர் உபகுப்தர் மிஸ்”

”தெரிஞ்சு வெச்சுக்கிட்டு டெஸ்ட் பண்றயா.. வாடி இங்க”

ஒரு காலில் நிற்க வைத்து உதைத்திருக்கிறாள்.இப்படி ஆயிஷா முன் எல்லா ஆசிரியைகளுமே தனது பிரம்புப் பிரயத்தனத்தால் அறிவை நிலைநாட்டத் தொடங்கி விட்டார்கள். டீச்சர் அடிச்சா வலிக்காம இருக்க ஏதாவது மருந்து இருக்கா? என்று கேட்கிறாள் ஆயிஷா.

அடி… அசட்டுப் பெண்ணே என்று கட்டிக்கொண்ட என்னால் அப்போது எந்தப் புதிரையும் உணர முடியவில்லை. எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்துவிட்டேன் நான்.

ஓர் இரவு அவசரமாக விட்டுக்குக் கிளம்பியபோது தனது சிறிய குறிப்பு நோட்டை விட்டுச் சென்றுவிட்டாள். அன்றைக்குத்தான் என் ஆயிஷாவின் இன்னொரு பக்கம் தெரிய வந்தது. நூற்றுக்கணக்கான கேள்விகளின் தேவையை விட இந்த என் ஆயிஷா வித்தியாசமானவள். முதலில் அந்த நோட்டு கண்ணில் பட்டபோது அதை எடுத்து மேஜையில் வைத்துவிட்டு, வழக்கமான விடை திருத்தும் வேலையில் இறங்கிவிட்டேன். பிறகு ஏதோ ஓர் உந்துதலின் பேரில் அதை எடுத்துப் புரட்டினேன்.

முதல் பக்கம் இரண்டு, மூன்று நான்காவது பக்கத்தில் எனக்கு முதல் அதிர்ச்சி ஒரு பக்கம் முழுவதும் ஆயிஷா நூற்றுக்கணக்கான முறை என் பெயரை எழுதி வைத்திருந்தாள். நீண்ட நேரம் அந்தப்பக்கத்தை நோக்கிய எனக்கு கண்ணீர் முட்டியது. பின் சில பக்கங்கள், வகுப்பில் எழுதப்பட்ட ஆங்கிலப் பாட்டு மூன்று முறை பின் அந்தப் பக்கம் என்னை மேலும் அதிர்ச்சியடைய வைத்து கிட்டத்தட்ட மூர்ச்சையாகி விழ வைத்தது.

அந்தப் பக்கம் என் பெயரை எழுதியிருந்த ஆயிஷா அதற்கு கீழே என் தாயார் என் முதல் ஆசிரியை என் முதல் உயிர் என்று ரத்தத்தால் எழுதியிருந்தாள்.

ஆம்; அது ரத்தம்தான் அய்யோ இது என்ன பெண்ணே உனக்கு என்ன நான் செய்துவிட்டேன். உனது கேள்விகள் சிலவற்றை காது கொடுத்துக் கேட்ட்தைத் தவிர அதற்காகவா இத்தனை அன்பு பொழிகிறாய்? அம்மா, நீ பெரும் மனுஷி. எனக்குள்ளே யாரைத் தேடுகிறாய் நீ? பார்க்காமல் போன அப்பாவையா,அம்மாவையா? அல்லது யாரையடி என் உயிரே. நீ இல்லாது போயிருந்தால் நான் மட்டும் யாரடி? ஒரு

எந்திரத்தைவிட கேவலமான ஆசிரியையாகவே செத்துப் போய்க் கிடந்த என்னை மீட்டெடுத்தவளல்லவா நீ என் பொக்கிஷமே இத்தனை நாட்கள் எங்கேயடி இருந்தாய்? உனக்கு உடல் சிலிர்த்துப்போனது. நான் சொல்லிக்கொண்டேன். அவளுக்கு என் உயிரான ஆயிஷாவுக்கு எப்படியாவது நன்றியாக எதையாவது செய்ய வேண்டும் உன்னை எப்படி ஆக்குகிறேன் பாரடி?

கடவுளே அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவத்திற்கு முதல் நாள் வகுப்பில் சர் ஹம்ப்ரி டேவியைப் பற்றிச் சுருக்கமாய் சிலவற்றைச் சொன்னேன். அறுவைச் சிகிச்சையின்போது உடலை மரத்துப் போக வைக்கிற நைட்ரஸ் ஆக்சைடு வாயிவை அவர் கண்டுபிடித்தது குறித்து பாடம் நடத்தினேன்.

நைட்ரஸ் ஆக்சைடு தண்ணீரில் கரையுமா? மிஸ்

தண்ணீரில் மட்டுமல்ல அது எத்தனாலில் சல்பியூரிக் அமிலத்திலும் கூடக் கரையும்

இப்படித்தான் நான் மோசம் போனது.எப்படி மறப்பது அதை?

அன்று பள்ளியில் குழந்தைகள் தினம். மாவட்ட ஆட்சித்தலைவர் வருவதாய் இருந்தது. மதியம் விழா இருந்தமையால் காலையில் பள்ளி. விடுமுறை நாட்களில் வீட்டில் எவ்வளவுதான் வேலைகள் என்றாலும் பத்துப் பதினொரு மணிக்கு என் ஆயிஷா ஓடோடி வந்துவிடுவாள். அன்றைக்கு என்று ஆளைக்காணோம்.

எனது சொந்த வேலைகளில் மும்முரமாக இருந்தபோது உச்சி வெயிலில் ஒரு மாணவி வந்து அழைத்தாள். ஆயிஷா அனுப்பியதாகவும், வேதியியல் ஆய்வுக்கூடத்திற்கு பின்புறம் அவள் இருப்பதாகவும் கூறினாள்.

ஏன் அவ இங்க வர வேண்டியதுதானே?

தெரியலே மிஸ் அவளை அனுப்பிவிட்டுக் கிளம்பினேன். மனசுக்குள் ஏதோ எங்கோ பிசகிப்போனதை உணர்ந்தேன். கடவுளே… இதை எழுதும் தருணத்தில் எனக்கு எப்படி உடல் நடுங்குகிறது.

லேசான களைப்பில் இருப்பவளைப் போலிருந்தாள் ஆயிஷா

இன்னிக்கு எக்ஸ்பர்மண்ட் சக்சஸ் மிஸ்

என்ன என்ன எக்ஸ்பரிமண்ட்?

இந்தாங்க ஸ்கேல் என்ன அடியுங்க பாப்போம்

ஏன் ஆயிஷா என்ன சொல்றே நீ

மருந்து மிஸ் மரத்துப்போற மருந்து இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ் எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்

ஆயிஷா உனக்கென்ன பயித்தியமா?

“லேபிலிருந்து நைட்ரஸ் எத்தனால் கரைசல் கெடச்சது மிஸ். முதல்ல இந்தத் தவளைக்கு ஊசி போட்டேன். இரண்டு மணி நேரம் மல்லாக்கப் போட்டாலும் உணர்ச்சி இல்ல… அப்போ மரத்துப்போச்சினு அர்த்தம்”

”….”

அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுக்கிட்டேன். எப்படி ஐடியா”

“ஏம்மா … இப்படியெல்லாம் பண்ற”

“பாருங்க இந்தத் தவளைதான்”

நான் பார்த்த இட்த்தில் வாளித் தண்ணீரில் ஒரு தவளை தலைகீழாய் மிதந்தது.

“ஆயிஷா…நோ..”

”அய்யோ… தவளை செத்துப்போச்சு மிஸ்”

கடவுளே! அதற்கு மேல் எழுத என்ன இருக்கிறது? வேதியியல் ஆய்வுக்கூடத்தின் பின்னால் ஆயிஷா விழுந்து கிடந்தாள். ஒரு மாலை மாதிரி விழுந்து கிடந்தாள். சின்னக் கூட்டம் கூடியது. பியூன் கோவிந்தன் ஆட்டோ க்கொண்டுவர ஓடினான். சிஸ்டருக்குச் சொல்லப்பட்டது. அவளை – என் உயிருக்கு உயிரான ஆயிஷாவைச் சுமந்துகொண்டு நான் சாலைக்கு ஓடினேன். என் கண்ணான அவளை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டுமெனத் தவித்தேன்.

ஆனால் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்குப் போவதற்குள் என் ஆயிஷா பிரிந்துவிட்டாள். எப்பேர்ப்பட்ட ஆயிஷா. நான் தாங்கிக் கொள்ள முடியாதவளாய் குழந்தை மாதிரி அவள் மீது புரண்டு கதறி அழுதேன். இனி என்ன? உங்களுக்கு திருப்திதானே மிருகங்களே… என் ஆயிஷாவை, ஒப்பற்ற அந்த அறிவுக் கொழுந்தைக் கொன்று தீர்த்துவிட்டீர்களே. போங்கள்,இனி உங்கள் வகுப்புகள் எளிமையானவை… அறிவுக்கு அங்கே வேலை இல்லை.

ஆயிஷா என் கண்ணே… என் கண்களைத் திறந்துவிட்டு ஏன் அவ்வளவு சீக்கிரம் என்னைவிட்டு ஓடிப்போனாய். பார் உனக்காக நீ கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் பதில்களைத் தேடித் தேடி எழுதி வைத்திருக்கிறேன். நீ சொன்னது போல தமிழில் எழுதியிருக்கிறேன்.

உன் மாதிரி எத்தனை ஆயிஷாக்களை நாங்கள் இழந்திருப்போம். நீ இறந்துபோனாய். வயசுக்கு வந்த நாளோடு பள்ளிக்கூடம் விட்டு ஓடியவர்கள், எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒருவனுக்குத் துவைத்து,சமைத்து,பிள்ளை பெற்றுப் போடுபவர்கள் ஆணின் பாலியல் பசிக்காகத் தன்னை விற்பவர்கள், முப்பது ரூபாய் சம்பளத்திற்காக வீடு பெருக்கி, சாணி மெழுகுபவர்கள், வயல்கூலிகள், கட்டடங்களுக்கு கல்லுடைக்கும் பெண்கள் அவர்களில் எத்தனை ஆயிஷாக்கள் உள்ளனரோ? தன் விஞ்ஞானக் கனவுகளை நாள்தோறும் அடுப்பு நெருப்பில் போட்டு சாம்பலாக்கி விடும் அந்த நூற்றுக்கணக்கான ஆயிஷாக்களுக்கு இந்தப் புத்தகத்தை கண்ணீரோடு சமர்ப்பிக்கிறேன்.

இந்த விஞ்ஞான நூலை வாசிப்பவர்கள் அதை ஒரு பத்துப் பெண்களுக்காகவது இரவல் கொடுப்பார்களா?

அவர்களில் ஓர் ஆயிஷாவாவது இருப்பாளா? என் பொக்கிஷமே ஆயிஷா... நீ கேட்ட கேள்விகளிலேயே என்னை மிகவும் பாதித்த ஒரு கேள்வி உண்டு. அதை வாசகர் முன்வைத்து என் முன்னுரையை முடிப்பதே பொருத்தமாக இருக்கும்.

"மிஸ் கரோலின் ஏர்ஷல் போலவே மேரி கியூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்ற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வர முடியலையே ஏன்?

இக்கேள்க்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியதில்லை. தங்கள் சொந்த வீடுகளின் இருண்ட சமையறையில் போய் அவர்கள் அதைத் தேட்டடும்.

# பனிமனிதன்

- ஜெயமோகன்

தமிழில் குழந்தைகளுக்கு அறிவியலை அறிமுகப் படுத்தும் முயற்சிகளில் ‘கல்வி’ கோபாலகிருஷ்ணனின் முயற்சிகள் முக்கியமானவை. காகிதத்தால் செய்யப்பட்டு மாயா ஜாலத்தால் உருவாக்கப்பட்ட மந்திர பாப்பா காற்று அண்ணனால் காலப்பயணம் செய்கிறது. அப்போது டைனாசார்கள் மற்றும் பரிணாம வளர்ச்சி எல்லாம் குறித்து அறிந்து கொள்கிறது. இரு குழந்தைகள் ஒரு வண்ணத்துப் பூச்சியை பிடிக்கச் சென்று மயங்கி விழுகின்றனர். அவர்கள் ஆத்மாக்கள் பின்னர் பல விலங்குகளின் வாழ்க்கை முறையையும் அவற்றிற்கு மனிதர்கள் செய்யும் கொடுமையையும் கண்டு மனம் வருந்துகின்றனர். (தட்டான் பூச்சி வாலில் நூலை கட்டுவது முதல் சர்க்கஸில் யானைகளை கொடுமைப்படுத்துவது வரை) இறுதியில் மகாத்மா காந்தியையும், ஜோதி வள்ளலாரையும் கண்டு பிரார்த்தனையில் கலந்து விட்டு பிறகு மீண்டும் கண் விழிக்கின்றனர். அறிவியல் மற்றும் மதிப்பீடுகளை ஒருங்கிணைத்து குழந்தைகளுக்கு வழங்க தமிழில் எடுக்கப் பட்ட முதல் முயற்சி என இவற்றைக் கருதலாம்.

தினமணியின் சிறுவர் வார இதழில் தொடராக வந்து சென்ற ஆண்டில் நூலாக வெளிவந்த ஜெயமோகனின் ‘பனி மனிதன்”. தமிழ் சிறுவர் இலக்கியங்களில் முக்கியமான முயற்சியும் முன்னகர்வும் ஆகும். சாகஸக் கதை, அறிவியல், அதீத கற்பனை, மர்மம், மதிப்பீடுகள் ஆகிய அனைத்தையும் இணைத்து படைக்கப் பட்ட ஒரு சிறுவர் இலக்கியமாக பனி மனிதன் விளங்குகிறது. யதி எனப் படும் பனி மனிதன் இமய மலை சார்ந்த பகுதிகளில்

வழங்கப் படும் ஒரு புராண மனிதன். உண்மைக்கும், கற்பனைக்கும் இடைப்பட்டதோர் வெளியில் இருக்கும் அவிழ்க்கப்படாத புதிர் என்றே பலர் கருதும் ஓர் மர்ம புதிர்.

இயற்கையினை அறிய அறிவியல் மாத்திரமே ஒரே வழியல்ல என்கிற உண்மையையும் அதே சமயம் அறிவியலின் அழகினையும், புராண மொழியின் அழகினையும் அவை இயங்கும் தளங்களின் இயற்கையையும் ஒரு சேர குழந்தைகளுக்கு தரும் முயற்சி பனிமனிதன். எளிதான விஷயமல்ல அது. வாக்கியங்களின் அமைப்பிலிருந்தே (சிறிய சிறிய வாக்கியங்கள் இடையிடையே உரையாடல் தன்மை கொண்ட கதை சொல்லல்) மிகுந்த கவனம் செலுத்தப் பட்டிருப்பது தெரிகிறது. அறிவியல் தகவல்களில் ஆசிரியரின் உழைப்பு தெரிகிறது. கதையோடு தொடர்புடைய பெட்டி செய்திகள் ஏராளம். இரு குறைகள். ஒன்று: அறிவியல் தகவல்கள் சோவியத் தாக்கம் கொண்டு விளங்குகின்றன.

பெரியவர்களின் நிலையிலிருந்து இறங்கி ஒரு சிறுவனாக பாவித்து பனிமனிதனை படிக்கையில் சிறுவர்களுக்கான ஒரு நாவல் இருக்கவேண்டிய தன்மைகள் அனைத்தும் உள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது. முழுமையாக ரசிக்கத்தக்கன. சாகசத்தினூடே சிறுவர்களுக்கான அறிவைப் புகட்டும் ஏராளமான அறிவியல் செய்திகளை உள்ளடக்கியது. நாவலில் நெடுகவே காட்சிகளின் சித்தரிப்புகளிலும், விவரணைகளிலும் சிறுவர்களுக்கான மொழியில் நாவலை ஜெயமோகன் கொண்டு செல்கிறார்.

ராணுவ வீரன் பாண்டியன், டாக்டர் திவாகர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த கிம் என்ற சிறுவன் மூவரும் பனிமனிதனைத் தேடி பயணம் மேற்கொள்கிறார்கள். வழி நெடுக அவர்கள் காணும் இயற்கையின் விசித்திரமும் விநோதங்களும்தான் கதை. மனிதனின்

பரிமாண வளர்ச்சி, டீன் பறவைகள், மண்டை ஓடு, வைரம், வென்னீர் ஊற்று, நெருப்பு நதி, போவா பாம்பு, பனிக் குகை, பறக்கும் ஓணான் என்று அனைத்தையும் அறிவியலின் துணைகொண்டு சிறுவர்களுக்கு எளிமையாக விவரிக்கிறது. இந்த விநோதங்களும் விசித்திரங்களும் போகப்போக அதிகரித்துக் கொண்டே சென்று அதன் உச்சமான பனிமனிதர்கள் இருக்கும் காட்டில் கொண்டு சேர்க்கிறது. அங்கே காணும் விந்தைகள் காட்சிகள் அந்த உலகத்தை விட்டுப் பிரியவியலாமல் சிறுவர்களைக் கட்டுண்டு வியக்க வைக்கிறது.

புத்தரை மையப்படுத்தி ஆன்மீகத்தை மிக இயல்பான போக்கில் ஜெயமோகன் சொல்லியிருக்கிறார். சிறுவர்கள் அதை எளிமையாக உள்வாங்கும் போது தங்களைத் தாங்களே அறிந்து கொள்கிறார்கள். பசுமரத்து ஆணி போல் பதிந்து வாழ்நாள் முழுதும் பின்தொடர்ந்து வழிகாட்டும். பெரியவர்களுக்கே விளங்காத மனம், உள்மனம், ஆழ்மனம், துரிய மனம் ஆகியவற்றை பூச்சிகள் மற்றும் பனிமனிதனைக் கொண்டு அற்புதமாக விளக்கியுள்ளார்.

இந்த உலகம் இரு மாறுபட்ட மனிதர்களைக் கொண்டிருக்கிறது. மனிதர்களில் பெரும்பான்மையோர் பணம், புகழ், அதிகாரம் இவற்றில் நாட்டம் கொண்டவர்கள். அவர்களால் வாழ்வின் புதிர்களையும் விநோதங்களையும் அதிசயங்களையும் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. இந்த உலகத்தின் உண்மையான மதிப்பையும் உணராதவர்கள் அவர்கள். ஆனால் இவற்றையெல்லாம் புறக்கணித்து தங்களுக்கான கற்பனை உலகத்தில் சஞ்சாரம் செய்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். இந்த உலகம், அதில் வாழும் மனிதர்கள்,

சமூக அமைப்பு அனைத்தும் இவர்களுக்கு உவப்பானதாக இருப்பதில்லை. பிறரிடமிருந்து விலகியிருக்க முடியாமல் இந்த உலகத்தோடு ஒட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கான உலகம்தான் இந்தப் பனிமனிதன். இதிலிருந்து நாவலின் உச்சமாக வெளிப்படும் ‘தனிப்பட்ட மனிதர்களுக்குக் கருணை உண்டு ஆனால் மனித இனத்திற்குக் கருணை இல்லை’ என்ற தரிசனம் முக்கியமானதும் சிந்திக்கத் தக்கதுமாகும்.

**கதைச் சுருக்கம் (ஒன்று)**

இமயமலையில் இருக்கும் ராணுவ அதிகாரி பாண்டியனுக்கு ஒரு பொறுப்பு தரப்படுகின்றது. பனி மனிதனை கண்டு பிடிக்க வேண்டும். பாண்டியன் துணைக்கு ஒரு ஆராய்ச்சியாளரை கூட்டிக் கொண்டு செல்கின்றான். வழியில் மற்றுமொரு லடாக்கிய சிறுவனும் சேர்ந்து கொள்ள, கடைசியில் பனிமனிதனை காண்கின்றார்கள். பனிமனிதன் அவர்கள் வாழும் பகுதிக்கு அழைத்துச் செல்கின்றான், அங்கு பனிமனிதர்கள் ஒரு கூட்டமாக வாழ்கின்றார்கள். பாண்டியனும், டாக்டரும் அங்கு பல விநோதங்களைப் பார்க்கின்றனர். ஒரு கற்பனை உலகம். பிரிய மனமின்றி பிரிந்து வருகின்றனர். குழந்தைகளின் கற்பனைக்கேற்ப, வைரப்பாறை, வைர நதி, மரத்தில் மேயும் குதிரை, பன்றி சைஸ் யானை, பறக்கும் மீன், நீந்தும் சிங்கம்.

லடாக் பீட பூமிக்கு வடக்கே, கடல் மட்டத்திலிருந்து 7000 அடி உயரத்திலிருக்கும் தேப்சாங் பள்ளத்தாக்கில் ரோந்து செல்லும் ராணுவ வீரர்கள், வெண் பனியில் பதிந்திருக்கும் ராட்சத காலடித் தடங்களைக் கண்டு கொள்கிறார்கள். இந்தக் காலடித் தடங்களை போட்டோ பிடிக்கும் அவ்வீரர்கள் அதனை தமது ராணுவ மேலிடத்திடம்

அனுப்பி வைக்கிறார்கள். கடந்த காலங்களில் பல முறை இது போன்ற பனியில் பதிந்த ராட்சதக் காலடித் தடங்களை இந்திய ராணுவத்தினர் அவதானித்திருக்கிறார்கள். அக்காலடித் தடங்கள் பதினேழு தடவைகள் புகைப்படங்களாகவும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இமய மலைப் பகுதிகளில் வாழும் பனி மனிதனின் காலடித்தடமாக இது இருக்கலாம் எனக் கருதப்பட்டாலும் விஞ்ஞானிகள் இவை பனியில் இயற்கையாக ஏற்படும் குழிகள் எனக் கூறுகிறார்கள்.

லடாக்கின் ராணுவத் தலைமையகத்தின் பிரிகேடியர் கே.கே. நாயர், இந்த விடயம் குறித்த ரகசிய விசாரணை ஒன்றை மேற் கொள்ளும்படி ராணுவ வீரன் மேஜர் பாண்டியனைப் பணிக்கிறார். விசாரணைகளை ஆரம்பிக்கு முன்பாக சில தகவல்களை அறிந்து கொள்ள பாண்டியன் விரும்புகிறான். ராணுவ ஆராய்ச்சிப் பிரிவு அவனிற்கு வழங்கிய தகவல்கள் பயனளிக்காத நிலையில் டாக்டர் திவாகர் என்பவரைச் சந்தித்து தனக்கு வேண்டிய தகவல்களை பெற்றுக் கொள்ள அவன் தீர்மானிக்கிறான். டாக்டர் திவாகர் ஒரு மானுடவியலாளர். இமய மலையில் உள்ள மனிதர்களைப் பற்றிய ஆராய்ச்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர். அவர் டா பிங் எனும் மலைக் கிராமத்தில் வசித்து வருவதால் அக்கிராமத்தை நோக்கி வழிகாட்டி ஒருவனுடன் தன் பயணத்தை ஆரம்பிக்கிறான் பாண்டியன். டா பிங் கிராமத்தை நோக்கி செல்லும் வழியில் உள்ள ஒரு கிராமத்தின் ஆதி குடிகள், தம் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் கிம் சுங்கை மலைத் தேவதைகளின் பலீ பீடத்தில் உயிரோடு காணிக்கையாக செலுத்துகிறார்கள்.

சிறுவன் கிம் சுங்கிற்கு கடுமையான காய்ச்சல் கண்டிருக்கிறது. பலி பீடத்தில் கிடத்தப்பட்ட சிறுவனின் உடலைக் குறிவைத்து பெரும் கழுகுகள் வானிலிருந்து கீழே இறங்க ஆரம்பிக்கின்றன. சிறுவன் கிம் சுங்கின் நிலையைக் கண்டு பதறும் பாண்டியன், சிறுவனைக் கிராம மக்களிற்கு தெரியாது காப்பாற்றுகிறான். டா பிங் கிராமத்திற்கு மயங்கிய நிலையிலிருக்கும் சிறுவன் கிம் சுங்கை தன்னுடன் எடுத்துச் செல்கிறான். மலையின் இருளில் வழி தெரியாது சில கணம் தடுமாறும் பாண்டியனின் வழிகாட்டி, காற்றில் கலந்து வரும் தேவதாரு மரத்தின் புகையை மோப்பம் பிடித்து டா பிங் கிராமத்திற்கு அவர்களை இட்டுச் செல்கிறான். கிராமத்தில் நுழையும் பாண்டியன் டாக்டர் திவாகரைச் சந்திக்கிறான். டாக்டர் திவாகர் காய்சலில் வாடும் சிறுவன் கிம் சுங்கிற்கு சிகிச்சை அளிக்கிறார். மறுநாள் காலை டாக்டர் திவாகருடன் உரையாடும் பாண்டியன், டாக்டர் மலையில் வாழும் மக்கள் குறித்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டாலும் பனி மனிதன் குறித்த தேடல்களிலும் அவர் அதிக கவனம் செலுத்தி வருகிறார் என்பதை அறிந்து கொள்கிறான். டாக்டர் திவாகரைப் பொறுத்த வரை பனிமனிதன் மீதான அவரது ஆராய்ச்சி என்பது உண்மையில் மனிதர்கள் மீதான ஆராய்ச்சியாகவே இருக்கிறது. மேலும் பனிமலையில் வழி தவறிப் போன சிறுவர்களை பனி மனிதன் காப்பாற்றி வருகிறான் என்ற தகவலையும் அவர் பாண்டியனிற்கு கூறுகிறார். இது பாண்டியனிற்கு ஆச்சர்யத்தை அளிக்கிறது. இந்த வேளை டா பிங் கிராமத்தை நோக்கி ஓநாய்கள் கூட்டம் ஒன்று வந்து கொண்டிருப்பதை டீன் பறவைகள் கிராமத்தவர்களிற்கு அறியத் தருகின்றன.

ஓநாய்க் கூட்டத்தின் தாக்குதலை முறியடிக்க விரும்பும் கிராமத்தவர்கள், ஓநாய்கள் வரும் பாதையில் பாறைகளில் வெடி ஒன்றை வெடிக்க வைத்து ஓநாய்க் கூட்டத்தை

விரட்டியடிக்கிறார்கள். இந்தக் களேபேரங்கள் முடிவடைந்த வேளையில் தூங்கிக் கொண்டிருந்த சிறுவன் கிம் சுங், குரங்கு மனிதன் என்னைப் பிடிக்கிறான் என அலறியவாறே திடுக்கிட்டு எழுகிறான். டாக்டர் திவாகரும், பாண்டியனும் சிறுவன் கிம் சுங்கை விசாரிக்க ஆரம்பிக்கிறார்கள். ஆடு மேய்ப்பதற்காகச் சென்ற வேளையில் தனக்குக் காய்ச்சல் உண்டாகி நடக்க முடியாமல் போனது எனவும், தன்னை தன் தந்தையும் தனியே கைவிட்டு வந்த வேளையில் குரங்கு மனிதன் தன்னைத் தூக்கிக் கொண்டு சென்ற சம்பவத்தையும் சிறுவன் கிம் சுங் அவர்களிடம் கூறுகிறான். குரங்கு மனிதன் தன்னைத் தூக்கிச் சென்ற வேளையில் ஒரு தருணத்தில் மயக்கமடைந்த அவன் இப்போதுதான் மயக்கம் தெளிவதாகவும் அவன் தெரிவிக்கிறான். அது மட்டுமல்ல குரங்கு மனிதன் தன்னை தூக்கிச் சென்ற பாதையை அவர்களிற்கு தான் காட்ட முடியும் எனவும் கிம் சுங் அறிவிக்க, அடுத்த நாளே டாக்டர் திவாகரும், பாண்டியனும் சிறுவன் கிம் சுங்குடன் பனி மனிதனைத் தேடி தம் பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

குளிர் அதன் உச்சத்தில் குதூகலிக்கும், இயற்கை தன் ஜால வித்தைகளை நிகழ்த்தும், ஆபத்தும், அபாயமும் உங்கள் ஒவ்வொரு அசைவுகளையும் கூர்ந்து அவதானிக்கும் பனிமலைப் பாதைகளினூடாக, சாகசப் பயணமொன்றிற்கு பனி மனிதன் எனும் தன் நாவல் வழியாக அழைப்பு விடுக்கிறார் ஜெயமோகன். அறிவியல், ஆன்மீகம், இயற்கை எனத் தெளிவான விளக்கங்களுடன், சிறப்பான தகவல்களைச் சுவையாகக் கூறிச் செல்கிறார். பனி மனிதனைத் தேடி ஆரம்பமாகும் பயணமானது, மனிதன் இயற்கையுடன் கொடூரமாக அறுத்து எறிந்திருக்கும் தன் தொப்புள் கொடி உறவு குறித்து வேதனையோடு

பகிர்ந்து கொள்கிறது. இதற்குக் காரணமாகவிருந்த மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்துக் கேள்விகளை முன் வைக்கிறது. சாகசப் பயணத்தில் ஈடுபடும் டாக்டர் திவாகர், வழியில் நிகழும் சம்பவங்களை அறிவியல் ரீதியாக விளக்க முனைகிறார். சிறுவன் கிம் சுங்கோ, அவன் பெற்றிருக்கும் புத்த மடாலயப் போதனைகள் வழி அச்சம்பவங்களை மொழிபெயர்க்க விழைகிறான். ராணுவ வீரன் பாண்டியனோ அறிவியல், ஆன்மிகம் இவை இரண்டிற்குமிடையில் பயணித்துச் செல்பவனாக இருக்கிறான். சாகசத்தின் இறுதிப்பகுதியானது மனிதனின் "நான்" எனும் உணர்வைக் குறித்த சிந்தனைகளை எழுப்புகிறது. கூட்டு ஆழ் மனம் மூலம் இயங்கக் கூடிய ஓர் உயிர்ச் சூழலின் சாத்தியத்தையும், அதன் தேவையையும், வாசகன் முன் அந்த உயிர் சூழலின் அற்புதங்களுடன் பரிமாறுகிறது.

அறிவியல் ரீதியாக பனி மனிதன் இருப்பு குறித்து அறிய முயலுகையில், சிவபுராணத்திலும், ரிக் வேதத்திலும் அவர்கள் குறித்து குறிப்புக்கள் கணப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் சிறிய பெட்டித் துணுக்குகளாக ஏராளமான பயனுள்ள தகவல்களை தந்து அவற்றைக் கதையில் சொல்லப்படும் விடயங்களுடன் இணைத்திருக்கும் பாணி சிறப்பு. பனிமலைச் சிகரங்களின் உச்சிகளில், அஸ்தமனத்துச் சூரியனின் கதிர்கள் பட்டுத் தெறித்து அப்பிரதேசத்தையே செந்தீயாலான வெளியாக மாற்றியடிக்கிறது. மனதை மயக்கும் இந்நிகழ்வை புத்தரின் புன்னகை என ஒப்பிடுகிறான் சிறுவன் கிம் சுங்.

**கதைச் சுருக்கம் (இரண்டு)**

மலைப்பனியில் தெரியும் சில விநோத இராட்சத காலடித் தடங்களை குறித்து அறிந்து வர பணிக்கப்படுகிறான் பாண்டியன் எனும் இராணுவ வீரன். கிராமவாசிகளால் மிகைப்படுத்தப்பட்ட சாதாரண இயற்கை விளைவாக இருக்கும் என நினைத்துப் புறப்படும் பாண்டியன் விரைவில் விநோத நிகழ்வுகளையும், பனி மனிதன் குறித்த உள்ளூர் வழக்குகளையும் அதன் பின் இருக்கும் அதிசய உண்மைகளையும் சந்திக்கிறான்.

பாண்டியனால் காப்பாற்றப்படும் கிம் எனும் இச்சிறுவனுடன் இந்த சாகஸ குழுவில் ஒரு டாக்டரும் கலந்து கொள்கிறார். இராணுவத்தினனான பாண்டியன், பௌத்த மலைவாசி கிராமச் சிறுவனான கிம், மேற்கத்திய அறிவியல் பார்வை கொண்ட டாக்டர் ஆகியோர் பனிமனிதனை தேடி புறப்படுகிறார்கள். பனிமனிதனை டாக்டர் வெளிப்படையாகவே அறிவிக்கிறார்; 'நான் பனிமனிதனைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறேன். ஆனால் அது உண்மையில் மனிதனைப் பற்றிய ஆராய்ச்சிதான்.' (பக். 40)

பாதையில் டாக்டர், பாண்டியனுக்கு இயற்கை உலகின் செயல்பாடுகளையும், பரிணாம அறிவியலையும் விளக்குகிறார். தகவமைவுதான், பரிணாமத்தின் முக்கிய இயக்கு சக்தியாக டார்வின் கண்டறிந்ததாக டாக்டர் குறிப்பிடுகிறார். கேள்விக்குரிய இடம் இது. விடுபட்ட கண்ணியாக பனிமனிதனை ஊகிக்கிறார் டாக்டர். ஆனால் பனி மனிதனை கண்டவனான கிம் டாக்டர் காட்டும் எந்த பேரினக் குரங்கை போலவும் பனிமனிதன் இருப்பதாகக் கூறவில்லை. பின்னர் ஹோமோ எரெக்டஸை போல இருப்பதாக கூறுகிறான். கதை நகருகிறது. சில மன பிம்பங்கள் உடைகின்றன. பாண்டியன் சிறுவன்

கிம் யோக சுவாசம் எனும் யோகப் பயிற்சி செய்வதைப் பார்க்கிறான். ’பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது. பனிமலையில் வாழும் பழங்குடி மக்கள் அத்தனை சிறப்பாக யோகப் பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. ‘ (பக். 59)

இயற்கை, மானுடம் ஆகியவை குறித்த பல பார்வைகள் கதையினூடே குழந்தைகள் முன்வைக்கப்படுகின்றன. இரு உதாரணங்கள். ஒன்று இயற்கை விளைவு பற்றியது. ‘பனிச்சமவெளி ஒரு பிரம்மாண்டமான கண்ணாடி போன்றது. சூரிய ஒளியை அது பிரதிபலிக்கிறது. ‘ என்றார் டாக்டர்...... ‘...பனிமலை புத்தரின் மனம் அல்லவா? இங்கு வருவது பெரிய பாக்கியம் என்று என் அப்பா சொல்வார் என்றான் கிம். ‘ஏன் இதை புத்தரின் மனம் என்கிறார்கள்? ‘ என்றான் பாண்டியன். ‘ஏனென்றால் இங்கு எல்லாமே தூய்மையாக உள்ளன. தூய்மையாக இருக்கும்போது பூமியும் வானம் போல ஆகிவிடும். இங்கு எந்த ஒலியும் இல்லை. தியானம் செய்யும் புத்தரின் மனம் போல இந்த இடம் அமைதியாக இருக்கிறது’ என்றான் கிம் (பக். 64, 65). மற்றொன்று பரிணாமத்தில் மனிதனின் இடம் குறித்தது. மனிதனிலிருந்து குரங்கின் பரிணாமத்தை விளக்குகிறார் டாக்டர். (பக். 86, 87) (டாக்டர் சோவியத் நூல்களையே படித்து வளர்ந்தவர் போலும் அல்லது அணு உற்பத்தியா?) ஏங்கல்ஸின் தத்துவத்தை விளக்குகிறார்.

அச்சமயம் கிம் அவர்கள் ஊர் பிட்சுவின் கோட்பாட்டினை கூறுகிறான். ‘திருஷ்ணை ‘ எனும் உள்ளார்ந்த ஓர் அதிருப்தியே மானுட நாகரிகத்தினை முன்னகர்த்தும் சக்தி என்றும் அதுவே அவனை திருப்தியற்று மேலும் மேலும் செயல்பட வைப்பதாகவும் கூறுகிறான். (பக்.89) டாக்டர் இதனை சரி என ஆமோதிக்கிறார். திருஷ்ணை கிறிஸ்தவத்தின்

ஆதிபாவத்தை ஒத்திருப்பது அதிசயமானது. திருஷ்ணையை வெல்ல வேண்டும் என்கிறான் கிம். திருஷ்ணையே மானுடத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படை எனவே அதை இழக்கலாகாது என்கிறார் டாக்டர். பனிமனிதனை தேடக் காரணமே அந்த திருஷ்ணைதானே என சுட்டிக் காட்டுகிறார் டாக்டர். கிம்மின் எதிர்வினை சொல்லப் படவில்லை. அது மௌனமாகத் தான் இருந்திருக்க வேண்டும் என்பது ஊகிக்கக் கூடியதே. அடுத்த பக்கங்களில் திருஷ்ணையின் செயல்பாட்டினை ஆசிரியர் காட்டுகிறார். கதையின் ஒரு முக்கிய உச்சம் இங்கு தொடப் படுகிறது. முக்கியமான மதிப்பீட்டு நிகழ்வாக அடுத்த நிகழ்ச்சிகள் அமைகின்றன. பின்னர் வழியில் அவர்கள் தங்கள் லாமாவை தேடும் ஒரு பிட்சு கூட்டத்தை சந்திக்கின்றனர்.

மீண்டும் வேறுபட்ட உலகங்கள் மோதுகின்றன. இப்போது அந்த பிட்சுக்கள் பனிமனிதனை குறித்து மேலும் கூறுகின்றனர். அவன் விடுபட்ட கண்ணி அல்ல. மாறாக அவன் மற்றொரு பரிணாம சாத்தியகூறு. திருஷ்ணை அற்ற பரிணாமத்தின் பூரணத்துவம் என அவர்கள் கூறுகின்றனர். இறுதியில் நம் சாகஸக்குழு பனிமனித சமுதாயத்தைச் சந்திக்கிறது. ஒருவிதத்தில் விவிலியத்தின் ஆதி தோட்டத்தை நினைவு படுத்தும், அனைத்து உயிர்களும் இசைந்து வாழும் உலகினை நாம் நம் சாகஸக் குழுவுடன் சந்திக்கிறோம். இந்நிலையில் மீண்டும் டாக்டருக்கும், பாண்டியனுக்குமான பேச்சுக்கள் மூலம் மனம், பரிணாமம் ஆகியவை குறித்த பலவித கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன.

இதற்கிடையில் கிம்மின் மூலம் மற்றொரு உண்மை தெரிய வருகிறது. அவர்கள் அனைவருமே பனிமனிதர்களான யதிகளால் அங்கு வரவழைக்கப் பட்டவர்கள். தற்செயலான நிகழ்ச்சிகள் அனைத்துமே ஓர் பெரும் தூய கூட்டு மனத்தின் பெரும் இயக்க பகுதிகள் என அவர்கள் அறிகின்றனர். கிம் மட்டுமே இப்பெரும் மனத்தின் செயலியக்கம் குறித்த பிரக்ஞயுடன் இருந்தவன். அனைவரும் அந்த பூமியை விட்டு மீண்டும் செல்கின்றனர். திரும்புகையில் தற்செயலாக ஒரு மலரை பாண்டியன் கிம் கையில் கொடுக்கிறான். அவர்கள் மீண்டும் தம் தலைமை லாமாவைத் தேடும் பிட்சுக்களை காண்கின்றனர். கிம்மின் கையில் இருக்கும் மலர் தான் அவர்கள் தேடும் லாமாவுக்கான அடையாளம். கிம், லாமா ஆகிறான். டாக்டர் அவனை காலில் விழுந்து வணங்குகிறார். பாண்டியனும் அவனை கை கூப்பி வணங்குகிறான் சிறிய தயக்கத்தின் பின்.

அத்தயக்கம் குறித்து அவன் பின் வருத்தம் தெரிவிக்கையில் பனிமனிதன் பாகம்-2 க்கான ஒரு சிறு குறிப்பு தெரிவிக்கப் படுகிறது. அவர்கள் இறுதியாக மற்றொரு ஆச்சரியத்தையும் அடைகின்றனர். பனிமனிதனே இனி வரும் மைத்ரேய புத்தர் என்பதே அது. டாக்டர் கூறியதற்கும் அப்பால் பனிமனிதனை தேடல் அக்குழுவில் ஒவ்வொருவருக்கும் அகத்தேடலாகவே மாறியிருக்கிறது. இறுதியாக பனிமனிதன் குறித்த இரகசியம் இரகசியமாகவே காக்கப் படுகிறது.

## அலகு – 3

# பிச்சிப்பூ

**– பொன்னீலன்**

ஸ்ரீகண்டேஸ்வர பக்தவத்ஸலன், சபாபதி என்னும் இருபெயர்களில் அழைக்கப்பட்டவர் எழுத்துலகில் **பொன்னீலன்** என்று அழைக்கப்படுகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் மணிகட்டி பொட்டல் என்னும் ஊரைச் சார்ந்தவர். தமிழில் முற்போக்குச் சிந்தனைகளில் எழுதக் கூடியவர். மாக்சியச் சிந்தனையாளர். நா.வானமாமலையின் நட்பும் ஆராய்ச்சி இதழில் படித்து எழுதிய எழுத்துக்களுமே தன்னை உருவாக்கியது என்று குறிப்பிடுபவர். 1976 இல் வெளிவந்த கரிசல் நாவலும், 1978 இல் எழுதிய ஊற்றில் மலர்ந்தது என்ற முதல் சிறுகதைத் தொகுதியும் அனைவரின் கவனத்தைப் படைப்பாக அடையாளம் காட்டியது. பின்பு புதிய தரிசனங்கள் என்ற நாவலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமைப் பொறுப்பில் செயல்படுகிறார். கொள்ளைக்காரர்கள், தேடல், மறுபக்கம், பிச்சிப் பூ, புதிய மொட்டுகள் ஆகிய நாவல்களும், ஊற்றில் மலர்ந்தது, இடம் மாறிவந்த வேர்கள், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன, உறவுகள், புல்லின் குழந்தைகள், அன்புள்ள, நித்யமானது, சக்தித்தாண்டவம், பொட்டல் கதைகள், அத்தானிக் கதைகள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் எழுதியுள்ளார். ஜீவா என்றொரு மானுடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, வைகுண்டர் காட்டும் வாழ்க்கை நெறி, ஒரு ஜீவநதி, தொ. மு. சி, ரகுநாதன் ஆகிய வாழ்க்கை வரலாறுகளும் எழுதியுள்ளார்.

**பிச்சிப் பூ** சாதி வேற்றுமையிலும், தீண்டாமையிலும் மூழ்கடிக்க மக்களின் வீறுகொண்ட குரலிலும், செயல்பாடுகளிலும் அவற்றிலிருந்து வெளியேறும் அடித்தட்டு மக்களின் எதிர்ப்புக் குரல் அடங்கிய நாவல் பொன்னீலன் எழுதிய பிச்சிப்பூ ஆகும். இந் நாவலில் காட்டப்பட்டிருக்கும் அனைத்துப் பாத்திரங்களும் முதன்மை பாத்திரங்களாகின்றனர். திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாகர்கோயில், கன்னியாகுமரி பகுதிகளில் நிலவும் சாதிய வேற்றுமைகளையும், அவற்றின் மீதான மக்களின் எதிர்ப்பையும் பதிவு செய்கிறது. பிச்சிப்பூ நாவலின் தலைப்பாக அமைந்தபோதிலும் பெண்மையின் வீரத்தினை முக்கியமாகக் கருதியதாலேயே இப்பெயர் இடப்பட்டிருக்கலாம். ஆனால் நாவலில் ஒரு சாமிக்கண்ணு குடும்பத்தில் பிறந்த மூன்று மகன்களின் வேறுவேறு வடிவிலான சமுதாய எதிர்ப்புகளைப் பதிவுசெய்கிறது. மூர்த்தியார், பெரிய நீலன், சின்ன நீலன் ஆகிய மூவரும் போராட்டங்கள் பதிவுசெய்யப்படுகிறது. என்றபோதும் மூர்த்தியாரின் மனைவியான பிச்சிப்பூவின் பெண்மை மிகுந்த வீரம் நாவலின் மையமாகக் கருதி பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

இந்து சமயத்தின் வருணாசிரமக் கோட்பாட்டின் அடிப்படையின் உருவான சாதிய அடக்குமுறைகள் மக்களின் அடிப்படையான குடியிப்பு, தொழில், ஊர் மரியாதை, பொருளாதாரம், வேலை, கல்வி போன்ற அனைத்திலும் பிரதிபலித்த போதிலும், கோயில்களே அதன் அதிகாரத்தின் தொடக்கமாகவும், எல்லையாகவும் அமைகிறது. கோயிலைச் சுற்றியுள்ள கருத்துநிலைகளாகவே வாழ்வியல் கட்டமைக்கப்பட்டுள்ளதை நாவலின் தன்மைகள் காட்டுகின்றன. கோயில்களில் உடைபடும் ஏற்றத்தாழ்வுகள் வாழ்விலும் பிரதிபலிக்கும் என்ற புரிதலைத் தருகிறது. மத மாற்றம் சாதியப்

பாகுபாட்டிலிருந்து வெளியேறும் உணர்வுகளைத் தருவதாக பெரிய நீலன் (பேரின்பன்) பாத்திரமும், சாமித்தோப்பு, வைகுண்டசாமியின் போராட்டக் குணத்தினால் பெற்ற சாதிய எதிர்ப்புணர்வாக சின்னநீலன் பாத்திரமும், வர்மக்கலைகள் மற்றும் வீரத்தின் வழியாக சாதிய பாகுபாட்டிலிருந்து வெளியேறுதல் மூர்த்தி (பிச்சிப்பூ) பாத்திரமும் அமையப்பெற்றுள்ளது. ஏனைய துணைப்பாத்திரங்கள் நாவலின் சமூக உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது.

**பிச்சிப்பூ இடம்பெற்றுள்ள பாத்திரங்கள்:** மூர்த்தியார், பெரிய நீலன், (பேரின்பன்), சின்ன நீலன், சாமிக்கண்ணு, பிரம்மசக்தி, எஸ்தர், சத்தியநேசன், சத்தியவதி, மீட் அய்யர், ஜோகன்னா, நேசமணி, பாலையா, குட்டப்பன், சாமுருவேல், வைகுண்டசாமி, (முத்துக்குட்டி), குணமுடையார், ஏஞ்சல், தங்கைய்யா, இன்னாசியார், தங்கப்பூ, பிச்சிப் பூ ஆண்டிச்சாமி ஆகியவர்களும் இன்னபிற பாத்திரங்களும் இடம்பெற்றுள்ளன.

**பிச்சிப் பூ கதை** சாமிக்கண்ணு, பிரம்ம சக்தி தம்பதியருக்கு பெரியநீலன், சின்னநீலன், மூர்த்தியார் என மூன்று மகன்கள் இருந்தனர். பெரிய நீலன் வேதப் பாடசாலையில் படித்தான். அவன் அவர் ஏசுவைக் கடவுளாக வணங்கினான். மதம் மாற்றுகிறார்கள் என்பதால் மற்ற இருவரும் படிக்கவில்லை. சாமியார் ஒருவர் பெரியநீலனுக்கு பேரின்பன் எனப் பெயர் சூட்டினார். இந்துக் கடவுள்களைப் பேய் என்று சொல்லத் தொங்கினான். கிறித்துவத்தின் உதவியால் நாகர்கோயிலிலும், திருவனந்தபுரத்திலும் படித்தான். திருவனந்தபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த நாயர் சாதி பையனும் பி.ஏ. படிக்கிறான். அவனுக்கு அங்கே தாசில்தார் உத்தியோகம் கிடைக்கிறது. அதே பள்ளியில் படித்த ஈழவர்

சாதி பையனுக்குக் கிடைக்கவில்லை. அவனைச் சாதித் தொழிலைப் பார்க்கப் பணித்தனர். பேரின்பன் கிறித்துவன் என்பதால் அரசு உத்தியோகமும், கிறித்துவப் பெண்ணும் கிடைக்கிறது. அவர்களுக்கு சத்திய நேசன், சத்தியவதி என்றிரு குழந்தைகள் உள்ளன.

மீட் அய்யர் கிறித்துவ மத பிரச்சாரத்திற்கு வந்தவர். அய்யர் என்பது இங்கு உயர்ந்த சாதியின் பெயர் ஆகையால், மீட் என்ற அவரை மீட் அய்யர் என அழைத்தனர். அவர் தீண்டாமையை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். ஜென்மி என்ற பெண்ணிடம் அனாதைக் குழந்தையை வாங்குகிறார். பெண்கள் விடுதியில் சேர்க்கிறார். இதனால் மற்ற குழந்தைகள் அவளுடன் சேர்ந்து படிக்கவிரும்பவில்லை. இதனால் ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியே விடுதி கட்டுகிறார். குழந்தைகளுக்கு துணி வாங்குவதற்கும் எண்ணெய் மழித்து சீவி சுத்தமாக இருப்பதற்குப் பணம் கொடுக்கிறார். சத்தியநேசனை வக்கீலுக்காகப் படிக்க வைக்கிறார். அவனும் வக்கீல் பட்டம் பெற்று நேசமணி என்பவரிடம் சீடனாகப் பணியாற்றுகிறான்.

நேசமணி, பாலையா என்ற பனைத்தொழிலாளி தன் நிலத்தையும், குடிசையையும், மனைவியையும், குழந்தையையும் நாசம் செய்த உயர்சாதியைச் சேர்ந்த குட்டப்பனை வெட்டுகிறான். பாலையாவிற்குக் கோர்ட் தூக்குத் தண்டனை கொடுக்கிறது. கோர்ட்டில் வாதாடிய நேசமணி தூக்குத் தண்டனை கொடுங்கள் ஆனால் உயிர் போகக் கூடாது என்று வாதிடுகிறார். இறுதியாக தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாறுகிறது.

சின்ன நீலனுக்கு சூலை நோய் வந்ததால் நெய்யூர் சாமுருவேல் டாக்டரிடம் மருத்துவம் பார்க்கிறான். அவர் தீண்டாமைக்கு எதிரான மருத்துவர். ஆனால் கிறித்துவர். மதம் மாறுவதற்குப் பயந்த சின்னநீலன் சாமித்தோப்பு (பூவண்டன் தோப்பு)க்கிற்குச் செல்கிறான். அங்கு வைகுண்டசாமி (முத்துக்குட்டி) யைச் சந்திக்கிறான். அவரின் கொள்கையில் ஈர்ப்படைகிறான்.

முத்துக்குட்டி என்பவர் கடலில் சென்று அருள் பெறுகிறார். தீண்டாமையை எதிர்க்கிறார். உருவ வழிபாட்டை மறுக்கிறார். அனைவரும் சமம் என்று போதிக்கிறார். அருளாசி வழங்குகிறார். தன்னோடு சமமாக அமரவைத்து அருளாசி வழங்குகிறார். மக்களை கண்ணாடி பார்க்க வைத்து அவரது அவலங்களைச் சுட்டிக்காட்டுகிறார். இதனால் ராஜா அவரைச் சிறையிலிடுகிறார். அவரைக் கடுக்காயை வைத்துக் கடித்துக் கொள்ளப்படி சூழ்ச்சி செய்கின்றனர். அதற்கான முயற்சியில் இறங்கிய நம்பூதிரி சாகிறார். முத்துக்குட்டியைச் சிறையிலிருந்து வெளியேற்றுகின்றனர். தன் தண்டனை காலம் முடியும் வரை தானே விரும்பி சிறையிலிருந்து பின் வெளியேறுகிறார். இப்படிப்பட்ட முத்துக்குட்டியிடம் பணியாற்றிய சின்னநீலன் ஆறு ஆண்டுகள் கழித்து தன் ஊரிலுள்ள சாணக்குடி முத்தார அம்மனுக்கு பூசாரி ஆகிறான்.

முத்தார அம்மனைப் புதுப்பிக்க மேல்சாதி குளத்தில் தண்ணீர் எடுக்கிறான். அவனைத் தடுக்கிறார்கள். தாக்குகிறார்கள். குணமுடையார் என்ற கிறித்துவரின் ஆதரவு தருகிறார். உயர்சாதி மக்களைத் துப்பாக்கியால் மிரட்டுகிறார். சின்னநீலனுக்கு நல்லது நடக்கிறது. முத்தார அம்மனை அனைவரும் நம்புகின்றனர். உயர் சாதியினர் நெருப்பை வைத்து

சின்னநீலனை வஞ்சிக்கின்றனர். ஆனால் அவனின் சாபத்திற்கு ஆளான அந்த இளைஞர்கள் தலைதெறிக்க ஓடுகின்றனர். கார்த்திகை மாதம் தொடர்மழையால் சீத பேதி (காலரா) நோயில் அதிகம் பேர் இறங்கின்றனர். சின்னநீலன் கொடுத்த வேப்பிலை கசாயத்தில் பகுதி பேர் உயிர் பிழைக்கின்றனர். இதனால் முத்தாரம்மன் சக்தி வாய்ந்த கடவுள் என நம்புகின்றனர்.

மூர்த்தியாரு வர்மக் கலை, சிலம்பக் கலை போன்றவை பயின்றவர். வைத்தியம் கற்றவர். சிறந்த வீரன். நீண்ட நாட்களாக திருமணம் முடிக்காமல் இருக்கிறார். பக்கத்து ஊரில் திருடர்கள் தொல்லையால் மக்கள் அவதிப்பட்டுள்ளனர். அப்போது ஊரின் தலைவரின் மகள் தங்கப் பூ திட்டம் போட்டுத் திருடர்களைக் கொல்கிறாள். இந்த வீரம் மூர்த்தியாருக்குப் பிடித்துபோய் அவளை மணக்க விரும்புகிறாள். அவளுக்காக தாய்மாமனுடன் போட்டி போடுகிறார். தாய்மாமன் உயிரின் மீது தங்கப் பூ அக்கறை கொள்கிறாள். இதைக்கண்ட மூர்த்தியார் விலகிக் கொள்கிறார். வண்டி மாடு ஓட்டுவதில் வல்லவர். வழிப்பறி கொள்ளையர்களைத் துவம்சம் செய்து சாமர்த்தியமாகத் தப்பிக்கிறார். வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்கிறார். தந்தை பெரியாரை அறிந்து கொள்கிறார். யாருடனும் சாதிய வேறுபாடின்றி பழகுகிறார். அனைவரும் சமம் என்ற சிந்தனை கொண்டவர்.

ஒரு ஊரில் வண்டி மாடு ஓட்டச் சென்ற போது, அங்கே ஒருவன் அழுகிறான். காரணம் கேட்க எங்கள் ஊரில் யார் திருமணம் முடித்தாலும் முதல் ராத்திரி மணப்பெண்ணுடன் ஊர் பெரியத்தனத்தார் தான் உறவு கொள்ள வேண்டும் என்ற வன்முறை உள்ளது. இன்று

எனது மனைவியை அவ்வாறு உறவு கொள்ளப் போகிறார் என்று அழுகிறான். மூர்த்தியார் ஊர்த் தலைவரைத் துவம்சம் செய்து அப்பெண்ணைக் காப்பாற்றுகிறார். அப் பெண் அங்கிருந்து தப்பி மூர்த்தியார் வண்டியில் ஒளிந்து கொண்டு ஊரை விட்டு வருகிறாள். அவள் தான் பிச்சிப் பூ.

“யாரு என்ன சொன்னாலும் பிச்சிப் பூக்க நடை உடை பாவனை எல்லாமே வித்தியாசந்தான். தினமும் அவ பண்ணுற ஒப்பனை பொம்பளைகள ரொம்பவும் கவர்ந்து. தலைமுடியச் சீவி ஒரு நாளு நடுவகிடு எடுப்பா. ஒரு நாளு பக்க வகிடெடுப்பா. இன்னொரு நாளு வகிடு எடுக்காம சீவுவா. ஒரு நாளு பேன் சீப்பால வழிச்சிச் சீவுவா. இன்னொரு நாளு பெரிய பல்லுச் சீப்பால தளர்த்தி நார் நாராச் சீவுவா. கொண்டைய நூறு விதமாக் கட்டுவா. பார்க்க அதிசயமா இருக்கும். சிலருக்குப் பொறாமையாவும் இருக்கும்.

மஞ்சளையும், சுண்ணாம்பையும் கணக்கா எண்ணெயில கலந்து உள்ளங்கையில் தேய்ச்சி, நெத்தி, கன்னம், மூக்கு, கழுத்து, காது மடல் எல்லாத்திலையும் லேசா பூசி விடுவா. ஒரு பழந்துணியால எல்லாத்தையும் மேலோட்டமாத் துடைச்சிவிட்டா. அந்தப் பொம்பள கருப்பா சிவப்பான்னு சொல்லவே முடியாம முகம் அப்பிடி ஒரு நிறம் கொடுத்திருக்கும்.

நீண்ட வடிகாதுல பக்கத்துக்கு நாலாகத் தொங்குற தண்டட்டிப் பாம்படம் அவ தலை ஆடும் போது அந்த வட்ட முகத்துக்கு அழகு கூட்டும். வாரத்துக்கு ஒரு நாளு பாம்படத்தக் கழத்தி சீயக்காத் தண்ணீல தேச்சி அழுக்கு எடுத்து மினுக்குவா. நல்ல நிலாக் காலத்தில

பாக்கணும் அவ அழக. உதடு சிவக்க வெத்தில போட்டுக்கிட்டு, அவ நிமிர்ந்து நின்னாக் கிறங்காத மனசும் கிறங்கும்.”

மூர்த்தியார் திருமணம் செய்த பிச்சிப் பூ சிறந்த வீரப் பெண்மணியும் கூட. மூர்த்தியாரிடம் சிலம்பம் கற்றுக்கொள்கிறாள். சாதி வேறுபாடின்றி பிற சாதி பெண்களுக்கும் கற்றுக்கொடுக்கிறாள். பெண்கள் கூட்டமே சிலம்பம் கற்றுக்கொள்கிறது. ஆண்டிச்சாமி என்பவரின் கனவில் முருகன் தோன்றியதால் அவர் திருச்செந்தூர் முருகனுக்குக் காவடி எடுக்கிறார். விரதமிருந்து காவடி எடுக்கும் அன்று உயர்சாதியினர் அவரைக் கோயிலுக்குள் உள்ளே விடாமல் தடுக்கின்றனர். மூர்த்தியாரும் பிச்சிப் பூவும் இணைந்து எதிரிகளை அடித்துத் துவம்சம் செய்கின்றனர். ஆண்டிச்சாமி கோயிலுக்குள் செல்லும் போது பிச்சிப் பூ தன் பெண்களுடன் சிலம்பம் கொண்டு உள்ளே நுழைந்து, ஆண்டிச்சாமியையும் காப்பாற்றி தானும் தப்பித்து வெளியேறுகின்றனர். தாழ்ந்த சாதி ஆண்களில் ஆண்டிச்சாமி கோயிலில் நுழைந்தவர் என்றால், பெண்களில் பிச்சிப் பூவும் கோயிலில் நுழைந்தவராகிறாள். அதனால் நாவலின் மையம் பிச்சிப் பூ என்றாகிறது.

பெண்மை வாழ்க. பெண்ணால் எல்லாம் நடக்கும். பெண் குலம் குலவ விட்டுக் கூத்தாடும். தொடர்ந்து பெண்களோடு முழக்கம் கேட்டுக்கிட்டே இருக்கு. நுழைந்தோம் நுழைந்தோம் குமாரக் கோயிலுக்குள் நுழைந்தோம். நுழைவோம் நுழைவோம் இனி எல்லாக் கோயிலுக்குள்ளும் நுழைவோம். தொழுவோம் தொழுவோம் எல்லாத் தெய்வங்களையும் தொழுவோம். திறப்போம் திறப்போம் எல்லா வாசலும் திறப்போம். பெண்மை ஆற்றல்

எழுகவே. தடைகளை உடைத்துக் கூத்தாடுவோம். பெண்மை வெல்கவெனக் கூத்தாடுவோம்.

**மக்களின் நடைமுறை வாழ்க்கையில் பதிவான செய்திகள்** மாப்பிளக் கல்லு, அடியோலை (அந்தக் காலத்துல வசதியானவுகதான் தோல் செருப்பு போடுவாக. சாதாரணப்பட்டவுக போடுறது அடியோலை. அடியோலைன்னா என்ன? ஒவ்வொரு காலுக்க அளவுக்கும் பனையோலையால தடுக்குப் போலப் பின்னி, பன நாருல வாரு போட்டு ஆளுக பயன்படுத்தக் கூடிய செருப்பு. வசதிக்குத் தக்கச் சாதா ஓலயயோ, குருத்தோலையயோ, நீள வாக்குல வார்ந்து, சாயத் தண்ணீயில அவிச்சிச் சாய ஓலையாய் பயன்படுத்தவும் செய்வாக. சாய ஓலைக்குக் கீழ வெள்ளை ஓலைகளக் கொடுத்துப் பொத்திப் பொத்தி வசதி உள்ளவக அடியோலைய மெத்த போலக் கனமா அமைச்சிக்கிடுவாக, மேல் வாருக்குப் பதிலா பன நார அருமையா வார்ந்து முடிச்சுப் போட்டுப் பயன்படுத்துவாக. நடக்கதுக்குப் பஞ்சு போல இருக்கும். பொடி சுடாது.

வயசான தாத்தாமாரும் பாட்டிமாரும் இந்த அடியோலைகளப் பலவித நிறங்கள்ல பின்னிப் பிடி நாரும் போட்டுப் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கொடுப்பாக.), மஞ்சனத்தி மரக்கட்டை செருப்பு, நிழல் தாங்கல் (நிழல் தாங்கல்னா என்ன? பகலுல பள்ளிக் கூடமாகவும் ராத்திரி கூட்டுவழிபாட்டுக் கூடமாகவும் பயன்படக்கூடிய இடம்), கார்த்திகை மாதத்தில் வவ்வாலை வேட்டையாடி உண்ணுதல், பனந்தந்தி (பனந்தந்தியா அது என்ன? அக்காலத்துல செய்திகள ஊருக்கு ஊர் பரப்புறது பனந்தந்தி மூலந்தான். திருச்செந்தூர்ல இருந்து திருவனந்தபுரம் வரைக்கும் அன்னிக்கி ஒரே பனங்காடு தான்.

திருச்செந்தூர்ல ஒரு பனையில ஏறுன சாமர்த்தியமுள்ள தொழிலாளி பனைக்குப் பனை தாவி நொங்கும் பயினியும் சாப்பிட்டுக்கிட்டே திருவனந்தபுரத்துல போயி இறங்கிடுவான்… கடக்கரையை ஒட்டி அப்பிடி அடர்ந்து வளர்ந்து கிடந்தது பனங்காடு. அந்தப் பனங்காடு முழுசும் இந்தச் செய்தி வாய் மொழி மூலமாப் பரவிச்சி.), அக்கினி காவடி (அக்கினி காவடின்னா எப்படி? வட்டமான ஒரு வெங்கலச் சட்டி. அதுக்க ரெண்டு பக்கமும் வளையம் மாட்டி சட்டி நிறைய தேங்காய்ச் சிரட்டையை எரிச்சிக் கிடைக்கிற தழலுதான் அக்கினி. அதுக்கச் சூட்டுல வெண்கலச் சட்டி சிவந்து பழுத்துப் போய் இருந்தது. சட்டிக்க ரெண்டு பக்கமும் பக்கத்துக்கு ஒரு வளையம். ரெண்டு வளையத்திலயும் ரெண்டு சங்கிலிய மாட்டி மறுமுனைகள்ல இருந்த கொக்கிகள ரெண்டு பக்கமும் இடுப்புச் சதையில செருகி விடப்படும்.) போன்று இன்னும் ஏராளமான தகவல்கள் நாவலில் பொதிந்துள்ளன.

# வனதேவியின் மைந்தர்கள்

- ராஜம் கிருஷ்ணன்

வேதப் பாடல்கள், உபநிடத கதைகள், இராமாயண இதிகாசம் ஆகியவற்றில் காணப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு புனையப் பெற்ற நவீனம் இது. சில வரலாறுகளின் ஆதாரங்களில் நெருப்புத்துண்டு போன்று உண்மை சுடும். வயிரம் பாய்ந்த மரம் இறுகிக் கரியாகி, ஒளியை வாரி வீசும் மணியை உள்ளடக்குவது போன்று, உண்மையும் மறுக்க முடியாததாக ஒளிரும். மாமன்னர் சனகர், ஏரோட்டிய போது, உழுமுனையில் கண்டெடுத்த பெண் குழந்தை இராமயண மகா காவியத்தின் நாயகியாகிறாள். இராமாயண காவியம், சக்கரவர்த்தித் திருமகன் இராமசந்திரனின் பெருமை மிகு வரலாற்றைச் சொல்வதாக ஏற்றி வைக்கப்பட்டாலும், காவியத்தின் ஆதார சுருதியாகத் திகழ்பவள் நாயகி சீதைதான். இவள் மண்ணிலே கிடைத்தவள். குலம், கோத்திரம் விளக்கும் பெற்றோர் அறியாதவள். பூமித்தாய், நிணமும் குருதியுமாக ஒரு சிசுவைப் பிரசவிக்க முடியுமா? இது அறிவுக்குப் பொருந்தாத ஒரு கற்பனையே. அலங்காரமான இந்தக் கற்பனை, கசப்பான ஓர் உண்மையைப் பொதித்து வைக்கப் பயன்பட்டிருக்கிறது. இந்த எண்ண ஓட்டமே, பூமியில் கிடைத்த பெண் சிசுவுக்கு, பிறப்பென்ற ஓர் ஆதி கட்டம் உண்டென்று புனையத் துணிவளித்தது. அந்தக் கால சமுதாயத்தில் நால்வகை வருணம் அழுத்தமாகக் கூறு போடவில்லை என்றாலும் வருண தருமங்கள் மிக அழுத்தமாகத் தம் ஆதிக்கத்தைப் பெண் மக்களின் வாழ்க்கையிலும் உணர்வுகளிலும் பதிக்க, மன்னராதிக்கம் துணையாக இருந்தது எனலாம்.

நூற்றுக்கணக்கான, பணிப்பெண்டிரும், போக மகளிரான அந்தப்புர நாயகியரும், செவிலியரும் எவ்வாறு உருவாயினர்? இதே போல் ஆண் அடிமைகளும் இருந்தனர் என்றாலும், பெண் மக்கள் போல் எந்த உரிமையும் அற்ற பரந்த எல்லைகளில் அவர்களின் சேவை இருந்ததில்லை. உடலால் அவர்கள் ஆணினம் முகர்ந்து பார்க்கவோ, கசக்கி எறியவோ ஆட்படும் போது, எந்த எதிரொலியும் எழுப்ப இயலாதவர்களாகவே உட்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே குலம் கோத்திரம் அறியாதவர்கள். தந்தை வழி முத்திரைக்கு அப்பால் உதித்தவர்கள். பெண் குழந்தைகள் அரச மாளிகைகளில், பிரபுக்களின் - மேல் வருணத்தாரின் மனைகளில், கணிகையர் விடுதிகளில், உல்லாசம் அநுபவிக்கக்கூடிய பொது இடங்களில் ஊழியம் செய்ய விலைப்படுத்தப்பட்டனர். அரசர்கள், மேல் வருண ருஷி முனிவர்களுக்கு இந்தப் பெண்களை, பசுக்களையும் பொன்னையும் வழங்குவது போல், தானமாக வழங்கினர். இத்தகைய அடிமைகளின் தொடர்பினால் உயர் வருண ருஷித் தந்தைக்கு மகன்கள் உண்டானால், அவர்கள் ஏற்றம் பெறுவதும் இருந்தது. ஆனால் இந்த ஆண்மக்களும் பெரும்பாலும் உபநயனம் பெறும் உரிமை இல்லாதவராகவே இருந்தனர் என்றே தெரிய வருகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக பெண் பிறந்து விட்டால், அவள் 'அடிமை' என்றே விதிக்கப் பெற்றாள். அழகிய பெண்ணாக இருந்து விட்டால், மன்னர்களும், பிரபுக்களும் அந்தப்புரக் கிளிகளாகக் கொள்வர். அவர்களில் எவருக்கேனும் ஒரு 'வாரிசு' உதயமாகும் என்ற நிலைமை எய்தினால் போட்டி, பொறாமையில் அவள் சுருண்டு போவாள். சந்ததியைப் பெற்றுத் தர இயலாத பட்ட மகிஷிகளின் ஆணைகள் அந்தப் பேதைப் பெண்ணைக் காட்டுக்கு அனுப்பவும் செய்தன. அந்த வாரிசு உண்மையில் மன்னருடையதாக

இல்லாமல் மன்னர் குடும்பத் தொடர்புடையவருடைய சந்ததியாக இருந்தாலும் கூட அவள் மன்னருக்குரிய 'அந்தப்புரத்தில்' இருந்த குற்றத்துக்காக நாடு கடத்தப்படுவாள்.

தசரத மன்னர், நூற்றுக்கணக்கான அந்தப்புரப் பெண்களை 'ஆண்டு' வந்தார். அவர் இறந்த போது, அத்தனை மனைவியரும் கதறித் துடித்தனர் என்ற செய்தி வருகிறது. 'பட்ட மகிஷி'களான தேவியருக்கும் சந்ததி உருவாகவில்லை. எனினும் மன்னனின் 'ஆண்மை' குறித்த கரும்புள்ளி எந்த இடத்திலும் வரவில்லை. மாறாக 'யாகம்' என்ற சடங்கும், 'யாக புருடன்' வேள்வித் தீயில் தோன்றி, பாயசம் கொணர்ந்து தேவியர் பருகச் செய்தான் என்று மாயப்புதிரும் புனையப் பெறுகிறது. மிதிலாபுரி மன்னருக்குப் பெண் சந்ததி இருந்தது. அந்த மன்னரின் அந்தப்புரக் கிளி ஒருத்தி கருவுற்றதும், அவள் சந்ததியைத் தந்துவிடக் கூடுமோ என்ற அச்சத்தில் மற்றவர்களால் கானகத்துக்கு அனுப்பப் பெறுகிறாள். அந்தத் தாயின் மகன் வழித் தோன்றலாக வந்த பெண் குழந்தையை அந்த அன்னையே, அரசன் ஏரோட்டும் பூமியில் பொதித்து வைத்தாள் என்று நான் கற்பனை செய்தேன். 'சத்திய வேள்வி' இச்செய்திகளைக் கொண்ட நவீனம்.

அதே பூமகள், இராமசந்திரனின் கரம் பற்றிய நாயகியான பின், தொடரும் வரலாறே, இந்தப் புனைவு. இவள் இராம கதையின் நாயகியாகும் வகையில், இராமசந்திரனின் கல்யாண குணங்களை மிகச் சிறப்பாக ஒளிரச் செய்யும் வகையில், பொற்கூட்டுப் பின்புலமாக உருவாக்கப் பெற்றிருக்கிறாள். இந்தப் பின்புலம், கரும்புள்ளிகள் உள்ள வயிரத்தையும், தன்னுள் அப்புள்ளிகளை ஏற்று விழுங்கி, அந்த வயிர மணிக்கு மேலும் கண்பறிக்கும் வண்ண ஒளிக் கதிர்களைக் கூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் இந்தக் காவியம், சீதையின் கதையாகவே விரிந்தாலும், இது இராமயணம் என்றே சிறப்பிக்கப்படுகிறது. 'குலம் கோத்திரம்' அறியாத இந்தப் பெண்ணுக்கு, எந்த வகையில் உரிய மணவாளனைத் தேட முடியும் என்று சனக மன்னன் கவலைப்பட்டிருக்கிறான். வில் இங்கே ஒரு காரணமாக அமைகிறது. வில் உடைந்தது. நாயகன் கிடைத்தான். குலம் கோத்திரம் கேட்காமல், மன்னனின் வளர்ப்பு மகளை, பேரழகும் பொறுமையுமே வடிவாகத் திகழ்ந்த கன்னியைக் கைபிடித்தான். அவள் நாயகனுடன் செல்லும் போது, வழியனுப்பி வைக்கும் தந்தை, தான் கவலைப்பட்டதையும், அது ஆதவனைக் கண்ட பனியாகக் கரைந்து ஓர் ஒப்பற்ற அரசகுமாரனை மருகராகக் கிடைக்கப் பெற்றதையும் எடுத்துரைத்து, "மகளே, உன்னை ஓர் உயரிய நாயகருக்கு உரித்தாக்கி விட்டேன். இனி இந்த நாயகரே உனக்கு எல்லாமும். 'அன்னை, தந்தை, குரு, தெய்வம்' எல்லாமுமாக ஆகிறார். இவர் இருக்குமிடமே உனக்கு உரிய இடம்" என்று உரைத்து ஆசி வழங்குகிறார்.

பெற்றோர், பிறந்த இடத்து உறவுகள் எல்லாமே ஒரு பெண்ணுக்கு மேலே போர்த்துக் கொண்ட பாதுகாப்புகள் போன்றவை; 'மணாளர் என்று ஒருவர் உறவான பின், அந்தப் பாசங்கள் கழற்றி விடப்பட வேண்டும்' என்பதே இன்று வரையிலும் இந்தியப் பெண்ணின் 'தருமமா'கப் பாலிக்கப்பட்டு வருகிறது. திருமணம் தான் அவள் வாழ்வை உறுதி செய்கிறது.

பூமகள் ஒரு நாயகரைச் சேர்ந்துவிட்டாள். நாயகன் மாதா - பிதாவின் வாக்கிய பரிபாலனம் செய்ய, வனம் ஏகும் போது, இவள் தங்குவாளா? இவளுக்கு ஏது பிறந்த

இடம்? 'இராமன் இருக்குமிடமே அயோத்தி' என்ற மரபு வழக்குக்கு ஆதாரமாக வனம் ஏகினாள். வனத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், இவள் கற்புக்கு நெருப்புக் கண்டம் வைத்தது. இராமன், அரக்க வேந்தனைக் கொன்று, இவளை மீட்க வந்த போது என்ன சொன்னான்?

"அரக்கர் மாளிகையில் அறுசுவை உணவுண்டு உயிர் துறந்தாயில்லை. கடல் கடந்து வந்து அரக்கரைக் கொன்றது, உன்னை மீட்டு அழைத்துச் செல்வதற்காக இல்லை. வீரனின் மீது விழுந்து விட்ட பழியைப் போக்கிக் கொள்வதற்காகவே இலங்கையை வென்றேன்?" 'வீரம்' என்பது பழி தீர்க்கும் வன்மத்தில் விளைவதா? யாருக்கு யார் மீது பழி? இத்தகைய சொற்களால் அந்த அருந்தவக் கொழுந்தைச் சுட்டதுடன் அவன் நிற்கவில்லை. அவளை எரிபுகச் செய்கிறான். இத்துடன் முடிந்ததா, பழியும் சந்தேகமும்?

ஊர் திரும்பி, முடிசூட்டிக் கொண்ட பின், தன்னால் கருவுற்ற நாயகியின் மீது எங்கோ ஒலித்த தீச்சொல்லின் கருநிழல் விழுந்ததென்று கானகத்துக்கு விரட்டினான். இது வெறும் நாடு கடத்தலா? எரிபுகுந்து புடம் போட்ட சொக்கத் தங்கமாக வெளியே வந்த நாயகியை - கருவுற்ற செல்வியை, மீண்டும் உயிருடன் கொளுத்தும் துரோகச் செயல் அல்லவோ? இந்தச் செயலின் பின்னே கற்பிக்கப்படும் 'தொத்தல்' நியாயத்தை யாரால் ஏற்க முடியும்?

இப்படி ஒரு நிகழ்வு, ஆதிகவியின் இதிகாசத்தில் இடம் பெற வேண்டுமா? ஆதிகவியின் நோக்கம் யாதாக இருக்க முடியும்? தமிழ்க் காவியத்தைக் கம்பன் ஆதிகவியை ஒட்டியே புனைந்தாலும், மகுடாபிஷேகத்துடன் கதையை முடித்துக் கொண்டது அரிய சிறப்பாகும்.

இராமனுடைய அரசில் ஓர் ஆண் சலவைத் தொழிலாளியின் பேச்சுக்குக் கூட இத்துணை கனம் உண்டு; அந்தப் பளு நிறைசூலியை நிராதரவாக வனத்துக்கு அனுப்புமளவுக்கு

நாயகனின் மனச்சான்றை அழித்துவிடும் வலிமை வாய்ந்தது என்பது விளக்கமாகிறது. இந்த நீதி தருமம், சாதாரணமான மக்கள் எவரும் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை.

வால்மீகி மகரிஷி இந்த மகா காவியத்தை இயற்றியதன் நோக்கம் யாதாக இருக்கும் என்பதைக் கூடத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. கிரௌஞ்ச பட்சிகளில் ஆணை வேடன் கொன்றான்; பெண் சோகம் தாங்காமல் கதறியது. இந்தச் சோகத்தைக் கண்டதும் மனம் தாளாமல் அவர் வேடனைச் சுடு சொற்கள் கொண்டு சபித்தார். அப்போது வெளி வந்த அந்த சுலோகமே இவருடைய கவித்துவத்திற்கான தோற்றுவாய் என்று சொல்லப்படுகிறது.

பெண் பட்சியின் துயரம் சீதையின் துயராக மாற்றப் படுகிறதா? ஆனால், அது இயல்பாக இல்லையே?

பெண் துயரப்படுவதற்கே பிறக்கிறாள். ஆனால் ஆண் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை அல்லவோ இந்தக் காவியம் எதிரொலிக்கிறது? இன்னும் நுட்பமாக நோக்கினால், ஆண் நாயகன், ஓர் இலட்சிய மாதிரியாக உருவாக்கப்பட்டிருப்பதாகவும் புலப்படுகிறது. பாரதத்தில் வரும் கண்ணனைப் போல் இவன் மூன்றாம் வருணத்தவன் அல்ல; அதருமத்தை அதரும வழியைக் கையாண்டு வெல்லலாம் என்று துணிந்தவன்; பல பெண்டிருக்கு லோலனாகச் சித்தரிக்கப் பட்டவன் அவன்.

ஆனால் இந்த நாயகன் இலட்சிய புருடன், க்ஷத்திரிய வித்து; சக்கரவர்த்தித் திருமகன்; ருஷி முனிவர்களின் கண்ணுக்குக் கண்ணாக ஒழுகுபவன். மேல் வருண வருக்கமே இவனுடைய சமுதாயம். அந்தணப் பிள்ளை பிழைக்க, அந்தணனல்லாத சம்பூகன்

கொலை செய்யப் படுகிறான். அவன் முற்பிறவியில் பாவம் செய்துவிட்டு, பாவம் தீரத் தவம் செய்கிறான் என்று கொலைக்குக் காரணம் சொல்லப்படுகிறது. இந்தத் தரும நியாயங்கள் க்ஷத்திரிய குலத்தை மேன்மைப்படுத்தக் கூடியவை. உத்தர இராமாயணத்தில், சீதையை நாடு கடத்திய நிகழ்ச்சியைத் தொடர்ந்து, க்ஷத்திரிய மன்னரின் தர்ம நியாயங்கள் ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன. 'அசுவமேதம்' ஏகாதிபத்திய நியாயத்தைத் தெளிவாக்குகிறது. அசுரன் என்ற காரணமே, 'லவணாசுரன்' போன்ற மன்னர்களின் பராக்கிரமம் வீழ்த்தப்படுவதற்குரிய நியாயமாகிறது.

மேலும் இத்தரும நியாயங்கள் வன்முறையாலேயே நிலை நாட்டப்படுகின்றன. நிறை சூலியான மனைவியை, குரூரமாக வனத்துக்கு அனுப்பும் முறையிலேயே அது தெளிவாகிறது. இந்தச் செயல், அவதார புருடன் என்று கொண்டாடப்படுவதற்குரிய மன்னனுக்குரியதல்ல. இதற்கெல்லாம் ஒரே காரணம், சீதையின் குலம் கோத்திரம் தெரியாத பிறப்பே என்று கொள்ளலாம். வருண தர்மமும், ஆண் ஆதிக்கமும், பெண்ணை ஓர் அடிமை நிலையிலும் இழிந்து, தருமம் என்ற விலங்கால் பிணித்து வைத்த நிலை துலங்குகிறது. வால்மீகி முனிவர், இராமரிடம் அவர் மைந்தர்களைக் காட்டி, "இராமா, இவர்கள் உன் மைந்தர்களே... சீதை அப்பழுக்கற்ற செல்வி. இவர்களை ஏற்றுக் கொள்" என்று ஒப்படைக்க முனைந்த போதும் இராமன் தயங்குகிறான்.

அந்த நிலையிலும் இராமன் சீதையிடம் சான்று கோருவது, க்ஷத்திரிய அரக்கத் தனத்தின் உச்சநிலையை விள்ளுகிறது. "இன்னும் எவ்வாறு நான் சான்று காட்டுவேன்?" என்று சீதை முறையிடுகையில் பூமி பிளக்கிறது. உள்ளிருந்து ஒரு நேர்த்தியான ஆசனம் வந்து

அவளை ஏந்திக் கொள்ள, பூமிக்கடியில் அவள் செல்கிறாள். பூமிப் பிளவு மூடிக் கொள்கிறது என்று நாடகப் பாணியில் சீதையின் முடிவு விவரிக்கப்படுகிறது.

பின்னர் இராமர் அந்த இரு மைந்தர்களையும் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டு நாடு திரும்புவதாக இராமாயண வரலாறு இயம்புகிறது. அரக்கன் மாளிகையில் பத்து மாதங்கள் இருந்த காரணத்தால் அவள் மாசு படிந்தவளானாள். எந்த அக்கினியாலும் அவள் மாசை அழிக்க முடியவில்லை. ஆனால் அவள் பெற்ற குழந்தைகள், ஆண்மக்கள் அரசுக்கு உரிய சந்ததியினராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

பவபூதி - எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழி நாடகாசிரியர். வால்மீகியின் முடிவை இவர் ஏற்றிருக்கவில்லை. 'உத்தர ராம சரிதம்' என்ற நாடகத்தின் வாயிலாக, அந்த முடிவை மாற்றியமைத்தது மட்டுமின்றி, தம்மை உறுத்தும் வேறு சில செய்திகளையும் வெளியிட்டிருக்கிறார். சம்பூகனைக் கொலை செய்யுமுன் இராமர், "வலதுகரமே, நீ வேதியன் மகனை வாழ்விக்க, சூத்திர முனிவர் மீது உடைவாளை வீசுவாய்? நிறை சூலி சீதையை வனமனுப்பியவன் அங்கமல்லவா? உனக்கு கருணை ஏது?" என்று நெஞ்சோடு கடிந்து கொண்டதாக எழுதியுள்ளார். அது மட்டுமன்று; வால்மீகி ஆசிரமத்துச் சீடர்கள் நகைச்சுவை மேலிட ருஷி - தாடிகள் வரும்போது, பசுங்கன்றுகள் விழுங்கப்படுகின்றன என்று பேசிக் கொள்வதாகச் சித்திரிக்கின்றனர்.

அவருடைய நாடகத்தில் அந்தண முனி ஆதிக்கங்களுக்கு எதிரான குரல் இழையோடுகிறது. இவருடைய நாடக முடிவில் சீதையைப் பூமி விழுங்கவில்லை. மன்னருடன் தாயும் மைந்தர்களும் சேர்ந்து விடுகின்றனர். சீதை உயிர்க்குலத்தை வாழ

வைக்கும் செல்வி. அஹிம்சை வடிவானவள். இராமன் வனமேகும் போது வில்லும் அம்பும் கொண்டு வருவது எதற்கு என்று வினவிய பெருமாட்டி. எனது இந்தப் பார்வையே சீதையை ஒரு புதிய வடிவில் இசைக்கிறது. இவள் தன் மவுனத்தால் இராமனைத் தலைகுனியச் செய்கிறாள். அஹிம்சையின் ஆற்றல் சொல்லற்கரியதாகும். கடப்பாரைக்கு நெக்குவிடாத பாறையும் பசுமரத்து வேருக்குப் பிளவு படும் அன்றோ? சீதையின் ஆற்றல் ஆரவாரமற்றது. அது ஆழத்தில் பாய்ந்து தீமையைச் சுட்டெரிக்கவல்லது. என் சீதை இத்தகைய ஆற்றலை அகத்தே கொண்டு வனத்தையே அன்பு மயமாக ஆளுகை செய்யும் தாய். அவள் பூமிக்குள் செல்லவில்லை. அவள் மைந்தர்களும் அரசன் பின் செல்லவில்லை.

**தேவி** கர்ப்பிணி பெண், தன் தந்தை போலுள்ள நந்த முனி சுவாமியிடம் பேசுகிறாள். நாயகர் இடம் தானம்மா உனக்குத் தலைநகரம். உனக்கு இனி அவர்தான் சகலமும் என்று ஆசிர்வதிக்கிறார். பாவங்கள் கழுவப்படுகின்றன. அன்பால் ஆளவந்த சிறுமியைப் பார்க்கிறார். மன்னர் அரக்கர் குலத்தை அழித்தார். மாசு மறு ஒட்டாத மாமணியை நெருப்புக் குண்டத்தில் பரிசோதித்தார். மகளுக்கு உணவு கொடுக்கிறார் சுவாமி. பெரியம்மையை நினைத்துக் கொள்ளுதல். அரக்கர்களைப் புகழாதிருத்தல். ஏரோட்டுதலைப் பேசுதல். கர்ப்ப காலத்தில் தாய் வீட்டுக்குச் செல்லுதலை விரும்புதல். பூச்சிக் காட்டு மக்கள் நரமாமிசம் கொள்ளுதலைப் பேசுதல். காட்டில் வாழும் மக்கள் வேறு. நாட்டில் வாழும் மக்கள் வேறு. அணில்கள், கிளிகள், புறாக்கள் போன்ற பறவைகளுடன் வாழ்ந்த வாழ்க்கைத் திரும்பப் பெற வேண்டும் என்று எண்ணுதல். வனவாசத்தில் சபரி என்ற மூதாட்டி அவர்களை உபசரித்ததை நினைவு கூர்தல். வாழ்த்துதல் விடைபெறுதல்.

பட்டு வணிகர் வருதல். பட்டுக்களை நேர்த்தியாக நெய்பவர்கள் சாலியர். வேதபுரி சாலியர்கள் பட்டு நெய்வதில் தனி சிறப்பு பெற்றவர்கள். வணிகரிடம் ஓர் ஆடை காட்டி அதைப் போல் வேறு ஆடை நெய்யச் சொல்லல்.

நாயின் தோல் பளிங்கையும், பொன்னையும் மினுமினுப்பாக்குகிறது. வேடுவப் பெண்கள் இவ்வாறு தோல்களை உரித்துப் பதமாக்கிக் கொண்டு வருவார்கள். முனிவருக்கும் வசதியாக உடுக்க, இருக்க, படுக்கத் தோல்கள் தயாரிப்பார்கள்.

அரக்கர்களிடம் இருந்த தேவி பத்து மாதம் சருகும் நீரும் காற்றும் உணவாகக் கொண்டு உயிர்த் தரித்திருக்கிறாள். அரக்கர் கோனின் புகழும் குறைந்தது அல்ல. அக்கினி குண்டத்தில் இறங்கி வெளிவந்தாள். அரக்கர் குலத்தில் பிறந்தாலும், அந்தண குலத்தில் பிறந்தாலும், மன்னர் குலத்தில் பிறந்தாலும் பெண் ஒரு போகத்துக்குரிய பண்டம் தானே? ஆண்கள் முகர்ந்து பார்ப்பதில் தான் பெண் நிறைவடைகிறாள். ஒரு தாயாகும் பேறு கிடைக்கிறது. ஒரு மகவு பால்அருந்தி தன்னைப் பிறந்த நேரத்தில்ன் பயனை அநுபவிக்கச் செய்யும் பேறில் அல்லவோ வாழ்கிறார்கள். அந்தப்புரத்தில் கணிகையர், விலை மகளிர், கரும்பைப் பிழிந்து உறஞ்சிச் சக்கையாக எறிவது போல் அல்லவோ துப்பப்படுகின்றனர் என்று வேதனை கொள்கிறாள்.

அரசர்களுக்கு அப்படி என்ன இராஜாங்க காரியம். காட்டில் இருந்த போது மட்டும் என்ன நிம்மதி? வில்லும் அம்புமாகத் திரிந்தார்கள். அதனால்தானே பகையும் விரோதங்களும் கொலைகளும் நிகழ்ந்தன. அரக்கர்கள் இருந்தால் இவர்களுக்கென்ன. எதற்காக ஆயிரக்கணக்கில் உயிர்வதை செய்யும் யாகங்கள் நடத்த வேண்டும்?

இளவரசர் கூனை விழுந்த முதுகில் வில் அம்பு வைத்து அடிப்பாராம். கூன் நிமிர்ந்து விடுமாம். ஆனால் வலி. கேலியில் விளைந்த விடையாட்டு தானே. அடிமை – பனிக்கிழவி இரண்டு தலை முறை மூத்திருந்தாலும் முதுகு மட்டும் வலிக்கவில்லை. மன்னரிடம் வரம் கேட்டுப் பழிதீர்த்துக் கொண்டாள். வேதபுரியில் உள்ள தாமரைக்குளம் சிறப்பு. மன்னர் வெட்டி நேர்த்தியாகக் கட்டியது. வந்து காணாத மன்னனைத் திட்டுதல். தான் கருவுற்று இருக்கும் காலத்தில் தன் தாய் வயிற்றில் தாம் இருக்கும் போது என்ன உணர்ந்திருப்பாள் என்று எண்ணுதல். தனக்குக் கிடைத்த இந்த சுகபோக வாழ்வு. தன் தாய்க்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை என்ற போதும். அவள் மகிழ்ந்திருப்பாள் என்பதை உணருதல். அரக்கர்களுக்கு நரமாமிசம் ஆசை வந்தது என்றால் கோரைப் பற்களும் குரூர வடிவமும் வந்து விடுமாம். அழகான பெண்களைப் போல் வந்து குழந்தையை ஒடித்துத் தின்று விடுவார்களாம்.

அவள் பெரியவளாவாள். அவளை ஒரு நல்ல மனிதன் திருமணம் செய்து கொள்வான். அன்போடு இருப்பார்கள். அப்போது அவளும் கருப்பம் தரிப்பாள். அவள் வயிற்றில் ஒரு குழந்தை உயிர்க்கும். அவள் உலகம் முழுவதையும் அன்பாய், தாய் போல் நினைப்பாள்.

பெரியம்மா, கொன்று தின்னும் புலியும், விஷம் கக்கும் பாம்பும் கூட அரக்க குலம் இல்லை. உயிர்க்குலம். நாமெல்லோரும் மனிதர்குலம். நம்மிடத்தில் அரக்கர் தேவர் என்ற இரண்டு குலங்களும் ஒளிந்திருக்கின்றன. நாம் பயப்படும் போது, கோபப்படும் போது, பொறாமைப்படும் போது, பேராசை கொள்ளும் போது, அடுத்தவருக்குத் தீங்கு நினைக்கும் போது, நமக்குள் இருக்கும் அரக்கர் வெளிப்படுவர். பொறாமை, இம்சை,

பேராசை, சுயநலம் அரக்கரின் தீனிகள். இன்னொருவர் தேவர், அரக்கரைத் தலையில் தட்டி அடக்கிவிட அன்பு. அதுதான் சத்தியம். அதுதான் இமிசை செய்யாமை. தின்னவரும் புலி கூட சத்தியத்துக்குக் கட்டுப்படும். அன்பின் வடிவம்.

மன்னரைச் சந்தித்தல். செண்பகத் தோட்டம் செல்லுதல். அங்கு வரவேற்றல். நான் இங்கே பாட்டன் முப்பாட்டன் காலத்தில் இருக்கிறேன் என்று பழம் பெருமையை மலர்கள் பேசுகின்றன. செண்பகவல்லி இம் மரத்தடியில்தான் மகப்பேறு பெறாமல் இறந்து போனாளாம். அதனால் இந்த தோட்டத்தில் செண்பக மலர் சொரியும் மரங்களை நட்டாராம். சத்திரியனுக்குக் கொல்லும் தருமம். பெண், விலங்கு, மனிதர் என்று பாகுபாடில்லாமல் கொன்று குவித்திருக்கிறது. அரக்கர்களைக் கொல்லும் போது நான் சத்திரிய தருமம் என்றால் என் குலத்துக்கு வரும் இழுக்கைப் போக்கவே அரக்கர் குலமழித்தேன்.

குலம் கோத்திரம் தெரியாத என்னை மனமுவந்து ஏற்றுக் கொண்டீர். அந்த நன்றிப் பெருக்கை நீ எப்போதும் காட்ட வேண்டும் என்று தான் எனக்கு என் தந்தை அறிவுரை கூறினார்.

வனத்தில் விலங்குகள் கொல்லப்படுகின்றன. பறவைகள் கொல்லப்படுகின்றன. பறவைகளின் மூலிகைகள் கிடைப்பதற்கென்ற ஏற்பாடுதான் வன விருந்து. அரக்கர் ராச்சியத்தில் கூட இப்படிக் கொடுமை நடக்கவில்லை. உயிர்க்கொலை தவிர. உங்கள் சந்தோசங்கள் வேறு கிடையாதா? ஐயோ ஆணும் பெண்ணுமாய் கூடுகட்டி, குஞ்சு பொரித்து, அதற்கு உணவூட்டும் கூடுகட்டி, குஞ்சு பொரித்து, அதற்கு உணவூட்டும்

பறவை இனம் என்று மறுத்து புலம்புகிறாள். தாயாகப் போகிறாள். ஆனால் மகிழ்ச்சி என்ற முழுமையில் அவள் மனம் நனையவில்லை. கிளிக் கூண்டைத் திறந்துவிட்டதால் அதனைப் பூனைப் பிடித்துத் தின்றது. இதனால் அவந்திகா அப்பெண்ணையும் குழந்தையும் திட்டுகிறாள். பூனைக்கு உணவு கொடுக்காதது அவர்கள் தவறு என்பது சுட்டிக்காட்டினர். அவந்திகாவின் பேச்சு இயல்பாகத் தோன்றவில்லை. முனிவர்கள் கானகத்தில் தங்குதல். அவளுடைய உடையில் பாவனையில் புதிய மாற்றங்கள் உருவாகத் தொடங்கின. செண்பக மலர்களைக் கொண்டு வந்து கொட்டுகின்றனர். மன்னர் விரும்பும் வண்ணம் மாறிக் கொண்டிருக்கிறாள். அப்பத்தைச் சுவைக்கிறாள். அவந்திகா குழந்தையைத் திட்டுகிறாள். ஏழையாகப் பிறந்ததைக் குற்றமெனக் கூறுகிறாள். தங்களுக்குப் சந்திரன் போல குழந்தை பிறக்க வேண்டும். குருகுல கல்வி கொடுக்க வேண்டும்.

ஏழைகள் குழந்தைகள் குருகுலக் கல்வியில் பயிலக் கூடாது என்று அவந்திகா திட்டியபோது தேவி அதிர்ச்சி கொள்கிறாள். அரசனது பிள்ளைகள் அரசைக் காப்பாற்றுவதற்காக கல்வி பயில்வார்கள். ஆனால், ஏழைக் குழந்தைகள் எதற்காகக் கல்வி பயிலவேண்டும் என்ற விவாதம் நிகழ்கிறது.

கானகத்தில் இருப்பதால் மான் இறைச்சியைப் பதம் செய்து கோசலாதேவிக்கு ஊட்டவே அரசர் வந்திருக்கிறார். அவள் மறுப்பாள். இங்கே நல்ல உணவு கிடைக்காது என்று மன்னர் ஆணையாக அவளை உண்ணப்பணிப்பர். தீக்கொழுந்தின் வாசத்தில் மகாராணியை இருத்துவர். இதுதான் என் வீடா? தாய் வீட்டுப் பிரசவத்திற்கு மன்னர்

இங்கே கொணர்ந்துள்ளார் போலும். கானகத்தில் வாழும் மக்கள் தேவியை வரவேற்றனர். அவர்கள் உண்ணும் பானங்களைத் தருகின்றனர். அன்னை மடியாக உணர்கிறாள். புலியைத் துன்புறுத்துகின்றனர்.

காலையில் கங்கையை மன்னர் கடப்பதற்காக இரவுப் பயணம் மேற்கொள்கின்றனர். தேவி மறுக்கிறாள். அக்கா, அன்னை போன்ற அனைத்து உறவுகளும் எனக்கு இங்கே இருக்கின்றனர் என்கிறாள். பச்சை மரத்தில் இலைகள் அணிந்த மரத்தின்கீழ் தங்கச் சொல்கின்றனர். கானகம் என்னுடையது என் அன்னை மடி. நான் எங்கும் திரிவேன் என்று அனைத்தையும் மறுக்கிறாள். மான் குட்டியின் மெல்லோசைகளை கவனிக்கிறாள். மான் குட்டிகளைக் கையில் பற்றி அழைக்கிறாள். மரத்தின் அடியில் வேர்களில் தங்கி கால்களை நதியில் நனைக்கிறாள். மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. கரடியைக் காண்கிறாள். எறும்புகளையும், குரங்குகளையும் காண்கிறாள்.

வட்டத்தைச் சுற்றி அதற்கு அவளை இருக்கப் பணிக்கின்றனர். அவளுக்கு அச்செயல் பிடிக்கவில்லை. மன்னர் மீது கோபம் கொள்கிறாள். அகலிகையை நினைவுக்குக் கொணருகிறாள். கங்கைக் கரையின் திசை தெரியாத இடத்தில் இருக்கிறாள். தத்தம்மா பல்லக்கில் அவள் செல்கிறாள். அக்குழந்தை மழலைப் பேசுகிறது. மழலை அவளுக்குப் புரியவில்லை. இருப்பினும் ரசிக்கிறாள். சுவாமியைச் சந்திக்கிறாள். வேடர் குடிகளைச் சந்திக்கிறாள். யானைக் கூட்டங்கள் தங்கள் குழந்தைகளுடன் செல்கின்றன. விலங்குகளைத் தந்திரமாகப் பிடிக்கும் மனிதர்கள் கொடியவர்கள் என்று உணருகிறாள். யானைகளோ வேறு விலங்குகளோ வனங்களை அழிக்காது. ஆனால்

விலங்குகள் அழிக்கும். மனிதர்கள் செய்யும் தலையாய பாவம் இத்தகைய பிராணிகளை அடிமையாக்குவது தான். சுவாமிகள் யானையைத் தொடச் செய்கிறார். நந்தமுனி ஆற்றில் முகர்ந்து துடைக்கிறார். புளிப்பும் இனிப்புமான கனிகளை அவள் உண்ணக் கொடுக்கிறார். யானைகள் ஆற்றில் இறங்கிச் செல்கின்றன.

சம்பூகன் மிதுனாபுரியைச் சேர்ந்த வணிகன் வீட்டு வாயிலில் குழந்தையாகக் கிடக்கிறான். இவனைச் சத்திய முனி தளர்நடைப் பருவத்தில் கொண்டு வந்தார். யாரோ அந்தணர் பார்த்து, இந்தப் பிள்ளை முற்பிறவியில் பலரைக் கொன்று பாவத்தின் பயனாக வந்திருக்கிறான். இவனை உங்கள் வீட்டில் ஏற்றால் நாசம் வரும் என்றாராம். சத்திய முனிவர் எடுத்து வந்தார். வந்த புதிதில் பேச்சு வராது. செய்கையாகவே உலகம் அறிந்தான். இப்போதும் மிகவும் குறைவாகவே பேசுவான்.

விளைநிலங்களுக்குக் குலமேது? அது உயிர்களைப் பிறப்பித்து, வித்துக்கு வீரியம் அளிக்கிறது. அனைத்து மலங்களையும் உட்கொண்டு மேலும் மேலும் புனிதமாகிறது. புனிதமாகும். புனிதமாக்கும் மாட்சிமை உடையது. அதுவே முழு முதற்குலம். குலங்களை விளைநிலம் தோற்றுவிப்பதில்லை. பேராசை தோற்றுவிக்கிறது. காமம், குரோதம், லோபம் ஆகிய புன்மைக் குணங்கள் தோற்றுவிக்கின்றன. இந்தப் புன்மைக் குணங்களால் ஆண் விளைநிலத்தை அரவணைக்காமல் ஆக்கிரமித்தான். சுயநலங்களும் பேராசையும் இரண்களரியும் இரத்தம் பெருகும் கொடுமைகளும் விளையக் காரணமாகின்றன.

இவனுடைய நெஞ்சின் அலைகளை நாதமாக்கிய பிள்ளை சம்பூகன். அந்த சடாமகுட குல குருக்களைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்த குரு.

அவள் கண்கள் பசைக்கின்றன. சம்பூகன் மூலிகை கொண்டு வந்து காயத்தில் வைக்கிறான்.

மாதுலன் இசை பொழிகிறான். மறுநாளே கரும்பறவை தெம்புடன் தலைநிமிர்த்தி, சிறகடித்துப் பறக்க முயற்சி செய்கிறது. அந்த நாய்க்குட்டி, தத்தித் தத்தி, விளையாடுகிறது. ஒடிந்த காலும், கடிபட்ட கழுத்தும் இன்னும் முழுதுமாகத் தேறவில்லை.

லூ வருகிறாள். “வனதேவி! இந்தக் குட்டியை இங்கு யார் கொண்டு வந்தார்கள்?.”

“ஏனம்மா? சம்பூகன்தான், பாவம் கடிபட்ட இந்தக் குட்டியைக் கொண்டு வந்திருக்கிறான். நாய்தானே இது? இந்தப் பறவை பார், இது கூடப் பறக்க முயற்சி செய்கிறது. மாதுலனின் குழலோசையில் நோயும் துன்பமும் ரணமும் கூடக் குணமாகிறது. லூ!”

“அது சரி, ஆனால் இது வெறும் நாயல்ல. ஒநாய். இதற்குக் கருணை காட்டுவது சரியல்ல. இது பெரிசானா பிள்ளைகளைக் கவ்விட்டுப் போகும் ஏய்! அத்த முதல்ல கொண்டு ஆத்தோடு போட்டுட்டுவா இல்லாட்டி மூங்கிக் காட்டுக்கு அப்பால் தூக்கி ஏறி!”

பூமகளுக்கு தன் சிறுமிப்பருவத்தில் அரக்கர் வேறு உருவம் எடுத்துப் பிள்ளைகளைத் துக்கிச் சென்று தின்பார்கள் என்று கேட்ட செய்தி நினைவில் வருகிறது. அதே அறியாமை, தன் பிள்ளைகளுக்கு ஏதேனும் தீங்கு வருமோ என்ற அச்சமாக அவள் தெளிவை மறைக்கிறது.

“ஆமாம் சம்பூகா! அதனதன் இனம் முதிர்ந்ததும் அதன் வாசனையைக் காட்டும். நாய்தான் நாம் வளர்க்கிறோம். அது நன்றி காட்டுகிறது. மந்தைகளுக்குக் காவலாக இருக்கிறது. இது அப்படியிருந்தால். இருக்குமா?"

“எனக்கு அந்தக் குதிரையில் ஏறி இந்தப் பூமண்டலம் முழுதும் ஒரு சுற்று சுற்றி வரவேண்டும் என்று தோன்றுகிறது.” என்று விஜயன் வழியில் பட்ட கருப்பந்தடிகளை உடைத்துக் கொண்டு கூறுகிறான்.

கரும்புத் துண்டுகள் கடிபடுவது போல், குதிரை பற்றிய கற்பனைகளும் சுவைக்கப்படுகின்றன. “ஒருகால் மாயன் சொன் னாற்போல் அது பறந்து அக்கரை போய்விட்டிருக்கும்!”

“அதெல்லாமில்லை, இவர்கள் அப்படியே துங்கி, கனவு கண்டிருப்பார்கள். குதிரை துரத்தி வருவதாக நினைத்துத் தேனெடுக்காமல் ஓடி வந்திருப்பார்கள்!”

‘இல்லை அஜயா? நாங்கள் இரண்டு கண்களாலும் பார்த்தோம்! அது உதைத்ததில் எனக்குப் பாரும், காயத்தை’

ஒரு கால் இங்கே வரவேற்பு இருக்காது என்று ஆற்றின் மேல் பறந்து அது மிதுனபுரிப் பக்கம் போயிருக்கும்!”

“அங்கே தமனகனோ, சரபனோ உள்ளே விடாமல் கோட்டைக் கதவுகளை அடைத்திருப்பார்கள். அது அவ்வளவு உயரக்கோட்டைச்சுவர் மேல் பறக்க முடியுமா?. அப்படி உள்ளே போனால், தேவதைக்குப் பலியாகும்!” நந்த முனி ஒற்றை நாண் அதிரும்படி மீட்டுகிறார்.

“பிள்ளைகளே, இந்தக் குதிரைப் பேச்சைவிட்டு இப்போது எல்லோரும் பாடிக்கொண்டே நம் இருப்பிடம் போகலாம்! இந்தக் காட்டுக்கு எத்தனையோ பேர் நமக்கு நண்பர்களாக

வருகிறார்கள். அப்படி அதுவும் வந்து விட்டுப் போகட்டுமே?. பாடுங்கள். அவர் ஒற்றை நாணை மீட்கிறார்.

**“வனதேவி பெற்ற மைந்தர்கள் யாம். அவள் மடியில் நாங்கள் வாழ்கின்றோம்”** ஏற்றமும் இறக்கமுமாகக் குரல்கள் ஒலிக்கின்றன.

**ராணி மாதா** சகல கலைகளிலும் வல்லவர் பதினான்கு ஆணடுகள் தாங்கள் கானகத்தில் இருந்த காலத்து மன்னர் வர்க்கத்தினரால் கசக்கி எறியப்பட்டு அந்தப்புற அறைகளில் சிறையிருந்த அத்தனை பெண்களுக்கும் வெளிச்சமும் வாழ்வும் கொடுக்க கலைகள் பயிற்றுவித்தவர். பெற்ற மகனாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்ட அபாக்கியவதி. அரண்மனைப் பணிப்பெண்கள் கஞ்சுகம் அணியவும், மேலாடை அணியும் பழக்கத்தை ஏற்படுத்தியவள். மந்தரை எடுத்து வளர்த்தவள். மகாராணி மாதா மகன் இந்த மாளிக்கைக்கு வர வேண்டாம் என்று நினைக்கிறாளோ? ஊர்மிலை நினைத்து புலம்பிய போது அவளை மடியில் கிடத்தித் தேற்றுகிறாள். தேவிக்கு வசந்த விழா ஏற்பாடு செய்கிறாள். வனவிருந்து ஏற்பாடு செய்கிறாள்.

**பணிப்பெண் பூமகள்,** உணவு தயாரிப்பதற்காக சிறப்பாக பணிக்கப்பட்டவள். நாவுக்கு ஆரோக்கியம் தரக் கூடிய உணவுகளை எளிதில் கண்டு கொள்பவள். அரக்கர்கோனின் அந்தப்புரத் தோட்டத்தில் அவள் நெருப்பு வளையத்துள் சிறையிருந்தவள். **ஊர்மிலை,** வேட்டுவப் பெண். நரமாமிசம் உண்பவள். அழகு வாய்ந்தவள். இளம் பெண்களிடம் ஏதாவதொன்றைக் கொடுத்துக் காட்டிற்கு அழைத்துச் செல்பவள். தேவியைக் கானகத்தில்

விளையாட அழைத்துச் சென்ற போதுதான் அரக்கர் கோன் அவளைக் கவர்ந்து சென்றான்.

**அவந்திகா** முதல்நிலைப் பணிப்பெண். அவளும் எடுத்து வளர்க்கப்பட்டவள். விமலை, விசயை, நந்தினி பணிப்பெண்கள் அடிமைகள் கழுத்தில் சங்குமாலைகள், சிப்பிகள், மணிகளில் செய்த அணிகலன் அணிவர்.

**கீழ்வரும் உரையாடல்கள் நாவலின் உயிரோட்டத்தைக் காட்டுகின்றன:**

ஒடுகிறது. அசோகமரத்தடியில்தான் அன்னை இருக்கிறார் போலும்!

பேச்சுக் குரல் கேட்கிறது.

மெல்லிய இழையைச் சுண்டினால் ஏற்படும் அதிர்வுகள் போல் அதிர்வுகள்.

“தாங்கள் யாருக்கும் எதுவும் தெரிவிக்காமல் தனியே வரலாமா? தங்கள் விருப்பம் இதுவென்பதை அறிவித்திருந்தால் தக்க பாதுகாப்புடன் கூட்டிக்கொண்டு வந்திருப்போமே, தாயே!”

இவர். குரலுக்குரியவர். இளையவர்.

“ஆமாமப்பா பாதுகாப்பாக வனத்தில் கொண்டு வந்துவிடுவதில் அநுபவம் வாய்ந்த பிள்ளையாயிற்றே!. இப்போது என்னைத் தேடி இங்கு வர, உன் தமையன், சக்கரவர்த்தி ஆணையிட்டானா?.”

“மன்னிக்க வேண்டும் தாயே! தமையனாரும் இங்கு வந்துள்ளார்: அக்கரையில் இருக்கிறார்.”

பூமகளுக்கு உடல் முழுவதும் குப்பென்று வெம்மை பரவுகிறது. கையில் பற்றியுள்ள முறம் நழுவுகிறது.

அவர் வந்திருக்கிறாரா? எதற்கு எதற்கு?

வில்லும் அம்புமாய், யாகக்குதிரையை மீட்டுச் சென்று யாகத்தை நிறைவேற்ற வந்திருக்கிறாரா? குலகுரு, குலமில்லாத குரு என்று தர்மசாத்திரங்கள் அனுப்பி வைத்திருக்கின்றனவா?

ராணிமாதாவின் வினாக்களை ஏந்த அவள் செவி மடல்கள் சித்தமாகின்றன.

“ஏனப்பா? யாகக் குதிரை யாகம் வேண்டாம் என்று அடைக்கலம் புகுந்திருப்பதை அறிந்து அதைப் பற்றிச் செல்ல வந்தீர்களா? அது யாகக் குதிரையுமில்லை; போகக் குதிரையு மில்லை. எந்தப் பொற்பிரதிமை பட்ட மகிஷியையும் அது மகிழ்விக்காது!”

“அவந்திகா, மன்னர் ஏன் முன்போல் இங்கே வருவதில்லை? அப்படி என்ன அரசாங்க அலுவல்கள்?

“பெண்களாகிய எமக்கென்ன தெரியும்?... தேவி, இரண்டே கவளம்தான் உணவு கொண்டிருக்கிறீர்கள். உடல் வெளுத்து, இளைத்து விட்டது. ராணி மாதா எங்களைத்தாம் குறை சொல்வார்கள்...”

பூமகள் தன் மனச்சுமையை எப்படி வெளியிடுவாள்? அரக்கர்கோனின் அந்தப்புரத்தோட்டத்தில் அவள் நெருப்பு வளையத்துள் சிறையிருந்தபோதுகூட, இத்துணை மனச்சுமை இருக்கவில்லை போல் தோன்றுகிறது. இந்நாட்களில் மிக அதிகமாக ஒரு வெறுமை அவளை ஆட் கொண்டிருக்கிறது. இத்தனை வசதிகளும்

பணியாளரும், தன்னை அன்னைக்கு அன்னைபோல் மடியிலிருந்து, மார்புப்பால் கொடுத்து வளர்த்த செவிலியும்கூட உணர்ந்து கொள்ள முடியாத, பகிர்ந்து கொள்ள முடியாத சுமையாகக் கனக்கிறது.

அவளை உணவு கொண்ட களைப்புத்தீர, மஞ்சத்தில் இருத்துகிறாள் அவந்திகா. நந்தினி மயில்தோகை விசிறியுடன் வருகிறாள்.

இதை மென்மையாக மேனியில் தடவும்போது உறக்கம் வரும்; மன அமைதி கிட்டும் என்பது அவந்திகாவின் அநுமானம்.

அப்போது, வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு விமலை ஒடி வருகிறாள். நந்தினி விசிறியை வைத்துவிட்டு, உமிழும் எச்சிற் தம்பலத்தைக் கொண்டு வருகிறாள்.

“ஓ! எனக்குத்தான் எத்தனை மறதி, தேவி! வெற்றிலை மடித்துக் கொடுக்கும் நினைவே இல்லை...”

அவந்திகா தன்னையே கடிந்து கொண்டு, வெற்றிலைகளை எடுத்துத் துடைத்து, வாசனைப் பொருட்கள் சுண்ணம் சேர்த்து, மடித்து அவளிடம் தருகிறாள். அவள் மனதில்,அந்த ஆலமரத்து மேடையில், அவள் புக்ககம் வந்த புதிதில், மருட்சியை நீக்கும் வகையில் மென்மையாகச் சரசமாடியதும், வெற்றிலை மடித்துத் தந்ததும் நினைவுக்கு வருகிறது.

## அலகு – 4

# முருகன் அல்லது அழகு

**திரு.வி.கல்யாண சுந்தரனார்**

தமிழ்த் தென்றல் என்றும் இராயப் பேட்டை முனிவர் என்றும் பெருமையோடும், சிறப்போடும் மதிக்கப்பட்டவர் திரு.வி. கல்யாண சுந்தரனார். பள்ளித் தமிழாசிரியராய் இருந்து, அதை விட்டு விலகி தேசபக்தன், நவசக்தி பத்திரிக்கைகளில் ஆசிரியராய் இருந்த போது தமிழ்மொழித் தொண்டாற்றினார். தலையங்கங்களில் தமிழில் சொல்லமுடியாதப் பொருளே இல்லை என்பதை நிரூபித்துக் காட்டினார். திரு.வி.க எழுதிய பலநூல்களில் மிகவும் சிறப்புப் பெற்ற நூல் முருகன் அல்லது அழகு என்று சொன்னால் அது மிகையாகாது.

முருகன் பொருளும் பொதுமையும், அழகின் இயலும் கூறும், முருகின் தொன்மை, இயற்கையின் வழி அழகைக் காண்டல், பாட்டும் ஓவியமும் இசையும் பிறவும், முருகைக் காண முனைப்பையறுத்தல், அருணகிரியாரும் பெண்ணுலகும், உறுதியும் நோன்பும், பொதுநெறியும் தமிழும், பின்னைத் திரிபுகள், இயற்கையும் முருகனும், வேண்டுகோள் ஆகிய தலைப்புகளில் முருகனின் அழகையும் திறத்தையும் குறிப்பிட்டுள்ளத் தன்மையைப் படிப்பதென்பது முருகன் மீதான கருத்துநிலைகளையும், வரலாற்றுப் புரிதலையும், முருகன் மீது தோற்றுவிக்கப்பட்டுள்ள திரிபுகளையும் அறியத்தக்கதாய் உள்ளன.

### 1. முருகன் பொருளும் பொதுமையும்

முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல். அப் பல பொருளுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன நான்கு. அவை, மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு என்பன. இயற்கை மணமும், மாறா இளமையும் எல்லாப் பொருளையும் கடந்தொளிரும் தன்மையும், அழியா அழகும் இறைவனிடத்தில் இலங்குவது கண்டு. அப்பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னும் சொல்லை, அவ் இறைவனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்குகையில் அவர்களது கூர்த்த மதி புலனாகிறது.

அப் பெயர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புப் பொருள் விளங்குகிறது. முருகன் ஒரு கூட்டத்தவர்க்குரிய கடவுள் என்று கருதுவது அறிவுடைமை ஆகாது. எக் கூட்டத்தவர் எம் மொழியால் போற்றும் எப் பொருளாயினும், அப் பொருட்கண் இறை இயல்புகள் காணப் பெறின், அதைக் கோடலே அறிவுடைமையாகும். இயற்கை மணமும் மாறா இளமையும், கடவுள் தன்மையும் அழியா அழகும் அறிவில் சிறந்த எச் சமயத்தவரும் கொள்ளும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாம். இவ்வியல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ் மக்கள் முருகன் என்று வழுத்துகிறார்கள். கடவுளை மணமுடையதாகவும், இளமையுடையதாகவும், இறைமை உடையதாகவும், அழகுடையதாகவும் எவ் எம்மொழிப் பெயரால் தொழினும், ஆண்டு எம் பெருமான் முருகன் எழுந்தருள்வான்.

## 2. அழகின் இயலும் கூறும்

மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு என்னும் நான்கு பொருளில் அழகு என்பதைக் கொள்கிறேன். அழகு உள்ள இடத்தில் ஏனைய மூன்றும் விரவி நிற்றலின் என்க. அழியா அழகில் மணமும் இளமையும் இறைமையும் கலந்து நிற்றல் இயல்பு.

அழியா அழகு எனின் அழியும் அழகென்று ஒன்று உண்டோ என்னும் ஐயம் சிலருள்ளத்தில் பிறக்கலாம். அழகின் அழியாமை நோக்கி ஈண்டு "அழியா" என்னும் அடைமொழியால் அழகைச் சிறப்பித்தன்றி, அழியும் அழகுக்கு எதிர்மறையாக அழியா என்று அழகைச் சிறப்பிக்கவில்லை.

அழகை இரு கூறுபடுத்தி அழியா அழகு, அழியும் அழகு என்று சொல்ல வேண்டுவதில்லை. அழிவதை அழகென்றும் கொள்ள வேண்டுவதில்லை. அழகுப் போலியை அழியும் அழகு என்பதும் முகமன்.

நக்கீரனால் புலமை கருதி மட்டும் அவரை ஈண்டு கொள்ள வேண்டுவதில்லை. அவர் இயற்கையில் முருகை உணர்ந்து, முருகாற்றுப்படை பாடியதில் தமது புலமை செலுத்தியவர் என்னும் தொடர்புரிமை கொண்டு, அவரை ஈண்டு கோடலே ஏற்புடைத்து. நக்கீரனால் தாமுணர்ந்த அழகைப்பொது முறையில் திருமுருகாற்றுப்டையாகப் பாடி மகிழ்ந்தார். அவ் ஆற்றுப்படைக்கண் ஓரிடத்தில் அழகின் இயல்பு இத்தகைத்தெனச் சிறப்பு முறையில் அவர் அறிவுறுத்தியிருக்கிறார். கைப்புனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு" என்று அப் புலவர் அழகியல் தெரித்துவாறு என்க.

கைபுனைந் தியற்றா இவ்வழகு அழியாத் தன்மையது. அழகு உள்பொருளா அல்லது மக்கள் உள்ளம் இயற்கையில் படியும்போது அங்கே உரு வெளியாய் தோன்றும் இல் பொருளா என்பது ஆராயத்தக்கது. அழகைப் பற்றி எண்ணாத இடமில்லை. பேசாத இடமில்லை. போற்றாத இடமில்லை. அழகின் மாட்டு உலகம் கொண்டுள்ள பற்றுப்போல வேறெதன் மாட்டும் அஃது அப்பற்றுக் கொண்டில்லை. அழகு அழகு என்றே உலகம் அழகில் உறைந்து நிற்கிறது.

புலன்கட்குப் பொருளாகாமை என்னும் ஒன்று கொண்டு, அழகிற்கு இன்மை கூறலாமோ எனின் அஃதும் அறமெனத் தோன்றவில்லை. உலகில் புலன்களுக்குப் பொருளாகும் பொருள்களுமுண்டு. பொருளாகப் பொருள்களுமுண்டு. இவைகளை முறையே பருமை (Concrete) என்றும், நுண்மை (Abstract) என்றும் உலகம் கொண்டிருக்கிறது. பருமைக்கு உண்மை கூறலும், நுண்மை இன்மை கூறலும் அறிவுடைமை அல்ல.

அறிவு, அறம், அன்பு, நீதி முதலியன புலன்களுக்கு வடிவால் காட்சி வழங்கும் பொருட்களல்ல. அறிஞன் வழி அறிவும், அறவோன் வழி அறமும், அன்பன் வழி அன்பும், நீதிமான் வழி நீதியும் உணர்விற்படுதல் ஓரற்பாற்று. இவை போன்ற பல நுண்மைகளிருக்கின்றன. இவற்றுள் அழகும் ஒன்று. அழகுடைப் பொருள் கொண்டு அழகை உணர்கிறோம். ஆகவே, அழகென்பது பருப் புலன்களுக்கு வடிவாகத் தோன்றாத நுண்ணிய உள்பொருளெனக் கொள்க.

இயற்கையினூடே அழகு நீக்கமின்ற விரவி நிற்கிறது. இயற்கை விடுத்து அழகை ஆராய்ந்துணரல் அரது. அழகின் இருப்புணர்தற்குக் கருவியாயுள்ள இயற்கையும்

அழகைப் போல உள் பொருளேயாம். இயற்கை பற்பல வடிவங்களாகத் தோன்றி தோன்றி மறையினும், அதன் முதல் கேடுறுவ தில்லை.

அழியாது கிடக்கும் இயற்கை முதலுக்கு அடிப்படையாக நிலவுவது அழகாகும். அழகினின்று அரும்பி மலர்ந்து காட்சியளிப்பது இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம். அழகோ புலன்கட்டுப் பொருளாகாது. அஃது உயிர்கட்குப் புரிந்துவரூஉந் துணையோ அளவில் அடங்காதது. அழகு புலன்கட்டுப் பொருளாகிறதில்லை. ஆனால் அது புலன்கட்கு விருந்தாகிறது. அழகில் தோயா புலன்கள் உரமிழந்து உலர்ந்து போகும். அழகு புறத்தே நிற்பது போல் அகத்தேயும் நிற்கிறது. புறமும் அகமும் ஒன்றும் போது அழகுணர்வு புலனாகும். அதற்குக் கருவிகளாக இருப்பனவே புலன்கள். அப் புலன்கள் அழகில் தோய்ந்ததும், ஆங்காங்குள்ள அழகு மலரினின்றும் மணம் வீசுவது போலத் தன்னின்றும் தன் ஒளி பொழியத் தொடங்குகிறது.

கை புனைத்தியற்றா இயற்கை அழகில் கருத்தைப் பதிய வைத்துள்ள ஒருவன், அதனோடு புணருந்தொறும் புணருந்தொறும் அவனுள்ளத்துள் சொலற்கரிய இன்பங் கிளர்ந்தெழும். அவ்வின்பத்தைப் பின் வந்தார் பேரின்பம் எனவும், சிற்றின்பம் எனவும் பிரித்துக் கூறினார். பண்டை நாளில் இன்பம் இன்பமாகவே பிரிவின்றிக் கிடந்தது. மக்கள் வாழ்வு, செயற்கையில் வீழ்ந்த நாள்தொட்டு, இன்பம் பேரின்பம் எனவும் சிற்றின்பம் எனவும் பிரிந்தது போலும். முன்னை நாளில் நான்காவதாகிய வீட்டின்பம் என்னும் பேரின்பம் மூன்றாவதாகிய இன்பத்தில் அடங்கியிருந்தது.

பண்டைத் தமிழ் மக்கள், இயற்கைவழி வாழ்வு செலுத்தி, அதற்கு அடிப்படையாயுள்ள அழகுண்மை கண்டு அவ் அழகால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ் இயற்கையை வழிபட்டு, முழுமுதற் பொருட்கு அழகு என்னும் பொருள் பட முருகன் என்னும் பெயரணிந்தார்கள். இயற்கை வாயிலாக முருகைக் கண்டு நுகர்ந்த இன்பத்தை அகநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்கோவையார் முதலிய நூல்களில் காணலாம். இயற்கையில் உள்ளத்தைப் பதித்து, அதனோடு ஒன்றி வாழ்ந்துவரின் இயற்கைப் பேரழகு முருகு புலனாகும்.

செம்பொன்னை உருக்கி வார்த்தாலெனக் காட்சி அளிக்கும் அந்திவான் செக்கரழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத் தணல்புனல் மணல் கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சை பசேலெனப் பெருங்காட்சி அளிக்கும் பொழில்களின் அழகும், அவை பச்சைப் பாம்பெனப் பின்னிக்கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், அவைகளினின்று அரும்பியுள்ள நகை மலரின் அழகும் மக்கள் உள்ளத்துள் இன்ப ஊற்றைத் திறப்பன.

இவ் அழகெல்லாம் திரண்ட அழகே பெண்ணழகு. பெண், மாதர் என்னும் சொற்களுக்கு அழகென்பது பொருள். பல திற இயற்கை அழகுக்கு எல்லாம் அவள் மாட்டிருத்தலால், அவளை அழகென்னும் பெண் – மாதர் என்று நந்தமிழ் மக்கள் அழைத்தார்கள். அவள் மாட்டு முகிலுண்டு. திங்களுண்டு. மலர்களுண்டு. குயிலுண்டு. மயிலுண்டு. மானுண்டு. பிறவும் உண்டு. முருகன் வடிவெல்லாம் அவள். இயற்கையின்ப நுட்பந் தெரிந்த ஒருவன் ஒரு நாளும்பெண்ணைத் துன்பப் பொருளாகக் கருதான். பெண்ணில்லாள் பாட்டாக

இருக்கிறாள். எந்தை முருகனாக இருக்கிறாள். தூய இன்பமாக இருக்கிறாள். அப் பெண் தெய்வத்தைத் தொழுகிறேன். பெண்ணெனும் தெய்வ அழகு, அறியாமை அழுக்காறு அவா முதலிய கொடுமைப் பாறையை உடைத்து, இன்ப ஊற்றைத் திறக்கும்.

ஒருவனது உடல்நலத்தை அனைத்து அழகு புலப்படுத்தும். உலகிலுள்ள உயிர்களெல்லாம் உடல் நலமுற்று இன்பந்துய்த்து வாழ்தல் வேண்டும் என்னும் பேரருளால் முருகன் இயற்கை வாயிலாக அழகை உதவுகிறான். இயற்கை வாயிலாக முருகன் புரிந்து வரும் பேருதவியை மக்களே நேரே பெறுவார்களாயின், அவர்கள் என்றும் அழியா அழகுடையவர்களாய் இருப்பார்கள். இயற்கைக்கு மாறுபட்ட வாழ்வில் மக்கள் தலைப்படலால், அவர்கள் விரைவில் அழகு குன்றி மாண்டு விடுகிறார்கள்.

இயற்கை வாழ்வு நடத்துவோர் உள்ளம், அழுக்காறு, அவா முதலிய யம தூதர்கள் உலவும் நிலமாகாது. அவர்கள் உள்ளம் அன்பு, இரக்கம் முதலிய தெய்வ கணங்கள் வாழும் நன்னிலமாகும். அழுக்காறு அவா முதலிய பேய்த் தன்மைகள் மகனை நோய்வாய்ப் படுத்தி விரையில் அவனைக் கொள்ளும். அவையில்லா அன்பு இரக்கம் முதலிய தெய்வ நீர்மைகள் ஒருவனது வாழ்வை வளர்க்கும். இதற்குரிய வழி இயற்கையழகாம். முருகை – முருகனை வழிபடுவதாகும்.

இயற்கை வாயிலாக முருகு என்னும் அழியா அழகை உணர்ந்தவர் பால் என்றும் மணமே கமழ்ந்து கொண்டிருக்கும். அவர்மீது புலால் மணம் கமழாது. அவர் மணத்துக்கென வேறு செய்கைப் பொருளைத் தேட வேண்டுவதில்லை. இயற்கை மணம் கமழப் பெறுவோர் என்றும் இளமை உடையாராயிருப்பர். இயற்கை மணம் உடல் நலனுக்குக் கேடு சூழாது.

அகவை முதிர்ந்த கிழவனும் மீண்டும் இளமை பெற விரும்புவன். இளமையில் மக்களுக்குள்ளே காதலுக்கு ஓரளவில்லை. இளமை, முருகன் கூறுகளில் ஒன்று. ஆகவே, என்றும் இளமை உடையராக வாழ விரும்புவோர் எம்பெருமான் முருகனை எப்பொழுதும் நினைத்த வண்ணமாயிருப்பர்.

முருகு என்றும் இளமையாயிருப்பதால், வினையாகிய இயற்கையும் என்றும் இளமை என்னும் வளமை குன்றாமல், ஒரு பெற்றியாய்த் தன் செயலைச் சலிப்பின்றிச் சாய்வின்றி நடத்திக் கொண்டு போகிறது.

மலைக் கிழங்கை உண்டும், காட்டுப் பழங்களைத் தின்றும், வயல் மணிகளை (தானியங்களைப்) புசித்தும், கடற் காற்றைப் பருகியும் வாழ்வோரை விரைவில் முதுமை அணுகாது. இயற்கைப் பொருள்களைத் தங்கள் விருப்பப்படி வேறு பல பொருளோடும் புலாலொடும் கலந்து அவித்துப் பதன்செய்து விலாப் புடைக்க உண்பதிலேயே பொழுது போக்கும் மாக்களை விரைவில் முதுமை அடர்ந்து வருந்தும். இயற்கை மணமும் மாறா இளமையும் உடைய ஒன்று எவ்வித மாறுதலும் எய்தாது. மாறுபாடின்றி என்றும் ஒரு பெற்றியதாயிருப்பது கடவுளியல்பு ஆகும். தோற்றம் ஒடுக்கம் என்னும் மாறுதல் தத்துவத்துக்கு உண்டு. மாறுதலில்லாக் கடவுள், தத்துவங் கடந்த தனிப் பொருளென்று. அறிவு நூல்கள் முழங்குகின்றன. இதுவே, கந்தழி என்பதாகும்.

முருகு என்னும் அழகில் மணமும் இளமையும் கடவுள் தன்மையும் ஒன்றியிருத்தல். தமிழ் பிறந்த இடமும், தமிழ் வளர்த்த குறுமுனி வாழ்ந்த இடமும், தமிழ்ச் சங்கம் மருவிய இடமும், பாண்டி நாடு என்று சொல்லப்படுகிறது. அப் பாண்டி நாட்டு மக்கள் தங்கள்

ஆலவாய் அவிர்சடைக் கடவுளைச் சொக்கன் (சொக்கன் பின்னைச் சுந்தரேசன் ஆனான்) என்னும் பெயரால் வழிபட்டார்கள்.

### 3. முருகின் தொன்மை

முருகு என்பது மிகத் தொன்மை வாய்ந்த தமிழ்ச் சொல். முருகு என்னும் முதல்நிலை அன் என்னும் ஆண்பால் இறுதிநிலை ஏற்று முருகன் ஆயிற்று. இரண்டு ஒரே பொருள் குறிப்பன. முருகே முருகன், முருகனே முருகு. ஒன்று முருகன் தமிழ்க் கடவுள் என்பது. மற்றொன்று முருகன் மலை நிலக் கடவுள் என்பது. இவ் இரண்டிலும் முருகனின் தொன்மை நனி விளங்கும். தமிழன், தமிழ்ப் பெருமான், தமிழ் இறை, முத்தமிழோன் எனவும் குறிஞ்சி நிலக் கிழவோன், மலைக் கிழவோன் எனவும்தமிழ்ப் பெரியோர் முருகனை அழைத்தனர்.

மக்கள் வாழ்வு முதல் முதல் தொடங்கப்பட்ட இடம் மலை என்பது அறிஞர் கொள்கை. மலையில் வாழ்ந்த பழைய மக்கள் தங்கள் கடவுளைக் குறிஞ்சிக் கிழான் என்று கோடல் இயல்பு. பழந்தமிழ் மக்கள் மலையிடை வாழ்ந்தபோது தங்கள் கடவுளை மலை நிலக் கடவுளாகக் கொண்டனர். மலையில் வாழ்ந்த மக்கள், பின்னைப் பிற நிலங்களில் குடிபுகுந்து, அவ்வந் நிலங்களின் இயல்புக்கேற்ப முழுமுதலுக்குப் பல்வேறு பெயரிட்டார்கள். பலவேறு பெயர்களைக் கொண்டு, கடவுளரும் பலர் என்று கோடலாகாது. நிலத்தின் இயல்பிற்கேற்ப இடப்பட்ட பெயர்கள் பலவாயினும். அவையாவும் ஒரே பொருளைக் குறித்தன. இயற்கையிலுள்ள அழகு அல்லது முருகு என்க. மக்கள் வாழ்வு என்று மலைநிலத்தில் துவங்கப்பட்டதோ, அன்று தொட்டு இன்றுவரை,

முருகன் தமிழ் நாட்டுத் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகின்றான். தமிழ்நாட்டுப் பழங்கடவுள் முருகனே.

நீண்ட கோரைப்புல் விலங்குணர்விற்கு அறிகுறி மட்டும் கடவுள் உணர்வு தோன்றியிராது. பல்லுக்கும், குடலின் உள்ளுறுப்புச் சிலவற்றிற்கும் மூளைக்கும் தொடர்புண்டு. பல் தேயும் அளவினதாக உள்ளுறுப்புகளும் தேயும். அவ் உறுப்புக்கள் தேயும் அளவினதாக மூளையின் வன்மை அருகி மென்மை பெருகும். அளவாக அறிவு விளக்கமுறும். சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்த மக்களின் உள்ளுறுப்புகட்கு, சில நூறு ஆண்டுகட்கு முன்னர் இருந்த மக்களின் உள்ளுறுப்புகட்கும் வேற்றுமையுண்டு. இப்பொழுதும் சில உள்ளுறுப்புகள் பயனின்றிக் கிடக்கின்றன.

ஆறாவது அறிவு எது? அவ் அறிவே கடவுள் உணர்வு என்பது அன்புநெறி. அவ்வறிவு விளங்கிய மக்கள், அவ்வறிவு விளங்காத மாக்களினின்றும் பிரிவுற்ற பொழுது, மக்களிடைக் கடவுள் உணர்வு அரும்பியிருத்தல் வேண்டும். அக்கடவுள் உணர்வு மக்களையும் மாக்களையும் வேறுபடுத்துவது என்க. முதல் முதல் மலையிடை வாழ்வு துவங்கிய மக்கள், காய்கறிகளைப் பசுமையாகவே உண்டிருத்தல் வேண்டும். அவர்கள் முருகனுக்குத் தேனும் தினையும் வைத்து வழிபட்டதை அன்பர்கட்கு நினைவூட்டுகிறேன். மன்பதைக்குள் மாக்கள் மக்கள் வேற்றுமை புலனாய்க் கடவுள் உணர்வு பெற்ற போதும், மக்கள் காய்கறிகளைப் பசுமையாகவே புசித்திருந்தார்கள் என்று ஊகித்துணரலாம்.

முருகென்னும் சொல் வழக்குக் காலத்தைக் காண்டலே அரிதாயிருந்தது. அங்ஙனமாக, அச்சொற்பொருள் காலத்தை ஆராயப் புகுவது அறியாமையாகவே முடியும். இவ்

ஆராய்ச்சியில் தலைப்பட வேண்டுவதில்லை. முருகென்னும் செம்பொருள் கால எல்லைக்கு உட்பட்டதன்று என்று கொள்வதே அறிவுடைமை. முருகன் காலம் கடந்த கடவுள், இயற்கை என்று உண்டோ, அன்று முதல் முருகனும் உளன். இயற்கை அநாதி. முருகனும் அநாதி.

### 4. இயற்கைவழி அழகைக் காண்டல்

முருகனின் இயல்புகள் இயற்கையாய் அமைந்து கிடத்தற்குப் பொருளுண்டு. உயிர்களும் அந்நிலை எய்தல் வேண்டும் என்பது முருகன் திருவுள்ளக் கிடக்கை. இயற்கைக்கும் முருகனுக்குமுள்ள தொடர்பைப் போல் முருகனுக்கும் உயர்கட்குந் தொடர்புண்டு. இத் தொடர்பை உணர வேண்டுவது உயிர்களின் கடமை. முருகனோ உயிர்களைத் தன்னைப் போலாக்க ஆவல் கொண்டு நிற்கிறான். அவ் ஆவலன்றி வேறு ஆவல் அவனுக்கில்லை. அவ் ஆவலுடன் எப்பொழுதும் முருகன் இயற்கை வாயிலாக உயிர்கட்குத் துணை புரிந்தும் வருகிறான். ஞாயிறு, காற்று, புனல் முதலிய இயற்கைப் பொருட்களின் வாயிலாக முருகன் உயிர்களைப் பாதுகாக்கும் தொழில் புரிகிறான்.

இயற்கையினுடையது என்று கருதுவோர், இளமை, மணம், கடவுள் தன்மை, அழகு ஆகியவற்றைப் பெறல் அரிது. இயற்கை வாயிலாக முருகனுடைமையாய் அத்துணை பெறுவதை உணர்வோர் முருகனாகலாம். அதாவது அவனது இயல்புகளைப் பெறலாம். முருகனை எண்ணும் போதெல்லாம் அவன் மணமுடையான், இளமையுடையான், கடவுள் தன்மை உடையான், அழகுடையான் என்று நிலைத்தல் வேண்டும். அந்நினைவு கூடுதற்குப் புறத்தே அவ் இயல்புகளுடைய இயற்கைப் பொருள்கள் மீது கருத்தைப் பதிய

வைத்தல் வேண்டும். அகத்தில் ஒன்று நிலை பெறுதற்கு அதன் தொடர்பாயுள்ள புறமும் அதனுடன் ஒன்றுதல் வேண்டும்.

அகத்தில் வாயிலாகப் புறத்திற்கு புகுதல் ஒருமுறை. புறத்தின் வாயிலாக அகத்தை அணைவது இன்னொரு முறை. இரண்டனுள் முன்னையது மிக அரியது. இடர்பாடுடையது. முடிவு காண்டல் என்னும் உறுதியும் கூட்டாதது. பின்னையதோ எளியது. இயற்கையில் இயங்குவது. உறுதி கூட்டுவது. முருகன் குணங்குறி கடந்த ஒருவனாயினும், இயற்கை அவனுக்கு உடலாக அமைந்திருக்கிறது. அவ் உடல்வழி உயிராம் முருகை உணர்தல் கூடும். ஆகவே, முருகை உணர விரும்புவோர் இயற்கையைப் பற்று கோடாகக் கோடல் வேண்டும். கொள்ளின், முருகை இயற்கை உணர்த்தும். உயிர்கள் இயற்கையோடும் உறவு கொள்ளும் அளவினதாக, அவைகளின் மாட்டும் முருகன் உணர்வும் பெருக்கெடுக்கும்.

காண்பனவெல்லாம் காட்சியாகா. அங்ஙனே வாழ்வெல்லாம் வாழ்வாகா. புலன்களைத் தீய வழியில் செலுத்திக் கொண்டு, இயற்கையை ஓரோவழிக் காண்டலும், அதனுடன் வாழ்தலும் முறையே அதைக் காண்பதுமாகாது. அதனோடு வாழ்வதுமாகாது. முருகை இயற்கை உணர்த்தும் என்னும் உறுதியோடு, புலன்களை இயற்கைக்கு மாறுபட்ட நெறிகளில் தோயவிடாது, அவைகளை இயற்கையில் நிலைபெறுத்தி, இயற்கையுடன் கலந்த உறவு கொள்ளப் பயிலல் வேண்டும். இறையை உணர்தற்குப் புலன்களை அடக்குமாறு ஆன்றோர் அறிவுறுத்தி இருப்ப, நீவிர் அப்புலன்களைத் தூய்மைப்படுத்துங்கள் என்று நவில்கிறீர். புலன்களை அடக்காது ஆடவிடுதலால் நலன்

விளையும் கொல் என்று சிலர் வினவலாம். சின்னாளாகப் புலனடக்கம் என்னும் சொற்றொடர் தனக்குரிய பொருளிழந்து நிற்கிறது. புலனடக்கம் என்பதற்குப் புலனை ஒடுக்கி அழித்தல் என்னும் பொருள் சொல்லப்படுகிறது.

யோகம், யோகம் என்று சில்லோர் புலன்களை ஒடுக்கி ஒடுக்கி முடிவில் அவைகளைக் கெடுத்துக் குருடராய்ச், செவிடராய், நோயராய் மாள்கிறார். புலன் கெட்ட ஒன்று அறிவற்ற பொருளாதல் வெள்ளிடைமலை. புலனடக்கம் என்பதற்கு ஆன்றோர் கொண்ட கருத்தை உணர்தல் வேண்டும். அன்னார் புலன்களைக் கொழுத்தொழிக்குமாறு ஒருபோதும் அறிவுறுத்தினாரில்லை. புலனடக்கத்தைப் பிறழக் கொண்டு, புலன்களைக் கெடுத்து, உலகம் இடர்ப்படப் போகிறதென்று அஞ்சி, யோகநெறியில் தேர்ச்சி பெற்ற திருமூலனார்,

"அஞ்சுகம் அடக்கடக் கென்பார் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதனம் ஆகுமென்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே"

என்று கூறிப் போந்தார்.

புலன்களைத் தீய வழியில் செல்லாதவாறு காத்தலே புலனடக்கம் என்பது புலன்களைக் கெடுத்தல் என்பதன்று. நாவடக்கம் – வாயடக்கம் – கையடக்கம் என்னும் வழக்குகளை நோக்குக. ஒன்றையும் தின்னாதே. பேசாதே, செய்யாதே என்று முறையாகப் பொருள் கொள்ளலாம் போலும். பொருந்திய உணவை அளவாக உண். தீயவற்றையும் பயனில் சொற்களையும் பேசாது வாய்மையைப் பேசு. பிறர் பொருள் கவரல் முதலியவற்றைச்

செய்யாது நல்லனவற்றைச் செய் என்று அவ் வழக்குத் தொடர்க்குப் பொருள் கூறல் மரபு. அங்ஙனே புலனடக்கம் என்பதற்கும் பொருள் கோடல் வேண்டும். புலனடக்கம் என்பது புலன் அழிவைக் குறிப்பதன்று. இறைவன் காண்டற்கு அரியன். மாற்ற மனம் கடந்து நிற்கும் மறையோன். அவனை உணர்தற்கு அவன் உடலாகவுள்ள இயற்கையைப் பற்றல் வேண்டும். இயற்கை வேறு, தான் வேறு என்று பிரித்துக் கூறுதற்கு இடமின்றி, இரண்டும் ஒன்றே என்று சொல்லத் தக்கவாறு நிற்கும் அழகு அல்லது முருகாகும்.

அழகின் கவர்ச்சிக்கு எளிமையாகும் இயல்பு புலன்கட்கு உண்டு. இடையிடையே பேயின் தூண்டுதலுக்கு இரையாகும். இயல்பும் அவைகட்கு உண்டு. இதனால் புலன்களின் இயல்புக்குத் தகைவு நேர்கிறது. தகைவு புலன்களின் செயற்கை நீர்மையின்றி இயற்கை நீர்மையன்று. செயற்கைத் தடையை மக்கள் அறிவால் விலக்கின், புலன்கள் தங்கள் இயற்கைத் தன்மைப்படி அழகின் கவர்ச்சிக்கு எளியனவாகும். இவ்வாறு எளிமையாதலே புலன்களின் பொருத்திய இயல்பாகும். இயற்கையை எண்ணி எண்ணிப் புலன்களை இயற்கை வழிச் செலுத்தி இன்பம் நுகர்கிறவனே புலவன். அப் புலவனுடைய புலன்களும் புந்தியும் இயற்கையில் தோய்ந்து ஒன்றுபடலானும், அவ் ஒற்றுமை அகப்புற வேற்றுமை உணர்வைக் களைதலானும், அவன் இயற்கை அன்னையின் மகனாகிறான். இயற்கையிலுள்ள அழகெனும் அப்பன் அவனைத் தன் வண்ணமாக்குகிறான். அம் மகனைப் பிணி மூப்பு சாக்காடுமு அணுகா. அவன் அழியா அழகனாகிறான்.

தன்னால் அழகுடையதெனக் கருதப்படும் ஒன்றை ஒருமையுளம் கொண்டு வழிபட்டு வரூஉம் ஒருவன் நாளடைவில் அழகை யாண்டும் காணப்பெறுவன. அவனுக்கு இயற்கை

உலகமே முருகனாக விளங்கும். அந் நிலை எய்திய ஒருவனிடம் முருகன் இயல்புகளாகிய மணமும் இளமையும் கடவுள் தன்மையும் அழகும் பதிதலால் அவன் முருகனாகிறான்.

### 5. பாட்டும் ஓவியமும் இசையும் பிறவும்

இயற்கை அழகை உணரும் பேறு பெறுதல் எளிதன்று. அரிதில் முயன்று அப் பேறு பெற்ற ஒருவன் எக் காரணம் பற்றியும் அதை இழத்தலாகாது. அப் பேற்றிற்கு இடர் விளைக்கப் பலதிறப் பேய்களிருக்கின்றன. அப் பேய்களின் சூழ்ச்சி எளிமையாய் இரையாகாதவாறு மகன் தன்னைக் காத்துக் கொள்வதே அறிவுடைமை. ஒன்றை இடையீடின்றி நினைந்து கொண்டிருக்கும் இயல்பு மிகச் சிலர்க்கே அமைவதுண்டு. இயற்கை நினைவினின்றும் பிரியாதவாறு தம்மைக் காக்கவல்ல முயற்சிகளில் இவர் தலைப்படுதல் சிறப்பு. ஒன்று பாட்டு. மற்றொன்று ஓவியம். இன்னொன்று இசை.

இயற்கையே பாட்டு. இயற்கை பாட்டெனில் அதன் உள்ளுறையாக உள்ள முருகு அல்லது அழகும் பாட்டாகும். இயற்கையை உள்ளவாறு எழுத்தால் அணிபெற வரைவதும் பாட்டே. இப் பாட்டை இயற்கையின் படம் என்று சொல்லலாம். இயற்கை எப் பொருளை உளத்தில் பதிக்கிறதோ, அப் பொருளையே அதன் படமாக உள்ள பாட்டும் பதித்தல் வேண்டும். அங்ஙனம் பதிவிதியாதது பாட்டன்று. குருமணி உறைந்து உருண்டு திரண்டாலென இருள் சூழ்ந்த கொண்டல் முடியும். செஞ்ஞாயிற்றின் எழுகதிர் உமிழும் இளவெயிலில் ஒன்றி அழகு காட்டும் பச்சைப் பசுங்காட்டுப் போர்வையும், மணி கொழித்து முழவார்த்துச் சங்கொலிக்கும் அருவி அணியும், வண்டு யாழ் மூரலும், குயில்

பாட்டும், மஞ்ஞை ஆட்டும் கொண்ட ஒரு மால்வரை நிற்கிறது. அவ் வரையை எழுத்தால் ஓவியமாக ஒரு புலவன் வரைந்த பாட்டு மற்றோரிடத்தில் பொலிகிறது.

புறத்தே இயற்கையைப் காண்போன் எத்தகைய இன்பத்தை நுகர்கிறானோ, அத்தகைய இன்பத்தை அவ் இயற்கைப் பாட்டை ஓரிடத்திலிருந்து படிப்போனும் நுகர்தல் வேண்டும். இத் தன்மை வாய்ந்த ஒன்றே பாட்டாகும். புலன்களை இயற்கை வழிப்படுத்தி தூய்மை செய்து, இயற்கை அழகை உள்ளத்தால் முகர்ந்து, உணர்விற்கு இன்ப விருந்தூட்டும் ஒருவனே இயற்கைப் பாட்டில் வடிக்கவல்லான். அப் புலவன் இயற்கையைப் பாட்டோவியமாக வரையும் போது அவன் புலன்களிலும் உளத்திலும், உணர்விலும், இயற்கையும், இயற்கைப் பொருளுறுப்புக்களும், கூறுபாடுகளும், இயல்புகளும், பிறவும் எவ்வாறு படிகின்றன. இயற்கையைப் பாட இயலாதார் இயற்கைப் புலவர் பாடிய பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதி, இயற்கை இன்பத்தில் திளைப்பாராக. இதுவும் முருகன் வழிபாடாகும்.

இயற்கையில் முருகு உறைகிறது. இயற்கைப் பாட்டாம் போது, அப் பாட்டிலும் முருகு உறைகிறது. பாட்டுக்களாலாக்கப் பெறும் காவியமோ முருகன் வீற்றிருந்தருளும் கோயிலாகிறது. இக் கோயில் வழிபாடு முட்டின்றி நடைபெறும் இடங்களில் மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருக்கும். முன்னைத் தமிழ்ப் பெரும் புலவரும் பாட்டுக் காவியப் பெருங்கோயில் பல அமைந்திருக்கிறார். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங் காப்பியம், பெரிய புராணம், கம்பராமாயணம், திருவிளையாடல் புராணம், காஞ்சி புராணம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலிய தமிழ்க்

கோயில்களிருக்கின்றன. ஆனால் வழிபாடு மட்டும் அருகியிருக்கிறது. அர்ச்சனை பாட்டேயாகும்.

தமிழ்ப் பெரும் இன்ப நிலையங்களுள் ஈங்குக் கலித்தொகையும் திருக்கோவையாரும் என்னுள்ளத்தைக் கவர்கின்றன. அவைகளின் எழுத்து, சொல், சீர், தளை, அடி, தொடை என்னும் ஒவ்வொன்றிலும் இயற்கை அழகும் பாட்டும் மறுவுகின்றன. அவைகளில் மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு ஆகியவை சிறப்புற அமையும். இயற்கை அழகுப் பொருளிலும் தமிழ்ப் பாக்களிலும் முருகைக் காண இயலாத சகோதரர் பொருட்டு, ஆங்காங்கே முருகப் பெருமானுக்குத் திருக்கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அத் திருக்கோயில் வழிபாட்டானும் பேறு பெறலாம்.

ஓவியம் முகிழ்த்தலும் கல்லும் மரமும் பளிங்கும் மறைகின்றன. இயற்கை நுட்பம் உணராத செயற்கை மாக்கட்குப் புலனாகும் பொருளைப் பற்றிய ஆராய்ச்சியே ஈண்டு வேண்டுவதில்லை. ஓவியத்தைக் கண்டு மகிழ்ந்து கருதக் கருத அது புலன்களுக்கு இன்பூட்டி இயற்கை அழகாம் முருகை உணர்த்துகிறது. ஓவியம் மகனைக் கவர்ந்து கொண்டே இயற்கையழகில் அவனைக் கூட்டுகிறது. ஓவியமும் கைப்புனைந்தியற்றும் ஒன்றாகலான் அதை ஈண்டு ஏற்பதென்னை என்று சில அன்பர்கள் ஐயுறலாம். ஓவியம் இயற்கை அழகின் பெற்றியை நினைப்வூட்டி உணர்த்தலானும் அஃது ஆற்றுப்படுத்தலானும், இயற்கை வழிபாட்டிற்கு அஃது ஏற்றற்குரியதே. ஓவிய உருப்பெறாத கீறல்களும் பிற கோரங்களும் புலன்களை இயற்கையுடன்

ஆற்றுப்படுத்தாமையான், அவை செயற்கையின் பாற்படுவனவாம். ஓவியமோ புலன்களை இயற்கையுடன் தொடர்புபடுத்துகிறது.

ஓவிய வழிபாடு, இயற்கை வழிபாட்டின் தொடக்க நிலையிலிருப்போர்க்கு உரியதென்று மேலே சொற்றதும் ஈண்டு கருதற்பாலது. திருக்கோயில் உள்ளிருக்கும் முருகப் பெருமான் திருவுருவம், மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு எனனும் இவைகட்கு அறிகுறி என்னும் உணர்வோடு வழிபாடு செய்தல் வேண்டும். இவ் உணர்வோடு செய்யப்படாதது கல் செம்பு வழிபாடாக முடியும். இதனால் அறியாமை நீங்காது. அழகின்ப அன்பும் தோன்றாது.

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே"

எனவரூஉம் அருணநந்தி சிவத்தின் திருவாக்கை உணர்க.

நக்கீரனார் தமது திருமுருகாற்றுப்படையுள் குன்றுதோறாடலைக் கொண்டதும் உன்னத்தக்கது. முருகன் வழிபாட்டைச் செய்கை கோயிலளவோடு நம்மவர் நிறுத்திவிடப் போகிறாரென்று அஞ்சி, நந்தமிழ்ச் சான்றோர் இயற்கைக் கோயிலாகிய மலையையுங் கோயிலெனக் கொள்ளுமாறு நமக்கு அறிவுறுத்தினார். முருகனை மலையாக வழிபடின், பின்னை அம்மலை பெரு உலகமாகி முருகன் உண்மை வடிவைப் புலப்படுத்தும்.

இசை வழிபாட்டைப் யோக வழிபாடென்றும் கூறலாம். இசையின் பயன் எதுவோ அதுவே யோகத்தின் பயனும். யோகமாவது, புலன்கள் ஒருமைப்பட்டுக் கருவி கரணக் குறும்புகளை ஒடுக்கிக் காட்டும் அமைதியில் இருமை உணர்வு கெட அறிஞர்

அகமுகத்தில் நிகழ்த்தும் ஒரு வழிபாடு. “ஒன்றியிருந்து நினைமின்கள் உந் தமக்கு ஊனமில்லை” என்றார் அப்பர்.

ஏழிசையாய் இசைப் பயனாய் என்னுடைய தோழனுமாய் என்று வன்றொண்டர் தமது தோழராம் கடவுரை வழுத்தியிருக்கிறார். இசையின் இயல்புகள் பலப்பல. அவைகளும் ஒன்று அதாவது தலையாயது பன்மையை ஒருமைப்படுத்துவது. இசையில் இன்பம் மருவுதற்கும் காரணமிதுவே. புலன்கள் ஒருமையுற்றுக் கருவி கரணங்களின் கொட்டத்தைக் குலைக்குமிடத்தில் எழுவது இசை. மற்ற இடத்தில் எழுவது வசை. இசை பாடப் புகுவோனுடைய புலன்கள் பன்மை உணர்விழந்து ஒருமை உணர்வு பெறுகின்றன. இசையைச் செவி மடுப்போனும் அந்நிலை எய்துகிறான். பொறி புலன் கருவி கரணச் சேட்டைகளினின்றும் மகனை இசை விடுதலை செய்கிறது.

இயற்கையில் இசை ஒழுங்குபட்டே நிற்கிறது. இயற்கையின் ஒழுங்கும், அதனுடன் மருவும் இசையின் ஒருங்கும் கருதற்பாலன. ஒழுங்குபட்ட வாழ்வுடையான் இயற்கைவழி நிற்பவனாகிறான். அவன் வாழ்வு இசையுடையதென்க. ஒழுங்குபட்ட வாழ்வில் ஒழுங்குபட்ட நடையில், ஒழுங்குபட்ட பேச்சில் இசை சுவைக்கும். ஒழுங்கு பற்றி நிரை நிரையே. ஒரே விதமாக நடக்கும் போர் வீரர் அணியில் இசை மணக்கும். ஒழுங்கிலா இசை வசையே ஆகும். ஒழுங்குக்கு உட்பட்டதே இசையாகும். புலன்களும் கருவி கரணங்களும் ஒழுங்குபட்ட வழி எழுவது இசை என்று மேலே கூறப்பட்டதும் ஈண்டு உன்னத்தக்கது.

வழிபாடு என்பது அவரவர் அன்பு நிலை அறிவாற்றல் முதலியவற்றைப் பொறுத்து அமைவது. அவரவர் தத்தம் நிலைக்கேற்றவாறு ஒவ்வொருவித வழிபாட்டைக் கொள்ளலாம். எல்லா வழிபாடுகளின் முடிவும் ஒன்றே என்பதை மட்டும் எவரும் மறத்தலாகாது. அவ்வழிபாடாவது இறைவனை எட்டு வடிவமாகப் போற்றுவது. அவ் எட்டாவன. நிலம், நீர், நெருப்பு, காற்று வெளி திங்கள் ஞாயிறு உயிர் என்பன. இவை ஒவ்வொன்றையும் தனித்தனி வழிபடலுமுண்டு. இவற்றை இரண்டாகவோ மூன்றாகவோ நான்காகவோ பிரித்து வழிபடலமுண்டு. எல்லாவற்றையும் சேர வைத்து வழிபடலுமுண்டு. இவ் எட்டுக்கும் அடிப்படையாக நிற்கும் அறிவுப் பிழம்பான அழகுப் பொருளொன்று.

ஞாயிறு வழிபாடு வளர வளர உள்ளத்துள் ஒளிரும் ஒளி பேரொளி கிளர்ந்தெழுதற்கு வழி ஏற்படும். ஞாயிற்றொளியும், உள்ளொளியும் ஒன்றுபடப்பட்ட, மகன் தன்னொளி என்னும் ஒன்றில் மூழ்கும் பேறு பெறுகிறான். இதுவே தன் வழிபாடு அல்லது உயிர் வழிபாடு என்பது. இவ் வழிபாடு கைவரப் பெற்ற ஒருவன் மேற்போர்ந்த பொருளெலாம் தன்னில் விளங்குவதுணர்வான். இதன் முதிர்ச்சி, அவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள பேரழகை உணரும் பெருநிலை கூட்டும். பெருநிலை வாதவூரடிகள் (மாணிக்கவாசகர்),

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே

ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

என்று விளக்குகிறார். இந்நிலை எய்தியோர்க்கு நரை, திரை, மூப்பு இல்லை. முருகன் அடியாராகிய நக்கீரர், உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு – பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு என்று திருமுருகாற்றுப்படையைத் தொடங்குகிறார். ஞாயிறு முருகனுக்கும், நீலக்கடல் மயிலுக்கும் உவமை. நீலக்கடலோரத்தில் நின்று. அந் நீலக்கடல் மீது தவந்தெழும் இளஞாயிற்றொளியில் புறம் மூழ்க அகத்தே அதை நினைந்து வரின், பெறற்கரிய பேறு பெறலாம். இளஞாயிறு திரட்டி வரும் உயிர்ப்புக்கு (Ozone) ஓர் அளவில்லை. அவ் உயிர்ப்பென்றோ மக்களை நோய்வாயினின்று காப்பது. இளமை, அழகு முதலியவற்றை ஞாயிற்றொளியும் உயிர்ப்பும் நல்குவது போல் வேறெவை நல்கும்.

எம்பெருமான் முருகனோ குணங்குறி இல்லாதவன். அவன் செஞ்ஞாயிற்றின் வாயிலாக உலகிற்கு அருள் சுரக்கிறான். காலையில் முருகன் செஞ்ஞாயிறு வடிவாக நீலக் கடலெனும் நீலமயிலில் காட்சி அளிக்கிறான். அக் காட்சி என் புலன்களை – புந்தியை – உயிரை – எல்லாவற்றையும் கவர்கிறது. அதை என்னென்று ஏழையேன் எண்ணி எழுதுவேன்.

ஞாயிற்றின் புற நுட்பமுணர்ந்து, அதை வழிபடுவோர் வழிபடுக. அதன் அகப்புற நுட்பமுணர்ந்து அதைப் போற்றோர் போற்றுக. ”உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு” என்னும்உரையின் பொருளில் முருகன் பொலிதலை உணர்ந்து அவனை உலகம் போற்றுவதாக. முருகன் உடலாக உள்ள இயற்கையின்

வழிபாட்டைப் பெற, அவ் இயற்கைக் கூறுகளில் எதையேனும் அல்லது இயற்கையுடன் ஆற்றுப்படுத்த வல்ல வேறு ஒன்றையேனும் துவக்கத்தில் கொள்ளலாம். முடிவு இயற்கை வழிபாடாதல் வேண்டும். அவ் வழிபாடு, இளமை, மணம், கடவுள் தன்மை, அழகு ஆகியவற்றை உடைய முருகனை உணர்த்தும்.

### 6. முருகைக் காண முனைப்பை அறுத்தல்

முருகு முனைப்புடையோர்க்குப் புலனாதல் அரிது. முனைப்பும், அதன் கான் முளைகளாகிய அழுக்காறு அவா வெகுளி முதலியனவும், மகனை நரை திரை மூப்பு களாக்கி, முடிவில் அவனைச் சாக்காட்டுக்கு இரையாக்குகின்றன. பெறுவதற்கரிய மக்கட் பிறவியைப் பெற்றும், அதைப் பிணி, மூப்பு, சாக்காட்டுக்கு இரையாக்குதல் அறிவுடைமையாகாது. முனைப்பு மக்களைக் கொல்லும் பெருங்காலன். இரக்கம், உறுவதாய் உணர்வதாயிருப்பது. இரக்கம், பண்பு இப்பண்பில்லை என்பது கடவுள். பண்பியின்றிப் பண்பில்லை என்பது இயற்கை அறம். பண்பையுடைய பொருள் பண்பி. பண்பாகிய இரக்கம் பெருகப் பண்பியாகிய இறையுண்மையை உணரலாம். முனைப்பும், உயிரைத் தன் பக்கம் இருத்தி வைக்கிறது. உயிரை முனைப்பினின்றும், மீட்க ஆண்டவன் அருள் புகுகிறது. இரண்டிற்கும் போர் நிகழ்கிறது. இப்போரே சூரன் போரென்க.

முனைப்பு கடவுளைப் பற்றிய உணர்வையும் எண்ணத்தையும் தகைத்து மறைக்கும் நீர்மையது. அதுவே இறப்பைத் தந்து, பிறப்பென்னும் பேதமைக்கு வித்தாக நிற்பது. ஆதலால் முனைப்பாம் அரக்கனைக் கொன்று, பிணி, மூப்பு, சாக்காடு ஒழித்து, இயற்கை

மணமும், மாறா இளமையும், கடவுள் தன்மையும், அழியா அழகுடைய முருகனைப் பெற முயலல் வேண்டும்.

யான் எனது என்னும் செறுக்கறுத்தல் வேண்டும் என்னும் ஓர் எண்ணம் எழுதலே சாலும். அவ் எண்ணம் செம்மை சேர் உள்ளத்தினின்றும் எழுவதாயிருத்தல் வேண்டும். அது முருகனருள் என்னும் காந்தத்தால் ஈர்க்கப்படும். அச் சீரிய எண்ணமுடையோரை ஆட்கொள்ள முருகன் அருளோ விரைந்து நின்று கொண்டிருக்கிறது. உய்வு பெறல் வேண்டுமெனும் வேட்கையுடன், முருகா! ஆட்கொள்க" என்று ஒரு முறை இரந்து வேண்டினும் முருகனருள் பெறலாம். முனைப்பு வளரும் நெஞ்சு கொண்டு "முருகா முருகா" என்று பலகோடி முறை கூவிக் கூவிக் கூத்தாடினாலும் முருகனருள் கூடல் அரிது. முருகனுக்கு வேண்டுவது முனைப்பிலா அன்பு உள்ளம் அன்புக்கு முருகன் மிக எளியன.

### 7. அருணகிரியாரும் பெண்ணுலகும்

அருணகிரியார் இளமையில் பெண்ணுலகின் பெருமை அறியாது அதை இழிந்த காம உலகமாகக் கொண்டு, அந் நெருப்பில் வீழ்ந்தார். பெண்ணின் பாலுள்ள இறைமை கருதாது, பெண்ணைக் காமக் கூடாகக் கருதி வீழ்வோர் பின்னை அடையும் பேறு என்னவாக இருக்கும். உறுப்புக்களை எல்லாம் வெம்மை எரிக்கும். தம்மை விட்டு நீங்கள் எரியிடை நின்று அவர் தவிப்போராவார். பெண்ணைக் காமக் கூடாகக் கருதிய பயன் இஃதாகும். அருணகிரிநாதரின் முன்னைய வாழ்வு இவ்வாறாக முடிந்தது. அருணகிரி நாதர் தாம் காம வெம்மைக் குழியில் வீழ்ந்து. பல திற நோய்களால் பீடிக்கப்பட்டதை

முன்னிட்டு முருகனை நோக்கி நிகழ்த்திய முறையீடுகள் பலப்பல அவைகளில் இரண்டொன்று வருமாறு:

".........  .......... மங்கையோரால்

துன்பமு டங்கவழி நோய்சி ரங்கொடு

சீபுழு வுஞ்சல மோடி றங்கிய

புண்குட வன்கடி யோடி ளஞ்சனி

சூலைமி குந்திட வேப றந்துடல்

துஞ்சிய மன்பதி யேபு குந்துயர்

ஆவி விடும்படி சீர்ப தம்பெறு விஞ்சை தாராய்"

ஆண்டவன் திருவருள் மக்கள் உள்ளத்தில் பதியு மட்டும் மக்கள் தவறிழைத்தல் நில்லாது. அதனால் துன்பமும் வளர்ந்து கொண்டே போகும். துன்ப வளர்ச்சியை மறிக்க வழியுண்டு. அருணகிரியார், தங்குறை உணர்ந்து அதை மன்னிதருளுமாறு குறையிலா நிறைவாக உள்ள முருகனை நோக்கி, அழுது முறையிட்ட பாக்கள் ஆயிரம் ஆயிரம்.

"பேத பேதமொ டுலகாய் வளர்வது" என்று அவர் உலகிற்கு அறிவுறுத்திய ஒரு மெய்யுரையை ஈண்டுக் குறித்தல் சாலும். இயற்கையாய் வளரும் பொருளை உணர முயலாது. இயற்கை இன்பங்களைத் துறந்து, யோகிகள் என்றும், சந்நியாசிகள் என்றும் சிலர் திரிவதை அருணகிரியார் பல இடங்களில் மறுத்து வெறுக்கிறார். அருணகிரிநாதர் இத்தகையப் போலித் துறவொழுக்கம் பூண்டாரில்லை. அவர் உலகை விடுத்து ஓடினாரில்லை. ஆனால் அவர் உண்மைத் துறவொழுக்கம் பூண்டார். அருணகிரியார் பெண்மக்களை இழித்துக் கூறியுள்ளது உண்மையே. பெண் பெண்ணாகவே இருக்கிறாள்.

அவளைப் பேயாக்குவதும் ஆடவர் உளமேயாகும். ஆதலால் ஆடவர் உள்ளத்தைத் திருத்துவதே அருணகிரியாரின் அன்பு மொழியாகும்.

பெண்ணைக் கடிதலுக்கும் பெண்ணாசை கடிதலுக்கும் வேற்றுமை உண்டு. பெண்ணைக் காமமென்னும் ஆசைப் பொருளாகக் கொள்வதொன்று பெண்ணைத் தெய்வமாகக் கோடல் இன்னொன்று. பெண்ணை ஆசைப் பொருளாகக் கருதுவது அறியாமை. அவ் அழகைக் கடவுளாகக் கருதுவது அறிவு. கீழோர் பெண்ணைக் காமப் பொருளென்று கொண்டு இடர்ப்படுவர். மேலோர் பெண்ணைத் தெய்வமென்று கொண்டு இன்புறுவர். மக்கள் நல்லறிவு பெறும் போது, பெண்ணை ஆசைப் பொருளாக எண்ணும் நெஞ்சைக் கடிதல் இயல்பு. அருணகிரியார் முன்னை வாழ்வில் பெற்ற முதுமை, நோய் நிகழ்ச்சிகளை நினைந்து, அம் முதுமை நோய் வேண்டாம் என்றும், நோயிலா வாழ்வும் இளமையும் வேண்டும் என்றும், இப்பேற்றை அருளவல்ல ஆண்டவன் இளையோன் என்றும் உலகிற்கு அறிவுத்திய பாடல்கள் மிகுதி.

இறைவன் எங்கும் இருப்பது உண்மை. அவன் எங்கும் உள்ளதை உணரும் ஒருவன் எத்தகையக் கேடும் நிகழ்ந்த ஒருப்படான். கேடு நிகழ்த்துவோர் பெரிதும் ஆண்டவன் உண்மையை எவரும் காணாதவரோயாவர். இவ் உண்மை உணர்வெனும் விளக்கை மறைத்துக் கொண்டிருக்கும் மன மாசுகள் பல. அவைகளுள் சிறந்தது பெண்ணைக் காமப் பொருளாகக் கருதுவது. இம் மாசுள்ள ஒருவன் எல்லாக் கொடுமைகட்கும் உறையுளாவன். ஆதலால் எல்லாக் கொடுமைகட்கும் தாயகமாயுள்ள இம் மாசு ஒன்றனைக் கழுவ முயல்வது மக்களின் தலையாய கடமையாகும். பெண்ணை வெறுத்துக்

காட்டுக்கோடும் போலியறத்தை யான் முற்றும் வெறுப்பவன். ஆண் பெண்ணுடனும் பெண் ஆணுடனும் வாழ்ந்து, உலக வளர்ச்சிக்குத் துணைபுரிவது இயற்கை அறமென்பது எனது கொள்கை. இயற்கை அறமாவது, ஒருத்தியும் ஒருவனும் காதல்வழி நின்று, இரண்டோர் உயிர்களை ஈன்றுப் பின்னைக் கூடல் நீத்து, உள்ளொளி காண முயல்வதாகும். காதல்நெறி விடுத்துக் காமவெறியில் புகுவோன் சாமளவும் அந் நெருப்பில் வீழ்ந்து வெந்தொழிலன்.

ஒருவன் ஒருத்தியுடன் கூடி வாழ்ந்து பிள்ளைப் பேறு பெற்ற பின்னர் அவ் ஒருத்திபால் தாய்மை மலர்கிறது. தாய்மை மலர்ந்த ஒருத்தியைத் தாயாகவே கருதல் அறிவுடைமை. தாய்மைக் கருத்து நுழையப் பெற்ற ஒருவனுக்கு நாளடைவில் அவள் மாட்டு இறைமை காய்த்துக் கனிதல் புலனாகும். அவ் உணர்வு எங்குமள்ள இறையைப் புலப்படுத்தும். பெண்ணின்பால் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் மூன்று நீர்மைகள் விளங்குதல் கருதற்பாலது.

### 8. உறுதியும் நோன்பும்

முருகனை வழிபடுவோர்க்கு முருகனிடத்து இடையறாத உறுதியிருத்தல் வேண்டும். உறுதியின்றிச் செய்யப்படும் வழிபாடுகள் போலியாகவே முடியும். கூடல் பொங்கிவரினும் மலை குலைந்து சாயினும், வானிடிந்து வீழினும் முருகன் காப்பான் என்னும் உறுதி முருகன் வழிபாட்டிற்கு அடிப்படையானது. இவ் உறுதியுடையார் விரும்பும் எல்லா நலங்களையும் பெறுவர். இன்றியமையாத அருட்செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களையும், முருகன் அவர்க்கு அளிப்பான். முருகப்பெருமான் தன்னை

வழிபடும் அன்பர்க்குத் தோன்றாத் துணையாய் நின்று செய்து வரும் பேருதவி. அவர் அடியவர்க்குத் தெரியும். உறுதியால் முருகனிடத்து எல்லாம் பெறலாம். ஒன்றனிடத்தில் உறுதி எல்லார்க்கும் உறாது. உறுதி சிலர்க்கு எளிதிலும் சிலர்க்கு அரிதிலும் உறும். சிலர்க்கோ எளிதாதல் அரிதாதல் உறுதியில்லை.

உறுதிக்கு இன்றியமையாதது ஒன்றுளது. அது அன்பாகும். எவனுக்கு எப்பொருளிடத்து அன்பு நிலைத்து முருகு எழுகிறதோ, அவனுக்கு அப்பொருளிடத்து உறுதியும் படிந்து நிலைத்து நிற்கும். ஆகவே, உறுதி அன்புடன் தொடர்புள்ளது. உறுதி தன்னைக் கொள்வோரையும், தன்னால் கொள்ளப்படுவோரையும் அல்லது கொள்ளப்படுவதையும் ஒருமைப்படுத்தும் பண்பு வாய்ந்தது. உறுதி இரட்டை உணர்வை அழிப்பது. ஓரன்பன், தன் வழிபடும் கடவுளிடத்தில் குலையாத நிலைத்த நிறைந்த உறுதிகொண்டு பழகுவனேல், அவ் உறுதி. கடவுள் திருவருளை அவனுடன் இரண்டறக் கலக்குமாறு செய்யும். அவன் கடவுளானவன் என்றும் சொல்லலாம். அவன் என்ன நினைந்து வேண்டினும் பெறுவன். செயற்கருஞ் செயல்களும் அவனால் நிகழ்த்தல் இயலும். அவன் மனம் கொள்ளின் எல்லாம் வல்ல சித்தனும் ஆதல் கூடும். உறுதிக்குள்ள அளவில்லாத வல்லமை சொல்லால் சொல்லுந் தகைய தன்று.

முருகக்கடவுள் எழுந்தருளியுள்ள திருத்தணிகை, திருப்போரூர், திருமயிலம், திருஆவினன்குடி (பழனி), திருப்பரங்குன்றம், திருச்சிலைவாய் (திருச்செந்தூர்) முதலிய திருப்பதிகளில் மக்கள் உறுதி மேலீட்டான் நிகழ்த்தும் செயல்கள் முக்கியத்துவம் பெற்றது. முருகப் பெருமான் நம்பிக்கையால் வழிபட்டு நலனடைந்தோர் வரலாறுகள் எண்ணிறந்து

கிடக்கின்றன. இன்றும் நம்பிக்கையுடையார் குறைகளை முருகன் கலைந்து வருகிறான். உறுதிக்கேற்ற அளவாகவே குறைகள் களையப்படும். உறுதியின்றி, "முருகா முருகா" என்று பல்லாண்டு போற்றினும் குறைகள் களையப்பட மாட்டா. ஆதலால் வேண்டற்பாலது உறுதி – உறுதியே. உறுதி நிலைப்பெறுதற்குப் பல திற முறைகளுண்டு. அவைகளுள் எவரும் எளிதில் ஆற்றக்கூடியன இரண்டு. ஒன்று நோன்பு. மற்றொன்று வழிபாடு. இவ் இரண்டனுள் பிற முறைகள் யாவும் அடங்கும்.

நோன்பு இயற்கையின் பாற்பட்டது. அளவோடு உணவுகொண்டு நல்வழியில் வாழ்வு நடாத்துவோரும் உடல்நலன் பெருக நோன்புகொள்ளலாம். நோன்பு உள்ளுறுப்புகளில் சேர்ந்துள்ள பழைய அழுக்குகளைத் தள்ளி, அவ் அழுக்குகளால் குவிந்த நச்சுப் பொதிகளை நீறுபடுத்தி, வெம்மையைத் தணித்து, இயற்கை வழிக் குருதியையோட்டி, நரப்புக் குலைவை ஒழுங்குபடுத்தி, உரமூட்டி, உறுதி நிலைக்கத்தக்க உள்ளம்பெறும் உடலை நல்கும். நல்லுடல் வழி மனோ உறுதியையும், உறுதிவழி அழகெனும் முருகையும் பெறலாம். நோன்பு வாரத்தொரு முறையும், திங்கட்கொரு முறையும், ஆண்டுக்கு ஆறு நாளும் கொள்வது தகுதி. உடல்நிலைக்கு ஏற்றவாறு நாட்களைக் கூட்டல் குறைத்தல் செய்து கொள்ளலாம். வாரத்துக்கொரு முறை செவ்வாய்க் கிழமை தோறும் நோன்பிருக்கலாம். திங்கட்கொரு முறை கார்த்திகை தோறும் நோன்பு கொள்ளலாம். ஆண்டுகொரு முறை ஐப்பசி சஷ்டி விரதம் அனுஷ்டிக்கலாம். இம் மூன்றும் முருகனுக்குரிய சிறந்த நோன்புகள். வேறுபல நோன்புகளையும் முறையாகக் கொண்டு ஒழுகுவோர் ஒழுக.

நோன்பு நாளுக்கு முன்னிரவில் ஒன்றும் உண்ணாது நீரருந்தல் வேண்டும். அதுமுதல் மற்றைநாள் பகல் முழுவதும், தொடர்ந்து இரவு முழுவதும், எவ்வித உணவும் கொள்ளலாகாது. வறட்சி தோன்றும்போது அடிக்கடி தூய தீம்புனல் சிறுகச் சிறுக அருந்திக் கொண்டிருத்தல் நல்லது. இல்லையேல், உள்ளுறுப்புகளில் வெம்மை மதர்ந்தெழுந்து உடலுக்குக் கேடு நிகழ்த்தும். நீர் அருந்துவதால் அடிக்கடி சிறுநீர் இழிதரும். சிறுநீரில் வெம்மையுறுமேல் நீர் அருந்துதலைச் சிறிது பெருக்கல் வேண்டும். சிறுநீர் பெய்யும் போது எரிவின்றித் தண்மை நிலவுதல் செவ்விய நோன்புக்கு அறிகுறி. இம்முறையால் உறுப்புகளைத் தண்மைப்படுத்துவது பொருந்தும். மூன்றாம் நாள் வழக்கம் போலக் காலைக்கடன்களை முடித்து உணவு கொள்ள முற்படுவது ஒழுங்கு. உணவென்று திண்ணிய பொருளை அடைத்தல் கூடாது. அவ்வாறு அடைப்பதால் உடலுக்கு நோய் நேரும். முதலில் நீர் அருந்திச் சிறிது நேரம் கடந்து நீர் மோரோ பழச்சாறோ பருகி, இன்னும் சிறுபொழுது கழித்து பாலோ கஞ்சியோ குடித்துப் பின்னை வழக்கம்போல உணவு கொள்வது நலன்.

நோன்பு வேளையில் எக் காரணம் பற்றியும், பகைமை, பொறாமை, சீற்றம் முதலியன உள்ளத்தில் எழலாகாது. அவை எழும் முயற்சிகளில் நோன்பிகள் தலைப்படலாகாது. அவை குருதியைக் கருக்கி நரம்புக்களை அரிக்கும். நோன்பு வேளையில் கொஞ்சம் அன்பில் தோய்ந்து நிற்றல் வேண்டும். முருகனை நினைத்தல், அவன் திருப்புகழை ஓதல் – கேட்டல், அவனருள் பெற்ற மெய்யடியார் வரலாறுதனைச் செவிமடுத்தல் முதலிய நல்வழிகளின் நோன்பு நாட்களைக் கழித்தல் சிறப்பு. அவரவர் தத்தம் உடல்நிலைக்கு ஏற்றவாறு இரண்டு நான் மூன்று நாள் முதல் சின்னாள் நோன்பிருக்கலாம். அளவுக்கு மீறி

நோன்பிருத்தல் கூடாது. வார நோன்பு, திங்கள் நோன்பு, ஆண்டு நோன்பு ஆகிய மூன்றையும் குறைவற நிறைவேற்றம் மக்கள், நல்லுடல் வாழ்வும் உயிர் வாழ்வும் பெறுவார்கள்.

வழிபாடாவது இயற்கையாயுள்ள எந்நெறிக்கும் மாறுபடாது வினையாற்றுவது. இயற்கைச் செந்நெறியாவது எவ்வுயிரையும் முருகனைக் கொண்டு வழிபடுவது. நோன்பு, வழிபாடு முதலிய நல்லொழுக்க முறைகள் மக்கள் வாழ்வு குலையாதவாறு காத்துவருவன. மக்கள் உடலை வளர்க்கும் வல்லமை (சக்தி) ஒன்றுண்டு. தேய்க்கும் வல்லமை (சக்தி) ஒன்றுண்டு. வளர்வு தேய்வு இல்லையேல் உயிரோடும் கூடி வாழும் உடல் வாழ்வு அற்றுப்போகும். வளர்வும் தேய்வும் இயற்கை நிகழ்ச்சி.

## 9. பொது நெறியும் தமிழும்

இயற்கையிலுள்ள முருகை முதல் முதல் கண்டவர் தமிழ் நாட்டார். முருக நுண்மை கண்டு, இயற்கை வாழ்வு செலுத்தி, நோன்பு காத்து, அழியாப் பேறு பெற்ற சித்தர்கள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு. பண்டைய நாளில் மக்கள் வாழ்வுக்குரிய அன்புத் துறைகள் உலகில் பரவியது. இப்போழு உலகிற்கு வேண்டற் பாலன நோன்பும் இயற்கை வழிபாடும். ஆண் மகனும், பெண் மகளும் இல்லறமேற்று, முருகனை வழிபட்டுச் சான்றோரை ஈன்று உலகை உய்விக்கக் கடமை படல் வேண்டும். பிள்ளைகள் பால் முருகெனும் அழகு ஒழுகல் வேண்டும்.

முருகன் வழிபாட்டிற்கு இல்லறம் இன்றியமையாதது. இல்லறம் என்பது இயற்கையறம். இவ்வறம் இழிவான சிற்றின்ப நிறைவேற்றலுக்கு ஏற்பட்டது என்று நினைப்பது

அறியாமை. இல்லறம் இளமை அழகு முதலியவற்றைக் காத்து, மக்கட்பேறு நல்கி, கடவுள் தன்மை எய்துதற்கு, இயற்கையில் இயல்பாக அமைந்து கிடக்கும் நல்லறம். இவ் அறத்துக்குரிய பெண் தெய்வத்தைப் பேயாகக் கருதுவது கொடுமை. பெண்ணோடி கூடி வாழ்ந்து, முருகனுக்குரிய நோன்பு வழிபாடுகளை முறைப்படி நிகழ்த்தி, முருகனிடத்து உறுதியை வளர்த்துப் பிணி, மூப்பு, சாக்காடு தொலைக்க முயல்வது அறிவுடைமை.

சமரச உணர்வில்லாச் சமயபேத நாட்டமுடையார் முருகனுண்மை காடண்டலரிது. முருகனைத் தொழுவோர், முருகன் எல்லாச் சமயத்தவர்க்கும் உரிய கடவுள் என்னும் பொது உணர்வு பெற்றவராயிருத்தல் வேண்டும். கடவுளர் பலர், சமயங்கள் பல என்னும் வேற்றுமை உணர்வு அவர்க்கு இருத்தல் கூடாது. வேற்றுமை உணர்வு உள்ள மட்டும் முருகனை அறிதல் இயலாது. வாதங்களையும் பேதங்களையும் கடந்து நிற்பது முருகென்னம் செம்பொருள். சமயப் போரிடுதல், பொறாமை, பகைமை, காழ்ப்பு முதலிய பேய்களை வழிபடுவதாகும். இவ்வழிபாடு, அன்புக்கடவுள் உண்மையை விளங்கச் செய்யாது. கடவுளுண்மை விளங்கப் பெற்றோர் ஒரு சமய உணர்வு அதாவது அன்பு நெறி விளங்கப்பெறுவர். (முருகனைப் பின்னே வந்த ஆரியரும் ஏற்று வழிபடலாயினர். அவர்தம் வடமொழி மறைமுடிவு சுப்ரமண்யோம் சுப்ரமணியோம் சுப்ரமணியோம் என்று முன்முறை போற்றியிருத்தலில் அறியலாம்).

முருகனுக்குரிய இயற்கை வழிபாடும் எங்கும் பெருகி வருகிறது. நோயிலா வாழ்வு பெறல் வேண்டுமென்றும், உடலின் இளமை அழகு நெகிழா வண்ணம் காத்துவரல் வேண்டுமென்றும், அதற்கு இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தல் வேண்டும்

எனவும், கவலை ஈனத்தால் நோய் நேரினும் மருந்துண்ணாது இயற்கைவழி நின்று நோய் போக்கல் வேண்டுமென்றும் ஆங்கு ஒருணர்வு தோன்றியிருக்கிறது. பண்டைத் தமிழர் இயற்கை வாழ்விலேயே தோய்ந்து கிடந்தவர். அவர் கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்தவெல்லாம் இயற்கையே. முருகன் வடிவமாகிய இயற்கையாகும்.

### 10. பின்னைத் திரிபுகள்

புலவோர் நேரே இயற்கையில் நாட்டம் கொண்டு பாடிவந்த நாட்களில் முருகன் திருநெறி செம்மையாகவே இருந்தது. பிற்றை நாட் புலவோர் இயற்கையை நாடாது. இயற்கையின் சாயலாக வரையப்பெற்ற ஓவியங்களின் நுட்பந் தேறாது. ஓவிய எடுப்புக்களையே பொருளாகக் கருதிப் பாடிய போதே, முருகன் செந்நெறியில் மாசுபடலாயிற்று. தந்திர மந்திர புராணங்கள் முதலியன. குப்பைகளைக் கொண்ர்ந்து மலைமலையாகச் செந்நெறியில் குவித்தன. இப்பொழுது முருகன் புலவர்கள் கருத்தில் அழுக்குத் தொடக்குகள் ஈர்த்துக் கொள்கின்றன. மக்கள் கருத்தில் மாறுபாடு உற்றதே யன்றி முருகன் கருத்தில் மாறுபாடு ஏற்படவில்லை. அவனுக்குத் திரிபும் இல்லை. மாசுமில்லை. மக்கள் நெறியில் அழுக்குப் படர்ந்தது.

சரித்திரி உலகில் நுழைந்து அவரவர் விரும்பியவாறு செம்மை நெறியைத் திரித்துவிட்டனர். சைவ, வைணவ, சமண, பௌத்தர்கள் பின்னாளில் அற நெறி பிறழ்ந்து ஒருவரோடொருவர் மலைத்து, போரிட்டு, ஒருவரை ஒருவர் தூற்றி எழுதிய ஏட்டுச்சுவடிகள் பல. சமயவாதிகள் முருகனை மணம் போனவாறு தூற்றியும், வைதும், இழித்தும் ஏடுகளில் கீறிவிட்டார்கள். முருகன் என்ற தமிழ்ப்பெயரைச் சமயவெறிகள் தாம்

விரும்பும் வேறுபெயர்களில் சூட்டியாவது வழிபாட்டிருக்கலாம். மாறாக, இயற்கை முதல்வனை இழிதுறையில் தாக்கிச் சிறுமைச் சுவடிகள் பல மாக்களால் எழுதப்பட்டன. சமயப் பூசல்களும் மறுப்புகளும் மலிந்து, நாட்டை எரித்த வேளையில், ஒவ்வொரு சார்பிலுஞ் சிலர் கடவுளர்க்குள் உறவு கற்பித்துக் கொண்டனர். புராண குப்பைகளைக் கிளறினால், தும்பு, தூசுகள் பறத்தல் காணலாம். அவை, அறிவுக் கண்களைக் கெடுக்கும்.

வடமொழிப் பாரதத்தில் சொல்லப்படும் முருகன் தோற்றத்துக்கும், அம்மொழி ஸ்காந்தத்தில் சொல்லப்படும் முருகன் தோற்றத்திற்கும் வேறுபாடு உள்ளது. மற்ற புராணங்களில் இன்னும் பலவாறு பேசப்பட்டுள்ளது. பரிபாடல் முருகனைப் பற்றிப் பழிப்புரை பகர்ந்திருக்கிறது. சில சிவபுராணங்கள் முருகனைச் சபித்திருக்கின்றன. இவ்வசைகளைக் கண்ட முருகப் பற்றுடையார், மறுப்புக் கூறி அவ்வச் சமயக் கடவுளரை இழித்துத் தூற்றி பழிவாங்கினர். இக்குழப்பத்துக்குப் பின் தோன்றிய அறிஞர்கள் பொய்கட்கும் புரட்டுகட்கும் நியாயம் கூறப்பட்டனர். உட்பொருள் உரைக்கத் தொடங்கினர். இரண்டையும் சேர்த்து குழம்பும் கூழும் ஆக்கினவர்கள் சிலர்.

குப்பை என்று வழங்கப்படும் ஏட்டுச் சுவடிகளில் பேர் பெற்று விளங்குவன புராணங்கள். புராணங்கள் தமிழ்நாட்டின் முதல் நூல்களல்ல. புராணம் என்னும் சொல்லே தமிழ்ச்சொல் அன்று. பின்னாளில் தமிழரும் புராணம் என்ற சொல்லை ஆட்சியில் கொணர்ந்தனர். பெரிய புராணம் என்பது தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு தனி நூல். ஒன்றிரண்டு போகத் தமிலுள்ள ஏனைய புராணங்கள் யாவும் வடமொழியிலிருந்து தமிழில் பெயர்த்துப் புலவர்களால் எழுதப்பட்டன வாகும். நல்ல நோக்கத்திற்காக எழுதப்பட்ட புராணங்களில்

இயற்கை உண்டு. பாட்டு உண்டு. ஒழுக்கம் உண்டு. அன்பு உண்டு. எல்லாம் உண்டு. சமயவெறியில் பலர், பிற சமயக் கடவுளர் நிந்தனை ஒன்றைக் குறிக்கொண்டு, போலிக் கதைகள் புனைந்து, புராணம் பாடத் தொடங்கினர். காமுகர் சிலரும் புராணம் பாடினர். போலிப் புராணங்களால் மொழிக்கும், கடவுள் நெறிக்கும் வழக்க ஒழுக்கங்கட்கும் கேடு விளைந்தது. புத்தர் ஜாதகக் கதைகள் தோன்றிய நாள்தொட்டு நமது நாட்டில் புராணங்களும் தோன்றலாயின. தத்துவ நுட்பங்களை மக்கள் எளிதில் உணருமாறு கதை வடிவாக எழுதப்பட்ட நூல்களே இப்புராணங்கள்.

புராணம் சிவனே முருகன் என்று கூறுவது ஒருபால் கிடக்க, சிவனே முருகன் – முருகன் சிவன் என்று அநுபூதிமானாகிய அருணகிரிநாதர் கூறியுள்ளார். இயற்கை முதல்வனாகிய முருகன் ஆறுமுகம் கொண்டது, வேல் தாங்கியது. சூரனைத் தடித்தது. இரு மாதரை மணந்தது முதலிய வரலாறுகளிலுள்ள உண்மைகளைக் குமார தந்திரம், கந்தபுராணம், திருப்புகழ், சுப்ரமண்ய பராக்கிரமம், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பிரபந்தங்கள் முதலியவற்றில் உள்ளன.

### 11. இயற்கையும் முருகனும்

புராண முருகன் என்றும் இயற்கை முருகன் என்றும் முருகனைப் பலபடக் கூறினால், முருகனை எப்படி எங்கே எம் முறையில் வழிபடுவது என்னும் ஐயம் சிலர்க்கு நிகழலாம். புராணத்திற் சொல்லப்படும் முருகன், இயற்கை முருகனின் இயல்புகளை வடிவ மாத்திரையான் அறிவிக்கும் முருகன். புராணத்திற் செல்லப்படும் முருகன் உருவினை முறையாக வழிபட வழிபட இயற்கை வடிவாயுள்ள முருகன் காட்சியளிப்பான். ஓர்

எல்லைக்குட்பட்ட உருவமே முருகன் என்னும உணர்வோடு வழிபாடு செய்வோர் இயற்கையின் அழகு தெரியாதவராய், முருகனின் இயல்பை உணராதவராய் வாழ்வோராவார். எங்கும் நிறைந்த அழகுப் பொருளை இவ்வுருவாக வழிபடுகிறேன் என்றும் எண்ணம்வழிபடுவோன் உள்ளத்தில் பதிந்து கிடத்தல் வேண்டும். எங்கும் நிறைந்த அழகுப் பொருளே முருகன் என்று அறிவு கூறினாலும், வடிவத்தை நினைந்து நினைந்து பழகியுள்ள நெஞ்சில் அப் பொருள் அடங்குவதில்லை. ஒன்றையும் பற்றி நில்லாது அலையும் நெஞ்சை ஒன்றிற் பொருத்தி நிறுத்தும் ஆற்றல் உருவ வழிபாட்டிற்குண்டு. உருவம் முருகனியல்பை உணர்த்துவதா யிருத்தல் வேண்டும் என்பதை மறத்தலாகாது. பொறாமை, சீற்றம், பூசல் முதலிய திரைகளை யெழுப்பி, இடர்ப்படும் மனத்தை ஒன்றுபடுத்துதற்கு உருவ வழிபாடு உறுகருவியாய் நிற்பது. உருவமே எல்லாம்என்று கொள்வோர் குறுகிய அறிவுடையவராய் ஆவர்.

இயற்கை, இறைவன் வடிவாதலால் அதைத் தெய்வப் புலவர் பாடிப் பாடி மகிழ்வர். இவ் உண்மை தெரியாதார் வெறும் பாழை வெற்றுரையால் கூறுவர். இறைவன் வடிவாய் இயற்கையைச் சிதைப்பது இறைவனைச் சிதைப்பதாகும். இயற்கைவழி முருகனை வழிபடல் என்பதனை, எவ் உயிர்க்கும் எக் காரணம் பற்றியுந் தீங்கு செய்யாமை என்று சுருங்கக் கூறலாம்.

## 12. வேண்டுகோள்

எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யா இயற்கைச் செந்நெறியில் வாழ்வு நடாத்துவோர்க்கு நாளும் கோளும் பிறவும் துணை நின்று நலமே செய்யும். செந்நெறி விடுத்து வேறு வெந்நெறி

பற்றி உழல்வோர், தாம் இடர்ப்படும் வேளையில், நாளையும் கோளையும் பிறவற்றையும் பழிப்பது வழக்கம். இவர் நன்னெறி பற்றி ஒழுகியிருந்தால் இவரை நாளும் கோளும் என்ன செய்யும்? நாளும் கோளும் பிறவும் ஆண்டவனால் படைக்கப்பட்டன.

தமிழ் மக்களே! முருகன் எல்லாப் பொருளிலும் நீக்கமற நின்று, அவைகளை அழகு செய்வதை உங்கள் முன்னோர்கள் கண்டு இன்பம் நுகர்ந்தார்கள். அவ் இன்பத்தை இப்பொழுது நீங்கள் நுகர்கிறீர்களா? முருகனுக்கு ஏராளமான கோயில்களிருக்கின்றன. அவனுக்கு இனிப் புதிய கோயில்கள் கட்டுதல் வேண்டா. எங்கும் நிறைந்துள்ள அவனுக்கு எக் கோயிலும் வேண்டா. அவன் செந்நெறியை வளர்க்கக் கழகங்கள் காணுங்கள். கல்லூரி அமையுங்கள். அறநிலையம் நிறுவுங்கள். திருப்புகழைப் பெருளுணர்ந்து ஓதுங்கள். இயற்கையிலுள்ள அவனழகை நூல்களாக எழுதுங்கள். பாட்டாகப் பாடுங்கள். போலி ஞானம் பேசி முருகனிடத்தில் அன்பை – நம்பிக்கையை – மன உறுதியைக் கெடுத்துக் கொள்ளாதேயுங்கள். முருகன் பெயரால் பிணியை ஓட்ட முயலுங்கள். உறுதிக் கொள்கையை வளருங்கள். நோன்பிருங்கள். பெண்ணைப் போற்றி இல்லறம் நடத்துங்கள். முருகன் திருவருளால் பிணி மூப்பு சாக்காடென்னும் கட்டுகளை அறுத்துக்கொள்ளுங்கள். கொள்ளின் இயற்கை மணமும், மாறா இளமையும், அழியா அழகும், கடவுள் தன்மையும் உங்கள்பால் பொலியும். பொலியும்.

# பண்பாட்டு அசைவுகள்

**– தொ.பரமசிவன்**

முனைவர் தொ.பரமசிவன் அவர்களின் ஆய்வு அழகர் கோயில் என்ற தலைப்பில் முதன்மையானது. தலபுராணத்தில் தொடங்கி சில ஐதீகங்களைப் பட்டியலிட்டு, கோயில் கட்டடத்தின் அமைப்பை விவரிப்பது என்ற தன்மையில் பிற்காலத்தில் நிகழ்த்தப்பட்டு வரும் கோயில் ஆய்வுகளில் முதன்மையானதும் முன்னோடியானதும் கூட. இலக்கியக் சான்றுகள் மட்டுமல்லாமல் நாட்டார் வழக்காறுகள், கள ஆய்வுச் செய்திகள், குடியிருப்புகளுக்கு வெளியே தனித்து நிற்கும் சமூகப் பண்பாட்டு நிறுவனத்திற்கும் சமூகத்தின் பல்வேறு சாதிப் பிரிவுகளுக்கும் இடையிலான உறவைப் புதிய கோணத்தில் ஆராய்கிறது. தொ.பரமசிவன் தமிழ் வைணவம், மாற்று மரபுகள் என்று தம் ஆய்வில் நுண்ணிய சிந்தனைகளைப் புலப்படுத்துகிறார். அறியப்படாத தமிழகம், மஞ்சள் மகிமை, தெய்வம் என்பதோர்…., இதுவே சனநாயகம், மரபும் புதுமையும், பாளையங்கோட்டை வரலாறு ஆகிய நூல்கள் அவரது ஆய்வுத் திறத்தினைப் புலப்படுத்தும் சான்றுகளாகின்றன.

அறியப்படாத தமிழகம் என்ற நூல் தமிழ், வீடும் வாழ்வும், தைப்பூசம், பல்லாங்குழி, தமிழகப் பௌத்தம் எச்சங்கள், பேச்சு வழக்கும் இலக்கண வழக்கும், கறுப்பு ஆகிய கட்டுரைகளை உள்ளடக்கியது. இக்கட்டுரைகளின் கருத்தாழம் வாசிப்பவர்களின் சிந்தனைகளில் வியப்பூட்டுவன. இக்கட்டுரைகளை விரிவுபடுத்தி அதன் கருத்தாழத்தைப்

மேலும் நுண் தன்மைகளை இட்டுச் செல்வதாக பண்பாட்டு அசைவுகள் என்னும் நூல் அமைந்துள்ளது.

**தமிழ்**

தமிழ் என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கலம் குறிப்பிடுகிறது. தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

முரசு கட்டிலில் உறங்கிய மோசிகீரனாருக்கு வேந்தன் கவரி வீசிய செய்தி புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. கண்விழித்த புலவர், அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல் என்கிறார். தமிழ் என்னும் சொல்லும் மொழி, கவிதை என்பனவற்றைத் தாண்டி பல்கலைப் புலமை என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது. தமிழ்கெழு கூடல் என்றவிடத்திலும் கலைப்புலம் என்றும், கம்பன், தமிழ் தழீஇய சாயலவர் என்னும் இடத்தில் தமிழ் என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன. தேவாரத்தில் தமிழ் பாட்டும் என்னும் பொருளிலும் ஞான சம்பந்தன் சொன்ன தமிழ் இவை பத்துமே, மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாம். ஆண்டாள் தமிழ் மாலை என்று குறிப்பதும், சேக்கிழார் அசைவில் செழும் தமிழ் வழக்கு எனச் சைவத்தையும், அயல் வழக்கு எனச் சமணத்தையும் குறப்பிடுகிறார். கம்பர் கடவுள் தந்தத் தமிழ் என்கிறார். வடமொழி, தெழுங்கு மொழி ஆதிக்கமும் உணரப்பட்ட காலத்தில் தமிழ் தெய்வத் தன்மை உடையதாகக் கருதப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் காலத்தில் தமிழ், அரசியல், சமூக, பண்பாட்டு அளவில் ஒரு மந்திரச் சொல்லாகத் தொழிற்படுகிறது. தமிழ் விடு தூது

தமிழை முத்தி தரும் பொருளாக விளக்குகிறது. பாரதிதாசன் தமிழைத் தாயாகவும், தெய்வமாகவும், போராட்டக் கருவியாகவும் கொண்டிருந்தார்.

நாட்டார் வழக்காறுகளில் தமிழ் என்னும் சொல், செம்மையாகப் பேசப்படும் மொழி உணர்த்துகிறது. குழாயடி, கிணற்றடி போலத் தமிழடி என்பது ஊர் மன்றத்தைக் குறிக்கும். தமிழ், தமிழன் ஆகிய சொற்கள் ஊர்ப் பெயராகவும், மக்கட் பெயராகவும் ஏராளமாக இட்டு வழங்கியிருக்கிறார்கள். முதலாம் ஆதித்த சோழன் தனது வெற்றிக்குதவிய படைத்தலைவன் ஒருவனுக்குச் செம்பியன் தமிழவேள் என்ற பட்டம் கொடுத்தான். சில அதிகாரிகளும் தங்கள் பெயர்களில் தமிழை இணைத்துக் கொண்டனர்.

**தமிழர் உணவு**

ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்க வழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருள்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

சமைத்தல் என்ற சொல்லுக்குப் பக்குவப்படுதல் என்பது பொருள். அடுப்பில் ஏற்றிச் சமைப்பது அடுதல் எனப்படும். தமிழர்களின் சமையலறை வீட்டின் வடகிழக்கு அல்லது தென் மேற்கு மூளையில் அமைக்கப்படுகிறது. நீரிலிட்டு அவித்தல், அவித்து வேக வைத்தல், வறுத்து அவித்தல், சுடுதல், வற்றலாக்குதல், எண்ணெயிலிட்டுப் பொரித்தல், வேகவைத்து ஊற வைத்தல் ஆகியன சமையலின் முறைகளாகும். நகர்மயமாதல்

தமிழர்களின் உணவுமுறை மிகப்பெரிய அளவில் மாறுதல் அடைந்திருக்கிறது. உடல்நலம் குறித்த அக்கறையைவிடச் சுவை குறித்த பார்வையே ஆளுமை செலுத்துகிறது.

சங்க இலக்கியத்தில் மிளகு, நெய், புளி, கீரை இறைச்சி, கும்மாயம் பற்றிய உணவுக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பக்தி இயக்கத்தின் எழுச்சியோடு தமிழர் உணவு வகையில் பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இலட்டுவம் (லட்டு), எள்ளுருண்டை, அப்பம் போன்றவற்றை பெரியாழ்வார் தம் பாடலில் குறிப்பிடுகிறார். சோழர் காலக் கல்வெட்டுக்களில் சருக்கரைப் பொங்கல் (அக்கார வடிசில்), பணியாரம் ஆகிய உணவு வகைகள் பேசப்படுகின்றன. விசய நகர ஆட்சிக் கல்வெட்டுக்களில்தான் இட்டளி (இட்டலி), தோசை, அதிரசம் போன்ற உணவு வகைக் குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இவை கோயிற் பண்பாட்டைப் பிரதிபலிப்பதனால் பெருவாரியான மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களை அறிய இவற்றைப் போதிய சான்றுகளாகக் கொள்ள முடியாது.

காய்கறி என்ற சொல் காய்களையும் மிளகையும் சேர்த்துக் குறிக்கும். கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் தான் சிலி நாட்டில் இருந்து வந்த மிளகாய் தமிழ்நாட்டிற்குள் புகுந்தது. அதுவரை தமிழர் சமையலில் உறைப்புச் சுவைக்காகக் கறுப்பு மிளகினை (கருங்கறி) மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இறைச்சி உணவிற்கு அதிகமாகக் கறியினைப் பயன்படுத்தியதால் இறைச்சியே கறி எனப் பின்னர் வழங்கப்பட்டது. வெள்ளை மிளகினைத் (வால் மிளகு) தமிழர் குறைவாகவே பயன்படுத்தினர்.

பழந்தமிழ் உணவு வகைகளைக் கூர்ந்து கவனித்தால் ஓர் உண்மை புலப்படும். தமிழர் உணவு முறைகளில் வறுத்தும், கட்டும், அவித்தும் செய்யப்படும் உணவுப் பண்டங்களே அதிகமாக இருந்தன. எண்ணெய்யில் இட்ட பண்டங்கள் (குறிப்பாக. வடை, பஜ்ஜி, மிக்சா, காரச்சேவு போன்றவை) அண்மைக் காலங்களிலேயே மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் நிலக்கடலை எண்ணெய்யும் விசய நகர ஆட்சிக் காலத்திலேயே இங்கு அறிமுகமானது.

லாலா மிட்டாய்க் கடை என்பது புதுவகை உணவுகளைத் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்து வருகிறது. நாயக்க மன்னர்களின் காலத்தில் அவர்களால் தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இந்தி பேசும் மக்கள் பிரிவினர் புதிய இனிப்பு வகைகளை அறிமுகப்படுத்தினர். சருக்கரை, கோதுமை, நெய், கடலைமா ஆகியனவே இவற்றின் மூலப் பொருள்கள், சருக்கரைக்குப் பதிலாகக் கருப்புக் கட்டி சேர்த்து நாடார் சாதியினர் வைக்கும் இனிப்புக் கடையை மிட்டாய்க் கடை என்றே சொல்வார்கள். கிராமபுறத்து மக்கள் இனிப்பு விற்கும் கடைகளை அந்திக்கடை (மாலை நேரத்துக் கடை) என்றே வழங்கி வந்தனர். லாலா, மிட்டாய் என்பன முறையே இந்தி உருதுச் சொற்களாகும்.

உணவு என்பது இன்று ஒரு குடும்பத்தின் பழக்கவழக்கமன்று. இனிமை ததும்பும் சருக்கரையானது கியூபா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் வாழ்வுக்கான பற்றுக்கோடு. அமெரிக்கா போன்ற நாடுகளால் இச்சிறிய நாடுகள் ஒடுக்கப்படுவதற்கு அதே சருக்கரை ஒரு கொடுமையான பொருளாதார ஆயுதமாகவும் அமைகிறது. இந்த

அரசியல் உண்மையை உணராத தமிழர்கள் உணவு பழக்கத்தில் உடல் நலத்தைக் கருதாது. நாவின் சுவையினையே சார்ந்து இருப்பது வீழ்ச்சிக்குரிய வழிகளில் ஒன்று.

**உணர்வும் உப்பும்**

மனிதனின் நாகரிக வளர்ச்சியில் நெருப்பை உருவாக்கக் கற்றதுபோல உப்பினைப் பயன்படுத்தக் கற்றதும் முக்கியத்துவமுடையது தான். அப்போது தான் வேதியியல் என்ற விஞ்ஞானம் தொடக்கம் பெறுகிறது. உப்பு என்ற தமிழ்ச் சொல்லுக்குச் சுவை என்பதே முதற்பொருள். இனிப்பு, கசப்பு, துவர்ப்பு என்று சுவைகளெல்லாம் உப்பு என்ற சொல்லை அடியாகக் கொண்டே பிறந்தவை. சமையலுக்குப் பயன்படுத்தப்படும் உப்பிற்கு வெள்ளுப்பு என்று பெயர். பழந்தமிழ் நாட்டுப் பொருளாதாரத்திலும் தமிழ்ப் பண்பாட்டிலும் உப்புக்குத் தனி இடம் உண்டு. பழந்தமிழர்களால் சுவையின் சின்னமாகவும், வளத்தின் சின்னமாகவும் உப்பு கருதப்பட்டது. தன் உருவம் தெரியாமல் பிற பொருள்களோடு கலந்து பயன்தருவது வெள்ளுப்பு.

செய்த வேலைக்கு மாற்றாக நெல்லும் (சம்பாவும்) உப்பும் (அளத்தில் விளைவது) கொடுத்த வழக்கத்தினால்தான் சம்பளம் என்ற சொல் பிறந்தது என்பர். ஆங்கிலத்திலும் என்ற Salary சொல் Salt என்பதன் அடியாகப் பிறந்தது என்றும் கூறுவர்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான சாதியாரிடத்தில் புது மணமகள் தன் கணவன் வீட்டிற்குள் நுழையும்போது ஒரு சிறு ஓலைக்கூடையில் உப்பை எடுத்துக் கொண்டே நுழைகிறாள். புதுமனை புகுவிழாக்களில் உறவினர்கள் அரிசியினையும், உப்பும் அன்பளிப்பாகக் கொண்டு வருவர். ஒருவர் இறந்த எட்டாவது அல்லது பத்தாவது நாளில் இறந்தார்க்குப்

படைக்கும் உணவுகளை உப்பில்லாமல் செய்யும் வழக்கம் இன்னமும் பல சாதியாரிடத்து இருக்கின்றது. உப்பு உறவின் தொடர்ச்சிக்கு உள்ள ஒரு குறியீடு ஆகும். இறந்தாரோடு உள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளவே இவ்வாறு செய்கிறார்கள். உப்பு நன்றி உணர்ச்சியின் தோற்றுவாய் ஆகவும் கருதப்படுகிறது.

பழந்தமிழ் நாட்டின் மிகப்பெரிய சந்தைக்குரிய உற்பத்திக் பொருளாக உப்பு விளங்கியிருக்கிறது. கடற்கரையில் விளையும் உப்பினை வண்டிகளில் ஏற்றிச் செல்லும் உமணர் என்ற வணிகர்களைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த அழகர் மலைத்தமிழ்க் கல்வெட்டு உப்பு வணிகன் ஒருவனையும் குறிக்கிறது. உப்பு விளையும் கலத்திற்கு அளம் என்று பெயர். பெரிய உப்பளங்களுக்கு அரசர்களின் பட்டப்பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள். அவை பேரளம், கோவளம் (கோ+அளம்) என்று வழங்கப்பட்டுள்ளன. சோழ, பாண்டிய அரசர்கள் உப்புத் தொழிலை அரசின் கட்டுக்குள்ளேயே வைத்திருக்கிறார்கள்.

போக்குவரத்து வசதிகள் பெருகாத காலத்தில் உப்பின் விலையும் அதிகமாகவே இருந்திருக்கிறது. நெல்லின் நேரே வெண்கல் உப்பு என்று பெண் ஒருத்தி விலை கூறி உப்பு விற்பதனைச் சங்க இலக்கியத்தில் பார்க்கிறோம். சோழர் காலத்தில் நெல்லின் விளையும் உப்பின் விளையும் அருகருகு இருந்தன என்று கல்வெட்டுக்களில் இருந்து தெரிகிறது. உப்பு உலோகத்தை அரிக்கும் தன்மை கொண்டதனால் மரவை எனப்படும் மரச்சட்டியிலும் கல் மரவை எனப்படும் மாக்கல் சட்டியிலும் வீடுகளில் உப்பு இட்டு

வைக்கப்பட்டிருக்கிறது. இப்பாத்திரங்கள் இப்போது பண்பாட்டு எச்சங்களாக விளங்குகின்றன.

தமிழ்நாட்டின் சமூகப் படிநிலைகளை அடையாளம் காட்டும் பொருள்களில் ஒன்றாகவும் உப்பு விளங்கியுள்ளது. ஆக்கிய சோற்றோடு உப்பைச் சேர்த்து உண்பது ஒரு வழக்கமாகும். சாதிய ஒடுக்குமுறை கடுமையாக இருந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட சாதியார், சோறு உலையில் இருக்கும்போதே அதில் உப்பையிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இலையில் தனியாக உப்பிட்டு உண்ணும் வழக்கம் மேட்டிமையின் சின்னமாகக் கருதப்பட்டது போலும்.

**உணவும் நம்பிக்கையும்**

உணவு சார்ந்த நம்பிக்கைகள் பல வகையாகும். நேரம், கிழமை, பருவ காலம், சடங்குகள், பயணம், விழாக்கள் ஆகியவை சார்ந்து உணவுசார் நம்பிக்கைகள் அமைகின்றன. விலக்கப்பட்டவை, விதிக்கப்பட்டவை என்ற இரு பெரும் பகுப்பில் இவற்றை அடக்கலாம். புலால் உண்ணும் சாதியாரும் குறிப்பிட்ட சில நாள்களில் புலால் உணவை விலக்குகின்றனர். வெள்ளி, செவ்வாய் ஆகிய நாள்களில் சிலர் புலால் உணவை விலக்குவர். சிலர் சனிக்கிழமைகளில் மட்டும் விலக்குவர். ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளிலும், புரட்டாசி அல்லது கார்த்திகை மாதங்களில் முழுமையாகப் புலால் மறுப்பது சிலரது வழக்கம். ஊர்த் திருவிழாவிற்குக் காப்புக் கட்டிய அல்லது கொடியேற்றிய நாள் தொடங்கி விழா முடியும் வரை சிலர் புலால் விலக்குவர்.

அமாவாசை, பௌர்ணமி (கார் உவா, வெள் உவா) நாள்களில் பொதுவாகப் பெண்கள் புலால் உணவு விலக்கும் வழக்கம் உடையவர்கள். இம் மரபுகளை அடியொற்றித் தமிழ் கிறித்தவர்களும் லென்ட் () எனப்படும் நோன்புக் காலத்தில் புலால் உணவை அறிவே விலக்குவது சில இடங்களில் வழக்கமாக உள்ளது. இந்த நோன்புக் காலம் என்பது இயேசுநாதர் சிறைப்பட்டது முதல் உயிர்த்தெழுந்தது வரையிலான 40 நாள்களாகும். கிறித்தவ முதியவர் சிலர், இயேசுநாதர் சிலுவையில் மரித்தது ஒரு வெள்ளிக்கிழமை என்பதால் வழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். கத்தோலிக்க கிறித்தவர்களிடையேதான் பெரும்பாலும் இவ் வழக்கத்ததைக் காணமுடிகிறது.

இரவில், உப்பு என்ற சொல்லைச் சொல்லக் கூடாது. இரவிலே அடுத்த வீட்டாருக்கு மோர் கொடுத்தல் கூடாது. தவிர்க்க முடியாத நேரத்தில் சிறிது வெள்ளை உப்பினை அதற்கு மாற்றாக வாங்கிக் கொண்டு கொடுக்கலாம். புதுமனைக்கு உள்ளே மணமகள் முதலில் கொண்டு செல்ல வேண்டிய பொருள் உப்புதான். இவை உப்பு குறித்த சில நம்பிக்கைகள், உப்பு, உறவுக்கும் செழிப்புக்கும் அடையாளமாகக் கருதப்பட்டது. எனவே, சில சாதியார் இறந்தார்க்குப் படைக்கும் உணவில் உப்புச் சேர்ப்பதில்லை.

விருந்தாளிகளுக்குப் படைக்கும் உணவில் பாகற்காய், பயறு வகைகள், அகத்திக்கீரை ஆகியவற்றைச் சேர்ப்பதில்லை. இறப்பு நிகழ்ந்த வீடுகளில் அன்றும், மறுநாளும் உணவில் அகத்திக்கீரை சேர்ப்பர். அகத்திக்கீரையும் பயறு வகைகளும் இறப்போடும் இறந்தவர் உணவோடும் தொடர்புபடுத்தப்படுகின்றன. எனவே அவற்றை விருந்தாளிகளுக்குப் படைப்பதில்லை. தென் மாவட்டங்களில் பயறு அவித்தல் என்பது

இறப்பைக் குறிக்கும். விழாக்காலங்களிலும் உணவில் பயறு வகைகள் (கடலை, தட்டை) பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றன.

தொன்மையான பயிர் வகைகளில் ஒன்றான சுரையின் காயினைப் புலால் போன்றது எனக் கருதித் தமிழ்நாட்டு பிராமணர் முற்றிலுமாக விலக்கி விடுகின்றனர். புலால், மீன் ஆகியவற்றோடு சேர்க்கப்படும் காய்கறி இது. ஆதலால் இதனை விலக்குகின்றனர் போலும்,

போக்குவரத்து வசதி பெருகாத காலங்களில் பயணத்தின் போது இரண்டு அல்லது மூன்று பொழுதுக்குக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு செல்லும் வழக்கம் இருந்தது. காட்டுவழியில் உள்ள தெய்வங்களும் ஆவிகளும் கட்டுச்சோற்று உணவைத் தீண்டாமல் பாதுகாக்க, சோற்றின்மீது ஒரு அடுப்புக் கரித்துண்டினை உடன் வைத்துக் கட்டுவர்.

பெரும்பாலான சாதியார் விருந்தாளிகளுக்கு உணவு பரிமாறும்போது முதலில் உப்பினை வைப்பர். ஒன்றிரண்டு சாதிகளில் முதலில் சோற்றினை வைக்கும் வழக்கமுண்டு.

**உரலும் உலக்கையும்**

அம்மிக்கும் ஆட்டுரலுக்கும் கற்குழவிகள், திரிகைக்கு மூடியும் இரும்புக் கைபிடியும் இவை அரைப்புக் கருவிகள். உரலின் துணைக்கருவி உலக்கை. உலக்கை கருங்காலி மரத்தினால் செய்யப்பட்டது. இதன் அடிப்பகுதி இரும்புக் குப்பியலால் ஆனது. மேற்பகுதியில் இரும்பிலான பூண் கட்டப்பட்டிருக்கும். உலக்கையின் சராசரி நீளம் நான்கு அடியாகும். இது குற்றுக்கருவி. அவல் இடிப்பதற்கு இன்றளவும் உரலும் உலக்கையும்

பயன்படுகின்றன. எனவே இது இடிப்புக் கருவியும் ஆகும். சில இடங்களில் உரலுக்கு மேலே தானியங்கள் சிதறாமல் இருக்க மூங்கிலாலோ, பிரம்பினாலோ வட்ட வடிவ மறைப்பினைச் செய்து உரலின்மீது அதற்கென வெட்டப்பட்ட காடியின்மீது வைக்கிறார்கள். அடிப்பகுதியும் மேற்பகுதியும் இல்லாத இதற்குக் குந்தாணி என்று பெயர். (காலும் தலையும் தெரியாமல் குண்டாகக் கனத்துத் தெரியும் பெண்களைக் குந்தாணி என்று கேலி செய்வதுண்டு.)

முல்லை நில வாழ்க்கையில் நெல்லும், புல்லுமான சிறியவகைத் தானியங்களின் உறையினை நீக்குவதற்கு மனிதன் கண்டுபிடித்த கருவிதான் உரலும் உலக்கையும். பண்டைக் காலத் தொழில் நுட்பத்தின் எளிமையான வெளிப்பாடு உலக்கை.

தொடக்க காலத்தில் பாறைகளில் தானியங்களைக் குவித்து வைத்து மர உலக்கையால் குற்றியிருக்கிறார்கள். பாறைகள் நிறைந்த பகுதிகளிலும் மலைப்பகுதிக் கிராமங்களிலும் இப்படிப்பட்ட பாறைக் குழிகளையும் இவ் வழக்கத்தினையும் கூட இன்றும் காணமுடிகிறது.

நெல் வகைகளையும், புல் வகைகளையும் அரிசியாக்குவதைக் குற்றல், தீட்டல் என்ற இரண்டு வினைச்சொற்களால் குறிக்கின்றனர். குற்றிய தானியத்தை உமியும், தவிடும் நீங்கிப் புடைத்துச் சலிப்பதைத் தீட்டல் என்ற சொல் குறிக்கின்றது போலும். குற்றித் தீட்டிய தானியத்தின் அளவும் நிறையும் குறைவதுண்டு. கல்வெட்டுக்களில் பத்தெட்டுக் குற்றல் அரிசி என்பது போன்ற குறிப்புக்கள் வருகின்றன. பத்துப்படி அளவு அரிசியை மீண்டும் குற்றிய பின் எட்டுப்படி தரமான அரிசி கிடைக்கும் என்பது இதன் பொருள்.

இந்த அளவு கூடினால் சரியாகக் குற்றவில்லை என்றும், குறைந்தால் நெல் தரமானது இல்லை என்றும் கொள்ளப்படும். உமியும் தவிடுமாக இப்படிக் குறைகிற அளவிற்குப் பாடுவாசி என்பது பெயர்.

கனமான நான்கு அடி நீள உலக்கையைக் கொண்டு கல்லுரலில் குற்றுதல் கடுமையான உடல் உழைப்பிற்கு உரிய தொழிலாகும். எனவே குற்றும்போது பெண்கள் உஸ், உஸ் என்ற சத்தத்தை இசை ஒழுங்காகக் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக எழுப்புகின்றனர். சில பகுதிகளில் சும்மேலோ, சும் உலக்காய் என்று சொல்கின்றனர். முற்காலத்தில் ஆண்கள் பாடும் படகுப் பாட்டுப் போலப் பெண்கள் உலக்கைப் பாட்டு பாடியிருக்கிறார்கள். இதற்கு வள்ளைப்பாட்டு என்று பெயர்.

உரல், உலக்கை பற்றிய நம்பிக்கைகளும் தமிழ் மக்களுக்கு நிறையவே இருந்திருக்கின்றன. உலக்கையை எப்போதும் நட்டமாகவே சுவரில் சார்த்தி வைக்க வேண்டும். தரையில் கிடத்தக் கூடாது. பூப்பெய்திய பெண்ணை வீட்டின் ஒரு மூலையில் உட்கார வைத்து (இரும்புப்) பூண் கட்டிய உலக்கையினை அவளுக்குக் குறுக்காகக் கிடை வசத்தில் வைப்பார்கள். இது தீய ஆவிகளிடம் இருந்து அப் பெண்ணைக் காப்பதாக நம்புகிறார்கள். வாழ்வரசிப் (பெண்கள் ) உரலின்மீது உட்காரக் கூடாது. விதவைப் பெண்களை உரலைக் குப்புறக் கவிழ்த்து அதில் உட்கார வைத்து நீராட்டித் தாலியைக் கழற்ற வேண்டும்.

**சிறு தெய்வங்களின் உணவு**

தமிழ்நாட்டின் பெரும்பாலான மக்களின் வழிபாட்டுக்குரியனவாக இருப்பன சிறு தெய்வங்களே. சிறு தெய்வம் என்ற சொல்லாட்சி முதன்முதலில் அப்பர் தேவாரத்தில் காணப்படுகிறது. எனவே, இப்பெயர் வழக்கு மேலோர் மரபு சார்ந்ததாகும். வழிபடும் மக்களுக்கு இவை தெய்வங்களே.

சிறு தெய்வங்கள் எனச் சுட்டப்படுவனவற்றின் அடிப்படையான அடையாளங்கள் அவற்றைப் பிராமணர் பூசிப்பதில்லை என்பதும், அவை இரத்தப் பலி பெறுவன என்பதும்தான். பலி என்பது வடமொழிச் சொல். படைக்கப்படுதல் என்பது அதன் பொருள். தமிழ்நாட்டில் சிறுதெய்வக் கோயில் இல்லாத கிராமமே இல்லை எனலாம். இவற்றில் செம்பாதிக்கும் மேல் தாய்த் தெய்வங்கள்.

சிறுதெய்வக் கோயில்களில் பெண் தெய்வங்களின் (அம்மன்) கோயில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. ஆண் தெய்வங்களின் கோயில்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. இத்தெய்வங்கள் பெரும்பாலும் சினங்கொண்ட (உக்கிர) நிலையில்தான் அமைந்திருக்கின்றன. எனவே இவற்றை அமைதிப்படுத்த இரத்தப்பலி தருவது மரபாக இருந்து வருகிறது.

பிராமணர், சைவ வேளாளர் தவிர்த்த எல்லாத் தமிழ்ச் சாதியார் குடும்பங்களும் ஏதேனும் ஒரு சிறுதெய்வ வழிபாட்டில் தொடர்பு உடையவையே. எனவே சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய மக்கள் அனைவரும் புலால் உண்ணும் சாதியினரே. எனவே, இரத்தப்பலி இக்கோயில்களில் தவறாது இடம்பெறுகிறது.

மேற்கூரையுடைய சிறுதெய்வக் கோயில்களில் மட்டும் கல்லினாலான சிறிய பலிபீடங்கள் உள்ளன. இக்கோயில்களில் ஆட்டுக்கடா, சேவல், எருமைக்கடா, பன்றி ஆகியவை பலியிடப்படுகிறது. இதுவல்லாமல் ஆட்டுக்கடா, ஆண்பன்றி, எருமைக்கடா, சேவல் என ஆண் மிருகங்களும் பறவைகளுமே பலியிடப்படுகின்றன. பெரும்பாலான கோயில்களில் ஆட்டுக்கடாயின் தலை அறுக்கப்பட்டுப் பலிபீடத்தின்மீது வைக்கப்படுகிறது. சில இடங்களில் ஆட்டின் கால்களில் ஒன்று அறுக்கப்பட்டு ஆட்டின் வாயில் அதைக் கவ்வுமாறு கொடுத்துப் பலிபீடத்தில் வைப்பர். சேவலைப் பலியிடும்போது அவ்வாறு செய்வதில்லை. மாறாகச் சேவலின் தலையில்லா உடம்பினை ஒரு குச்சியில் செருகி, தெய்வத்தின் முன் வைக்கின்றனர். பன்றி வளர்க்கும் சாதியாரே பெரும்பாலும் பன்றியைப் பலியிடுகின்றனர்.

பன்றியைப் பலிகொடுக்கும் போது சில இடங்களில் தலையை வெட்டாமல் பன்றியை மல்லாக்கக் கிடத்தி அதன் மார்பைப் பிளந்து இதயத்தை எடுத்துப் பலிபீடத்தின் மீது வைக்கும் வழக்கம் உள்ளது. சில இடங்களில் சாமியாடிகள் பலியிடப் பெறும் விலங்குகளின் இரத்தத்தைக் குடிப்பதுண்டு. அவ்வாறு இரத்தம் குடிக்காத கோயில்களில் தெய்வத்தின் முன் படைக்கப்பட்டிருக்கும் உணவுப்பொருள்களின் மீது அந்த இரத்தம் தெளிக்கப்படும்.

ஊர்த் தெய்வங்களுக்கோ, சாதித் தெய்வங்களுக்கோ, குல தெய்வங்களுக்கோ நடைபெறும் திருவிழாக்களில் பொங்கலிடும் மரபும் உண்டு. அனைவரும் ஒரே நேரத்தில் பொங்கலிடுகின்றனர். எரிபொருளாகப் பனை ஓலைகளை மட்டும் பயன்படுத்தும்

வழக்கமே பரவலாகக் காணப்படுகிறது. பொங்கல் படையலும் இரத்தப் பலியம் சில கோயில்களில் சேர்ந்தே தரப்படுகின்றன. அவ்வகையான கோயில்களில் பலியிடப்படும் விலங்கின் இரத்தத்தைப் படைக்கப்படும் உணவின்மீது தெளிப்பது வழக்கமாக இருக்கிறது. பொங்கலையும் இரத்த பலியையும் தனியாக நடத்தும் கோயில்களில் பொங்கல் படையலைச் சைவ படைப்பு, ஆசார படைப்பு, சுத்தப் படைப்பு, என்று அழைக்கின்றனர். இரத்தப் பலியோடு கூடிய படைப்பு மாமிசப் படைப்பு என்று அழைக்கப்படுகிறது.

**வீடும் வாழ்வும்**

வீடு என்ற சொல் தொழிற்களத்தில் இருந்து விடுபட்டு நிற்கும் இடத்தையே முதலில் குறித்தது. விடுதி என்னும் சொல்லும் அந்தப் பொருளில் வந்ததுதான். பிற்காலத்தில் மேலோர் மரபில் வீடு என்பது மண் உலகத்திலிருந்து விடுபட்டுச் சேர்கிற துறக்கத்தை (சொர்க்கம்) குறிக்க வந்ததாகும்.

சங்க இலக்கியத்தில் வீடு என்பதற்குப் பதிலாக மனை என்ற சொல்லே காணப்படுகிறத. உண்டு, உறங்கி, இனம் பெருக்கும் இந்த இடத்துக்குரியவர் மனைவி எனப்பட்டாள்.

நிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் தெய்வங்கள் உறைகின்றன. எனவே வீடு கட்டவிருக்கும் நிலத்தில் முறை அறைந்து, கயிறு கட்டி கயிற்றின் நிழல் வழியாகத் திசைகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். அந்தந்தத் திசையிலுள்ள தெய்வங்களைக் கண்டறிந்து அவற்றிற்கு வேண்டுவன செய்ய வேண்டும். பின்னரே அந்த நிலத்தில் வீடு கட்டத் தொடங்க வேண்டும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை.

மனைத் தெய்வங்களையும் திசைத் தெய்வங்களையும் வேண்டி அமைதிப்படுத்தும் (சாந்தி செய்யும்) இந்தச் சடங்குக்குத் தச்சு செய்தல் என்பது இன்றைய பெயராகும். சுட்ட செங்கலால், வீடு கட்டிக் கொள்ளவும், வீட்டிற்கு மாடி எடுத்துக் கட்டவும், வீட்டுத் தோட்டத்தில் கிணறு வெட்டிக் கொள்ளவும் அக்காலத்தில் அரசர்களின் அனுமதி வேண்டும். அந்த அனுமதி பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. பார்ப்பனர்களின் தீட்டுக் கோட்பாட்டை அரண் செய்வதற்கும், பேணிக் கொள்வதற்கும் ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியாகக் கிணறுகள் இருப்பதனை இப்பொழுதும் பார்ப்பனத் தெருக்களில் (அக்கிரகாரங்களில்) காண இயலும். இந்த உரிமையினை அரசர்கள் மற்ற சாதியாருக்கு வழங்கவில்லை.

ஒடுக்கப்பட்ட மக்களின் வீடுகள் இன்றளவும் குனிந்த வாசல் உடையனவாகவும், பின்புற வாசலும் சன்னலும் இல்லாதனவாகவும் இருப்பதனை நினைவில் கொள்ள வேண்டும். நிறைவாசல் (ஆள் நிமிர்ந்தபடி உள்ளே செல்லும் உயரத்தில் இருப்பது) சன்னல்கள், பின்புற வாசல், மாடி, இரட்டைக் கதவு வைத்தல், சுட்ட செங்கலால் சுவர் ஆகியவை தனித்தனி உரிமைகளாகச் சாதிவாரியாக அடுக்கப்பட்டிருந்ததே தமிழக வரலாற்றில் சாதியம் தொழிற்பட்ட முறைக்குக் கண்கண்ட சான்றாகும்.

**தமிழர் உடை**

உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்கிறது புறநானூறு. இடுப்பைச் சுற்றும் அரையாடை, தோளில் இடும் மேலாடை ஆகியவற்றை இப்பாடல் குறிக்கிறது. இவ் உடை அக்காலத்தில் ஆண் பெண் இருவருக்கும் பொதுவாக இருந்திருக்கிறது. இந்த

இரட்டை ஆடையும் சாதி, பருவ காலம் என்பவை கருதி மாறுபாடுகளை உடையதாக இருந்திருக்கிறது.

ஆண்கள் அணியும் சட்டையும் அரைக்கால் அல்லது முழுக்கால் சட்டையும் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தமிழ்நாட்டில் பெருவாரியான மக்களால் அறியப்படாதவையாகும். ஆங்லேயரும் நவாபுப் படையினர் எனப்படும் வடநாட்டு முசுலிம்களும் வந்த பின்னரே உடம்பின் மேற்பகுதியில் தைத்த சட்டை அணியும் வழக்கம் புகுந்தது. கிறித்துவின் சமகாலத்தில் இங்கு வந்த ரோமானியர்களின் (யவனர்களின்) மேற்சட்டையினை மெய்ப்பை என்று தமிழர்கள் குறிப்பிட்டனர். துணிகளின் மீது இரத்தினங்களை வைத்து ஊசியால் தைப்பவனை மட்டும் தையான் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கிழிந்த ஆடையினை ஊசியும் நூலும் கொண்டு தைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. இதனைத் துன்னுதல் அல்லது துன்னம் செய்தல் என்று கூறுவர். இந்த ஊசிக்கும் துன்னூசி என்றே பெயர். தோல்பொருள்களைத் தைக்கும் பருத்த ஊசியினையும் கொழுத்துன்னூசி என்ற பெயருடன் குறித்திருக்கிறது.

சிலப்பதிகாரத்திற்கு முந்திய தமிழ் இலக்கியங்களில் பெண்கள் மார்புக் கச்சை அணிந்ததற்கான சான்றுகள் எவையுமில்லை. சங்க காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் தங்க மோதிரம் ஒன்று (முட்டை வடிவ முன் தோற்றம் உடையது) நான்கைந்து ஆண்டுக்கு முன்னர் கரூர் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இம் மோதிரத்தில் ஓர் இளைஞனும் இளம்பெண்ணும் வடிக்கப்பட்டுள்ளனர். காதல் உணர்வுள்ள இத் தம்பதியினர் தலையில் கொண்டையிட்டுள்ளனர். நிறைய அணிகலன்கள் அணிந்துள்ளனர். இடுப்பில்

அரையாடை மட்டும் காணப்படுகிறது. பெண்ணின் மார்பில் கச்சையோ ஆணின் மார்பில் துண்டு போன்ற ஆடையோ காணப்படவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடைபெற்ற விசயநகரப் பேரரசும் தெழுங்கு மக்களின் குடியேற்றமும் தமிழர்களின் வாழ்விலும் பண்பாட்டிலும் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அதன் விளைவுகளில் ஒன்றாகத் தமிழர் உடையிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலத்திற்கு முன்னர், புடைவை என்ற சொல் ஆண்களும் பெண்களும் மேலே அணியும் நீண்ட துணியினையே குறித்தது. நிர்வாணத் துறவியாகச் சமண மதத்தில் இருந்த திருநாவுக்கரசர் சமண மடத்தைவிட்டு வெளியேறும் போது வெண்புடைவை மெய் சூழ்ந்து வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுவார். இக்காலத்துப் பெண்கள் உடுத்தும் 14, 16, 18 முழச் சேலைகள் தெலுங்கு பேசும் மக்களின் உறவால் ஏற்பட்ட வழக்கமாகும். அரையாடையும் மேலாடையுமான பெண்களின் இரட்டை ஆடை ஓருடையானது இக்காலத்தில்தான். இச் சேலையும் முதலில் மஞ்சள், சிவப்பு என்னும் இரண்டு வண்ணங்களை உடையதாய், கண்டாங்கி என்று வழங்கப்பட்டது. இரவிக்கை எனப்படும் பெண்கள் மேலாடையும் தெலுங்கு மக்களின் உறவால் ஏற்பட்ட வழக்கமேயாகும். இரவிக்கை என்ற சொல்லும் தெலுங்கு மொழியில் இருந்து வந்ததே பிராமணரல்லாத ஏனைய தமிழச் சாதிப் பெண்கள் அனைவரும் சேலையின் மேற்பகுதியினை (மாராப்பு) தோளின் இடதுபுறமாக இட்டுக் கொள்வது வழக்கம்.

பெண்கள் அணியும் உள்ளாடையான பாவாடையும் கடந்த சில ஆண்டுகளுக்கு உள்ளாகவே புழக்கத்திற்கு வந்திருக்கின்றது. அதற்கு முன் சிறிய பெண் குழந்தைகள்

சிற்றாடை எனப்படும் அரையாடை அணிந்திருக்கிறார்கள். இதற்குக் கன்னி சிற்றாடை என்று பெயர். ஆண்கள் அணியும் மேலாடை இலக்கியங்களில் மேலாடை அல்லது உத்தரீயம் (தோளில் இடும் பட்டாடை) என்று குறிக்கப்படுகிறது. துண்டு என்ற சொல்லைக் காணோம். மேட்டுக் குடியினர் சிற்பங்கள் பெரும்பாலும் கோயில்களிலேயே காணப்படுவதால் தோளில் இடும் துண்டைப் பணிவுடன் இடுப்பில் கட்டிக் கொள்வதாகவே சிற்பங்களில் பார்க்கிறோம். ஒடுக்குமுறைக்கு ஆட்படும் மக்கள் தோளில் இடும் துண்டை இடுப்பில் கட்டிக் கொள்வது இன்றளவும் பணிவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. சாதிய அமைப்பில் ஓர் இளைஞன் முதன்முதலாகத் தன் திருமண நாளன்றுதான் பெரியவர்கள் முன் தோளில் துண்டு அணிய அனுமதிக்கப்படுகிறான். இன்றளவும் சாதிப் பஞ்சாயத்துக்களில் திருமணமாகாத இளைஞர்கள் தோளில் துண்டு அணிந்து கொண்டு பேச அனுமதிக்கப்படுவதில்லை.

**தாலியும் மஞ்சளும்**

தாலி கட்டுதல், திருப்பூட்டுதல், மாங்கல்யதாரணம் ஆகிய சொற்கள் திருமணத்தில் பெண்கள் கழுத்தில் ஆண் தாலி அணிவிப்பதைக் குறிக்கிறது. தாலி கட்டும் நிகழ்ச்சி நடக்கும் போது மணமக்களுக்குப் பின்னால் மணமகனின் சகோதரி அல்லது சகோதரி முறை உள்ளவர்கள் கட்டாயம் நிற்க வேண்டும். தாலி முடிச்சுப் போட மணமகனுக்கு அவள் உதவி செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் பெருவாரியாக நிலவி வரும் வழக்கம் இதுவே.மணவறையில் அல்லாமல் ஊர் மந்தையில் நின்றுகொண்டு தாலிகட்டும் வழக்கமுடைய சாதியாரிடத்திலும் சகோதரி மணமகனுக்குத் தாலி கட்டத் துணை

செய்கிறாள். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை சில சாதியாரிடத்தில் மணமகன் திருமண நிகழ்ச்சிக்கு வரமுடியாதபோது மணமகனை அடையாளப்படுத்த அவன் வைத்திருக்கும் பொருள்களில் ஒன்றைக் கொண்டு வந்து மணமகளின் பக்கத்தில் வைத்து மணமகனின் சகோதரி தாலி கட்டுகிற வழக்கம் இருந்திருக்கிறது.

தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்காண முடியவில்லை. ஆனால் தாலி, தாலாட்டு ஆகிய சொற்களைக் கொண்டு தாலி என்பது தொங்கவிடப்படும் அணி (காதணி, மூக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம். நமக்குக் கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்றுகளிலிருந்து (சங்க இலக்கியம், சிலப்பதிகாரம்) அக்காலத்தில் தாலி கட்டும் பழக்கம் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது. தமிழர் திருமணத்தில் தாலி உண்டா இல்லையா என்று தமிழறிஞர்களுக்கு மத்தியில் 1954 இல் ஒரு பெரிய விவாதமே நடந்தது. இதைத் தொடங்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன்.

தொல் பழங்குடி மக்கள் பிள்ளைகளைத் தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளகைளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள்களைக் கோத்துக் கட்டும் வழக்கம் இருந்தது. அவ் வழக்கம் மிக அண்மைக்காலம் வரை கூட நீடித்தது. இவ்வாறு ஐந்து பொருள்களைப் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதைச் சங்க இலக்கியங்கள், ஐம்படைத் தாலி என்று குறிப்பிடுகின்றன. அண்மைக்காலம் வரையிலும் கூடக் கிராமப்புறங்களில் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் நாய், சாவி, தாயத்து, காசு, அரசிலை ஆகிய உருவங்களைச் செய்து கட்டுவது வழக்கமாக இருந்தது. நந்தனாரின்

சேரிக் குழந்தைகள் அரைஞாண் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்ததாகப் பெரிய புராணத்தில் குறிப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர் உட்பட பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்களில் இதுவரை தாலி எதுவும் கிடைக்கவில்லை. இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் தாலிகளில் சிறுதாலி, பெருந்தாலி, பஞ்சார(கூடு)த்தாலி, மண்டைத் தாலி, நாணல் தாலி (ஞாழல் தாலி), பார்ப்பாரத் தாலி, பொட்டுத்தாலி ஆகியவை முக்கியமானவை. ஒரு காலத்தில் உணவு சேகரிப்பு நிலையில் வாழ்ந்த சில சாதியார் இன்றுவரை கழுத்தில் தாலிக்குப் பதிலாக காறைக் கயிறு என்னும் கருப்புக் கயிறு கட்டிக்கொள்கின்றனர். கழுத்தில் காறை எலும்பை ஒட்டிக் கட்டப்படுவதால் அது காறைக் கயிறு எனப் பெயர் பெற்றது. பார்ப்பாரத் தாலி என்பது பெண்ணின் மார்புகள் போன்ற இரண்டு உருவத்திற்கு நடுவல் ஒரு உலோகப் பொட்டினை வைத்துக் கொள்வதாகும்.

இந்தியச் சிந்தனையாளர்களில் தந்தை பெரியார்தான் முதன்முதலில் தாலியை நிராகரித்துப் பேசவும் எழுதவும் துவங்கினார். அவரது தலைமையில் தாலி இல்லாத் திருமணங்கள் நடைபெறத் தொடங்கின. பின்னர் 1968 இல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமணச் சட்டம்ட தாலி இல்லாத் திருமணத்தைச் சட்டப்பூர்வமாக அங்கிகரித்தது.

சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல. பெண்ணுக்குரிய மங்கலப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும் கூடப் பேசப்படவே இல்லை. பூசுமஞ்சளில் புகழ் பெற்றது விறலி மஞ்சள் ஆகும். விறல் என்றால் முகபாவனை. விறலி

என்றால் முகபாவங்கள் மாற்றி நடிக்கிற, நடனமாடுகிற பெண்ணைக் குறிக்கும். அன்று கூத்தாடிய பெண்கள் விளக்கொளியில் நாட்டியமாடினர். முகம் துணிப்பாகத் தெரிய மஞ்சள் அரைத்து முகத்தில் பூசிக் கொண்டனர். விறலியர் மட்டும் பூசிய மஞ்சளைக் காலப்போக்கில் குடும்பப் பெண்களும் பூசத் தொடங்கினர். விறலியரை மதியாத நம் சமூகம் விறலி மஞ்சளை மட்டும் கொண்டாடத் துவங்கியது. இன்றும் கொண்டாடி வருகிறது.

**சங்கும் சாமியும்**

தமிழ்ப் பண்பாட்டை அடையாளப்படுத்தும் கடல்விளைப் பொருளில் சங்கும் ஒன்று. சங்கு, சங்கம், வளை, நரல் ஆகியவை கடலில் விளையும் சங்கினைக் குறிக்கும் பழைய சொற்களாகும். வெண்சங்கம் என்பது வால்வளை எனவும் சுட்டப்பட்டது. பெரிய சங்குகளில் இருந்து பெண்களின் கை வளையல்கள் செய்யப்பட்டன. எனவே சங்குக்கு வளை எனப் பெயர் ஏற்பட்டது. கொற்கையில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வில் வளையல்கள் அறுத்து எடுக்கப்பட்ட சங்கின் எஞ்சிய பகுதிகள் நிறையவே கிடைத்துள்ளன.

தமிழர்கள் பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய நிகழ்வுகள் முற்றிலும் சங்கொலித்துள்ளனர். இறப்பின்போது சங்கு ஊதும் வழக்கம் மட்டும் தமிழகம் முழுவதும் பரவலாக இன்றும் இருந்து வருகிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட சாதிப் படிநிலை அமைப்புக்கு ஏற்ப இது ஒற்றைச் சங்காகவோ, இரட்டைச் சங்காகவோ அமைகிறது. வைணவத் தீட்சை பெற்றவர்கள் இறந்தால் இத்துடன் பூண்கட்டிய திருச்சங்கம் ஒன்றும் தனியாக

ஊதப்பெறுகிறது. அதற்கு சில ஊர்களில் பெருமாள் சங்கு என்றும் பெயர். இதனை வரிச் சங்கம் என்று இலக்கியங்கள் கூறும். பிறப்புச் சங்கு என்னும் குழந்தை பிறந்தவுடன் சங்கினை ஊதி மகிழ்ச்சியாகச் செய்தி தெரிவிக்கும் பழக்கம் இன்று காணப்பெறவில்லை. ஆனால் திருமணத்தின்போது சங்கு ஊதும் பழக்கம் மதுரை, முகவை மாவட்டங்களில் சில ஊர்களில் காணப்பெறுகிறது. முகவை மாவட்டத்தில் இடையர்களில் தாலி கட்டும் நேரத்தில் திருச்சங்கு ஊதும் வழக்கம் 1980 வரை இருந்தது. கள்ளர் சாதியினரில் மணப்பெண்ணை மணமேடைக்கு அழைத்து வரும்பொழுது மணமகனின் சகோதரி திருச்சங்கு ஊதி அழைத்து வருகிறாள். இவை தமிழர்கள் இடத்தில் முச்சங்க வழக்கம் இருந்தற்கான எச்சங்களாகும்.

சங்கு இடப்பக்கமான புரியினை உடையதாகும். ஒரு இலட்சம் சங்குகளில் ஒன்று வலப்புறம் வளைந்த புரியினை உடையதாக இருக்கும் என்பர். வலம்புரிச் சங்கு அக்காலத்தில் அரண்மனைகளுக்கும் கோயில்களுக்கும் மடங்களுக்கும் சங்கு குளிக்கும் மீனவர்களால் வழங்கபெற்றுள்ளது. அதனுடைய விலை மதிப்பும் அதிகமானதாகும். வலம்புரிச் சங்கு பற்றிச் சங்க இலக்கியங்கள் அனைத்தும் பெருமையாகப் பேசுகின்றன. சங்கு குளிக்கும் மீனவர்கள் வலம்புரிச் சங்கு கிடைத்தால் கடற்கரையில் சங்கு ஊதி அந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் பிறருக்குத் தெரிவித்தனர் என்ற சங்கப்பாடல் ஒன்று கூறுகிறது. சடங்குகளுக்குப் பின்னர் வையை ஆற்றில் சங்குகளையும், கிழிஞ்சல்களையும் இட்டதாகப் பரிபாடல் செய்தி தருகிறது. இன்றும் வீட்டில் தலைவாசல் நிலையினை அடுத்து சற்றே வெளியிலே தெரியும்படி கடல் சங்கினைப் புதைக்கும் வழக்கம் தென் மாவட்டங்களில் வழக்கத்தில் உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் பழைய அம்மன் கோயில்களில் வெளிப் பகுதியில் கிழக்கு ஓரமாகச் சங்குச் சாமியின் சிலைகள் இன்றும் காணப்படுகின்றன. மார்பு அளவே உள்ள இந்தச் சிலைகள் நீண்ட சடை முடியோடு ஒற்றைச் சங்கினை வாயில் வைத்து இரண்டு கையாலும் பிடித்து ஊதும் மானிடத் தோற்றத்தில் காணப்படுகின்றன. இச்சிலைகளுக்கு என்று தனிப்பூசனைகள் இல்லை. ஆனால் சங்கு ஊதும் தோற்றத்துடன் இருப்பதால் சங்குச்சாமி என்ற பெயர் மட்டும் இவற்றுக்கு உண்டு.

**தைப்பூசம்**

தமிழர்களின் தனிப்பெரும் திருவிழாவாகத் திகழ்வது தைப் பொங்கல் திருநாள். தேசிய இனத்துக்குரிய அடையாளம் ஒன்றைத் தமிழர்க்கு வழங்கும் திருவிழா இது. சமய எல்லைகளைக் கடந்த திருவிழாவாகவும் இது அமைகிறது. பிறப்பு, இறப்புத் தீட்டுக்களால் பாதிக்கப்படாத திருவிழா இது என்பது பலர் அறியாத செய்தி. பொங்கல் திருநாளன்று திருவிளக்கின் முன் படைக்கும் பொருள்களில் காய்கறிகளும், கிழங்கு வகைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றுள் கிழங்கு வகைகள் (சேனை, சேம்பு, கருணை, சிறுகிழங்கு, பனங்கிழங்கு) பார்ப்பனர்களாலும், பெருங் கோயில்களாலும் காலங்காலமாக விலக்கப்பட்ட உணவு வகைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தைப் பொங்கலைத் தொடுத்து வரும் மற்றொரு இயற்கைத் திருவிழா சிறுவீட்டுப் பொங்கலாகும். மார்கழி மாதம் முப்பது நாளும் வைகறை பொழுது வாசலில் நீர் தெளித்து, கோலமிட்டு, சாண உருண்டைகளில் பூச்செருகி வைக்கும் பழக்கம் தென்மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. பெண் பிள்ளைகள் இருக்கும் வீடுகளிலேயே வாசலில் பூ

வைக்கும் வழக்கம் காணப்படுகிறது. பீர்க்கு, பூசணி, செம்பருத்தி, எக்காளம் ஆகியவையே பெரும்பாலும் வைக்கப்படும் பூக்களாகும். காலையில் வைக்கும் இந்தப் பூக்களை வெய்யில் விரிந்தவுடன் சாண உருண்டைகளிலேயே சேர்த்து எருவாக்கி, காயவைத்து விடுவார்கள்.

பூ வைக்கும் வீடுகளில் (பொங்கல் கழித்து 8இலிருந்து 15 நாள்களுக்குள் வரும்) தைப்பூசத்திற்குள் இதற்கொரு தனிப்பொங்கல் வைக்க வேண்டும். பெண் பிள்ளைகளுக்குாகவே பூ வைப்பதால் அவர்களுக்கென வீட்டுக்குள் அல்லது வீட்டு முற்றத்தில் களி மண்ணால் சிறுவீடு கட்டுவர். சிறுவீடு அதிக அளவு ஐந்தடிக்கு ஐந்தடி அளவில் இருக்கும். சிறுவீட்டுப் பொங்கல் நிகழ்ச்சி தலைவாசலில் நடைபெறாமல், சிறுவீட்டின் வாசலிலேயே நடைபெறும். பொங்கலிட்டுத் திருவிளக்குப் படையலும் முடிந்தவுடன் பொங்கலையும், பூக்களாலான எருத்தட்டுக்களையும் நீர் நிலைகளுக்குப் பெண் பிள்ளைகள் எடுத்துச் சென்று நீரில் விடுவர். எருத்தட்டின் மீது வெற்றிலையில் சூடமேற்றி நீரில் விடுவதுண்டு.

தமிழ் வைணவத்தைப் போலவே தமிழ்ச் சைவமும் தைப்பூசம் கொண்டாடியிருக்கிறது. நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் என்றும் மயிலைப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் தைப்பூசத்தினைப் பெண்கள் பொங்கலிட்டுக் கொண்டாடும் வழக்கத்தைக் குறிப்பிடுகிறார். தென்மாவட்டங்களில் தைப்பூசத் திருவிழா இன்றும், நீர்த் துறைகளிலே சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதும், ஆற்றங்கரைகளில்

தைப்பூச மண்டபங்கள் கட்டப்பட்டிருப்பதும் தைப்பூசத் திருவிழாவின் செல்வாக்கினைக் குறிக்கும் சான்றுகளாகும்.

**தீபாவளி**

தீபாவளி, தமிழ்நாட்டின் மரபுவழிப் பொருளாதாரத்தோடும் பருவநிலைகளோடும் சடங்குகளோடும் தொடர்பில்லாத ஒரு திருவிழா. பார்ப்பனியத்தின் பாதிப்புகளில இருந்து இன்னமும் விலகி நிற்கிற சிற்றூர்களில் தீபாவளி கொண்டாடப்படுவதில்லை. தீபாவளியின் அடையாளமான வெடி, அதன் மூலப்பொருளான வெடிமருந்து ஆகியவை தமிழ்நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்றாண்டுவரை அறிமுகமாகவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். விளக்குகளின் வரிசை எனப் பொருள்படும் தீபாவளி (தீப + ஆவளி) என்னும் வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லும் புழக்கத்தில் இல்லை. தமிழர்களின் விளக்குத் திருவிழா என்பது திருக்கார்த்திகைத் திருவிழாவே. நரகாசுரன் என்னும் அரக்கன் கிருஷ்ணனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தீபாவளிக் கதை திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக பிராமணிய மதத்தின் சார்பாக எழுந்த கதையாகும். இந்த நாளே பிராமணிய மதத்தின் எதிரியான சமன மதத்தின் இருபத்து நாலாம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறடைந்த (இறந்த) நாளாகும். தான் நாளை வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடுமாறு மகாவீரர் தம் மதத்தவரைக் கேட்டுக் கொண்டார். ஆகவே பிராமண மதத்தின் பழைய எதிரிகளான சமணர்களும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். எனவே நரகாசுரன் அழிந்ததாக பிராமணியத் தீபாவளிக் கதைகள் குறிப்பிடுவது மகாவீரர் இறந்த நாளையே

ஆகும். விசயநகரப் பேரரசான இந்து சாம்ராஜ்ஜியம் தமிழ்நாட்டில் நுழைந்த கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு தொடங்கியே தீபாவளி இங்கு ஒரு திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

**விநாயகர் சதுர்த்தி**

பிள்ளையார், விநாயகர், கரிமுகன், ஆனைமுகன், கணபதி என்று பல்வேறு பெயர்களால் அறியப்படும் தெய்வமே இன்று தமிழ்நாட்டில் மிகப் பரவலாக வணங்கப்பெறும் கடவுள், ஆனை முகமுடைய இந்தக் கடவுள் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டிற்கு அறிமுகமாகியுள்ளார். எனவே அதற்கு முன் பிறந்த சங்க இலக்கியங்களில் இக் கடவுளைப் பற்றிய குறிப்புகள் இல்லை. இந்தக் கடவுள் வழிபாடு மராட்டியத்தின் தென் பகுதியில் புனா நகரைச் சார்ந்த சித்பவனப் பிராமணர் இடையே தோன்றியது என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பின்னர் கீழைச் சாளுக்கியருடைய வாதாபி நகரத்தில் நிலைகொண்டு அங்கிருந்து தமிழ் நாட்டிற்குள் பரவி வளர்ந்தது என்றும் கூறுவர்.

தேவாரத்தில் இக்கடவுள் கணபதி என்ற பெயராலேயே குறிக்கப் பெறுகிறார். முற்காலப் பாண்டியர் குடைவரை, கட்டடக் கோயில்களில் கணபதி பரிவார தெய்வமாக சேட்டை (மூ)தேவியுடள் இடம் பெற்றுள்ளார். முதலாம் இராசஇராசன் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோயிலில் பரிவார தேவதைகளில் ஒன்றாகக் கணபதியும் சேர்க்கப்பட்டிருக்கிறார். காலத்தால் முந்திய பிள்ளையார் உருவமாகத் தமிழ்நாட்டில் அறியப்பெறுவது காரைக்குடிக்கு அடுத்த பிள்ளையார்பட்டியில் உள்ள பிள்ளையார் சிலையாகும். ஒரு பாறைக் குன்றின் அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலில் புடைப்புச் சிற்பமாக இது

விளக்குகிறது. மனிதச் சாயலைவிட யானையின் சாயலே இச்சிலையில் மிகுதியாகத் தோற்றமளிக்கிறது. இதன் காலத்தைக் கி.பி. ஆறாம நூற்றாண்டு என அறிஞர்கள் கணித்துள்ளனர். இப்பொழுது கற்பக விநாயகர் என வழங்கும் இவ் விநாயகரின் பழைய பெயர் தேசி விநாயகர் என்பதாகும். தமிழ்நாட்டில் பிள்ளையாருக்கு வழங்கும் பல பெயர்களில் தேசி விநாயகர், தேசிக விநாயகர், தாவள விநாயகர் என்பன. தேசி, தேசிகர் என்ற தமிழ்ச் சொற்கள் வியாபாரிகளைக் குறிப்பனவாம். தேசங்கள் பலவற்றிற்கும் செல்வதால் வியாபாரிகள் தேசிகள் எனப்பட்டனர் போலும். நானா தேசிகள் என்பது தென்னிந்தியாவில் இருந்த மிகப்பெரிய வணிகக்குழுவின் பெயர். பிள்ளையார்பட்டித் திருக்கோயில் இன்றளவும் பழைமை வாய்ந்த வணிகச் சாதியான நகரத்தார் எனப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டியாருக்கே உரியது.

ஆவணி மாதம் வளர்பிறை நாலாம் நாள் (சுக்லபட்ச சதுர்த்தி) விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. புனா, பம்பாய் ஆகிய மேற்கு இந்திய நகரங்களில்தான் மிகச் சிறப்பாக இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் இவ்விழாவை அனைத்துச் சாதியினரும் கொண்டாடினாலும் மிகுந்த ஈடுபாட்டோடு கொண்டாடுபவர்கள் செட்டியார் எனப்படும் பலவகைப்பட்ட வியாபாரச் சாதியினைச் சேர்ந்த மக்களே.

விநாயகர் எனப்படும் பிள்ளையார் வழிபாடு, வியாபாரம் செய்த சாதியார் மூலமாகவே தமிழ்நாட்டில் பரவியிருத்தல் வேண்டும். இக்கடவுள் தாவளம் எனப்படும் நெடுவழியில் அமைந்த சத்திரங்களில் வழிபடப்பட்டவராக இருக்கிறார். தாவள விநாயகர் என்ற பெரை

இக்கடவுள் பெற்றிருக்கிறார். வியாபார கணங்களுக்கு வேண்டியர் என்னும் பொருளிலேயே இவருக்குக் கணபதி என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

**பறையரும் மத்தியானப் பறையரும்**

பறையர் எனப்படுவோர் தமிழகத்தின் தொல்களுள் ஒரு பிரிவினர் ஆவர். பறை என்னும் தோற்கருவியின் அடையாளமாகச் இச்சொல் பிறந்திருக்கிறது. உழவுத்தொழில் செய்தல், இறந்த விலங்குகளை அப்புறப்படுத்துதல், அவற்றின் தோலை உரித்துப் பதப்படுத்துதல் இவையெல்லாம் பறையர் செய்த தொழில்களாக இருந்தன. பின்னர், பதப்படுத்திய தோலையும் வாரையும் கொண்டு இசைக்கருவிகள் செய்தல், அவற்றை வாசித்தல், பழுது நீக்குதல் ஆகியனவும் பறையர்கள் ஏற்று வளர்த்த தொழில்களாக இருந்தன.

தோலைப் பதப்படுத்தத் தேவைப்பபடும் மூலப்பொருள் சுண்ணாம்பு ஆகும். சுண்ணாம்பு சேகரித்துக் காளவாசலில் இட்டுச் சுடுகின்ற சுண்ணாம்புப் பறையர் எனப்பட்டனர். நந்தனார் (திருநாளைப் போவார் நாயனார்) இசைக் கருவிகளுக்கு உரிய போர்வைத் தோலும் விசிவாரும் செய்தவர். எனவே அவர் இசைப் பயிற்சி உடையராகவே இருத்தல் வேண்டும். பசுவின் வயிற்றில் இருந்து பெறப்படும் கோரோசனையை எடுத்து மருந்து செய்த மருத்துவப் பறையரும் இருந்தனர். பிற்காலச் சோழப் பேரரசில் பறையர்கள் சிலர் உயர்ந்த பதவிகளில் இருந்தது. கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தி. மான் தோல் தவிர்த்த ஏனைய தோல்கள் தீட்டுக்குக் காரணமாகும் என்பது பார்ப்பனர்களின் வருணக் கோட்பாட்டில் உள்ள வழக்கமாகும்.

வருணக் கோட்பாடு காரணமாகத் தோலைப்பதப்படுத்தும் பறையர் இழிந்த சாதியினர் ஆக்கப்பட்டனர். ஆனால் பறையர்கள் சில சாதியினருக்குச் சமய குருவாக இருந்து பல சடங்குகளையும் நடத்தியுள்ளனர். எனவே சில பழங்கோயில்களில் அவர்களுக்குத் தனித்த மரியாதையும் அளிக்கப்பட்டிருந்தது. பார்ப்பானுக்கு மூப்பு பறையன், கேட்பார் இல்லாமல் கீழ் சாதியானான் என்னும் சொல்லடை இன்றும் தென் தமிழ்நாட்டில் வழங்கி வருகிறது.

திருவாரூர்க் கோயில் திருவிழாவின்போது பறையர் ஒருவர் யானைமீது அமர்ந்து கொடிபிடித்துச் செல்லும் வழக்கம் அண்மைக் காலம் வரை நடைமுறையில் இருந்திருக்கிறது. பார்ப்பாரையும், பறையரையும் தொடர்புபடுத்தும் கதையும் நடைமுறையும் இக் கோயிலில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை வழக்கில் இருந்துள்ளது.

ஒருநாள் திருவாரூர்க் கோயிலுக்குள் பார்ப்பனர்கள் யாகம் செய்து கொண்டிருந்தனர். அந்த வேள்வியின் பயனாகச் சிவபெருமான் ஒரு பறை மகன் வேடத்தில் செத்த கன்றுக்குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு வேள்விக் கூடத்திற்குள் வந்து விட்டார். வந்தவர் சிவபெருமான் என்பதை உணராத பார்ப்பனர், பறையன் உள்ளே வந்து விட்டான். யாகம் தீட்டுப்பட்டுவிட்டது என்று கத்திக் கொண்டே வெளியே ஓடி விட்டான். சினங்கொண்ட சிவபெருமான் நீங்களும் பறையன் ஆகுங்கள் என்று சாபம் கொடுத்துவிட்டார். சாபத்திலிருந்து விமோசனம் தருமாறு பார்ப்பனர்கள் கெஞ்சினர். மனம் இரங்கிய சிவபெருமான், நிரந்தரமாகப் பறையனாவதற்குப் பதில் நாள்தோறும் நண்பகல் முதல் ஒரு நாழிகை நேரம் மட்டும் பறையனாய் இருப்பீர்களாக என்று

சாபவிமோசனம் தந்தார். அதன்படியே திருவாரூர்க் கோயில் பார்ப்பனர்கள் நண்பகலில் (மத்தியானம்) ஒரு நாழிகை நேரம் பறையர்களாகி விடுகிறார்கள் என்பது அங்குள்ளவர்களின் நம்பிக்கை. இதனால் திருவாரூர்க் கோயில் பார்ப்பனர்களுக்கு மத்தியானப் பறையர்கள் என்ற பெயர் ஏற்பட்டது.

பறையரானவர் மீண்டும் பார்ப்பனராக வேண்டுமென்றால் தீட்டுக் கழிக்க வேண்டும். எனவே, திருவாரூர்க் கோயில் பார்ப்பனர்கள் மத்தியானம் ஒரு முறை குளிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இந்த வழக்கமும் அண்மைக் காலம் வரை நீடித்திருந்தது.

**துடுப்புக் குழி**

தொல் பழங்காலத்தில் மனிதனுக்கு வியப்பினை அளித்த நிகழ்வுகளில் ஒன்று மனிதன் பிறக்கும் முறை. தாயின் உடலின் சிறிய துளை வழியே குழந்தை வெளிவருவதும் அதைத் தொடர்ந்து நஞ்சும் கொடியும் வெளியே வருவதும் அவனுக்கு வியப்பையும் அச்சத்தையும் விளைவித்தன. நஞ்சையும் கொடியையும் மந்திரப் பொருளாகக் கருதிப் பிறர் பார்வையில் படாதவாறு குழியிலிட்டு மூடிவிடுவதே இன்றும் வழக்கமாக உள்ளது. குறைந்த வலியுடன் தாயினையும் குழந்தையினையும் உயிர் இழப்போ பிற இழப்புக்களோ இல்லாமல் பிரித்துத் தந்ததற்காகப் பெண்ணின் பிறப்புறுப்பு (யோனி) தெய்வீக அருளுடையதாகக் கருதப்படுகிறது. நஞ்சும் கொடியும் தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்டு அவற்றைப் புதைத்த இடம் தீட்டுக்காலம் முடியும் வரை வழிபடு இடமாகிறது. குழந்தைப் பேற்றுத் தீட்டைக் கழிக்கும் நாளன்று (பெரும்பாலும் 10

அல்லது 16 ஆம் நாள்) துடுப்புக்குழி போடுதல் அல்லது தொடுப்புக் குழி போடுதல் என்னும் சடங்கு நடைபெறுகிறது.

குழந்தைப் பேறு நாள் தொடங்கித் தீட்டுக் கழிக்கும் நாள் வரை பெற்றவள் யோனித் தெய்வத்தின் ஆளுகையில் இருக்கிறாள். எனவே அந்தக் காலப்பகுதி விலக்கிற்குரிய காலமாகக் கருதப்படுகிறது. தீட்டுக் கழிக்கும் சடங்கும் ஆண் விலக்கிற்கு உரியதாகக் கருதப்படுகிறது.

கிராமப் புறங்களில் பெரும்பாலும் வீட்டின் பின்புறம் உள்ள மண் தரையில் ஆழமாகக் குழிதோண்டி நஞ்சையும் கொடியையும் புதைக்கின்றனர். பின்னர் அந்த இடத்தைச் சுற்றி ஓலை அல்லது தட்டி கொண்டு வேலியிட்டு மறைக்கின்றனர். குழந்தை பெற்ற தாய் தீட்டுக் காலம் கழியும் வரை அம் மறைப்பினுள் நின்று கொண்டு குளிக்கிறாள். அவள் குளித்த நீர் வெளியில் வராதவண்ணம் அந்தக் குழிக்குள்ளேயே இறக்கி விடப்படுகிறது.

பதினறாம் நாள் தீட்டுக் கழிக்கும் சடங்கு குழியின் முன்னர் நடைபெறுகிறது. மூன்று இலைகளில் உணவினைக் குழியின் முன்னால் படைக்கிறார்கள். சோற்றின்மீது கருவாட்டுக் குழம்பு ஊற்றுகிறார்கள். அவித்த முட்டையும், காயமும் கருப்பட்டியும் சுக்கும் சேர்த்த மகப் பேற்று மருந்து உருண்டையினையும் இலைகளின்மீது வைக்கிறார்கள். பின்னர் சோற்றின்மீது ஒரு சிறிய மரக்குச்சியினை ஊன்றி வைக்கிறார்கள். செம்பு நிறையத் தண்ணீர் வைத்து, அதன்மீது உதிரிப் பூக்களைத் தூவுகிறார்கள். பிறகு சூடத்தைப் பொருத்தி ஆரத்தி காட்டி, துடுப்புக்குழி நாச்சியாரே! இடுப்புக் குறுக்கு நோகாம பிள்ளையையும் தாயையும் காப்பத்தம்மா! என்று சொல்லிச் சாமி

கும்பிடுகிறார்கள். பிறகு மூன்று இலையில் உள்ள உணவையும் குழந்தை பெற்ற தாய், தொட்டுப்பிடித்த பெண் (மகப்பேற்று நேரத்தில் உதவியவள்), மகப்பேற்றுக்கு உதவிய மருத்துவச்சி (நாவிதர் குடும்பத்துப் பெண்) ஆகிய மூவரும் சாப்பிடுகிறார்கள். சாமி கும்பிடும் போதும் அக்குழிக்கு முன் ஒரு நிமிட நேரம் குழந்தையைக் கிடத்தி எடுத்துக் கொள்கிறார்கள்.

இந்தச் சடங்கு முழுவதும் பெண்களாலேயே நடத்தப்படுகிறது. படைக்கப்பட்ட உணவினைப் பார்க்கக்கூட ஆண்களுக்கு அனுமதி இல்லை. சைவ வேளாளர் தொடங்கி பிராமணரல்லாத எல்லாச் சாதியினரிடையேயும் இச் சடங்கு நிகழ்வதைத் தென்மாவட்டங்களில் இக்கட்டுரையாளர் கண்டிருக்கிறார். சைவ வேளாளர் வீடுகளில் மட்டும் கருவாட்டுக் குழம்பிற்குப் பதிலாகக் காரக் குழம்பு என்னும் மிளகுக் குழம்பு ஊற்றப்படுகிறது.

**பண்பாட்டு அசைவுகள்**

இக்கட்டுரையாளர் சில ஆண்டுகளுக்கு முன்னர் நெல்லை மாவட்டத்தில் கண்ட நிகழ்ச்சி இது. அது ஒரு சிறிய நகரம். ஆனாலும் தெருக்கள் சாதிவாரியாகவே அமைந்திருக்கின்றன. இருபத்தெட்டு வயது உடைய இளைஞர் ஒருவர் விபத்தொன்றில் இறந்து போனார். அவருடைய மனைவிக்கு வயது இருபத்து மூன்று. மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை இருந்தது.

அந்தப் பிற்பகல் நேரத்தில் பிணத்தை எடுத்துச் செல்ல ஊரே திரண்டிருந்தது. ஆண்கள் இழவு வீட்டிற்கு வெளியே பெஞ்சுகளில் அமர்ந்திருந்தனர். வேறு சிலர் நின்று

கொண்டிருந்தனர். ஒருபுறத்தில் இறுதி ஊர்வத்திற்கான மேலச் சத்தமும் அதற்குரிய நாக சுரம் ஒலித்துக் கொண்டிருந்தன. வீட்டிற்குள் பெண்கள் உரத்த குரலில் அழுது கொண்டிருந்தனர்.

திடீரென்று மேளச் சத்தம் நின்றது. இழவு வீட்டிற்கு உள்ளிருந்து ஒரு மூதாட்டி வெளியில் வந்தார். பேசிக் கொண்டிருந்த ஆண்கள் பேச்சை நிறுத்தினர். அம் மூதாட்டியின் கையில் தண்ணீர் ததும்பி வழியும் செம்பொன்று இருந்தது. அந்தத் தண்ணீர்ச் செம்பை அவர் கூட்டத்தின் நடுவில் வைத்துவிட்டு நிமிர்ந்தார். அவரது வலக்கையில் ஏதோ மடக்கி வைத்திருந்தார். கூர்ந்து பார்த்ததில் அவை உதிரிப் பிச்சி (முல்லை)ப் பூக்கள் என்று தெரிந்தன. அவர் கூட்டத்தை ஒரு முறை நிதானமாகத் திரும்பிப் பார்த்தார். பின்னர் கையில் இருந்த பிச்சிப் பூக்களில் ஒன்றைச் செம்பில் நிறைந்த நீரின்மீது இட்டார். கூட்டம் மூச்சடக்கியது போல் அமர்ந்திருந்தது. பின்னர் இன்னொரு பூவைச் செம்புத் தண்ணீரின் மேலிட்டார். இரண்டு பூக்கள் செம்பு நீரில் மிதப்பது எல்லார் பார்வைக்கும் தெரிந்தது. கூட்டத்தில் இருந்த பெரியவர்கள் ச்சூ..ச்சூ என்று அனுதாபத்தோடு ஒலி எழுப்பினர். பின்னர் அம் மூதாட்டி மூன்றாவது பூவையும் செம்பு நீரில் இட்டார். கூட்டம் மறுபடியும் அனுதாப ஒலி எழுப்பியது. ஒன்றிரண்டு நொடிகள் கழித்த பிறகு அந்தப் பெண் நீரிலிட்ட மூன்று பூக்களையும் கையில் எடுத்துக் கொண்டு செம்பு நீரைத் தரையில் கொட்டிவிட்டு விடுவிடென்று இழவு வீட்டிற்குள் சென்றுவிட்டார். கூட்டத்தில் அனுதாப ஒலியோடு பேச்சும் எழுந்தது. ம் பாவம் … என்னத்தச் சொல்றது.

கூட்டத்தில் இருந்த பெரியவரிடம் இது பற்றி கேட்டபோது கிடைத்த பதில், இது தெரியலையா ஒனக்கு … தாலி அறுக்கற பொம்பளப்புள்ள மூணு மாசமா முழுகாக இருக்கு. அந்தப் பொண்ணு முழுகாக இருக்கற விஷயத்தை ஏன் ஊருல சொல்லனும். கட்டுரையாளரின் கேள்வி எரிச்சலோடு அமைந்திருந்தது. ஒரு பெரியவர் இடைமறித்துச் சொன்னார். பேரப்புள்ள, ஏழு மாசம் கழிச்சு அவபுள்ள பெத்தா நீ கேக்க மாட்டியா, எப்படிப் புள்ள வந்திச்சுன்னு.

இதோ, இந்தப் பெண் இறந்து போனவனுக்காக வயிறு வாய்த்திருக்கிறாள். ஏழு மாதம் கழித்துப் பிறக்கப் போகும் குழந்தைக்குத் தந்தை இன்றைக்கு இறந்து போனவன் தான் என்று ஊரும் உலகும் அறிய அந்தச் சடங்கு பிரகடனம் செய்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் பேசப்படும் வரைவு கடாதல் துறையின் பெருமை கட்டுரையாளருக்கு அப்பொழுதுதான் புரிந்தது. பிறக்கின்ற எந்த மனித உயிரும் தந்தை பெயர் அறியாமல் பூமிக்கு வரக்கூடாது என்ற சமூகக் கட்டுப்பாடு புரிந்தது.

இந்தச் சோகத்துக்கு ஊடே சிறிய மகிழ்ச்சி தந்த மற்றொரு செய்தியும் உண்டு. ஒரு பண்பாடு பேச்சே இல்லாத ஒரு சின்ன அசைவின் மூலம் எவ்வளவு நுட்பமாகவும், மென்மையாகவும் தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறது.

**தமிழக பௌத்தம் எச்சங்கள்**

தமிழ்நாட்டில் இன்றும் படித்தவர் கூட இப்படித் தான் சொல்கிறார்கள். “சமணமும் பௌத்தமும் வடநாட்டில் பிறந்த வளர்ந்த மதங்கள். தமிழ்நாட்டிற்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இல்லை.” உண்மையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை சமணமும் பௌத்தமும்

தமிழ்நாட்டில் கொடி கட்டிப் பறந்த மதங்கள் ஆகும். கடைக்கோடிச்ச சிற்றூர் வரை அவை பரவி இருந்தன. இன்றளவும் திண்டிவனம், வந்தவாசி, காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் சமணர்களாக வாழ்கிறார்கள். இப்பகுதியில் சமணக் கோயில்கள் உள்ளன.

சைவ, வைணவ, சுமார்த்தத் துறவிகள் துறவுக்கு அடையாளமாகச் சிவப்பு ஆடை அணிகின்றனர். துறவு நெறியை இந்தியாவில் உருவாக்கி வளர்த்தவை சமண பௌத்த மதங்கள் தாம். பௌத்த மதத்தின் துறவிகள் தாம் முதலில் செவ்வாடை அணிந்தவர்கள். சீவர ஆடை அணிந்தவர்கள் என்று அவர்களைத் தேவாரம் கண்டிக்கிறது. பௌத்த மதம் அழிந்த பிளகு சைவ, வைணவ, சுமார்த்தத் துறவிகள் சிவப்பு ஆடை அணியத் தொடங்கினர்.

பௌத்தம் மதம் தந்த மற்றொரு வழக்கம் தலையினை மொட்டையடித்துக் கொள்வது. வேத, புராணங்களிலோ, தேவார திவ்ய பிரபந்தங்களிலோ இவ்வழக்கத்தைப் பற்றிய பேச்சே இல்லை. (தமிழ்நாட்டுப் பிராமணர்கள் இவ் வழக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.) தலை முடியினைப் பௌத்த துறவிகள் மழி கத்தியினால் களைந்து கொள்வார்கள். பௌத்த மதத் துறவிகள் கையில் வைத்திருக்கக்கூடிய எட்டுப் பொருள்களில் தலைமழிக்கும் கத்தியும் ஒன்று.

அரச மரம் பௌத்தர்களுடைய புனிதச் சின்னமாகும். பௌத்த மதத்தில் அரசமரம் ஞானத்தின் குறியீடாகக் கருதப்படுகிறது. அதைப் பின்பற்றித் தமிழர்களும் அரசமரம் வழிபாட்டைக் கொண்டிருந்தனர். பௌத்தமதம் தமிழ்நாட்டில் செழித்திருந்த ஊர்களில்

ஒன்று போதி மங்கை எனப்படும். சாக்கியர்தம் போதி மங்கை என்று இந்த ஊரை அப்பர் தேவாரம் குறிப்பிடுகின்றது. போதிமரம் என்பது அரசமரத்தைக் குறிக்கும்.

தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டி மண்டபம் என்ற கலைவடிவம் பௌத்த மதத்திலிருந்து பிறந்தது. பிற மதவாதிகளோடு வாதம் நடத்தி வென்று தங்கள் மதத்தைப் பரப்புவது பௌத்தத் துறவிகளின் வழக்கம். பௌத்தத் துறவி ஊர்ப் பொது இடத்தில் அரசமரத்தின் கிளை ஒன்றை நாட்டிவிட்டுப் பிற சமயவாதிகளை வாதத்திற்கு அழைப்பது வழக்கம்.

ஆங்கிலக் கல்வி வருவதற்கு முன்னர் குருகுலங்களே பள்ளிகளாக இருந்தன. இக் குருகுலங்களில் பௌத்தத் துறவிகளும் கற்றுக் கொடுத்தனர். இக் குருகுலத்து மாணவர்களும் அமாவாசை (கார் உவா) நாளும் பௌர்ணமி (வெள் உவா) நாளும் விடுமுறை நாள்களாகும். இந்த நாட்களில் ஒரு வட்டாரத்தில் உள்ள பௌத்தத் துறவிகள் அனைவரும் கூடி சங்கக் கூட்டம் நடத்துவர். பௌத்தத் துறவிகள் அதற்குச் செல்ல வேண்டி இருந்ததால் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. பௌத்த நாட்களே விடுமுறை நாட்களாகக் கொண்டாடப்பட்டு வந்தன. இந்த உவா நாள்களில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் அரிசியையும், காய்கறிகளையும், காணிக்கையாகக் கொண்டு கொடுத்தனர். இதுவே வாவரிசி (உவா அரிசி) எனப்படும் காணிக்கையாகும். இன்றும் இலங்கையில் வாழும் பௌத்தச் சிங்களர் போயா தினம் என்றும் இந்த நாட்களை அறிவிப்பதை இலங்கை வானொலி மூலம் அறியலாம்.

உவா நாள் கூட்டங்கள் நடந்த மலைப்பகுதிகளுக்கு உவா மலை அல்லது ஓவா மலை என்று பெயர். இன்றும் தமிழ்நாட்டில் எண்ணற்ற மலைப் பகுதிகளுக்கு உவா மலை அல்லது ஓவா மலை என்று பெயர் வழங்கப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசியல் உலகில் சூறாவளியாகக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சொற்கள் உருவெடுத்தன. இவை புத்தம், தர்மம், சங்கம் ஆகிய பௌத்த மும்மைக் கோட்பாட்டின் மறுபிறவியேயாகும். இவையெல்லாம் தமிழ்நாட்டில் வாழ்ந்த மறைந்த பௌத்த மதத்தின் எச்சங்கள் ஆகும்.

**சமணம்**

பள்ளி என்ற சொல்லுக்குப் படுக்கை என்று பொருள். பள்ளியறை என்றால் படுக்கையறை, பள்ளி கொள்ளுதல் என்றால் உறங்குதல். கிறித்துவுக்கு இரண் நூற்றாண்டிற்கு முன்னர் தமிழகம் வந்த சமண மதத்தின் திகம்பரக் துறவிகள் மலைக் குகைகளில் தங்கத் தொடங்கினர். சமண மதத்தின் கொடையாளர்கள் இவ்வகையான ஆடையில்லாத் துறவிகளுக்காக அவர்கள் தங்கும் குகையின் தரைப் பகுதியைப் படுக்கைப் போலச் சமதளமாகச் செதுக்கிக் கொடுத்தனர். அந்தக் குகைகளுக்கு அருகில் மழைத் தண்ணீர் தேங்குவதற்கு ஒரு சிறிய குழி வெட்டப்பட்டிருக்கும். அந்தத் துறவிகளிடம் நீருண்ணும் பாத்திரம் கூடக் கிடையாது. அவர்கள் எட்டுநாள் (அட்டோபவாசம்), பதினாறு நாள் (சோடசோபவாசம்) உண்ணா நோன்பு இருக்கும் வழக்கம் உடையவர்கள். உண்ணா நோன்புக் காலத்தில் சேந்தி அருந்துவார்கள். மக்களின் மருத்துவ உதவிக்காகச் சில மூலிகைகளும் ஏடுகளும் மட்டும் அந்தக் குகையில்

இருக்கும். காலத்தால் முற்பட்ட தமிழ் (தமிழி – தமிழ் - பிராமி) எழுத்துக்கள் இவ்வகை சமணக் குகைத் தளங்களிலிருந்தே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட குகைத் தளங்களை மதுரைக்கருகில் அழகர் மலை, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருவாதவூர், சமண மலை, நாகமலை ஆகிய இடங்களில் இன்றும் காணலாம். ஆடையில்லாச் சமணத் துறவிகள் பசித்த நேரத்தில் மட்டும் அருகிலுள்ள ஊருக்குள் நுழைந்து கையினிற் பிச்சை ஏற்று உண்டு செல்வர். கல்வி, மருந்து, உணவு ஆகிய மூன்று கொடைகளும், அடைக்கலம் அளித்தலும் சமண மதத்தின் தலையாய அறங்கள் ஆகும். இவற்றுள் சோற்றுக் கொடை (அன்னதானம்) இல்லறத்தார்க்கு மட்டுமே இயலும். ஞானதானம் செய்வதற்காகச் சிறுபிள்ளைகளைத் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்து ஆடை இல்லாத துறவிகள் கற்றுக் கொடுத்தனர். பள்ளித் தளத்தின் (கற்படுக்கைகளின்) மீதுதான் அமர்ந்திருக்க இயலும். பள்ளிகளின்மீது பிள்ளைகள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம் பள்ளிக்கூடம் ஆயிற்று. கல்லூரி என்பது இன்று உயர்கல்வி நிலையத்தைக் குறிக்கிறது. கல்லூரி நற்கொட்டிலா (995) என்ற சீவக சிந்தாமணித் தொடரிலிருந்து இந்தச் சொல் பெறப்பட்டது. சீவக சிந்தாமணி சமண நூலாகும். ஆண் துறவிகளைப் போலவே பெண் துறவிகளும் ஆசிரியராக இருந்துள்ளனர். கல்வி கற்பதற்குப் பிறப்பினை (சாதியை) ஓர் அளவுகோலாகச் சமணம் கொண்டதில்லை. அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு சமணத்திலிருந்து பிறந்ததாகவே கொள்ள வேண்டும். பிற்காலச் சமணத்தில் கல்விக்கென்றே வாக்தேவி என்ற தெய்வமும் பிறந்தது. இதுவே வைதிக நெறியின் சரஸ்வதிக்கு முன்னோடியாகும். சரஸ்வதிக்குரிய வெள்ளுடை

என்பது சமணப் பெண் துறவிகளின் வெள்ளையாடை (சுவேதாம்பரம்) மரபிலிருந்து வந்ததாக இருக்கலாம்.

தேசிய இயக்கத்தின் வளர்ச்சியின் உண்ணா நோன்பு என்பது மிகப் பெரிய போராட்டக் கருவியாயிற்று. உண்ணா நோன்புக் காலத்தில் தண்ணீர் மட்டும் அருந்துவது சமணர்களிடமிருந்து நாம் கற்றுக்கொண்டதாகும்.

# அலகு – 5

## உரைநடை வளர்ச்சி

**நா.வானமாமலை**

ஒரு மொழியின் வளர்ச்சி, தோற்றத்தின் தொன்மையிலோ இலக்கிய – இலக்கணச் சிறப்புக்களிலோ, பேசுவோரது எண்ணிக்கையிலோ மட்டும் மதிப்பிடப்படுவதில்லை. எந்த மொழியும் புதிய வளர்ச்சிகளைக் கையாளும் வகையில் செழுமையும் வளமும் கொண்டிருந்தால்தான் உயிரோட்டத்துடன் அம் மொழியினைப் பேசுவோருக்கு அது பயன்படுவதாக அமையும். ஒவ்வொரு வரலாறிலும் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய சூழ்நிலைக்கேற்ப மொழியின் உரைநடை அமைப்பை உருவாக்கினர். சொல்லாக்கம், புதிய சொல்லாக்கம், தொடரைப்பு, கருத்துக்களைத் தெளிவாகக் காட்டும் தன்மைகள் உரைநடை வளர்ச்சிக்கு வளம் சேர்த்தன. குழு சமுதாமோ, நிலவுடைமைச் சமுதாயமோ சொற்களை, தொடர்களை உருவாக்கவில்லை. மாறாக மக்களின் வாழ்க்கை முறை, புதிய கண்டுபிடிப்புகள், சொல்லாக்கங்கள், கலைச்சொற்களை உருவாக்கும் பான்மை போன்றவை உரைநடையை செறிவாக்குகிறது.

நா.வானமாமலை தனக்கென தனித்த நோக்கில் இந்நூலைப் பிரித்துக் காட்டுகிறார். தமிழ் உரைநடை வளர்ச்சியை அறிவியல் தன்மையிலும், ஆராய்ச்சித் தன்மையிலும் அணுகுவதற்கு உரைநடைகளின் தொடக்கக் காலம், இடைக்காலம், புதிய துறைகளில் உரைநடை, பாரதி காலம், பாரதி பிற்காலம், தற்காலம் என்ற தலைப்புகளில்

ஆய்வுசெய்துள்ளார். உரைநடையினை அறிவதற்கம் தெளிவதற்கும் வழிகாட்டுவதாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன என்பது நிதர்சனம்.

**1. தொடக்கக் காலம்**

உணர்ச்சி வெளியீட்டிற்கு ஏற்ற மொழியுருவம் கவிதை சிந்தனை வெளியீட்டிற்கும் நாவல் கதைகளில் மனப்படிமங்களை வெளியிடுவதற்கும் ஏற்ற கருவி உரைநடை. இவற்றுள் முதலில் தோன்றியது கவிதை. பின்னர் தோன்றியது உரைநடை. அறிவியல், தத்துவம், வரலாற்று உண்மைகளை, சிந்தனைகளை வெளியிடும் உரைநடை நூல்களைப் படைத்தார்கள். தமிழிலே பண்டைக்கால நூல்கள் செய்யுளிலே எழுதப்பட்டவை. அவை நீதியையும், தர்மத்தையும் போதிக்கும் நூல்கள். பண்டை மக்கள் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக்காட்டும் நூல்களும் உள்ளன. பொழுதுபோக்கிற்காகப் படித்துச் சுவைக்கக் கூடிய கதைகளும், கற்பனைகளும் நிரம்பிய நூல்களும் உண்டு.

**நாணயங்கள் – பிராமிக் கல்வெட்டுக்கள்**

தமிழ்நாட்டில் போடி நாயக்கனூரில் மௌரியர் நாணயங்கள் அகப்பட்டுள்ளன. சாணக்கியன் தென்னாட்டு வாணிகத்தைப் பற்றியும், முத்து, அகில், ஆடைகள் இவற்றை மகத வணிகர்கள் தென்னாட்டிலிருந்து பாடலிபுரத்திற்குக் கொணர்ந்தது பற்றிக் குறிப்பிடுகிறான். போடி நாயக்கனூர் நாணயங்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு. இவ் வாணிகத் தொடர்பு ஏற்பட்ட காலத்திலேயே, வாணிகத் தொழில் முறைக்கு உரைநடை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் செதுக்கப்பட்டவை எனக் கணிக்கப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் பல பகுதிகளில் கிடைக்கின்றன. அவற்றின் வரிவடிவம் இந்திய நாடு முழுவதிலும் வழங்கி வந்த பிராமி வரிவடிவம் என்றும் ஐராவதம் மகாதேவன் கூறுகிறார் (Tamil Brahmi Inscriptions). இக்கல்வெட்டு வாசகங்களில் பெரும்பாலானவை சமணத் துறவிகளுக்குக் கல் படுக்கையும், அறையும் வெட்டுவித்ததையும் அவர்களுக்கு நடுப்பகல் உணவிற்கு ஏற்பாடு செய்ததையும் தெரிவிக்கின்றன. வெட்டுவித்தவர்களின் பெயரையும் அவர்கள் செய்த அறச்செயல்களையும் கூறுகின்றன. தொடக்கக் கால உரைநடையைப் பற்றி அறிந்து கொள்ள இக் கல்வெட்டுக்களே சான்றுகளாக அமைகின்றன.

**சங்க இலக்கியங்களின் அடிக்குறிப்புகள்**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலும் அதன்பின் ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும் உரைநடையைப் பற்றி அறிந்துகொள்ள கல்வெட்டுக்களைத் தவிர இலக்கியச் சான்றுகளும் உள்ளன. தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலம் சுமார் மூன்றாம் நூற்றாண்டாகலாம் என்று வையாபுரிப் பிள்ளை கூறுகிறார். அக்காலத்திலேயே செய்யுளின் விளக்கக் குறிப்புகள் செய்யுளின் அடியில் இணைக்கப்பட்டன என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

**நற்றிணை** இரண்டாம் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்பட்டுத் தலைவன் சொல்லியது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் சொற்றதூஉம் ஆம் (155), பொருள்வயிற் பிரிந்த தலைவன் பருவம் உணர்ந்த நெஞ்சிற்கு உரைத்தது (157). வரையாது

நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாய தலைமகள் சொல்லியது, தோழி தலைமகளுக்குச் சொல்லுவாளாய் தலைமகள் கேட்பச் சொல்லியதூஉம் ஆம் (272).

**பரிபாடல்** கார்ப் பருவத்து வையை நீர் விழவணியில் பல்வேறு வகைப்பட்ட இன்பம் கூறி இவ்வகைப்பட்ட இன்பத்தையுடைய நின்னையும் நினைத்திலர் என வையையை நோக்கித் தலைமகன் கேட்பத் தோழி இயற்பழித்தது (12). காதல் பரத்தையுடன் புனல் ஆடிய தலைமகன் தோழியை வாயில் வேண்ட, அவன் புனல் ஆடியவாறு கூறி வாயில் மறுத்தது (16).

**பதிற்றுப்பத்து** "கலன் அணிக" என்று அவர்க்கு ஒன்பது காப் பொன்னும், நூறாயிரம் காணமும் கொடுத்துத் தன் பக்கத்துக் கொண்டான் அக் கோ (ஆறாம் பத்து). தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று "கோயில் உள்ள எல்லாம் கொண்மின்" என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசு கட்டிற் கொடுப்ப அவர் " யான் இரப்ப இதனை ஆள்க" என்று அமைச்சுப் பூண்டார்.

மேற்கண்டவை இலக்கியத்தில் கையாளப்பட்ட உரைநடைக்கு எடுத்துக்காட்டுகள் ஆவன. இவை செய்யுள் நடை போலவே செறிவுடையதாகவும் அருஞ்சொற்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றன.

**பல்லவர் கால உரைநடை**

பல்லவர் காலத்தில் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் காணப்படும் உரைநடை வேறுவிதமானது. செப்பேடுகளின் முதல் பகுதி கிரந்த வரிவடித்தில், சமஸ்கிருத

மொழியில் செதுக்கப்பட்டிருக்கிறது. பல்லவப் பரம்பரையின் பிரகஷ்தி கூறும். பிற்பகுதி வியவஸ்தை அல்லது செய்திகளைக் கூறும். பிற்பகுதி தமிழில் இருக்கிறது. இவ் உரைநடை நெகிழ்ச்சியானதாகவும், எளிதானதாகவும் காணப்படுகிறது. இதனைப் பேச்சு வழக்கு மொழி என்றும் கூறலாம். இதன் உள்ளடக்கம் இலக்கியப் பொருள் அல்ல. உலக வியவஸ்தை, நில உரிமை மாற்றம், அரசியல் ஆணைகள், அவை நிறைவேற்றப்படும் முறை, கோயில் நிருவாகம் முதலிய புதிய உள்ளடக்கத்திற்கேற்ற, மக்களது பேச்சு வழக்கிற்கு நெருங்கிய நடையில் அவை எழுதப்பட்டன. பெரும்பான்மையான செப்பேடுகள் பிராமணர்களுக்கும் சமணப் பள்ளிகளுக்கும் அளிக்கப்பட்ட அறக்கொடைகளின் ஆவணங்களாதலால், அவர்களுக்குப் பழக்கமான சொற்கள் மிகுதியாக வருகின்றன. இவை மக்களுக்கு விளங்காவிடினும், தானம் பெறுவோர்க்கு விளங்கக் கூடியவையே.

**களவியல் உரை**

இவ் இரண்டு நடைகளுகம் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பெரிதும் வளர்ச்சி பெற்றன. இலக்கிய உரைநடை ஒன்பதாம் நூற்றாண்டில் களவியில் உரையில் வளர்ச்சி பெற்ற நிலையில் காணப்படுகிறது.

இடைக்காலம்

பல்லவர் காலத்தையொட்டி வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டது. நீர்ப்பாசன வளர்ச்சியால் பரவலாக விரிவுபடுத்தப்பட்ட விவசாயப் பொருளாதாரம் மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை உருவாக்கியது. தொல்காப்பியர் காலத்து வாழ்க்கை முறை மாறிய

பின்னர், தொல்காப்பியப் பொருள் இலக்கணச் சூத்திரங்கள் பழமையானவை ஆயின. இலக்கிய மரபில் புது மரபுகள் தோன்றின. எனவே பழைய கருத்துக்களின் விளக்கமாகவும், புதிய கருத்துக்களின் முன்னுரையாகவும், களவியலுரையாசிரியர் உரைநடையைப் பயன்படுத்தினர். பாண்யர் கல்வெட்டுக்களும், பல்லவர் கல்வெட்டுக்களும், உரைநடையை எளிதாக்கியுள்ளன. பல புதிய சமுதாய மக்களால் தோன்றிய கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும் விளக்கும் முறையில் உலகியல் உரைநடையும் வளர்ச்சி பெற்றது.

சோழர் காலக் கல்வெட்டுகளில் உரைநடை

சோழப் பேரரசின் வளர்ச்சிக் காலத்தில் அரசியல் அமைப்புக்களும் கிராம ஆட்சிமுறையும் தோன்றின. பல புதிய நில உறவுகளும் வரி விதிப்பு முறைகளும் நீதிநெறி முறைகளும் உருவாயின. பணப் புழக்கமும் அதிகரித்தது. இச்சூழ்நிலையில் தோன்றிய ஆணைகளையும் முடிவுகளையும் வெளியிட உரைநடை கையாளப்பெற்றது. கோயில் மதிற்சுவர்களில் ஆவணங்களை எழுதி வைக்கும் வழக்கம் முன் காலத்தைவிடப் பெரிதும் அதிகமாயிற்று. பொது மக்களிடையே நிகழும் ஒப்பந்த இசைவுத் தீட்டுக்கள் பனையோலை மீது வரையப்பட்டன. சோழர் காலத்தில் முற்கால பிராமி எழுத்துக்களும், வட்டெழுத்துக்களும் மறைந்து, புதிய சோழர் எழுத்துக்கள் தோன்றின. இவற்றின் எளிமை காரணமாக, எழுத்தறிவு பரவியது. கி.பி. 919 முதல் 1245 வரையுள்ள காலத்தில் உரைநடை வளர்ந்து வந்த முறையைக் காட்டுவன.

**உத்திரமேரூர்க் கல்வெட்டு**

“ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பனிரண்டாவது உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்துச் சபையேயாம் இவ்வாண்டு முதல் ஊர் ஸ்ரீமுகப்படி ஆணை

ஸ்ரீஆக்ஞையினால் தத்தனூர் மூவேந்த வேளாண் உடன் இருக்க நம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்திடுவாராக வியவஸ்தை செய்தோம் உத்திரமேரூ சதுர்வேதி மங்கலத்துக்குச் சபையேயாம்.”

உத்திரமேரூர்க் கல்வெட்டு கி.பி. 919 இல் முதற் பராந்தக சோழன் காலத்தில் வரையப்பட்டது. இது உத்திரமேரூர் சபையார் சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வார வாரியம், பொன் வாரியம் ஆகிய நிறைவேற்றுக் கழகங்களை நிறுவவதற்குரிய விதிகளையும் முறைகளையும் எடுத்துணர்த்துகிறது.

“மூவரின் வியவஸ்தை இவ்வூருடையர் திருவிரவீஸ்வரம் உடையார் கோயில் திருநடை மாளிகையிலே இப்படிக் கல்வெட்டக் கடவதாக நிச்சயித்து இப்படி வியவஸ்தை பண்ணினோம் பணிப்பணியால் ஊர்க்கணக்கு சாத்தனூருடையான் பண்டித பிரியன் எழுத்து இவை பணிப்பணியால் ஊர்க்கணக்கு சேய்ஞலுருடையான் அலங்காரப்பிரியன் எழுத்து இவை பணிப்பணியால் ஊர்கணக்கு இலங்கூருடையான் மூலபரிஷைப்பிரியன் எழுத்து இவை பணிப்பணியால் ஊர்க்கணக்குக் காட்டுரையனார் பட்டப்பிரியன் எழுத்து ஸ்வஸ்திஸ்ரீ”

பண்டைய விதிகளில் சில மாறுதல்களைச் செய்கிறது. மாற்றிய விதியை மீறுவோருக்குத் தண்டனைகள் இவையெனச் சுட்டிக்காட்டுகிறது. முதல் பகுதி திருத்தம் எனவும்,

இரண்டாம் பிரிவைத் தண்டனைப் பகுதி என்றும் கூறலாம். முதற் கல்வெட்டுக் காலத்திற்குப்பின் சபையின் அலுவல்கள் விரிவடைந்துவிட்டன. அதனையொட்டிச் சபையின் ஆளுங்கணங்களின் பணிகளைச் செய்வோரது பொறுப்புகளும் அதிகாரமும் மிகுதியாயின. அதனை ஒழுங்குபடுத்தக் குடவோலை முறை விதிகள் மாற்றப்பட்டன. உரைநடை வளர்ச்சி பெற்ற முறைக்கு இக் கல்வெட்டு வாசகங்கள் எடுத்துக்காட்டுகளாகும்.

**குறள் உரைகள்**

சோழர் கால இறுதியிலும், அதற்குப் பின்னும் பழங்கால இலக்கிய இலக்கண நூல்களையும் சமய நூல்களையும் கற்கும் பேரார்வம் தோன்றியது. சங்க நூல்கள் சிலவற்றிற்கும் திருக்குறளுக்கும் சீவக சிந்தாமணிக்கும் திருக்கோவையாருக்கும் சிறந்த உரைகள் தோன்றின. இவ்வுரையாசிரியர்கள் நூல்களைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு நேரில் கற்பிக்கும் முறையிலேயே உரை எழுதினார்கள். அவ்வுரைகளில் தருக்க முறைப்பட்ட விவாதங்களும் போதனா முறைப்பட்ட விளக்கங்களும் காணப்படுகின்றன. தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சமய நூல்களையும் கற்கும் ஆர்வம் உரையவர்களுக்கு அந்நூல்களை விளக்கிக் கூறுதலே. எனவே, இக்காலத்தில் எழுந்த உரைநடை புலமை மிக்க உரைநடையாகும்.

**கருத்து விளக்கம் – மதிப்பீட்டு விளக்கம்**

திருக்குறள் உரையாசிரியர்களது உரைநடையை இருவகைப்படுத்திக் கூறலாம். மணக்குடவர், காலிங்கர், பரிதியார் ஆகியோர் முதலாசிரியரது கருத்துணர்ந்து விளக்கம்

கூற முயன்றனர். இதனைக் கருத்து விளக்கம் (elucidation) என்று கூறலாம். பரிமேலழகர் தமது கொள்கைகளின்படி ஆசிரியர் கருத்தை மதிப்பிட்டு, அதனையே ஆசிரியர் கருத்தாகக் கூறுகிறார். இம் முறையை மதிப்பீட்டு விளக்கம் (Interpretation) என்றும் கூறலாம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)

**பரிமேலழகர்** இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும் என்றவாறு. பின் தேவனாய் அவ்வறப் பயனுகர்தல் ஒரு தலையாதலின் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார். இதனால் இல் நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது.

**மணக்குடவர்** இல்வாழ்க்கை வாழும் படியிலே வாழுமவன் உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவன்.

**பரிதியார்** பூமியிலே இல்லறம் நடத்தும் முறையாலே நடப்பவன் தேவர்க்கு நிகரானவன் என்றவாறு.

பரிமேலழகர் உரையில் முற்கூறிய, தன் கொள்கையின் நோக்கில் பிறர் வாக்கைக் காணும் குறையுள்ளது. இது பின்னவர்களிடம் இல்லை. சுருக்கமாகவும் எளியதாகவும் இவர்கள்

உரைநடை அமைந்துள்ளது. இவர்கள, வலிந்து பொருள் கூறாது, நேர்ப்பொருள் கூறுகிறார்கள்.

**சமய நூல் உரைகள்**

தர்க்கரீதியான விவாதங்களுக்குப் பொருத்தமான உரைநடை நீலகேயிலும் மற்றைச் சமண நூல்களும் விவாத நடையைப் பயன்படுத்துகின்றன. இந்நூல்களில் பரபக்க நிராகரணமும் சுபக்க ஸ்தாபனமும் ஆகிய இரு பகுதிகள் இருக்கின்றன. முதலாவது எதிரிகள் கருத்தைத் தகர்ப்பது. இரண்டாவது தன் கருத்தை நிறுவுவது. இரண்டினுக்கும், எதிரி கருத்துக்களைக் கூறும் நூலறவும் தன் பக்கம் கூறும் நூலறிவும் இருத்தல் வேண்டும். அதனோடு அளவை நூல் பயிற்சியும் வேண்டும். இவ் உரைகள், தத்துவக் கருத்துக்களைத் தருக்க முறையில் மறுக்கவும், நிறுவவ் ஒரு தனியான உரைநடையைக் கையாளுகின்றன. இதனைத் தத்துவ விளக்க நடை என்பது கூறலாம்.

மொக்கலனவாதச் சருக்கத்தில் உயிரும் ஆன்மாவும் இல்லை. ஸ்கந்தச் சேர்க்கையே உணர்வு என்ற மொக்கலனுக்கு நீலகேசி கூறும் விடை வருமாறு

துர்க்காதியும், வியவஹாராதியும் காட்டுதற்கு யாப்புண்டால் உழப்பதவ் உயிரென்றேனாக, சரீரங்கட்டுண்ண ஜீவன் வருந்தும் என்று நீர் சொல்லுமது எருது காலொடியக் கழுதை முடவினதொக்குமென்று நீ சொல்லிய குற்றம் சரீராத்மாக்கள் தீட்டொட்டுக் கலப்பு வகையால் சம்பந்தித்து நிற்குமென்று சொல்லுதலின் எமக்காகாது.

புத்தவாதச் சருக்கத்தில் இச்சையையும் உணர்வையும் பற்றிப் புக்தன் கூறிய வாதத்திற்கு நீலகேசிய மறுப்புக் கூறும் பகுதி வருமாறு

உணர்வுகளெல்லாம் இச்சானு ரூபமாய்ப் பிறக்குமென்று சொய்லுதலால், இச்சை உணர்வுக்கு முன்னேயுளதாதல் வேண்டும். அஃதாயில் அந்த இச்சை யாங்கணுளது? சீரீரத்ததெனில் சுசேதனமாகிய சரீரத்தில் இச்சை கூடாதாம். கூடில் பிருத்வியாதியிலும் இச்சையுளதாகல் வேண்டும். இனி இச்சை ஞானத்ததெனில் இச்சை முன்பேயுண்டாயினல்லது ஞானம் பிறவாமையால் ஞானத்துக்கு இச்சையுண்டாதல் கூடாதாம். இனி இந்த பிரஸ்துதமான இச்சை பிறிதொரு இச்சையிற் பிறக்குமெனில், அதற்குச் சொல்லிய குற்றம் வரும். அதற்குமொரு இச்சையென்ப தொன்று பெறப்படாமையால் இச்சையால் பிறப்பதாகிய ஞானமும் பெறப்படாதாயத்த ஞானத்தால் வருவனவாகிய சம்ஸ்கார வேதனைகளுமிலவாகிச் சூன்யமாமென்று சொல்லாதவாறென்னோ?

**கற்பிக்கும் முறை உரைநடை**

இலக்கிய இலக்கண உரைகளின் நடை, ஆசிரியன், மாணவனுக்குக் கற்பிக்கும் போக்கிலேயே வாய்மொழிப் போதனையின் செல்வாக்கு மிகுதியும் பெற்று விளங்குகிறது. ஆசிரியன் ஒரு பொருளை விளக்கும் பொழுது, மாணவனுக்குத் தோன்றக் கூடிய ஐயங்களை உணர்ந்து, அவற்றைக் கூறி, விளக்கமும் கூறும் விதத்தில் இவ்வுரையின் நடைப்போக்கு அமைந்துள்ளது. இதனைக் கற்பிக்கும் நடையென்று கூறலாம்.

பேராசிரியர் குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னை எனின், பிறப்பு என்பது குடிப்பிறத்தல், அதற்குத்தக்க ஒழுக்கம், குடிமை எனப்படும். குடிப் பிறந்தாரது தன்மையைக் குடிமை என்றார் என்பது. அது ஊராண்மை எனவும் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அது ஆள்வினை எனப்படும். இது தலைமகட்கு ஒப்பது அன்றால் எனின், குடியாண்மை என்புழி ஆண்மை என்பது இருபாற்கும் ஒக்கும் ஆதலின் அமையும் என்பது, யாண்டு என்பது ஒத்தவாறு என்னை எனின், பன்னீர் யாண்டும் பதினாறி யாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவம் என்பது ஒத்தினுள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பு எனவே படும். உரு நிறுத்த காமவாயில் என்பது பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்று மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு என்றவாறு.

மேற்கூறிய இலக்கிய, இலக்கண உரைகளின் உரைநடையின் இயல்புகள் சமய நூல்களின் உரைகளிலும் காணப்படும். ஆனால், சமய நூல்களில் கற்பிக்கும் முறை உரைநடையை மாற்றி மாறுபட்ட கருத்துடையவர்களோடு விவாதிப்பதற்கு ஏற்ற தருக்க முறையில் உரைநடை அமைக்கப்பட வேண்டியிருந்தது.

**மணிப்பிரவாளம்**

சமய நூல் பயிற்சியுடையவர்கள் தமிழும் வடமொழியும் கற்றிருந்தார்கள். அக்காலத்தில் வைணமும் சமணமும் தென்னாட்டில் தமிழகத்திலும் மலையாளத்திலும் கர்நாடக நாட்டிலும் ஆந்திர நாட்டிலும் பரவியிருந்தன. இந்தப் பகுதிகளில் வழங்கிய மொழிகளில் சமஸ்கிருதச் சுலோகங்களை எழுதுவதற்குப் பொது வரிவடிவமொன்றைச் சமணர்கள்

உருவாக்கினார்கள். இவ் வரிவடிவத்தையும் பிரதேச மொழியையும் கலந்து இருவகையான கிரந்த மொழிகளை அவர்கள் தோற்றுவித்தார்கள். சம்பந்தர் காலத்திலேயே சமண சமய நூல்களை எழுதப் பயன்படுத்தப்பட்டது.

அம்மொழியை எதிர்த்துச் சம்பந்தர், ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன் அறிகிலாது உருச்சிதைத்து உரைப்பது என்று பாடினார். முற்காலப் பல்லவர் சாசனங்களிலும் இம்மொழி பயன்படுத்தப்பட்டது. சிற்சில மாறுதல்களோடு இம்மொழிகளை அவர்கள் மூன்று மொழிகள் வழங்கும் நாடுகளிலும் சமய நூல்கள் எழுதப் பயன்படுத்தினர். தமிழ் கிரந்தம் ஒருவகையாகவும், கன்னட – தெழுங்குக் கிரந்தம் வேறு வகையாகவும் வளர்ச்சியடைந்தன. இவற்றை நெருக்கமாகக் கொணர்ந்து ஒரு நிலைப்பட்ட எழுத்து மொழியை உருவாக்கச் சமணர்கள் பெரிதும் முயன்றனர். சுருக்கமாகச் சொன்னால் ஒரு சமய இணைப்பு மொழியைத் தோற்றுவிக்க அவர்கள் முழு முயற்சி செய்தனர். சமய நூல்களைக் கற்றுக் கொள்ள மட்டுமே இம்மொழி உதவிற்று.

இதனை நாலாயிரத்துக்குத் தத்துவப் பொருள் கூற விரும்பிய வைணவ ஆசாரியர்களும் பயன்படுத்தினர். ஏனெனில் விஜயநகர ஆட்சி தென்னாட்டு மொழிகள் நான்கும் வழங்கிவந்த நாடுகளில் பரவியிருந்தது. எனவே அவர்களும் தங்கள் சமயத்திற்கு ஒரு இணைப்பு மொழியினைத் தேடினார்கள். சமணர் இதனைப் பயன்படுத்திய முறையை ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலிய நூல்களின் உரைகளிலும் காணலாம். சமயத் தத்துவப் பொருள்கள் ஒரு சிலருக்கே விளங்குவனவாதலால், இந்நடை சமயப்

பெரியார்களிடமும் அவர்களிடம் நேரடியாகப் பாடம் கேட்டவர்களிடமும் தேங்கி நின்று விட்டது.

வைணவ ஆச்சாரியார்கள் மணிப்பிரவாளத்தைச் சமயக் கருத்து விளக்கத்திற்கும் தமிழ்நடையை, உவமைக் கதைகள் கூறவும் எழுதியுள்ளார்கள். "அநந்தரம் பெரியாழ்வார் திருமொழி முதலான ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்கு எல்லாம் வியாக்யானம் செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார். வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ம்ருதீஹாஸ புராணங்களாலே, இதிஹாஸ சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூது போனவன் ஏற்றம் சொல்லுகிறது.

பல்லவர் கால ஆட்சிப் பகுதி மூன்று மொழி பேசுகிறவர்களைக் கொண்டிருந்தது போல, சோழர் காலத்திலும் மும்மொழி பேசுவோர் அவர் ஆட்சி எல்லைக்குள் வாழ்ந்தனர். இதனால் தமது சமயத்தைப் பரப்ப விரும்பிய சமணரும் வைணவரும் சமயத் தொடர்பு மொழியாக மணிப்பிரவாளத்தைப் பயன்படுத்தினர்.

**புதிய துறைகளில் உரைநடை**

பதினாறாம் நூற்றாண்டின் இடையில் உரைநடையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. உரைநடையைப் பயன்படுத்தும் நோக்கம் புதியதோர் துறையாகக் கத்தோலிக்கச் சமயப் பிரச்சாரத்திற்குச் சென்றதே அதன் காரணமாகும். அக்காலத்தில் அச்சு இயந்திரம் தமிழ் நாட்டிற்கு ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் என்ற கத்தோலிக்கச் சாமியாரால் கொண்டு வரப்பட்டது. மரக்கட்டையினால் அச்சுக்கள் செய்யப்பட்டன. கொல்லத்தில் முதன்முதலாகக் கிறிஸ்தவ ஜபநூல் அச்சிடப்பட்டது. அதற்குச்

கிறிஸ்தியானி வணக்கம் என்று பெயர். இதன் பிறகு, ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் சாமியார் தாம் வாழ்ந்த தூத்துக்குடியில் அச்சு இயந்திரத்தை நிறுவினார். அச்சமயம் கத்தோலிக்கர்களாக மாறியிருந்த கடற்கரை மக்களான பரதவர் எழுத்தறிவு இல்லாதவர்களள். புனித சேவியர் என்னும் பாதிரியார் அவர்களுக்குக் கிறித்தவ வணக்கத்தைத் தமிழில் மனப்பாடம் செய்யக் கற்றுக்கொடுத்தார். சிறுவர்களுக்கு ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் தமிழ் எழுத்தைக் கற்பித்தார். பெரியவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனினும் அடியார் வரலாறு () என்ற நூலை ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் சாமியார் அச்சிட்டார். இதுவே தமிழில் முதலாக வெளிவந்த நீண்ட உரைநடை நூலாகும்.

பரதவர் பேச்சுத் தமிழையொட்டியே அடிகள் நூலை எழுதினார். அவரே கொச்சை கலந்த தமிழைத்தான் அறிந்திருந்தார். எனவே, அதனைச் சிறிது திருத்தியே தமிழ்நடை அமைத்தார். பரதவர்களுக்கு நாட்டுப் பாடல்களிலுள்ள புராணக் கதைகள் தான் தெரிந்திருந்தன. எனவே, பாதிரியார் புராணக் கதைகளின் நடையிலேயே கிறித்தவ அடியார் வரலாறுகளை எழுதினார். அந்த நடை தனிமையான பேச்சு நடையாக இருந்தது. எழுத்தறிந்த பரதவர் படிப்பதற்கேற்றவாறும் இருந்தது.

இக்காலத்திற்குப் பின் டி நோபிலி, பெஸ்கி முதலியவர்கள் தமிழில் எழுதினார்கள். அவர்கள் மதுரையில் வாழ்ந்தவர்கள். உயர் சாதிக்காரர்களைக் கிறித்தவச் சமயத்திற்கு மாற்றும் நோக்கம் கொண்டிருந்தவர்கள். உயர் சாதிக்காரர்களுக்கு எழுத்தறிவு இலக்கியப் பயிற்சியும் உண்டு. எனவே இவர்கள் செய்யுள் நடையில் எழுதினார்கள். உரைநடையும் பண்டித நடையாக இருந்தது.

எனவே, இவர்கள் காலத்திலேயே தமிழ் உரைநடையில் இரு போக்குகள், பழைய உரைநடை மூலங்களின் தொடர்ச்சியாக வளர்க்கப்பட்டன. இலக்கியங்களுக்கு உரையாக எழுதப்பட்ட உரைநடையும், கல்வெட்டில் எல்லோர்க்கும் தெரிய வேண்டிய செய்திகளை எழுதி வைக்கப் பயன்பட்ட வியவஸ்தை என்ற பகுதியின் உரைநடையும் வளர்ந்தன. இந்த இருவகையான போக்குகளில் வளர்ச்சியாகவே கத்தோலிக்கப் பாதிரிகளின் இருவகை நடைகளையும் கருதலாம். ஒன்று எழுத்தறிவும் இலக்கியப் பயிற்சியும் உடையவர்கள் படிப்பதற்காக எழுதப்பட்டது. மற்றொன்று புதிதாக எழுத்துக் கற்றுக் கொண்ட, இலக்கியப் பயிற்சியில்லாத சாதாரண மக்களுக்காக எழுதப்பட்டது. பரமார்த்த குரு கதை, அடியார் வரலாறு நடையில் இருந்து சிறிது திருத்தமானது. ஆனால் எளிமையானது.

**ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி**

இதற்குப் பின் உரைநடை பற்றிய சான்று ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி. இந்த டைரி எழுதப்பட்ட காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் 1709 முதல் 1761 வரை 52 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவரது உரைநடைக்கு எடுத்துக்காட்டாக சி.சு. செல்லப்பா, அவருடைய தமிழிலக்கிய விமர்சனம் என்ற நூலில் கொடுத்துள்ள மேற்கோளையே குறிப்பிட்டு, அந்நடையின் தன்மைகளை ஆராய்வோம்.

இந்த நாள் காலமே ஆறரை மணிக்கு மேல் ஏழு மணிக்குள்ளாக குவர்னர் துறை வீட்டிலே போயிருக்கச்சே நம்மைப் பார்த்து குவர்னர் துரை கேட்ட சேதி என்னவென்றால் கையிலே என்ன இருக்கு என்று கேட்டார். அதுக்கு நீர் முந்தாநாள் கொடுத்த லோக்கா

பொன்கட்டி இருக்குதென்று சொன்னேன். ஆனால் கட்டிக்கு இருநூத்தி எழுபத்திரண்டு வராகன் விலைக்குக் கொடுக்கிறீரா என்று கேட்டார். அதுக்கு நான் சொன்னது சிஞ்ஞோர் கேட்ட இருநூத்தி எழுபத்தொண்ணே முக்கால் வராகனுக்கு உமக்கு சம்மதியிருந்தால் கொடும். அது மேல் ஒரு காசு ஒசத்தலும் தேவையில்லை என்று சொன்னேன்………….என்ன சொன்னார் என்றால் நாங்கள் நேற்றைய தினம் கோன்செல் கூடி கோன்சலில் தீர்த்த காரியம் என்னவென்றால் இனிமேல் இந்த ஊருக்குள்ளே எட்டு மாதத்திற்குள்ளே குறைந்த வராகன் யாதாமொருத்தன் கொண்டு வருகிறானோ அவன் கையிலே ஆயிரம் வராகன் அபராதமும் வாங்கிக் கொண்டு கொணக்கு முத்திரை போட்டு பின்னையும் அவமானம் பண்ணுவோம் என்று தீர்த்தோம். காலமே சின்னதுரை பேர் விளங்கன் வந்தான். ஆள் கழுக்கு மழுக்கென்று மண்ணிலே எடுத்த வள்ளிக் கிழங்காட்டமாயிருக்கிறான். முகம் பரந்த முகமாய் ஆன வாகனனாயிருக்கிறான். அவன் சென்னப் பட்டணத்துக்குப் போயிருந்து வந்தவன். மீனாட்சியம்மை சத்திரத்திலே வந்து சொல்லியனுப்பினான்.

இந்நடை பற்றி சி.சு. செல்லப்பா தமது நூலில், “பிள்ளையின் நடை ரொம்பத் துடியாக இருக்கிறது. சுருக் சுருக் என்று தகவல்களை நமக்குக் குத்திச் சொல்லிக் கொண்டே போகிறது. தகவல் தராத ஒரு வரி கிடையாது.” இந்நடை வருணனை மூன்று சொற்றொடர்களில் உள்ளன. இறுதிப் பத்தியில், கழுக்கு, மழுக்கு, வள்ளிக் கிழங்கு, பரந்த முகம், ஆனவாகனன் என்ற சொற்கள் புதியவனை வருணிக்கின்றன. தகவல் தரும் பகுதியில், யாதாமொருத்தன், தீர்த்த காரியம், விச்சுத் தீர்த்த படிக்கு, ஒரு காசு ஒசத்தலும், போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இன்றைய வாசகனுக்கு அந்நியம்

தான். டைரியும் சாசனமும் 18 ஆம் நூற்றாண்டில் பேச்சு நடையில் எழுதப்பட்டவையாகத் தோன்றுகின்றன. இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் உள்ள வேறுபாடு குறைந்து, வரப் போகிற நாவல், சிறுகதை இலக்கியங்களின் நடைக்கு இது முன்னுருவமாகத் தோன்றுகிறது.

**வரலாற்று நூல்களில் உரைநடை**

18 ஆம் நூற்றாண்டில் கொங்குதேச ராசாக்கள் சரித்திரம் என்ற நூல் ஒன்று எழுதப்பட்டது. அது கொங்குதேச மன்னர்களின் வரலாறு, புராண பாங்கிலும் வரலாற்றுப் பாங்கிலும் இரு போக்குகளும் கலந்து எழுதப்பட்டது. இதன் நடையும் பேச்சு நடையில் உள்ளது. இதுவும் கல்வெட்டின் வியவஸ்தைப் பகுதியின் நடையை ஒத்தது. அரசர் பெருமை கூறும் பகுதிகள் செய்யுள் நடையில் இல்லாமல் உரைநடையிலேயே உள்ளன.

சோழன் பூர்வ பட்டயம் என்பதும் சோழர் வரலாற்றைப் புராணப் பாங்கிலும் மிகை நவிற்சியாகவும் கூறுகிறது. பேச்சு வழக்கைச் சிறிது மாற்றிச் செந்தமிழும் கருந்தமிழும் கலந்து எழுதப்பட்டது. இதில் பல ஊர்களின் பெயர்கள், அதிகாரிகளின் பெயர்கள், போர்களின் செய்திகள் முதலியன கூறப்பட்டுள்ளன. இவ்விரண்டு நூல்களும், வரலாற்று நூல்கள் என்ற நிலையில் பல குறைபாடுகள் உடையவனவாயினும், தமிழ்நடை வளர்ச்சியில், ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிக்கின்றன.

**நாட்டார் கதைகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடக மேடைக்காகப் பல தெழுங்கு நாட்டுக் கதைகள் உரைநடையில் எழுதப்பட்டன. மதனகாமராசன் கதை, விக்கிரமாதித்யன் கதை, மரியாதைராமன் – தெனாலிராமன் கதை முதலியன நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ்நாட்டில் அறிமுகமாகியிருந்தன. இவை தெழுங்கு, மராட்டிய நாட்டுக் கதைகள். இவை தமிழில் நாட்டார் கதைத் தாக்கம் பெற்று மாறுதல்களுடன் நூல்களாக அச்சேறின.

தமிழ்நாட்டுக் கதைகளான தூக்குத் தூக்கி கதை, நல்லதங்காள் கதை, கோவலன் கதை, வள்ளி திருமணம் முதலிய கதைகள் நாடகங்களாக எழுதப்பட்டன. இவை பொதுமக்களிடம் பரவின. இதே காலத்தில் புலமை பெற்றோர் தெய்வங்களின் மீது பிள்ளைத்தமிழும், உலாக்களும் பாடிக் கொண்டிருந்தார்கள். உரைநடையை ஏறெடுத்தப் பார்க்கவில்லை. அரைகுறைப் படிப்புடையவர்கள் இப்பாமர வசன நூல்களை எழுதினார்கள். எனவே, இவை இலக்கியச் சுவையில் தாழ்ந்து காணப்படுகின்றன. ஆனால் நடை, மக்களது பேச்சு நடைக்கு மிக நெருக்கமாக இருக்கிறது.

**ஆறுமுக நாவலர் – இராமலிங்கர்**

அஷ்டாவதானம் வீராச்சாமிச் செட்டியார், ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள், அராபிக் கதை ஆசிரியர் முதலியோர் பேச்சுநடையின் விறுவிறுப்பையும் உயிர்த்துடிப்பையும் உரைநடையில் ஏற்றினர். இராமலிங்கர் புலமை நடையையும், பேச்சு நடையையும் இணைத்து, அழகையும் ஆற்றலையும் உரைநடைக்கு வழங்கினார். பேச்சு நடைக்கு மிக நெருக்கமான நடையில் கடிதங்கள் எழுதினார். இவர்கள் தமிழ்

உரைநடையை மக்களுக்கு விளங்கும் முறையில் எளிதாக்கப் பாதை வகுத்தார்கள். இவர்களும், இவர்கள் காலத்தில் எழுதிய இன்னும் பலரும் எழுதிய நடை தற்கால உரைநடைக்கு முன்னோடியாகும். இவர்கள் நடை எளிதாகவும் விளங்கும்படியாகவும் இருப்பதற்கு அவர்கள் பொதுமக்கள் படிப்பதற்காக எழுதியதே காரணமாகும்.

**ஆறுமுக நாவலர்** சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு, அவ்விறைப் பணியில் வழுவாது நிற்கும் திண்ணனார், பகற்காலத்தில் மிருகங்களைக் கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக் காலத்தில் நித்திரை செய்யாமல் சுவாமிக்கருகே நின்றும் இப்படித் தொண்டு செய்து வந்தார்.

**வீராச்சாமி செட்டியார்** பூர்வம் சோழ ராஜாவின் மேல் கவி பாடிப் பரிசு பெறும் புலவர்களை ஒரு விறகுத் தலையன் பெண்சாதி பார்த்த இவர்கள் ஒரு வேலையும் செய்து கஷ்டப்படாமல் சுகமாக ஜீவனம் செய்துவர நம்முடைய புருஷன் மாத்திரம் காட்டுப் போய் காலில் சுடுமுள் தைக்க நாள்தோறும் மாடு போல உழைத்து விறகு விற்று அரை வயிற்றுக் கஞ்சிக்கும் இல்லாமல் அவதிப்பட வேண்டியது என்ன! என்று நினைத்தாள்.

**தொடக்க கால நாவல் – சிறுகதை**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில இலக்கிய அறிவின் தாக்கத்தால் தமிழில் நாவலும் சிறுகதையும் தோன்றின. நாவல் என்ற தற்கால வரையறைக்கு அவை ஈடாக முடியாவிட்டாலும் கற்பனைக் கதை என்ற வகையில் அவற்றைச் சேர்க்கலாம். வேதநாயகம் பிள்ளையின் நீண்ட கதைகளை இவ்வகையான படைப்புகளில் சேர்க்கலாம். ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் தமிழில் தோன்றிய முதல் நாவல்களில் ஒன்று.

பெண் கல்வி, விதவை மணம், சாதி சமத்துவம் முதலிய சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப உரைநடையை இக்காலத்து ஆசிரியர்கள் பயன்படுத்தினார்கள். பிரச்சார வலிமை இவ் உரைநடையில் காணப்பட்டது. தமிழ்ப்பற்று இவர்கள் அனைவருக்கும் பொதுவான உணர்ச்சி.

**வேதநாயக முதலியார்** எண்ணிறந்த தேவாலயங்களும், அன்ன சத்திரங்களும், நிலவளமும், நாகரிமும் நிறைந்த இந்தத் தமிழ்நாடு, மற்றைய நாடுகளிலும் விசேஷம் எனவும், ஆகபடியே தமிழ் பாஷையும் சர்வோத்திருஷ்டமான பாஷை யென்றும் சகலரும் அங்கீகரிக்கிறார்கள்.

**இராஜம் ஐயர்** ஸ்ரீநிவாசனுக்குச் சாந்தி முகூர்த்தமான சமாச்சாரத்தை நாம் முன்னமே சொல்ல அவகாசப்படவில்லை. அவனும் லெட்சுமியும் நளனும் தமயந்தியும் போல வெகு அந்நியோந்நியமாக இருந்தார்கள்.

**பாரதி காலம்**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நடை பல துறைகளில் பயன்படுவதற்குப் பாரதி வழிகாட்டினார். அரசியல், பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம், சீர்திருத்தம், சமூகவியல் முதலிய பல வாழ்க்கைத் துறைகளிலும் தமிழ் உரைநடையின் செல்வாக்கை அவர் பரவச் செய்தார். மக்களுக்கு விளங்கும்படி எழுதிய ஆசிரியரியர்களுடைய நடையில், எளிமையும் உயிர்த்துடிப்பும் தெளிவும் உள்ளனவற்றைத் தமது நடைக்கு முன் மாதிரியாகக் கொண்டார். சீர்திருத்த உணவையும், நாட்டுப் பற்றையும் வளர்க்க உணர்ச்சியூட்டும்

நடையைக் கையாண்டார். தருக்கரீதியான நடையைக் கையாண்டார். கற்பனைக் கதைகளை உட்பொருளாக அமைத்தார்.

கதை சொல்லும் உரைநடை, தமிழ்ப்பற்று, சீர்திருத்தக் கருத்துக்கள், பறையனுக்கும், பார்ப்பானும் கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்யவேண்டும் என்ற சமத்துவம், பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம் விட முக்கியம் என்ற சமத்துவம், பிரச்சாரம் உரைநடையில் செய்தார். அவரது உரைநடை தேசிய இயக்கத்தால் கிளர்ச்சி பெற்ற பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கத்தின் சகல துறைகளிலும் ஊடுருவி நிற்கிறது. உறங்குவோரைச் சாட்டையடி கொடுக்கிறது. ஐயமுற்றோரை ஒளிகாட்டித் தெளிவிக்கிறது. பகைவர்களைத் தாக்கத்தால் மடக்குகிறது. மறுமலர்ச்சிக் காலத்தின் கவிதைக்கு அவர் தந்தையாக இருப்பது போல, உரைநடைக்கும் அவர் தந்தையாக விளங்குகிறார்.

**பாரதி பிற்காலம்**

பாரதி காலத்திற்குப் பிறகு தேசிய இயக்கம் வலுப்பெற்றது. சமூகச் சீர்திருத்த இயக்கமும் அதனின்று பிரிந்து பரவியது. இரண்டு இயக்கங்களும் தமிழ் மக்களைக் கவர்ந்து கொள்ளப் பிரச்சாரம் செய்தன. பத்திரிக்கைகள் இவ்விரண்டு இயக்கங்களும் உரியனவாகத் தோன்றின.

**ஏடுகள்**

பாரதி நடத்திய பத்திரிக்கைகள் தேசியப் பிரச்சாரம், சமூகச் சீர்திருத்தம் ஆகிய இரு கருத்துக்களையுமே நாட்டில் பரப்பின. ஆயினும் விடுதலை வேட்கையே அவற்றின் சங்க நாதமாக ஒலித்தது. விடுதலை வேட்கையை அடிநாதமாகக் கொண்டு வ.வே.சு. ஐயர், பரலி சு.நெல்லையப்பர், திரு.வி.க. டி.எஸ். சொக்கலிங்கம் முதலியவர்கள் பத்திரிக்கை நடத்தினார்கள். வேகமான சமூகச் சீர்திருத்தம், பிராமண எதிர்ப்பு, ஆரிய திராவிட வேறுபாடு ஆகியவற்றை முதன்மைப்படுத்தி ஈ.வெ.ராமசாமிப் பெரியார் பத்திரிக்கைகள்நடத்தினார். சிறு நூல்களும் வெளியிட்டார். பொது மக்கள் உள்ளங்களைத்தம் பக்கம் திருப்புவதற்காக இப் பத்திரிக்கைகளும் பிரசுரங்களும் முயன்றன. மிக எளிய நடையில் தருக்கரீதியாக இவற்றில் ஆசிரியர்கள் எழுதினார்கள்.

**திரு.வி.க. நடை**

திரு.வி.க. வின் நடை எளிமையாக்கப்பட்ட பண்டித நடை. இந்நடையை இவர் இலக்கியக் கட்டுரைகள் எழுதவும் அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தினார். அது பேச்சுத் தமிழ்நடைக்கு மிகவும் விலகியதாக இருந்தது. ஆனால் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் தமக்கென உரிய ஒரே நடையைத்தான் கையாண்டார். அவரது காலத்திற்குப் பிறகு, அந்நடையைப் பின்பற்றுவோர் தமிழகத்தில் இல்லை.

**தமிழில் மார்க்சீயச் சிந்தனைகள்**

**சிங்காரவேலுச் செட்டியார்**

சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரத்தில் முதன்முதலில் ஈடுபட்டுப் பின்னர் சமூகப் புரட்சி நிலைக்கு வளர்ச்சியடைந்த சிங்காரவேலுச் செட்டியார், பேச்சுத் தமிழ் நடையை,

அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளை விளக்கவும், மார்க்சீயத்தைப் பிரச்சாரம் செய்யவும் பயன்படுத்தினார். பாரதியின் நடையை வளர்த்துப் புதிய கருத்தை முதன்முதலில் பிரச்சாரம் செய்ய ஒரு புது நடையமைத்தார். மார்க்சீயத் தத்துவத்தையும் பொருளாதாரத்தையும் தமிழில் முதலில் வெளியிட்டவர் ஆவர். தொழிலாளர்களுக்கு விளங்கக் கூடிய எளிய தமிழ் நடையையே கையாண்டார். தத்துவச் சிறப்புச் சொற்களை முதன்முதலில் மொழியாக்கம் செய்யவேண்டிய அவசியம் அவருக்கிருந்தது. ஆங்கிலச் சொல்லின் நுட்பமான பொருளை விளக்கும் முறையில் அவர் சொற்களைப் புதிதாக உருவாக்கினார். கருத்தை விளக்குவதற்கு தமிழில் சொற்கள் கிடைக்காதபோது ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு அல்லது வடமொழிச் சொற்களைக் கையாண்டார். எளிய நடையில் உலகளாவிய மார்க்சீயச் சிந்தனைகளைத் தமிழுக்குத் தந்தார்.

**தனித்தமிழ்**

மறைமலையடிகள் சாகுந்தலம் சமஸ்கிருத நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து ஆய்வுரையும் எழுதியவர். தமிழில் சமஸ்கிருதச் சொற்கள் பயின்று வருவது தமிழின் இனிமைக் கோடாக மறைமலையடிகளுக்குத் தெரிந்தது. பண்டைய காலத்திற்கு முன்பே தமிழ் நூல்களில் சமஸ்கிருத சொற்கள் தமிழாக மாறிவந்ததை அறிந்து அச்சொற்களும் தமிழில் இருக்கக் கூடாது என்று எண்ணினார். வேதாசலம் என்ற பெயரை மறைமலையடிகள் என்று மாற்றினார். தாம் முன்பு எழுதிய கட்டுரைகளில் கலந்திருந்த சமஸ்கிருதச் சொற்களைக் களையெடுத்துத் தமிழில் மாற்றினார். இதனைத் தனித்தமிழ் இயக்கமாக பரவச் செய்தார்.

**மணிக்கொடி காலம்**

தமிழ் உரைநடையில், நடை பேதங்களையும், படைப்பு முறையில் ஒருமையையும் மணிக்கொடி எழுத்தாளர்கள் கொணர்ந்தனர். கொள்கைப் பிடிப்பு கொண்ட பழமைவாதிகள், தூய்மைவாதிகளது எதிர்ப்பை முறியடித்து தமிழ்மொழி வரலாற்றின் பாதையைத் தற்கால இலக்கியப் படைப்பு நடைக்கு முன்னோடியாக அமைத்தனர். புதுமைப்பித்தன் புதுமைப்பித்தன் முதல் கு.ப.ரா. வரை ஒவ்வொருவரும் தனித்தன்மையான தமிழ்நடையைக் கையாண்டு பாத்திரப் படைப்பு, உளவியல், வருணனை, சந்தர்ப்ப சூழல், மனித முயற்சியின் வெற்றி தோல்விகள், சமுதாய முரண்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கி பயன்படுத்தினார்கள். சொல்லப்படும் பொருள் எதுவாயினும், சொற்சேர்க்கை, மொழி அமைப்பு, பேச்சு நடை, எழுத்து நடை வேறுபாடு ஆகிய இவை கருதித் தமிழ்நடையின் வளர்ச்சி, மணிக்கொடி காலத்திற்குப் பின் மிகவும் வளம் பெற்றிருக்கிறது.

**திராவிட இயக்கத்தின் நடை**

தேசிய இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கண்டு அஞ்சிய நிலவுடைமைத் தலைவர்களும் ஆட்சி இயந்திரத்தில் பிராமணர்களுடைய செல்வாக்குக் கண்டு தமது ஆதிக்கத்தை மேம்படுத்திக் கொள்ள விரும்பிய நடுத்தர வர்க்கத்தின் மேல்தட்டுப் பகுதிகளும் பழமையின் ஆதிக்கத்தை எதிர்த்த மிகச் சாதாரண சமூகப் பகுதிகளும் இவ்வியக்கத்தை ஆதரித்தனர். மக்களைக் கவர தீவிரமான பழமை எதிர்ப்புப் பிரச்சாரமும் பழமையின் பாதுகாவலர்களான பிராமணர்களின் சமூக வேறுபாட்டுக்

கொள்கைகளை மிக்க ஆவேசத்துடன் இயக்கமும் அவர்களுடைய வர்க்க நலனுக்குத் தேவையாக இருந்தது. தமிழ் மக்கள் சாதி வேறுபாடுகள் காரணமாக மிகவும் இழிவுபடுத்தப்பட்டனர். சாதி இழிவை எதிர்த்துப் போராடுவதில் அக்கறை இருந்தது.

ஈ.வெ.ராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்துக்கு முன்பு நீதிக் கட்சியினுடைய அரசியல் நோக்கு துணை நின்றது. ஈ.வெ.ரா. அதிக எழுத்தறிவு இல்லாத பொதுமக்களைச் சமூக ஆதிக்கக் கருத்துக்களுக்கு எதிராகத் திரட்ட முயன்றார். மொழியை ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தினார். தமிழ் இலக்கியப் பயிற்சியோ, அதற்கொரு மதிப்போ அவர் உள்ளத்தில் இல்லாததால் அவர் கொச்சை மொழியைத் திருத்த முயலவில்லை. திராவிட இயக்கம் மக்களின் இயக்கம் மட்டுமன்று. தமிழ் கற்ற மறைமலையடிகள் போன்றவர்களின் ஆதரவு பெற்ற இயக்கமாகவும் மலர்ந்தது. நாத்திகக் கருத்துக்களையோ, சோவியத் ஆதரவு பிரச்சாரத்தையும் சைவ சித்தாந்த வாதிகள் விருப்பவில்லை. பிரமாண எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, புராண எதிர்ப்பு ஆகியவற்றிலேயே அவரோடு சேர்ந்து நின்றனர்.

சுயமரியாதை இயக்கம் பிராமணரல்லாதோர் இயக்கமாக அரசியல் வடிவம் பெற்றது. நிலபிரபுத்துவ தன்மையில் இணங்கி நடக்கச் செய்தார். திராவிட இயக்கத்தில் பல வர்க்கப் பகுதிகள் சேர்ந்து இயங்கிய காரணத்தால் கருத்து வெளிப்பாடுகள் தமிழ் நடையில் வேறுபட்டன. முரண்பட்டிருக்கும் வர்க்க நலன்களின் போராட்டங்களைச் சமரசப்படுத்த அண்ணாதுரை முயன்றார். சுயமரியாதை இயக்கம் திராவிட இயக்கம் என்ற கருத்தியலின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகமாக மாறியது.

ஈ.வெ.ரா.வின் இயக்கத்தில் பற்பல கருத்துப் போக்குடையவர்களும் தத்தமக்கெனத் தனித்தனித் தமிழ் நடைகளை வகுத்துக் கொண்டார்கள். ஒரே வகையான தமிழ்நடையின் மூலம் பலவிதமான போக்குகளை அண்ணாதுரை சமரசம் செய்தார். அதே போக்கைத்தான் திமுக தலைவர்களும் பின்பற்றுகிறார்கள். பேச்சு நடையையும், தமிழிலக்கியச் செய்திகள் கொண்ட பேச்சு நடைக்கு மாறான எளிய தமிழ் நடையையும் கையாண்டனர்.

எதுகை, மோனைகள், அடுக்குச் சொற்கள், எதையும் உவமைகளோடு எழுதுவது, பொருளைத் தெளிவாகச் சொல்லாமல் அடைமொழிகளோடும் உவமைக் கவிதைகளோடும் சொல்லுவது, குழப்பமான கருத்துக்களை மிக நீண்ட வாக்கிய அமைப்புக்களால் தெளிவாக்குவது போல எழுதுவது, உயர்வு நவிற்சி, கூடியவரை எழுத்தறிவில்லாத மக்களுக்கு விளங்கும்படிக் கதை, உவமை முதலிய உத்திகளைப் பயன்படுத்தி எழுதுவது ஆகிய தன்மைகள் திமுக தலைவர்களின் தமிழ்நடையின் சிறப்பான அம்சங்கள். துடிப்புள்ள இளைஞர், மாணவரிடையே இந்த நடை பெரிதும் வரவேற்பினைப் பெற்றது. உள்ளடக்கத்தைவிட உருவத்திற்கு அதிக மதிப்புக் கொடுக்கும் பருவத்தினரான மாணவர்கள் இளைஞர்களும் இந்நடையால் கவரப்பட்டனர்.

**தற்காலம்**

சிறுகதை, நாவல் துறைகளில் தமிழ்ப் படைப்பிலக்கியம் பெரு வளர்ச்சி பெற்றுள்ளது. பத்திரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்தன. புத்தக வெளியீட்டகங்கள் பெருகியுள்ளன. தரமான இலக்கியம் தேவை என்ற கருத்தும் நிலவின. வாழ்க்கையின் படைப்பான

இலக்கியம் என்ற முறையில் தனியான வளர்ச்சிப் போக்கு விதிகளும் கொண்டது. பல்கலைக்கழக மாணவர்கள் Stylystic நவீன இலக்கியத்தில் ஆர்வம் காட்டினர். மேற்கத்திய நாடுகளிலும் தமிழ் இலக்கியம் சார்ந்த ஆய்வுகளும், மொழிபெயர்ப்புகளும் பல்கிப் பெருகின.

தற்கால எழுத்தாளர்கள் கற்பனையை ஆதாரமாகக் கொண்டு புனையப்படும் ஒரு நிஜம் போன்ற தோற்றமான வாழ்க்கை அனுபவ உணர்ச்சி வெளியீடுதான் கதை. இதில் வரும் கற்பனை, புனைதல், உணர்ச்சி வெளியீடு, வரலாறு ஆகிய இத்தனை தன்மைகளையும் தன் மனத்தில் தோன்றியபடி பிறரிடம் தொற்ற வைப்பதற்கு ஒரு படைப்பாளி கையாளும் சாதனம் பாஷை. அதில் ஒரு அம்சம் உரைநடை. கதைக்கு வேண்டிய மூலப்பொருள்களான சாமான்கள், செயல்கள், மனிதர்கள் ஆகிய மூன்றுடன், உணர்ச்சி, அறிவு என்ற இரு தன்மைகளும் கலக்கின்றன. மொழி, சூழல், பாத்திரம் இவற்றை உருவாக்குவதில் அழகியலும் சம்மந்தப்படுகிறது.

படைப்பு நடை தவிர விளக்கவுரை நடையும் ஆராய்ச்சி நடையும் மிகப்பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன. இலக்கியமல்லாத மற்ற துறைகளின் கருத்து விளக்கத்தில் பயன்படுத்தப்படும் நடையும் அடங்கும். மானிடவியல், சமூகவியல், வரலாற்றியல், புனைகதையியல் போன்ற அறிவுப் படைப்புத் துறைகளின் அறிவை, தமிழ்நாட்டின் நிலைமைக்கேற்பப் பண்பாட்டையும் ஆராயும் கட்டுரைகள் வெளிவருகின்றன. தத்துவ கனம், தர்க்க ரீதியான வாதம், தன் கருத்துக்கு எதிரான வாதங்களைச் சான்று கொண்டு நிராகரித்து தன் கருத்து நிறுவுதல் ஆகிய தன்மை கொண்டவை.

பாரதி விளக்கவுரை என்ற நடையை முதலில் பயன்படுத்தினார். இதனை திரு.வி.க பெரிதும் வளர்த்தார். பண்டித நடையை எழுதுவதில் வ.ரா. முக்கியமானவர். மு.வ. பண்டித நடையை விடுத்து எளிய நடையில் கருத்துக்களை வெளியிட்டார். சிறு சிறு வாக்கியங்களில், சிந்தனையோட்டம் அறுந்து போகாமல் அவர் வெளியிடுகிறார். கருத்து விளக்கத் துறைகள், அறிவைச் சுடர் விட்டெரியச் செய்து, நமது பொய்யான கருத்துக்களை அழித்துப் புதிய உண்மையான கருத்துக்களைத் தோற்றுவித்து வளர்க்கின்றன. பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்து, ஆராயப்படாத விசயங்களை ஆராயத் தூண்டுகின்றன. ஆராய்ச்சிப் பத்திரிக்கையில் கடினமான நடையைக் கைவிட்டுத் தெளிவும் நுட்பமும் மிக்க நடையைப் பின்பற்றினர். புதிய பொருளை விளக்க வந்த ஆராய்ச்சியாளர்கள், புதிய நடையையும் படைத்தார்கள். பொன்னீலன், கா.சுப்பிரமணியன், எஸ்.தோதாத்திரி, பி.எல்.சுவாமி, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவரத் தொடங்கின. அவை அறிவியல் நடையைக் கொண்டன. எலெக்டரான், நியூட்ரான், புரோட்டான் முதலிய துகள்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அறிவியல் சொற்களைக் கையாண்டனர். பெ.நா. அப்புசாமி, ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

சமூக அறிவியல் துறையும் தமிழுக்குப் புதிது. இத்துறையில் மொழிபெயர்ப்பு நூல்கள் மிகுதியாக வெளிவந்தன. தமிழ்நடை புதிதாக இத்துறையில் நுழைந்துள்ளது. பலர் இத்துறைகளில் நூல்கள் எழுதினால்தான் பாதை செம்மையுறும்.

தூய தமிழ் என்பது சமஸ்கிரும் போல, மேலோர் மொழியாகத் தமிழை ஆக்கி, அதனைத் தமிழ் மக்கள் மீது சுமத்துகிற முயற்சியாகும். இது சமஸ்கிருதம் போலத் தமிழையும் வழக்கொழிந்து போவதற்குத் தம்மையறியாமலே தூய தமிழ்வாதிகள் செய்கிற முயற்சியாகும். நகரங்களின் வளர்ச்சி, தமிழ்நாட்டின் பல சாதிகளைச் சேர்ந்தோர், கூடி வாழ்வதற்குரிய வாய்ப்பை அளிக்கிறது. சென்னை, மதுரை, கோவை போன்ற பல மாவட்டங்களில் மக்கள் சேர்ந்து வாழ்வதால் வட்டார மொழி வேறுபாடுகள் குறைகின்றன. பல பகுதிகளில் வாழும் பல சாதிகளைச் சேர்ந்த மக்கள், அழுத்தமும் உயிர்த்துடிப்பும் மிக்க சொற்களை உருவாக்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். கி.ராஜநாராயணன், பொன்னீலன், வீர.வேலுசாமி இவர்கள் நெல்லை, கன்னியாகுமரி பேச்சுத் தமிழ்நடையை உரையாடல்களில் பயன்படுத்துகிறார்கள். அப்பேச்சை Standard Tamil இல் எழுதினால் பாத்திரங்கள், உயிருள்ள மனிதர்களாக இல்லாமல் கற்சிலைகள் ஆகிவிடும். கொங்கு நாட்டு வழக்கு, சென்னை வழக்கு, தஞ்சை வழக்கு முதலியன.

ஒரு Standard Tamil பேச்சு வழக்கு நடை, இலக்கியப் பயன்பாட்டின் மூலமும் நகரங்கள கூடி வாழ்கிற வாய்ப்பு ஏற்படுவதன் மூலமும் படிப்படியாக உருவாகும். இதன் காரணம் தொழில் வளர்ச்சியும், புதிய நாகரிகங்களுக்கு மக்கள் நகர்வதும் தான். கடந்த 50 ஆண்டுகளில் வளர்ந்து வந்துள்ள இலக்கியத் தேவைகளுக்கும், கருத்து விளக்கத்

தேவைகளுக்கும் ஏற்றாற்போல் , முதலில் தட்டுத் தடுமாறியும், பின்னர் வலிவு பெற்று உறுதியாகவும், தமிழ்நடை வளர்ந்து வருகிறது. இன்னும் பல அறிவியல் துறைகளில் அது காலடியெடுத்து வைக்கவில்லை.

அது உலகின் அறிவியல் துறைகளினுள்ளெல்லாம் நுழைந்து, உலக அறிவியல் அறிவைத் தமிழனுக்கு அளிக்க வேண்டும். உலக அறிவியல் அறிவைத் தமிழனுக்கு அளிக்க வேண்டும். அதற்குரிய முறையில் தமிழ்ப் படைப்பாளியும் ஆராய்ச்சியாளனும், பேச்சுத் தமிழில் இருந்து தமக்குத் தேவையான நடைகளை உருவாக்குவார்கள். பல்வேறுபட்ட உணர்ச்சி வெளியீட்டு இலக்கிய நடையையும் நுட்பமான அறிவு விளக்க நடையையும் மக்கள் எழுத்தறிவு பெற்று, படிப்பு ஆர்வம் உண்டாகும் பொழுது, அவர்களிடையே தோன்றி வளரும் எழுத்தாளர்கள் உருவாக்குவார்கள். இப்போக்கில் தமிழ் நடை வலுவுடன் முன்னேறும்.

# சிறியன சிந்தியாதான்

**எஸ். ராமகிருஷ்ணன்**

கம்பராமாயணத்தில் வாலி மகோன்னதமான பாத்திரம். அவன் வரம்பு இல்லாத வலிமை பெற்றவன். எட்டுத்திக்கும் யானைகளின் எதிர்ப்பை முறியடித்த இராவணனையும் எளிதாகப் பிடித்து வாலில் கட்டி வலி அடக்கிய வீரன். கூற்றுவனும் அவன் பெயரைக் கேட்டால் குலை நடுங்குவான். அவன் கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன் மட்டுமல்லன். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கொடை வள்ளல். தனக்கென வாழாப் பிறர்குரியாளனாக வாழ்ந்து சான்றாண்மைக்கு எடுத்துக்கட்டாக விளங்கிய மாவீரன் என்பதைக் கருத்தில் கொண்டே, வாலியைச் சிறியன சிந்தியாதான் என்று கணிக்கிறான் கம்பன்.

இலங்கை மன்னன் செருக்கை அடக்கிய வாலி தீயவனாக இருந்திருந்திருந்தால் இராவணனைவிட கொடுமையான செயல்களைச் செய்திருப்பான். வாலி அரக்கர்

கோமானைப் போல வழியலா வழிமேல் சென்றோன் அல்லன். பழிதேடும் இழிசெயலை நஞ்சென வெறுத்த பெருந்தகை வாலி. கிட்கிந்தை மண்டலத்தில் ஆட்சிப் பொறுப்புடன் இருந்தான். வாலியின் செங்கோன்மையால் சிறந்து விளங்கிய கிட்கிந்தையில் எவரும் எப்பொழுதும் எக்காரணத்தாலும் துன்பம் உற்றதில்லை. துன்பத்தை மனத்தாலும் கற்பனை செய்யாதவராக இருந்தனர்.

வாலிவதை, இராம கதையுடன் ஒன்றிப் பொருந்திய கிளைக்கதை ஆகும். காப்பியத்தின் தலைவன் இராமன் என்றபோதும் கிளைக்கதையின் தலைவன் வாலி ஆவான். வாலி என்ற தலைவனது வீழ்ச்சியால் விளையும் அவலச்சுவை. வாசகரைத் தூய்மை அடையச் செய்யும் தனித்திறம் பெற்றுத் துலங்குகிறது.

நல்லாட்சியை எங்கும் கண்டிருந்த காரணத்தால், தந்தையின் சவக் கோலத்தைக் கண்ட அங்கதன்,

எந்தையே! எந்தையே! இவ்
வெழுதிரை வளாகத்து யார்க்கும்
சிந்தையால் செய்கையால்ஓர்
தீவினை செய்திலாதாய்

என்று கதறுகிறான். மனத்தாலும் பிறருக்குத் தீமை கருதாத தூயோன் என்பதைக் கருத்தில் கொண்டே, கம்பன் வாலிக்குச் சிறியன சிந்தியாதான் என்ற ஏற்றத்தை அளிக்கிறான்.

இத்தகைய பெரியவன் இராகவனால் கொல்லப்படுகிறான். சடாயுவைத் தந்தையாக வரித்த இராமன், குகனையும், சுக்கிரீவனையும், இல்லாளைக் கவர்ந்து சென்ற இராவணனது தம்பியையும், சொந்தச் சோதரராக அந்தரங்க சுத்தியுடன் வரித்த இராகவன், கள்ளங்கபடம் அறியாத உத்தமனாக வாலிக்குக் காவலனாகிறான். மனிதப் பண்புள்ள அனைவரது உள்ளத்தையும் பிழிந்து எடுக்கும் சோக நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கிறது.

அறம் வளர்க்கும் கண்ணாளன் என்று கம்பனால் புகழப்படும் இராமன், சிறியன சிந்தியாதான் என்று கவிஞனால் சிறப்பிக்கப்படும் வாலியைக் கொல்வதின் விளக்கத்தைக் காப்பியத்தின் கட்டுக்கோப்புக்குள் நின்று தேர்ந்து தெளிவது அவசியமாகின்றது.

என்ற கருத்தின் அடிப்படையில் தூயோரின் துணைவலி தேடும், உணர்ச்சி வேகமும் ஒருதலைத் தீர்ப்பும், தூய நட்பும் துணிந்த செயலும், அஞ்சி நின்ற தாரை அஞ்சாது சென்ற வாலி, மற்போரும் மனப்போரும், அடுசரம் தொடுத்தவனைச் சாடும் சுடுமொழி, சாமான்யனும் சான்றோனும், வாய் இழந்த இராமன் நவை உணர்ந்த வாலி, சான்றாண்மையைப் புதுக்கிய செம்மல் ஆகிய பொருண்மையிலான கட்டுரைகள் அமைந்துள்ளன.

**தூயோரின் துணைவலி தேடு**

இராவண வதமே இராம காதையின் பொருள். சீதை சிறைப்பட்டுள்ள இடத்தைத் தேடி அறியவும் இராவணாதியரை அழிக்கவும் இராமனுக்குத் துணைவலி தேவை. அந்த

வகையில் தான், சுக்கிரீவனது நட்பு அமைகிறது. அதன் விளைவாக வாலிவதம் நிகழ்கிறது.

அரக்கர் வஞ்சனையால் இல்லாளைப் பிரிந்த இராமன் கதிகலங்கி மதிமயங்கி மறுகினான். யாது செய்வது? என்பதைப் பற்றி அவனால் சிந்திக்க முடியவில்லை. இலக்குவன்தான் சுற்றும் முற்றும் பார்த்து,

தேரின் ஆழியும் தெரிந்தனம் தீண்டுதல் அஞ்சிப்
பாரி னோடுகொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம்

என்று உரைத்துத் தூரம் போவதற்குள் சோரனைப் பிடிப்போம் என்று யோசனை கூறினான். சடாயுவைக் கண்டு, சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனுடன் அவன் நடத்திய அருஞ்சமரைப் பற்றி அறிந்த பின்பும், துயர மிகுதியால் சிந்தை கலங்கி நின்றதாகவே கவிஞன் கூறுகிறான். அடுத்து செய்வதைப் பற்றிச் சிந்திக்க இயலாதவராக இருந்தனர்.

தனு என்ற பெயரை உடைய கருந்தருவனே, முனிவர் சாபத்தால், கவந்தன் என்னும் அசுரனான, இந்திரனுடன் போர் செய்த பொழுது அவனது வச்சிராயுதத்தால் தாக்குண்டதால், அந்த அசுரனது தலை மார்பில் புதைந்தது. எனவே கவந்தன் என்ற பெயர் பெற்றான். உலகத்தில் உள்ள பாவங்களெல்லாம் உருண்டு திரண்டதைப் போலக் கரிய பெரிய மலையின் வடிவத்தை மருவியிருந்த கவந்தன், இராம இலக்குவரை இரையாகக் கொள்ள எழுந்த பொழுது, அவர்கள் அவனது நெடிய கரங்களை வெட்டித் தள்ளினார்கள். இராமனின் செங்கை தீண்டியதால், பாவத்திலிருந்து விடுபட்ட கந்தருவன்,

கூட்டிலிருந்து கிளம்பிச் செல்லும் பறவையைப் போலத் தீய ராட்சச சரீரத்தை விடுத்துத் தூய கந்தருவ சரீரத்துடன் மேலே சென்றான். இராமனது அருளை எண்ணி அவனைத் தொழுதுவிட்டு, நன்றி மறவாத தனு, திக்கு இலக்குவர்க்கு அரிய யோசனை கூறி, உரிய உதவியைச் செய்தான் இணையில்லாச் சீதையைச் தேடுவதற்குத் துணையில்லாமல் முடியாது என்று அறிவுறுத்தினான். கடலைக் கடப்பதற்கு புணை அவசியம். துணை வேண்டாதவராக, இராம இலக்குவர் தம்மைக் கருதலாமென்று அஞ்சி, ஊழிக்காலத்தில் உலகங்கள் அழிக்கும் தன்னேரில்லா உருத்திர மூர்த்தியே பூதகணங்களின் துணைபலம் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டினான் தனு.

உற்ற காரியத்துக்கு உரிய துணை தேவை என்பதை எடுத்துரைத்த கந்தருவன், கிட்கிந்தைக்கு வேந்தனாக விளங்கும் மாவீரன் வாலியிடம் செல்லும்படி யோசனை கூறவில்லை. அண்ணனுக்கு அஞ்சி அனாதையாக வாழும் சுக்கிரீவனிடம் செல்லும்படியே கூறுகிறான். வாலியை அவன் அறிந்திருக்க மாட்டானென்று வாதிக்க முடியாது. இரலைமலையில் ஒளிந்து வாழும் சுக்கிரீவனை அறிந்தவன். வரம்பில்லா ஆற்றலுக்குரியவனாகக் கிட்கிந்தையில் கோலேச்சும் வாலியைத் தெரிந்திருக்க மாட்டான் என்று சொல்ல முடியாது. பத்துத் தலை இராவணனின் செருக்கை அடக்கிச் சீதையின் மீட்சியை எளிதில் சாதிக்கும் வல்லமை உடையை வாலியை விட்டுவிட்டுச் சுக்கிரீவன் நட்பை நாடும்படி கந்தருவன் இராமனுக்கு யோசனை கூறியதின் மர்மம் என்பது ஆராய்ச்சிக்குரிய பொருள்.

**உணர்ச்சி வேகமும் ஒருதலைத் தீர்ப்பும்**

சுக்கிரீவனைத் தேடிச் சென்ற இராமனின் மனநிலையை மீண்டும் புலப்படுத்துவதற்காகக் கம்பன், அனுமப் படலத்துக்கு முன் பம்பைப் படலத்தை அமைகிறான். பம்பைப் படலம் சோலைகளால் சூழப்பெற்ற பம்பைப் பொய்கையை வர்ணிப்பதுடன், அந்த வாவியிலிருந்த அன்னம் முதலானவற்றைக் கண்ட இராமன் சீதையை எண்ணி நெஞ்சுருகிப் புலம்பியதையும் சித்திரிக்கிறது. “கண்ணும் முகமும் காட்டுவாய், வடிவும் ஒருகால் காட்டாயோ?” என்று தடாகத்தைப் பார்த்துக் கேட்கிறான். ஓடி விளையாடும் களிமயிலைக் கண்டு சீதையின் சாயலை நினைவு கொண்ட தலைவன், “ஓடா நின்ற களிமயிலே, சாயற்கு ஒதுங்கி உள் அழிந்து கூடாதாரின் திரிகின்ற நீயும் ஆகம் குளிர்ந்தாயோ?” என்று வினவுகிறான்.

பூஒடுங்கின விரவு புள்ஒடுங்கின பொழிகள்
மாஒடுங்கின மரனும் இலைஒடுங்கின கிளிகள்
நாஒடுங்கின மயில்கள் நடம்ஒடுங்கின குயில்கள்
கூஒடுங்கின பிளிறு குரல்ஒடுங்கின களிறு

நள்ளிரவிலும் விழி துயிலாது திரியும் பேயும் உறங்கிய போதிலும், இராமன் உறங்காது இருந்தான். சுக்கிரீவனைக் காணவேண்டுமென்ற காரிய நோக்கில் தான், காலையில் கவலைகள் அடங்கின.

வில்லும் கையுமாக விரைந்து வரும் இராம இலக்குவரை, இரலைமலையிலிருந்த சுக்கிரீவன் காண்கின்றான். வாலியுடன் பிறந்த சுக்கிரீவன் சிறந்த வீரன். நிறைந்த

பலமுடையவன். எனவே அவனை “நோன்மைசால் கவியரசு” என்று கம்பன் குறிப்பிடுகிறான்.

அச்சம் அறிவுக்குப் பகை. பயத்தால் மதி கலங்கிய சுக்கிரீவன், வரிசிலை வீரர்களைக் கூர்ந்து நோக்காமலேயே, வாலியின் ஏவலாட்கள் என்று கருதி மறுகுகிறான். ஆனால் அறிவிற் சிறந்த அனுமன் அம் மாதிரி மயங்கவில்லை. இராம இலக்குவர் மனங்கலங்கி உயிர் தளர்ந்த நிலையில் வருவதைக் கண்ட அனுமன், இவர்கள் வாலியின் கட்டளையால் வருவோராயிருக்க முடியாது என்று துணிகிறான். அதன்பின் அவர்கள் எதிரே சென்று தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான். “சுக்கிரீவனை நாடியே நாங்களும் வருகிறோம்” என்று இராமன் கூறியவுடன், கதிரவன் மைந்தனது நற்பேற்றினை எண்ணிப் பூரிக்கின்றான் அனுமன்.

இரக்கமில்லாத வாலி சீற்றம் கொண்டதால், உலகத்துள்ள எல்லாத் துன்பத்துக்கும் தான் ஒருவனே உறைவிடம் எனச் சுக்கிரீவன் இன்னல் படுவதாகக் கூறி,

> கொடுங்குலப் பகைஞன் ஆகிக் கொல்லிய வந்த கூற்றை
> நடுங்கினர்க்கு, அபயம் நல்கும் அதனினும், நல்லதுண்டோ?

என்று கேட்கிறான். அனுமன், “மெய்ம்மையின் வேலி போல்வான்” என்றும், ”தன் பெருங்குணத்தால் தன்னைத்தான் அலது ஒப்பிலாதான்” என்று கவிஞனால் பாராட்டப் பெற்றவன்.

> வாலி என்ற அளவுஇலா வலியினான் உயிர்தெறக்
> காலன் வந்தனன் இடர்க்கடல் கடந்தனம்”

என்று கூறி ஆனந்தக் கூத்தாடுகிறான். “ஊழியார், எளிதின் நிற்கு அரசு தந்து உதவுவார்” என்று சொல்கிறான்.

வாலியைக் கொல்வதாக இராமன் வாக்களித்தானா? இல்லை. வாலி நிகழ்த்திய கொடுமை என்னவென்பதை யாவது இராமன் உசாவினானா? அதுவும் இல்லை. அரக்கர் வஞ்சனையால் ஏற்பட்ட அவலநிலையை எண்ணி எண்ணி நெஞ்சுருகி நின்றவன், வாலியைப் பற்றிய பேச்சைக் கேள்விப் புலனில் பதிவுசெய்து கொண்டதாகக் கூடத் தோன்றவில்லை. ஆயினும் சத்தியமூர்த்தியாகிய வாயுகுமாரன், “வாலிக்குக் காலன் வந்தான்” என்றே செங்கதிர்ச் செல்வனின் மைந்தனிடம் திட்டவட்டமாகச் செப்பிவிடுகிறான்.

அடுத்த காட்சி இராம சுக்கிரீவர் சந்திப்பு. முன்பு வீரர் இருவர் தொலைவில் தோன்றியதும் ஓடி ஒளிந்த இரவிகுமாரன், இப்பொழுது எட்ட வரும்போதே அவர்களை நன்கு பார்க்கிறான். பார்த்துப் பரவசமடைந்து, நின்றநிலை பெயராமல் குத்திட்டு நிற்கிறான். கண்களால் கண்டு களித்த பின், காட்சியைக் கருதி உணர்கிறான்.

இராமன், தான் அவனைத் தேடிவந்த நிலையை நயமாக, நீ இங்கு இருக்கிறாய் என்று தவமுதியாள் சவரி சாற்றத் தெரிந்து, உன்னால் எங்கள் பெருந்துயர் நீங்குமென்று கருதி வந்தோம்” என்று கூறுகிறான். ஆனால் உதவி கோரும் இராமனிடமே அபயம் வேண்டுகிறான் சுக்கிரீவன். வலிமிக்க வாலி தன்னைக் கொல்லக் கருதியதையும், உலகெங்கும் ஓடியும் விடாது தொடர்ந்ததையும், வாலி வராமல் தடுக்கும் சாபக் காப்பு

உடைய இந்த மலையில் இறவாது வாழ்வதையும் சுருக்கமாகக் கூறி, “சரண் உனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்” என்றான்.

சுக்கிரீவனைச் சிநேகிதனாகக் கொள்ளும் இராமன் இவ்வாறு உறுதிமொழி புகன்றதில் பிழையில்லை. பெருமை உண்டு, ஆனால் அவன் இத்துடன் அமைகின்றானா? இல்லை. மேலும் கூறுகிறான்.

மற்று, இனி உரைப்ப தென்னே?
    வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்
    தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்
    உன்கிளை எனது, என் காதல்
சுற்றம்உன் சுற்றம், நீ என்
    இன்னுயிர்த் துணைவன் என்றான்.

“உன் உறவினர் என் உறவினர். என் பந்துக்கள் உன் பந்துக்கள். நீ என் பிராணசினேகிதன்” என்று இராமன் கூறுவது அவனது பெருமை சால் மன விரிவுக்குத் தலையாய சான்றாகும். சாதியாலும் குலத்தாலும் உயர்வு தாழ்வு கருதும் ஒற்றைச் சாண் நினைப்பால் மாசு அடையா மக்கட் பண்புக்கு இலக்கியமாகத் திகழும் இராமன், கடைநிலையிலுள்ள குரங்கின் தலைவன் என்று சுக்கிரீவனை இகழ்ச்சியாக நோக்குவானா? மாட்டான். நாவாய் வேட்டுவனான குகனிடம் உறவு கொண்டதைப் போலவே, சுக்கிரீவனிடமும் நேசம் கொள்கிறான். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற

மனிதப் பண்பு இங்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் கண்டு, நாம் பூரிக்கிறோம். பரிசுத்தமடைகிறோம்.

வாலியை எதிர்ப்பதற்கு உடன்பட்டு விட்டான் என்றே வானர வீரர்களுக்குத் தோன்றுகிறது. எனவே அவர்கள் ஆனந்த ஆராவாரம் செய்கின்றனர். காதலி நீங்கக் கடுந்துயர் உற்றுக் கானகத்தில் திண்டாடும் இராமன், சீதையை மீட்கும் எண்ணமே சிந்தையில் நிறைந்திருப்பதால், நுணுகி எண்ணாமல், அண்ணன், தம்பி பகை வரலாற்றை உசாவி அறியாமல், அவசரப்பட்டு உணர்ச்சி வேகத்தில் பேசுகிறான். அதனால் தான் "தீயரே எனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்" என்று கூடக் கூறி விடுகிறான். சிற்றினத்தை நஞ்செனா வெறுக்கும் நல்லியல்புக்கு உரிய தலைவன், நல்லவை செய்தல் தன் கடன் என்று கருதிச் செயல்படும் சான்றாண்மையின் மணிமுடியைத் தொடும் தன்னேரில்லாத் தலைவன், நல்லவர் தீயவர் வேற்றுமை பாராமல், சுக்கிரீவனது நண்பர் அனைவரையும் தன் நண்பராகக் கொள்வதாகக் கூறுகிறான் என்றால், அது அவன் உணர்ச்சி வேகத்தைத் தானே காட்டுகிறது?

முன்பு சீதையுடன் இருந்தபொழுது, இராமன் குகனை நண்பனாகக் கொண்டான். அப்பொழுது குகனிடம் இம் மாதிரி மொழியவில்லை. குகனிடம் கூறினான்.

என்னுயிர் அனையாய் நீ
    இளவல்உன் இளையான் இந்
நன்னுத லவள் நின்கேள்
    நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது நான்உன்

உரிமையின் உளன் என்றான்

குகனுக்கு இலக்குவனைத் தம்பியாக்கினான். சீதையைக் கொழுந்தியாக்கினான். அசோகவனத்தில் “தவம் செய்த தவமாம் தையல்” இதை நினைவில் கொண்டு, அந்த அழியா நட்பைப் போற்றுவாள்.

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பி நீ
தோழன் மங்கை கொழுந்தி, எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

அந்த குகனிடமும், “தீயரே என்னினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார், என்று இராமன் கூறவில்லை. ஆனால் இப்பொழுது அப்படி பேசுகிறான் என்றால், அது சுக்கிரீவனுடன் பேசும் பொழுது இருந்த மனநிலையைத் தான் காட்டுகிறது.

அவன் மனத்தில் பல சிந்தனைகள் தோன்றுகின்றன. ஆழ்ந்த யோசனைக்குப் பின்,

பொருந்தும் நன்மனைக்கு உரிய பூவையைப்
பிரிந்து ளாய் கொலோ நீயும்?

என்று வினவுகிறான் சுக்கிரீவனை.

மனைவியைப் பிரிந்த துன்பத்தால் மறுகும் இராமன் பரிவுடன் வினவுகிறான். அப்போது சூரிய குமாரனே விடை தருவது தகுதியல்ல என்று எண்ணிய அமைச்சன் அனுமன் பதில் கூற எழுந்திருக்கிறான். வினவியதற்கு நேரே விடை சொல்லாமல் எங்கிருந்தோ தொடங்கி வாலி – சுக்கிரீவன் பகை வரலாற்றை விரித்துரைத்து விடுகிறான் அவன்.

வாலியை வெல்ல விரும்பி இராவணன் வலிந்து வந்தபொழுது, வாலி அவனை வாலில் கட்டிக் கொண்டு தாவியபடியால், இராவணனது உதிரம் சிந்தாத உலகம் இல்லையென்றும் அனுமன் விளம்புகிறான். வாலியின், வால் செலாத வாய் அலது இராவணன் கோல் செலாது" என்றும் அனுமன் கூறுகிறான். "வாலியின் வால் செல்லாத இடத்தில் தான் இராவணின் கோல் செல்லும். என்று இதற்குப் பொருள் கொள்வர். ஆனால் வாலி தினந்தோறும் எட்டுத் திசைகளும் சென்று கண்ணுதற் கடவுளைப் பூசித்து வருவதாக அனுமனே கூறுவதால், வாலி செல்லாத இடமில்லை என்றாகிறது. திக்கெட்டும் இராவணன் ஏக சக்கராதிபத்தியம் செலுத்துவதை வாலியின் தினசரி யாத்திரை தடுக்கவில்லை. அதனால் தான், வாலியின், வால் செலாத வாய் அலது இராவணன் கோல் செலாது, என்பதற்கு வேறு பொருள் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. "வாலியின் வால்வலியை ஒழித்தால் அல்லாமல் இராவணனது கோல்வலியை ஒழிக்க இயலாது" என்பது அனுமன் கருதிய பொருளென்று அனுமானிக்க இடம் உண்டு. வாலியின் வாலிற் கட்டுண்டு தவித்த இராவணன், தன்னைத் தோழனாக ஏற்கும்படி வாலியிடம் மன்றாடினான். வாலியும் உவகை கொண்டு ஒப்புதல் தெரிவித்தான். இருவரும் அக்கினி சாட்சியாக உயிர் நட்பினராக உறுதி செய்து கொண்டனர். இராவணனும் ஒரு மாதம் கிட்கிந்தையில் தங்கிப் புதிய தோழனுடன் அளவளாவிய பிறகே இலங்கை சென்றான்.

வாலியின் ஆற்றலை எடுத்துரைக்கும் போது, எதிரியின் பலத்தில் சரிபாதி தன்பால் வரும்படி வரபலம் கொண்டவனாகவும் வாலி விளங்குவதை வாயு குமாரன் விளக்குகின்றான். அதன்பின் அண்ணன் – தம்பி பகை மூண்ட சோகக் கதையை அவன்

இயம்புகிறான். வாலி அரசனாகவும், சுக்கிரீவன் இளவரசனாகவும் அமர்ந்து சோதர வாஞ்சையுடன் இணைந்து நின்று நல்லாட்சி நடத்திவந்தனர். அவ்வமயம், மாயாவி என்ற அசுரன் வாலியுடன் அமர் செய்ய வந்தான். மல்லமரில் தோற்றோடிய மாயாவி, ஒரு பிலத்துவாரத்தின் வழியாகப் பாதலம் புகுந்தான். சீற்றம் கொண்ட வாலி மாயாவியைத் தொடர்ந்து சென்று அவனைப் பிடித்து வருவேனென்று கூறித் தம்பியைப் பிலத்துவாரத்தில் காவலிருக்குமாறு கட்டளையிட்டுவிட்டுச் சென்றான். இருபத்து எட்டு மாதங்களாகியும் வாலி திரும்பவில்லை.

மாயாவியைப் மடித்து மீண்ட வாலி, பிலத்தின் வழி அடைபட்டிருப்பதைக் கண்டான். தம்பியை விளித்தான். மறுமொழி பெறானாய். "இளவலார் இருந்து அளித்த ஆறு நன்று" என்று எண்ணி, அடுக்கிய மலைகளை உதைத்தெறிந்தான்.

ஏறினான் அவன் எவரும் அஞ்சுறச்
சீறினான் நெடுஞ் சிகரம் எய்தினான்

தம்பி தனக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கருதிய வாலி வெஞ்சினம் கொண்டான். பிலத்துவாரம் அடைபட்டிருந்ததும், அரியாசனத்தில் தம்பி அமர்ந்திருந்ததும், அவனது வெஞ்சினத் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்தன. சுக்கிரீவன், வாலியை எதிர்கொண்டு சென்று அடிபணிந்து, அண்ணன் வராத காரணத்தால் துயருற்று கிடந்த அவனை எவ்வாறு கட்டாயப்படுத்தி அரியணையில் ஏற்றி வைத்தனர் என்பதை விளக்கினான்.

ஆணை அஞ்சிஇவ் வரசை எய்திவாழ்

நாணில் லாதஎன் நவையை நல்குவாய்

என்று கெஞ்சிக் கேட்டான். ஆனால் வாலி அதற்குச் செவி சாய்க்கவில்லை. பாசமில்லாத தம்பி மோசம் செய்வதாக எண்ணி, அவன் “கோணினான், நெடுங் கொடுமை கூறினான்.” கடல் கடைந்த கரதலங்களால் தம்பியின் உடல் கடைந்தான். வானர வீரர்கள் குடல் கலங்கிட ஓடி ஒளிந்தனர். சக்கரவாள பர்வதத்துக்கும் அப்பால் விரைந்தோடிய சுக்கரீவனைத் தொடர்ந்து ஓடிப் பிடித்தான் வாலி,

பற்றி, அஞ்சலன் பழியின வெஞ்சினம்
முற்றி நின்றதன் முரண் வலிக்கையால்

தம்பியைக் கொல்லப் போனான். உடன் பிறந்தவனைக் கொன்றால் பழியுண்டாகும் என்பதைக் கூட, வெஞ்சினம் முற்றி நின்ற வாலி உணரவில்லை. நல்லவேளையாக, அவன் சற்றுச் சோர்ந்திருந்த சமயத்தில், சுக்கிரீவன் அவன் பிடியிலிருந்து தப்பி வந்து, வாலி வரமுடியாத இந்த மலையில், சாகாமல் காலம் தள்ளுவதாக அனுமன் கூறுகிறான்.

கிட்கிந்தையில் வாலி சுக்கிரீவர் பகை அதர்ம தர்ம முரண்பாட்டில் முளைக்கவில்லை. அறம் வெல்வதற்காகப் பாவம் தோற்பதற்காக, வாலி சுக்கிரீவர் பகை மூண்டதாகக் கூற முடியாது. இருவரும் மனம் மாறுபடக் காரணமே இல்லை. இளையவன் மூத்தவன் மௌலியைக் கவரத் துணியவில்லை. இங்கு ஏற்பட்ட பகைக்கு அந்தச் சமுதாயத்தின் பிற்பட்ட நிலைமைதான் காரணம்.

ஆனால் இவ்வாறெல்லாம் நிதானமாக யோசித்துப் பார்க்கும் மனநிலையில் இராமன் இல்லை. தமையன் தம்பிக்கு அநீதி இழைக்கிறான் என்பதே அவன் உள்ளத்தில் தைக்கிறது. அதுவும் அனுமன் கடைசியில் கூறிய செய்தி தான் அவனை ஒரு குலுக்குக் குலுக்கி விடுகிறது. அனுமன் இறுதியில் கூறியது என்ன?

உருமை என்று இவற்கு உரிய தாரமாம்
அரு மருந்தையும் அவன் விருமபினான்
இருமை யுந்துறந்து இவன் இருந்தனன்
கருமம் இங்கு இது எம் கடவுள் என்றனன்

எம் இறைவனே! இவனுடைய மனைவியான உருமையையும் வாலி கவர்ந்து கொண்டான். செல்வம், மனைவி என்ற இரண்டையும் இழந்தவனாகச் சுச்கிரீவன் இருக்கிறான். இதுதான் நிகழ்ந்தது என்று அனுமன் தான் கூறிவந்த வரலாற்றை முடித்தான்.

பதினான்கு உலகங்களும் அவனுக்குத் துணையாக வந்து நின்றாலும் அவற்றையும் அவனோடு அழிப்பேன். உனக்குத் தலைமையும் தாரமும் உடனே தருவேன். அவனது உறைவிடத்தைக் காட்டு என்று கூறினான் இராமன்.

இராமன் தான் உணர்ச்சி வேகத்தில் கூறினான். சுக்கிரீவனது, தலைமை எனக்கு உரியதன்று, தாரமே நான் வேண்டுகிறேன் என்று சொல்கிறானா? இல்லை. தமையன் வெகுளியால் நேர்ந்த துன்பத்தில் மனம் நொந்து நிற்கும் மலை சூழ்வான் மைந்தன். தலைமையையும் பெறுவதற்குத் தயங்கவில்லை. இராமனது உறுதிமொழியைக் கேட்டு

அவன் உவகை அடைகின்றான். துன்பத்துக்கு அக்கரை கண்டதாகப் பூரிக்கிறான். விழுந்ததே இனி வாலி தன் வலி என்று எண்ணி இன்பம் அடைகின்றான்.

வாலியை வதைப்பேன், தலைமையும் தாரமும் தருவேன் என்று கூறியதுடன் நில்லாமல், தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவேன்" என்றே வாக்குறுதி தந்திருப்பதைக் கவனித்தல் வேண்டும். எல்லையில்லாத ஆற்றலுடையவனும், சமருக்கு எதிர் வருவோனின் உரத்திலும் வரத்திலும் பாதியைப் பெறும் அனுகூலத்தைப் பெற்றவனுமாகிய வாலியை இன்றே கொல்வேன் என்று வாக்களித்ததே அவனது உணர்ச்சி வேகத்தைத் தான் எடுத்துக் காட்டுகிறது.

வாலிக்குக் காலனாவதற்கு இராமன் இணங்கியதால் இறும்பூதெய்திய இரவி குமாரன் கூட, ஒருநாள் போரில் வரபலமிக்க வாலியை வதம் செய்யும் வல்லமை இவனுக்கு உண்டா என்று ஐயம் கொள்கின்றான். அனுமன் கூறிய உறுதி வாசகம் அவனுக்கு மனநிறைவு அளிக்கவில்லை. எனவே, தன் அம்பால் ஒரு மாமரத்தைத் துளைக்கும்படி இராமனைக் கேட்டுக் கொண்டு அவனது வில்லாற்றலைச் சோதிக்கலாமென்று அனுமன் யோசனை கூறுகிறான். அவ்வாறே சுக்கிரீவன் வேண்டுகிறான். இராகவனோ, ஒற்றை வாளியால் ஊழி பெயரினும் தாம் பெயரா ஏழு மாமரங்களைத் துளைத்து விடுகிறான். இதைக் கண்டு சுக்கிரீவன் பெருமகிழ்ச்சி அடைகிறான். வானரவீரர் ஆடிப்பாடி நறவை உண்டு நர்த்தனம் செய்கின்றனர். "அன்னை ஒப்புடைய உன் அடியருக்கு அடியன் யான்" என்று சுக்கரீவன் இராமனிடம் கூறி வணங்குகிறான்.

**தூய நட்பும் துணிந்த செயலும்**

வாலி வதைப் படலத்துக்கு முன் அமைந்திருக்கும் கலன் காண் படலம், கதை ஓட்டத்துக்குப் பெரிதும் உதவவில்லை என்பது உண்மை. ஆனால் இராம சுக்கிரீவரின் இயல்பைப் புரிந்துகொள்ள இது துணை செய்கிறது.

அடுத்த படலத்தில் தான் வாலியை நாம் நேரில் சந்திக்க இருக்கிறோம். அந்தச் சிறியன சிந்தியாதானின் சீர்த்தி நேர்த்திகளில் நெஞ்சைப் பறி கொடுக்கப் போகிறோம். அறத்தின் நாயகனாக அவனால் போற்றப்படும் இராமனே அவனைக் கரந்திருந்து கொல்வதைக் கண்டு கண்ணீர் பெருக்கப் போகிறோம்.

சுக்கிரீவன் கொண்டு வந்து காட்டிய அணிகலன்களை இனம் தெரிந்து கொள்கிறான் இராமன். இராவணனால் கடத்தப்பட்ட சீதையின் ஆபரணங்களே என்பதைத் துணிந்தவுடன், அவன் அடைந்த துயரைக் கவிஞன் வருணிக்கிறான்.

தெரிவுற நோக்கினான் தெரிவை மெய்யணி
எரிகனல் எய்திய மெழுகின் யாக்கைபோல்
உருகினன் என்கிலம் உயிருக்கு ஊற்றமாய்ப்

பருகினன் என்கிலம் பகர்வது என்கொலாம்?
விட்டபேர் உணர்வினை விளத்த என்கொனோ?
அட்டன உயிரை அவ் அணிகள் என்கொனோ?
கொட்டின சாந்துஎனக் குளிர்ந்த என்கொனோ?
சுட்டன என்கொனோ? யாது சொல்லுகேன்!

அணிகலன்களைக் கண்ட இராமன், பிரிவாற்றாமையால், அனலை அடைந்த மெழுகுபோல் உருகுகின்றான். அதே பொழுதில், அணியைக் கண்ட மாதிரி

தரிந்தவளையும் அடையலாமென்ற ஆசை தோன்றி வலிமை பெறுகிறான். எனவே, உயிருக்கு ஊற்றமாய், ஆபரணங்களைப் பருகுவான்போல் பார்த்ததாகக் கவி கூறுகிறான்.

தூயோனான இரவி குமாரன் இராமனைத் தழுவித் தாங்கித் துயரம் தாங்காது விம்முகிறான். தலைவனுக்குத் தைரியம் கூறுகிறான். இராவண வதம், இராமனுக்கு ஒரு பொருட்டான காரியமா என்று கேட்கிறான். அனுமன் அவனுக்குத் தொண்டனாய் இருப்பதை நினைவூட்டுகிறான். இலக்குவனது பேராற்றலைக் குறிப்பிடுகிறான். "நானே சென்று தேவி எந்த உலகத்திலிருந்தாலும் தேடிக் காண்பேன். தேவியைச் சிறை வைத்த தீயவன் தலைகளைத் திருகி எறிவேன். அவளை மீட்பேன். கடையேன் கைப் பணியைக் காண்பாயாக" என்று கூறுகிறான். "எனது சிறு குறை தீர்த்தல் பிற்பாடு ஆகுக. உடனே மின்னிடைச் சானகியைத் தேடிச் செல்வோம். விடை தருக என்றே உரைக்கிறான். இங்குதான் சுக்கிரீவனது நட்புத் தூய்மையைக் காண்கிறோம்.

இராமன் சீதையைக் கவர்ந்து சென்றதால் நேர்ந்த பழியைத் துடைக்க, உயிர் விடாது ஒழியேன் என்று கூறிவிட்டு, உன் குறையை முடித்த பின்பே, என் உயிர் நீக்குவேன் என்று உறுதி கூறுகிறான்.

இந்நிலையில் அனுமன் தலையிடுகிறான். சீதையைத் தேடும் பணியின் சிரமத்தை உணர்த்துகிறான். எழுபது வெள்ளம் வானரப் படையின் இதற்குத் தேவையென்று அறிவுறுத்துகிறான். கிட்கிந்தை ராணுவத்தைப் பயன்படுத்த வேண்டுமானால், வாலியை வதம் செய்து சுக்கிரீவனை அரசனாக்கும் காரியம் முதலில் நிகழவேண்டுமென்று விளக்குகிறான். அனுமன் கருத்தை எதிர்த்து வாதிக்க முடியாததால் சுக்கிரீவன் மௌனம்

சாதிக்கிறான். இராமன் அனுமன் வாதத்தை அங்கீகரித்து வாலி வாழ் இடத்துக்குச் செல்வோமென்கிறான். அனைவரும் கிட்கிந்தைக்குக் கிளம்பிச் செல்கின்றனர்.

வரம்பு இல்லா ஆற்றலும் வர பலமும் பெற்ற வாலியின் வலியை அழிப்பது எப்படி? அதுவும், அன்றே அழிப்பது எப்படி? புரியாத புதிர் தான். இறுதியில் இராமனே வழியொன்று சொல்கிறான்.

நீ வாலியுடன் போர் செய்யும் பொழுது நான் வேறு நின்று வாளியைச் செலுத்துவேன் என்று கூறுகிறான் இராமன். வேறு நின்று என்றதால் தனி இடத்தில் மறைந்து நின்று அம்பைச் செலுத்தத் தீர்மானித்துள்ளான் என்பது பெறப்படும். முன்போல அவசரப்பட்டு ஆவேசப் பேச்சுப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட எண்ணினான் போலத் துணிந்து அமைந்த கருத்து இது என்று இராமன் கூறுகிறான். சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்த்தப்பின் செய்த முடிவு என்று கூறுகிறானே அல்லாமல், இக்கருத்துக் கொண்டதற்குக் காரணம் யாதென்று தெரிவிக்கவில்லை.

இதை இலக்குவன் ஆமோதிக்கிறானா? இல்லையென்று தான் சொல்ல வேண்டும். உண்மையில் சுக்கிரீவனைக் கண்டதிலிருந்தே அவன் வாய்மூடி மௌனமாய் இருக்கிறான். அண்ணனிடம் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் அடக்கி வைத்துக் கொள்ளும் பண்பு அவனுக்கு இல்லை. அதை எடுத்துரைத்து விட்டு, இறுதியில் அண்ணனுக்குக் கட்டுப்பட்டு நடப்பது தான் அவனுக்கு இயல்பு. எனினும், அவன் இதுகாறும் மௌனம் சாதிப்பது ஒரு மர்மமாக இருக்கிறது. தொடக்கத்திலிருந்தே சுக்கிரீவனிடம் அவனுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் தமையனுக்குக் காலனைத்

தேடிப் பிடித்து வருந்தி அழைக்கும் தம்பியை நம்பக் கூடாதென்பதையும் இராமனிடம் அவன் பிறகு சொல்கிறான்.

அனுமன் இராமன் கருத்துக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. என்றாலும் வேறு வழியில்லை என்பதை அறிந்த அவன், மௌனமாயிருந்து தன் சம்மதத்தைத் தெரிவிக்கிறான் என்றே கருதல் வேண்டும்.

சுக்கிரீவனோ எவ்வகையிலும் வாலி மீது வெற்றி கொள்வதில் துடியாக நிற்கிறான். எனவே, இது நன்று எண்ணி, அராவாரம் செய்து சொல்கிறான். தோள்தட்டித் தாள் கொட்டிப் போருக்கு வா என்று வாலியை அழைக்கிறான். அதைக் கேட்ட வாலியை வீரத்தின் உறைவிடத்தை சிறியன சிந்தியாதானை இராமன் நேசித்து வாழும் பெருமகனை இனித் தரிசிப்போம்.

**அஞ்சி நின்ற தாரை அஞ்சாது சென்ற வாலி**

மலைக் குகையில் சயனித்திருக்கும் சிங்கம், மதயானையின் முழக்கத்தைக் கேட்டு எழுவதைப் போல, வாலி எழுகின்றானென்று கூறி, அவ் வீரனது வலிமை மிகுதியைச் சுட்டிக்காட்டுகிறான் கம்பன். அவன் விழிகள் தீப்பொறி கக்குகின்றன. வந்தனென் வந்தனென் என்று கூறும் சொற்கள் திக்கெட்டும் எதிரொலிக்கின்றன. ஆலம் ஒத்தவன் வாலி. அவனைத் தடுக்க வரும் தாரை அமுதம் ஒத்தவள். கணவனது கோபத் தீயால் தன் நெடுங்கூந்தல் கருகுவதையும் கவனியாமல் அவன் அவனுக்கு இதம் கூற வருகிறாள். ஆயினும் அந்த மலைக்குல மயில் பின்வாங்காமல் தன் செவ்விய கருத்தை உறுதியாக எடுத்துரைக்கிறாள். வலிந்து போர்த் தொடுக்க மீண்டும் வந்திருக்கிறான் என்றால் அவன்

நெடுந்துணை பெற்றிருப்பதே அதற்குக் காரணம் என்று தாரை கூறுகிறாள். உடனே வாலி இல்லவள் உணரத் தன் வல்லமையை விவரிக்கிறான். என்னை எதிர்ப்பவன் எவனாயினும் தோற்று அழிவது திண்ணம் என்று உறுதி கூறுகிறான். எதிரியின் பலத்தில் பாதி தன்னை வந்தடையும் வர பலமும் பெற்றிருப்பதைச் சுட்டும் வகையில்,

ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால் பகைப்பது எங்ஙனம்?

என்று கேட்கிறான்.

ஒரு வீரன் தன் ஆண்மையைப் பகைவனிடம் பாராட்டிப் பேசுவது போர் முறைக்கு உகந்த செயலாகும். ஆனால் அயலாரிடத்தில் தன்னைத் தானே போற்றிப் பேசுவது வீரமன்று. தகவில்லாத தற்புகழ்ச்சியாகும். வாலி இத்தகைய தற்புகழ்ச்சியில் அல்லவா ஈடுபடுகிறான் என்று சிலர் வினவலாம். இதன் மூலம், அவன்பால் நமக்கு ஏற்படும் நன்மதிப்புக் குறைகிறதென்றும் வாதிக்கலாம். அவ்வாறு குறைய வேண்டும் என்றே கம்பன் வான்மீகத்தை அடியொற்றிக் இந்தக் கட்டத்தை அமைத்திருப்பதாகவும் கூறலாம்.

வந்தனென் என்றவனைத் தடுத்த தாரையிடம் தன் மேம்பாட்டைப் பெருக்கி உரைத்து நீ துயர்ஒழிக. எனச் சமாதானம் கூறுகிறான் வாலி. துயர் ஒழிக என்றதால், தாரை மறுகி நின்ற நிலை உணரமுடிகிறது. சுக்கிரீவன் நெடுந்துணையுடன் வந்திருக்க வேண்டுமென்று ஊகமாய்ச் சொன்னது உண்மையே என்று உணர்த்த மேலும் கூறுகிறாள்.

அன்னது கேட்டுஅவள் அரச ஆயவற்கு

இன்னுயிர் நட்புஅமைந்து இராமன் என்பவன்
உன்னுயிர் கோடலுக்கு உடன்வந் தான்எனத்
துன்னிய அன்பினர் சொல்லினார் என்றாள்

தாரை இதைத் தயங்கித் தயங்கிக் கூறியிருத்தல் வேண்டும். இதைக் கேட்ட வாலி அதிர்ச்சியடைகிறான். அவளது கூற்றின் உண்மையை ஆராயப் புகும் பான்மையில் அவன் இல்லை. மனித குலத்துக்குப் புது வாழ்வு அளிக்க வந்த புனிதனாகாகவே இராமனைக் காண்கிறான் வாலி. இருவினையின் கட்டுக்களில் சிக்கித் தத்தளித்துத் தவிக்கும் உலகினுக்கு அறவழியைச் செயலால் காட்டிவரும் இராமனைப் பற்றித் தகுதியில்லாத வார்த்தை பேசினாயே என்று அவன் கோபிக்கிறான். இராமனை இழிவாகப் பேசிய நீ பெண்ணாயிருப்பதால் உயிர் தப்பினாய். ஆடவனாயிருந்தால் இதற்குள் அழித்து ஒழித்திருப்பேன் என்ற பொருளும் இதில் ஒழிந்திருப்பதை நுனித்தறியலாம்.

இராமன் சுக்கிரீவனுடன் சேர்ந்து வாலியை எதிர்ப்பது தருமதேவதை தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்பது வாலியின் கருத்து. தருமம் தன்னைத் தானே ஒழிக்காது என்பது எப்படி உண்மையோ அதைப் போல இராகவன் சுக்கிரீவனுடன் சேர மாட்டான் என்பதும் உண்மையாம்.

நின்றபேர் உலகெலாம் நெருக்கி நேரினும்
வென்றிவெம் சிலையலால் பிறிது வேண்டுமோ?
தன்துணை ஒருவரும் தண்ணில வேறுஇலான்
புன்தொழில் குரங்கொடு புணரும் நட்பனோ?

என்று கேட்கிறான்.

இங்குதான் வாலி பிழை செய்கிறான். இராமன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்த வீரன் என்பது உண்மை. ஆனால் அவன் கூட்டொருவரையும் வேண்டாத கொற்றவன் அல்லன். இராவண வதம் என்ற செயற்கரிய பணியை நிறைவேற்றவிருக்கும் தலைவன் அவன்.

இராவண சமுதாய ஏற்பாட்டை அழித்து, இராமராஜ்ய சமுதாய முறையைத் தோற்றுவிக்கும் யுகப் புரட்சியின் தலைவனே இராமன். இராமனுக்குச் செங்கைத் தனுவாக விளங்கி அனுமன் செய்யும் சேவையை நாம் அறிவோம். அவன் தான் சீதை இருக்குமிடம் கண்டான். பிரிவுத்துயர் தாங்காது தற்கொலை செய்து கொள்ளத் துணிந்த ஜானகிக்கு நம்பிக்கை அளித்து, அவள் சாகாமல் காப்பாற்றினான். “கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்” என்ற நற்செய்தியை மீண்டு வந்து பகர்ந்து, செத்துக் பிழைத்துக் கொண்டிருந்த இராமனுக்கு உயிர்த் தளிர்ப்பு ஊட்டினான்.

இராமன் ஆவி சேர்ந்த பொழுது சுக்கிரீவன் பேசியதைக் குறிப்பிட்டோம். அவன் இராம இலக்குவரின் பேராற்றலை வியந்து பேசினான். எந்த உலகத்தில் சீதை சிறை வைக்கப்பட்டிருந்தாலும் நான் ஒருவனே சென்று தேடிக் காண்பேன் என்று கூறினான். இராவணன் சிரங்களைக் கொய்து சீதையை மீட்டு வருவேன் என்று சொன்னான். ஆனால் அனுமன் அதை ஆமோதித்தானா இல்லை. சுக்கிரீவனை அரசனாக்கி, வானரப் படையைக் கூட்டினாலன்றி இராவணன் இருப்பிடத்தைத் தேடி அடைய முடியாது என்றான் அவன்.

எனவே, கோதண்டராமனுக்குக் கூட்டாளி தேவையில்லை என்று வாலி கூறியது தவறென்பதைக் காண்கிறோம். வாலியின் பேச்சிலுள்ள இன்னொரு தவற்றையும் சுட்டிக் காட்டல் வேண்டும். இராமனுக்குத் துணை வேண்டுமானாலும், குரங்கினத்தில் பிறந்தவனைத் தோழனாகக் கொள்வானா? என்று கேட்பதையே நாம் இங்கு கருதுவது. குலம் தோழரைக் கொள்ளும் போக்கு இராமனிடம் கிடையாது. சாதி, குலம் முதலியவற்றை உரைகல்லாகக் கொண்டு உயர்வு தாழ்வு பாராட்டும் குன்றிய வட்டத்தில் சுழலான் அவன். அந்த குறுகிய நோக்கு அவனைப் பற்றியிருந்தால், அவன் அறத்தின் நாயகனாக முடியாது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தான் இராமனது அறம். அதனால்தான் அவன் குகனை நண்பனாகக் கொண்டான். சுக்கிரீவனைத் தோழனாக ஏற்கிறான். நாளைக்குத் தன் இல்லாளைக் கவர்ந்து சென்ற இராவணனது தம்பியான வீடணனையும் சொந்தச் சகோதானாகக் கொள்ளப் போகிறான். இராமனுடைய பெருவாழ்வின் உயிர் நிலை இது. இராம பக்தனான வாலி இதை உணரத் தவறி விடுகிறான்.

வாலி இராமனைச் சகோதர வாஞ்சனையின் வடிவமாகக் காண்கிறான். தன்னை மறந்து தம்பியர் நலனுக்காகவே வாழும் இராமனது தகைமையைப் போற்றுகிறான். ஆனால் அந்த இராமனை முன் மாதிரியாகக் கொண்டு வாழும் வளர்ச்சி வாலிக்கு இல்லை. இவனுக்கும் தம்பியிடம் அன்பு உண்டு. ஆனால் தம்பியிடம் ஐயம் கொண்ட பின், அந்த அன்பெல்லாம் நஞ்சாகிவிட்டது. மன்னிக்க வேண்டுமென்று மன்றாடிய தம்பியைக் கொல்லக் கருதிய தமையன்தான் இராமனது சோதர வாஞ்சையைப் போற்றுகிறான்.

அதனால்தான் தமையன் – தம்பி சண்டையில் தலையிட்டு இடையிலே அம்பு தொடுக்கும் அநீதியை இராமன் இழைக்க மாட்டான் என்று உறுதியாகக் கூறுகிறான். இரவி குமாரனுக்கு இன்னுயிர் நட்பு அமைத்து இராமன் என்பவன் உன்னுயிர் கோடலுக்கு உடன் வந்தான் என்ற உண்மையை உளவறிந்து கூறினாள். உலகியல் அறிவும், உயர்குணமும் மிகுந்த உத்தமி தாரை.

ஆனால் வாலியோ, அறத்தின் நாயகன், தருமத்தை நடத்திக் காட்டும் கர்மவீரன், தம்பிக்காகத் தரணியை வழங்கிய தியாகி, தன்னேரில்லாத் தலைவன், அண்ணன் – தம்பிச் சண்டையில் தலையிட்டு அம்பு தொடுக்கும் அற்பனாக மாட்டான் என்று அடித்துக் கூறிவிட்டான்.

அஞ்சாது செல்லும் வாலியின் வீரத்தைப் போற்றும் நம் நெஞ்சல் பரிவு நிரம்புகிறது. அதுமட்டுமல்ல. எந்த இராமன் கரந்திருந்து கொல்வதற்குச் சித்தமாய் இருக்கிறானோ, அந்த இராமன் இது செய்வான் என்ற கருத்தே மனத்தில் இல்லாமல், அவனது தருமத்திலும், தகவிலும் தளராத நம்பிக்கையுடன் வாலி செல்கிறான் என்பதைக் கண்டு அவன் பால் நமது பரிவுணர்ச்சி அளவிடற்கரியதாய்ப் பெருகுகிறது.

நான் அவ்விடம் சென்று சுக்கிரீவனோடு போர்ப் புரிந்து அவனைக் கொல்லாமல் அவனது செருக்கை அடக்கிவிடுகிறேன். உனது விருப்பப்படி அவனைச் சண்டையில் நெருக்காமல், கையாலும், தடியாலும் அடித்து ஓட்டி விடுகிறேன் என்று தான் வான்மீகத்தின் வாலி தாரையிடம் கூறுகிறான். ஆனால் கம்பன் வாலியோ உருத்தவன் உயிர் குடித்து விட்டு மீள்வேன் என்று வான்மீகத்தில் இருப்பதைக் கொன்றுவிட்டுத்

திரும்புவேன் என்று மாற்றி விடுகிறான். கொல்லக் கருதாமல் வரும் வாலியை இராமன் மறைந்திருந்து மாய்த்தானென்று கதையை அமைத்தால், வாலியின் பால் பரிவு சாலப் பெருகிவிடுமென்று, காவியச் சிற்பக் கலை வல்லுனான கம்பன் உணர்ந்தான் போலும்.

மற்போரும் மனப்போரும்

உருத்தவன் உயிர் குடிப்பதற்கு விரையும் வாலி உதயகிரியின் சிகரத்தில் தோன்றும் ஞாயிறு என்ன வருகிறான். மலையிலிருந்து புறப்பட்டு, மலை சூழ்வான் மகன் முன் தோன்றும் வாலி, தூணிலிருந்து கிளம்பி இரணியனை எதிர்த்த நரசிங்கனைப் போலக் கண்டோர் அஞ்சி நடுங்கக் காட்சி தருகிறான். இந்த மல்வீரனைக் கண்டு தன்னேரில்லா வில் வீரனே வியப்படைகிறான்.

வாலியின் உடல் அமைப்பையும், உடல் ஆண்மையையும் கண்டு வியந்துதான் இராமன் இவ்வாறு பேசுகிறான் என்பது உண்மை. இல்லாத வியப்பைப் புனைந்து கூறும் இயல்பு இராமனிடம் கிடையாது. ஆனால் தன் வியப்பைத் தம்பியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இராமன் இவ்வாறு பேசுகிறான் என்று எண்ணுவது மேல் நோக்காகும். இலக்குவனுடன் உரையாடுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாக அவன் பயன்படுத்திக் கொள்கிறான்.

சுக்கிரீவனைக் கண்டதிலிருந்து இலக்குவன் ஊமையாக இருந்து வருவதை இராமன் கவனித்து வந்திருக்கிறான் சீதையின் நகைகளைக் கண்டு இவன் விம்மிச் சோர்ந்த பொழுது கூட, இலக்குவன் நெருங்கி வந்து, பொருந்தப் பேசி ஆறுதல் கூறவில்லை.

தம்பியிடமிருந்து தமையன் எதிர்பார்த்த வசை கிடைக்கிறது. இராமன் எது சொன்னாலும் அதுவே வேதம் எனக் கருதி, நகரும் துயிலும் துறந்து தமையனுக்குத் தொண்டு புரிந்து வரும் இலக்குவன், அந்த அண்ணனையே கொடுங் கூற்றுவன் என்று கூறிவிடுகிறான். அறத்தின் நாயகனான அண்ணன் சகோதரத் துரோகி யான சுக்கிரீவனுக்குத் துணைபுரிவதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவது போல, வாலியின் பொலிவைப் பார்த்துப் போற்றும்படி இராமன் கூறியவுடன் உள்ளக் கொதிப்புப் பீறிட்டுக் கிளம்புகிறது. கூற்றுவா! உன் இரையின் மேனியைப் போற்ற வேண்டுமா? நீயே பார்த்துப் போற்று! இந்தக் காட்சியைக் காணவே என் கண்கள் கூசுகின்றன. சித்தங் கலங்கி மனம் பதறி நிற்கும் என்னை ஒன்றும் கேட்காதே! என்று கூறி விடுகிறான்.

இரு வீரர்கள் போர் புரியும்போது இடையில் புகுந்து ஒருவனைத் தாக்குவதே தூய வீரத்துக்கு இழுக்கு. இராமனோ கரந்திருந்து அம்பு தொடுக்கப் போகிறான். இராமன் தர்ம சங்கடமான நிலையில் சிக்கித் தத்தளிக்கிறான். வாலியைக் கொல்வது அறத்துக்கு விரோதம் என்றால், பேசாமலிருப்பது சுக்கிரீவனுக்கு அளித்த உறுதி மொழிக்கு உலை வைப்பதாகும். சினேக தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், வாலியைக் கொல்ல வேண்டும். எனவே தான் இராமன் மனம் மறுகி நிற்கிறானென்று கருதல் வேண்டும். தன்னை வருத்தும் தர்ம சங்கடத்தைத் தவிர்ப்பதற்குத் தம்பி வழிதுறை காட்டியிருந்தால், இராமன் அவனைப் போற்றி நன்றி கூறியிருப்பான். ஆனால் இலக்குவனோ அண்ணனைக் கடிந்து கொள்வதுடன் அமைந்து விடுகிறான். இராமனுக்கு வெப்பமே உண்டாகிறது. அப்பொழுது,

அத்தா! இதுகேள் என ஆரியன் கூறுவான் இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமா?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கௌல்லாம்
ஒத்தாற், பரதன் பெரிது உத்தமனாதல் உண்டோ?

நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோட்படா பதமே குரக்குரு கொண்டது. என்று அனுமனை வியந்து பேசிய இராமனோ இப்பொழுது அனுமனையும் மற்றவரையும் பித்தாய விலங்கு என்று தாழ்த்திப் பேசுகிறான்.

நீ என் இன்னுயிர்த் துனைவன் என்று எந்தச் சுக்கிரீவனைப் பார்த்துச் செப்பினானோ அதே சுக்கிரீவனை இப்பொழுது “பித்தாய விலங்கு” என்று இகழ்கிறான். அனுமனைப் புகழ்ந்ததும், சுக்கிரீவனைச் சோதரனாக வரித்ததும் அரசியல் சூழ்ச்சியின்பாற் பட்டவையல்ல. அவை உள்ளன்புடன் உவந்து செய்த காரியங்கள். எனினும், இங்குச் சுக்கிரீவனைப் பித்தாய விலங்கு என்று பொருந்தா வாதம் செய்கிறான் என்றால், அது அவனது அமைதி கண்ட அறிவிலிருந்து பிறக்கும் வாதம் அல்ல. நிலைமையின் நெருக்கடி புரியாமல் தர்மம் உபதேசிக்கும் தம்பியிடம் ஏற்பட்ட ஆத்திரத்தில் இவ்வாறு வாய் தந்தன பேசுகிறான். அந்தப் படபடப்பில், உத்தமத் தம்பிக்கு உதாரணமாகப் பரதனைப் பொருத்திக் காட்டி, இலக்குவனை மட்டம் தட்ட முனைகிறான்.

கொடிப்பூச் சூடிச் சுக்கிரீவன் மறுப்போருக்குச் சென்ற பிறகும் இராமன் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தத்தளிக்கிறான் என்றே கொள்ள வேண்டும். அதனால் தான், முதற் போரில் சொல்ல முடியாத துன்பத்துக்கு உள்ளான இரவி மைந்தன் மீண்டும் இன்னல் உறுவதற்கு இடம் தராமல், உடனுக்குடன் அம்பைச் செலுத்த வேண்டிய அண்ணல் காலம்

கடத்துகிறான். இந்திர குமாரன் தன் இளவலை உயிர் நிலைகளில் அடித்துப் புடைத்து உதைத்து மயங்கச் செய்யும் வரை இராமனது கலக்கம் தெளியவில்லை. கண்களிலிருந்தும் காதுகளிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்தோடச் சிதைவுற்ற சுக்கிரீவன் இராமன் இருந்த திசையை ஏக்கத்துடன் நோக்கியபொழுதும் இராமன் வில் வலையவில்லை. இவனைப் பற்றி எடுத்துப் பாரிடை எற்றுவன் என்று எண்ணி வாலி சுக்கிரீவனது இடுப்பிலொரு கையும், கழுத்திலொரு கையுமாகப் பிடித்து எடுத்துத் தன் தலைக்கு மேலாகத் தூக்கிய போதே, இனிச் சுக்கிரீவன் உயிர் தப்பான் என்ற நிலை ஏற்பட்ட போதே, இராகவன் வாலி மார்பு குறித்து வாளி விடுக்கிறான். வாலியைக் கொல்லா விட்டால், சுக்கிரீவன் சாவான் என்ற அபாயகரமான நிலையைக் கண்ட பின்னரே, இராகவன் ஒருவகையாக மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கணையை ஏவுகிறான் என்று அனுமானிக்கலாம். "கோலொன்று வாங்கித் தொடுத்து, நாளொடு தோளிறுத்து இராகவன் துரந்தான்.

இராகவன் அம்பு ஒன்றை எடுத்து வில்லில் பூட்டி, நாணைத் தோள் அளவும் இழுத்து, அம்பைச் செலுத்துகிறான் என்று மட்டும் கூறாமல், நாணுடன் தோட்களையும் இறுக்கிச் செலுத்துகிறான் என்று கூறுகிறான் கம்பன். கோதண்டராமன் கணையை விடுக்கும் பொழுது, தோட்கள் ஒத்துழைக்க மறுப்பதில்லை. ஆனால் இப்பொழுது அவையும் வில்லுக்கு நேரவிருக்கும் பழியை எண்ணி நாணின போலும்! எனவே நாணையும் தோட்களையும் இறுக்கி அம்பைச் செலுத்தினான்.

**சாமான்யனும் சான்றோனும்**

புண்பட்ட வாலி, நெருங்கி வந்து இராம, இலக்குவரைக் கண்ணுற்றவுடன், அறவழிப்பட்ட கூரிய வார்த்தைகளைப் பேசலாயினான். நான் என் பகைவனுடன் வெறிச்சமர் செய்த வேளையில் என்னை மறைந்து நின்று கொண்டு விட்டீர். பராமுகனாயிருந்து வீழ்த்திய இந்த வினையின் மூலம் நீர் என்ன புகழை அடைய முடியும்? உமது பெருமையை இசைக்காத நா இல்லை. நீர் அரசர் வம்சத்தில் உதித்தவர். மேன்மை மிகுந்த குலத்தில் தோன்றியவர். வாய்மை தவறாதவர். காட்சிக்கு இனியவர். குணசீலர். பண்பாளர். பிறர் துயரைக் கண்டு இளகும் இதயம் உடையவர். பிறர் இன்புறுவதைக் கண்டே தாம் இன்பமடையும் சால்புள்ளம் படைத்தவர். பெரும் புகழை நாடி மனம் விம்மிய பொழுதும், கடமை, சத்தியம், உறுதி, தன்னடக்கம், அரசநீதி, அபராதம் செய்த வரைத் தண்டிக்கும் திறன் ஆகியவற்றை மக்கள் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். அரசர்க்குத் தேவையான நற்குணங்கள் இவை, இவையனைத்தும் உம்மிடம் இருப்பதாகத்தான் நானும் எண்ணினேன். மேலும், உமது தொன்மையான குலத்தின் பெருமையையும் கருத்தில் பொருட்டாக மதியாமல், உதாசீனம் செய்தேன். சுக்கிரீவனைச் சந்தித்து மல்லமல் நிகழ்த்த வந்தேன். இராம! நான் வேறு ஒருவனுடன் போர் செய்யும் பொழுது, இடையில் என்னைத் தாக்கும் ஈனச் செயலை நீர் வெறுப்பீர் என்று இன்று காலை மரண வாளி மார்பில் பாயும் வரை மயங்கியிருந்தேன். அன்னியன் அம்பை எதிர்பாராமல் அமர் செய்தேன்.

ஆனால் இப்பொழுது உமது கொடுமனம் அம்பலமாகிவிட்டது. நீர் புற்களால் மூடப்பெற்ற பாழுங்கிணறு போன்றவன். அறக்குறி தாங்கி மறிவினை புரிகிறீர். உமது உள்ளத்தல் கள்ளம் நிறைந்திருக்கிறது. இழிந்த தீவினையைப் புரிவதற்கும் நீர் சித்தமாயிருக்கிறீர். நீர், நீறு பூத்த நெருப்பைப் போல், முனிவர் வேடத்தில் திரியும்

பாவியாக இருப்பதை நான் உணரவில்லை. நீர் தருமத்தின் நடை உடை பாவனையை வீணுக்குத் தரித்து வெளிச்சம் போடுவீர் என்று நான் கருதவில்லை. உமது நாட்டிலோ நகரிலோ நான் ஒரு தீங்கும் இழைத்திலேன். நான் மமதை கொண்டு உம்மை அவமதித்தேன் என்று நீர் குறை சொல்ல முடியாது. பின்னார் நீர் ஏன் குற்றமற்றவனான என்னைக் கொலை செய்தீர்? நான் காட்டிலுள்ள காய்கனிகளைப் புசித்துக் கொண்டு, எவருக்கும் கெடுதி செய்யாத வாழ்வை நடத்தி வருகிறேன். என் பகைவனைக் களத்தில் கண்டு சமர் செய்தேன். இராம! உம்மோடு ஒரு பொழுதும் போருக்கு வரவில்லை. அரசனே! உம்மை நான் தவக் கோலத்திலே காண்கிறேன். தொன்மையான பெருமைக்குரியர் அரசர் குலத்தில் உதித்த உம்மைப் போன்ற ஒருவர், அழகான தரும வேடம் தாங்கி, இழிவான செயல் புரியலாமா? குலத்துக்குப் பழி தேடலாமா? ரகு மன்னன் காலத்திலிருந்து வாழையடி வாழையாக நீண்டு நிலை பெற்ற உமது வம்சம், கடமைகளை நிறைவேற்றிப் புகழ்பெற்றது. அந்த வம்சத்தின் தோன்றலாகிய நீர், ஏன் தவசி ஆடை தரித்த பாவியாகக் காடுகளில் திரிந்து கொண்டிருக்கிறீர்? சத்தியம், பராகிரமம், மாசு மறுவில்லாத நீதி, மன நிறைவுடன் வாரி வழங்கும் வள்ளன்மை, பாவியைப் பாரில் வீழ்த்தும் விறல் இவையே அரசனுக்குச் சிறப்பை அளிக்கின்றன. அரசனே! நாங்கள் காய்கனி கிழங்குகளைத் தின்று காட்டில் வாழ்கிறோம். எவருக்கும் தீமை செய்யாத எங்கள் இனத்துக்கு இயல்பாக அமைந்த ஏற்பாடு இது. நீரோ மேலான இடத்துக்கு உரிய மானுடர். பொன்னும் வெள்ளியும், பூமியும் நாடும், பேராசையுமே போருக்குத் தூண்டுகோல். கவகத்துக்குக் காரணம். கொள்ளைக்குத் தோற்றுவாய். இவற்றில் எதன்மீது ஆசை கொண்டு என்னைத் தாக்கினீரோ? வலுப்பெற்ற அரசர்கள் இன்பம் நாடி

இஷ்டப்படி செயல்பட முடியாது. அவர்கள் பாவத்தை ஒடுக்கும் வன்மையும், அன்பால், ஆதரவைத் திரட்டும் மென்மையும் பெற்றிருத்தல் வேண்டும். அரசுக் கப்பலைச் செலுத்திச் செல்லும் ஒரு நிலைப்பட்ட சித்ததுக்கு உரியவராயிருத்தல் வேண்டும். நல்லோரையும், சான்றோரையும் துணை கொள்ளும் விவேகத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். இந்தப் பண்புகளை எல்லாம் பிணக்கமில்லாமல் இணக்கமாக இசைத்துக் கடைபிடிக்கும் வேந்தரே அழியாப் புகழ் அடைவர். ஆனால் நீரோ திண்மையற்றவராகவும், முன் கோபியாகவும், ஊசலாடியாகவும், ஆசை அனைத்துக்கும் அடிமையாகவும் இருக்கிறீர். கடமையைத் திரணமாக மதித்து மிதித்துத் துவைக்கிறீர். வில்லொன்றே வலியுடைத்து என்று கருதி வாழ்கிறீர். நீர் மெய்ப் புகழை நாடவில்லை நல்லொக்கத்தை இழிவாகக் கருதுகிறீர். ஐமபுலன்களின் சிறையாளாகிப் புதுப்புது இன்ப வேட்கைகளில் ஈடுபடுகிறீர்! நான் சொல்லாலோ செயலாலோ உமக்குத் தீங்கு இழைக்கவில்லை எனினும், உமது கொலை வாளியால் நான் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறேன். இதனால் உமக்கு நீங்காக் களங்கம் ஏற்பட்டு விட்டது. இந்தத் தகாத காரியத்தை ஏன் செய்தீர் என்று சாதுக்கள் கேட்டால், என்ன சமாதானம் சொல்வீர்? அரசனே! அரசனைக் கொன்றவன். நாத்திகன், அந்தணனையோ ஆவினத்தைக் கொன்று அகமகிழ்ந்தவன். அண்ணன் திருமணம் முடிக்காதிருக்கும் பொழுது தான் தரும விரோதமாகத் திருமணம் செய்தவன். குருபத்தினியுடன் கூடத் துணிந்தவன், உலோபி, உளவாளி, நண்பனைக் கொன்றவன் ஆகிய இழிவுப் பிறவிகள் அனைவரும் பாவிகளின் நரகில் விழுவார்கள் என்பது திண்ணம்.

என் தோலைச் சாதுக்கள் உடுத்தமாட்டார்கள். எனது எழும்புகளும் உரோமங்களும் உமக்குப் பயன்தரா. உம்மைப் போன்ற தவசிகள் என் மாமிசத்தை உணவாகக் கொள்ளமாட்டார்கள். முள்ளம் பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமை ஆகிய நகங்களையுடைய பிராணிகளை ஒருவன் கொன்று புசிக்கலாம். ஆனால் ஐந்து விரல்களுள்ள குரங்கு, என் எலும்புகளையும், உரோமத்தையும், தோலையும் தொடுவது பாவம் என்று விவேகிகள் கருதுவர். அவர்கள் என் மாமிசத்தைப் புசிக்கமாட்டார்கள். இராமா! நான் பயனில்லாத பலியாக மரிக்கிறேன். தாரை திறம்பட வாதித்ததெல்லாம் வீண் போயிற்று. அவளது புத்திமதிக்குச் செவி கொடுக்க மறுத்தேன். இனிய சொற்களைத் தான் அவள் பேசினாள். ஆனால் நான் அவற்றை வெறுத்தேன். இங்கு ஓடி வந்து காலன் வாய்ப்பட்டேன். நல்லொழுக்கச் சிறப்புக்குரிய பெண்ணுக்கு நாணம் அறியாத நலங்கெட்ட நாயகன் வாய்த்தாற் போல, இந்த பூமாதுக்கு நீர் நாயகனாக அமைந்தீர். நீர் அவளைப் பாதுகாக்கவில்லை. நீர் கோழை. உமது இதயம் இழிவு அடைந்திருக்கிறது. நீர் மோசக்காரன். துன்ப மார்க்கத்தில் திளைக்கும் தீயோர் உமது கொடுமணம் கபடத்தில் இன்பம் காண்கிறது. உம்மைப்போன்ற சிறுமைப் பிறவியை, அற்பனை மகாத்மாவான தசரதன் எப்படிப் பெற்றான்? அந்தோ! தருமம் என்னும் கயிற்றை அறுத்துக் கடமை என்னும் அங்குசத்துக்கு அடங்காது, மதம் கொண்டு அலையும் இராமன் வேழத்தால் எதிர்பாராமல் தாக்குண்டு கொல்லப்பட்டேன். அந்த மதயானையின் மிதியடியில் நான் விழுந்து கிடக்கிறேன். இந்தத் தகாத காரியத்தைச் செய்த நீர் பெரியோர் கூடும் பேரவையில் பேசுவதற்கு எப்படித் துணிவீர்? இந்த மானங்கெட்ட செயலைக் கூரிய முறையில் கண்டித்து அவர்கள் அனைவரும் பேசும்பொழுது நீர் என்ன செய்வீர்? உமது

வீரம், பலம், பராக்கிரமம் ஆகியவற்றை நிரபராதியிடம் காட்டியிருக்கிறீர். உமது மனைவியைக் கவர்ந்து சென்றவனுடன் ஆண்மையோடு போராடி உமது பராக்கிரமத்தை நிரூபிக்கவில்லை. நீர் மறைந்து நிற்காமல், தைரியமாக என் நேர் எதிர் வந்து நின்று போர் செய்திருந்தால் இந்நேரம் என்னால் கொல்லப்பட்டு எமலோகம் சென்றிருப்பீர். என் முயற்சி வீணாயிற்று. கண்ணுக்குத் தெரியாகத கரம் ஒன்றால் நான் கொல்லப்பட்டேன். இம் மாதிரிதான் உறங்கிக் கொண்டிருப்பவனைப் பாம்பு கடித்துக் கொல்லுகிறது. மீளா உறக்கத்தில் ஆழ்த்துகிறது. நீர் சுக்கிரீவனது சத்துருவைக் கொன்று அவனது அவலை நிறைவேற்றி விட்டீர். ஆனால் நீர், முதலில் என்னை நாடிவந்து, உமது மனத்திலுள்ள எண்ணத்தை என்னிடம் சொல்லியிருந்தால், ஒரே பகலில் நான் மைதிலியை உன்னிடம் கொண்டு வந்து சேர்த்திருப்பேன். ஆம், அவள் அடி ஆழ நரகத்தில் மறைக்கப்பட்டிருந்தாலும், அவள் இருக்குமிடம் தேடிச் சென்று, வெள்ளைக் குதிரை வடிவில் இருந்த வேதங்களைத் திருமால் மீட்டுக் கொண்டு வந்தது போல மைதிலியைக் கொண்டு வந்திருப்பேன். என் ஆத்மா இந்தக் கூட்டை விட்டுப் பறந்தபின், சுக்கிரீவன் அரசுக் கட்டிலில் ஏறுவது தான் நீதி. முறைமை. ஆனால் அரசனே! நீர் என்னை வஞ்சகமாகக் கொன்றது மிகப் பெரிய அநீதியாகும். என் இதயமே! அமைதி காண்பாயாக! இந்த பூமியில் விதி பேரரசு புரிகிறது. என்றைக்காவது ஒரு நாள் இறக்க வேண்டியது தான். ஆனால் நீர் உம்மைக் குற்றம் சாட்டுவோருக்குத் தக்க சமாதானம் சொல்ல வழி தேடும்.

வால்மீகி தன் இராமாயணத்தில், ”இராமா! என்னைக் கொல்வதற்காக அறம் திறம்பினாய்! நீ அறத்தை மீறியதால் நான் வீணே உயிரை இழக்கிறேன்! தன்னைக்

கொன்ற இராமனைத் துன்ப மார்க்கத்தில் திளைக்கும் தீயோன் என்றும், கபடத்தில் இன்பம் காண்பவன் என்றும், ஐம்புலன்களுக்கும் அடிமைப்பட்டவன் என்று ஏசுகிறான். வாலிக்கு, தனக்குத் நேர்ந்த கேட்டைப் பற்றியே கவலை, வருத்தம், துயரம் எல்லாம்! இந்தக் கேட்டைச் சூழ்ந்தவன் மீது எல்லையில்லாத கோபம் உண்டாகிறது. அந்தக் கோபம் வெறுப்பாக மாறுகிறது" என்று எழுதுகிறார்.

கம்பர், என்பால் எப்பிழை கண்டாய்? நீ ஏன் உனக்கு இழிவு தேடும் வகையில் என்னைக் கொன்றாய்? வாலி சாவை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தன்னைக் கொன்றதால் இராமனுக்கு உண்டான பலியைப் பற்றியே கவலை, வருத்தம் எல்லாம்! அறம் வளர்க்கும் கண்ணாளனே தருமம் தவறி விட்டானே என்று ஆத்திரப்படுகிறான்" என்று எழுதுகிறார்.

**சான்றாண்மையைப் புதுக்கிய செம்மல்**

குற்றம் புரியாத வாழ்வே நல்லோரின் கடமை. நவையற்றவர்க்கு யாருமிலர் என்றாலும், பழியை அஞ்சும் பெரியோர் தினையளவு குற்றம் செய்தாலும் அதைப் பனைத் துணையாகக் கருதி வருந்தித் திருந்துவர். தவிர, தம் குற்றத்தை உணராமல் பிறர் குற்றம் கடிதல் பிழை என்பதே சான்றோர் கருத்து.

வாலி இராமனை, மூவர் நீ, முதல்வன் நீ, என்று புகழ்வது உண்மை. தருமமே உருவமாய் உடையவன் என்று அவனைப் போற்றுவதும் உண்மை. ஆனால் இந்த புகழ்ச்சியில் இராமனது குறையை அவன் மறந்து விடவில்லை. சீதையைப் பிரிந்து நிற்கும் சூழ்நிலையில், இராமன் சாவதாமாகச் சிந்திக்காமல் உணர்ச்சி வேகத்தில் செயலாற்றக் கூடும் என்பதை வாலி அறிந்திருக்கிறான். மறுபுறத்தில் தன் தம்பி மதுவுண்டு மனம்

திரிந்து தீவினை புரியக் கூடுமென்பதையும் அவன் தேர்ந்து தெளிந்திருக்கின்றான். தம்பியின் குறையும் தலைவனது குறையுமாகச் சேர்ந்து, தம்பியின் உயிருக்கு உலை வைத்து விடுமோவென்று அவன் அஞ்சுகிறான். இராமனிடம் என் மீது ஏவிய பழியை ஏவி விடாதே? என்று வேண்டுகிறான். இராமன் வெகுளி கொண்டு தன் தம்பியைத் தண்டிக்கக் கூடாதென்றே வாலி வரும் முன் காப்போனாக வரம் வேண்டுகிறான்.

இலக்குவன் சுக்கிரீவனை இகழ்வாக நோக்கினான் போலும்! இத்தகைய அண்ணனைக் கொல்வித்தாயே பாவி என்று சபிக்கும் தோரனையில் பார்த்தான் என்பதை வாலி கண்டான் போலும். நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால் என்று தொடங்கி இன்னொரு வரம் கேட்கத் துணிந்த வாலி, இப்பொழுது இன்னொரு வரம் கேட்கிறான். முதலில் என்னைக் கொல்வதாக நீ வாக்குக் கொடுத்தாய். அதன்பின் என்னைக் கொல்வித்த பிழை என் தம்பியைச் சாராது, உடன்பட்ட பின்பு அவனைப் பழி சொல்வது அடுக்காது என்று வாலி கூறுகிறான்.

வாலி தன் மார்பிலிருந்து இராம பாணத்தைப் பறித்த பொழுது, குருதி வெள்ளம் பெருக்கெடுப்பதைக் கண்ட சுக்கிரீவன் ஆவி குலைந்து பூமியில் விழுந்தானல்லவா? அதன்பின் எழுந்திருக்கவே இல்லை. தன் நீண்ட கரங்களால் தம்பியை வாரி எடுத்து அணைத்துக் கொள்கிறான். கண்ணழிய அழுது கொண்டிருக்கும் தம்பியிடம் வருந்தலை என்று தேறுதல் கூறுகின்றான். உனக்கு உரைப்பது உறுதி ஒன்று உண்டு. அதைக் கேட்டு மனத்திற் கொண்டு நடப்பாயாக! என்ற பீடிகையுடன் தொடங்குகிறான். இராமனது தன்னேரில்லாச் சிறப்பை உணர்த்துவதற்கு ஏற்கொன்ற வலியே சாலும். இதற்கென்று

ஏது வேண்டா என்றும் எடுத்துரைக்கிறான். அத்தகைய இராமனுக்கு ஏவல் செய்வோர் முக்தி பெறுவது உறுதி என்பதை விளங்க வைக்கிறான். ஊழே உதவினால் யாதே அரிது என்று வினவிவிட்டு, ஒரு நிலைப்பட்ட சிந்தையுடன் இராமனுக்குத் தொண்டு புரிந்து இம்மை மறுமை இன்பங்களைத் துய்குமாறு அறிவுறுத்துகிறான்.

தந்தையின் பிரிவால் துயரத்தின் ஆழத்தைக் கண்டு துன்புற்ற இராமன், தன் வினையால் தந்தையை இழந்து நிற்கும் தனயன் புலம்பலை நோக்கித் தன்னையே நொந்து வெந்திருக்க வேண்டும். தன் தந்தையைக் கொன்றவன் எதிர் நிற்கக் கண்டும், அவனைச் சினந்தோ, நிந்தனை செய்தோ, அங்கதன் ஒரு வார்த்தை பேசவில்லை. இந்த பெருந்தன்மையே இராமனை வதைத்திருக்க வேண்டும். பல பல பன்னிப் புலம்பும் மகனை நோக்கித் துயர் மிகுதியால் வாயடைத்துக் கிடந்த வாலி, இறுதியில் பேசத் தொடங்கினான்.

நாயகன் இராமன் செய்த நல்வினைப் பயன் இது என்று தன்னை வதம் செய்தவனை உயர்த்திப் பேசினான். பிறத்தலும் இறத்தலும் தொன்றுதொட்டு இயல்பாக நிகழ்கின்றன என்பதைக் குறிப்பிட்டுத் தனக்கு நன்மரணம் வாய்த்திருப்பதாகப் பெருமை கொள்கிறான். இராமனே வந்து, தனக்கு வீடு பேற்றை நல்கி விட்டதாக மனமுவந்து சொல்கின்றான். நம்பிக்குத் தனயனின் மேன்மையை எடுத்துரைக்கிறான். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பது போல, அங்கதன் வயதில் சிறியவனாயினும், ஆற்றலிலும், சீலத்திலும் பெரியோன் என்பதை வாலி எடுத்துரைக்கிறான். அங்கதன் அரக்கர் கூட்டத்தை அழித்து

விடுவான். அவனை அடைக்கலப் பொருளாக அங்கீகரித்து அருள்புரியும்படி இராமனிடம் வேண்டுகிறான்.

இராமன் என்பவன் உன்னுயிர் கோடலுக்கு உடன் வந்தான் என்று அவள் எச்சரித்தாள். ஆனால் அவன் அதற்குச் செவி கொடுத்தானில்லை. இராமனுக்கு இயல்புஅல இயம்பி என் செய்தாய்? என்று அவளை வெகுண்டான். பெண்மையால் பிழைத்த பேதை என்று ஆடவனுக்குரிய அகந்தையுடன் அவளை ஏசவும் அவன் கூசவில்லை. அவள் வாக்கு மெய்யாகி விட்டது. தானே செய்த பிழையால் உயிர் பிரிகின்றான் வாலி. உற்ற கணவனுக்கு நேரவிருந்த ஆபத்தைத் தெரிந்திருந்தும், அவனைக் காப்பாற்ற முயன்றும், அந்த முயற்சி கைகூடாது போன கையறு நிலையில், கதவிருக்கிறாள் தாரை.

கணவன் இறந்தான் என்ற செய்தி கேட்ட தாரை ஓடி வந்து வாலியின் மார்பில் விழுந்து புரள்கிறாள். துவண்டு துடித்து, விம்மி வெதும்பிப் பின் ஓங்கிய குரலில் அரற்றுகிறாள். வாலியின் தோளான வரைமீது மலைக்குல மயிலான தாரை மகிழந்து வாழ்ந்தாள். இப்பொழுது அவள் கணவன் சவக் கோலத்தைக் கண்டு துன்பக்கடலில் விழுந்தவளாகத் தவிக்கிறாள். உயிர் நீங்கியபின் உடலுக்கு உய்தில்லை. ஆனால் ஆருயிர் கணவன் இறந்த பின்பும் தாரை மாயாதிருக்கிறாள். இதைக் கண்ட கணவன் தன்னை வெறுத்து வாய் பேசாதிருப்பதாக மயங்கி, அவள் மறுகுகிறாள். தனக்குச் சாவா மருந்தை அளித்தவன் என்பதையும் சிந்தியாமல் யமன் அவனது உயிரைப் பிரித்தானென்றால் யமன் நன்றி மறந்த அற்பனல்லாவா? என்று எண்ணுகிறாள்.

காதற் பாசத்தால் பிணிக்கப்பட்ட இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினரென்று அவர்கள் எண்ணியதுண்டு. விழுந்து கிடப்பது வாலி தானா என்ற ஐயமே அவளுக்கு உண்டாகிறது. வாலியை ஒரு வாளியால் பிளக்க முடியாதென்று கருதுகிறாள் அவள். இராமன், தன் ஓயா வாளியை ஒளித்து நின்று எய்யாமல்,

வாயால் ஏவினன் என்னின் வாழ்வெலாம்
ஈயா யோ? அமிழ் தேயும் ஈகுவாய்!

என்று தான் வருந்துகிறாள். அறத்தின் ஆறு எலாம் உலகுக்குக் காட்ட வந்தவன் என்று வாலி கூறியதை நினைவு கொள்கிறாள்.

தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ?

என்று வினவுகிறாள். பெண்மைக்குப் பெருமையாய்த் துலங்கும் தாரையின் அறிவு நுண்மைக்கும் சீலத் திண்மைக்கும் சான்றாக நிற்கும் இந்த வினாவை எழுப்பி இடர்ப்பட்டுச் சிந்தை கலங்காதவர் யாரே உளர்? இந்த கேள்வியுடள் தாரையின் புலம்பலும் ஓய்கின்றது. அவள் உணர்விழந்து செயலிழந்து கிடக்கிறாள். இதைக் கண்ட அனுமன், தாரையை அந்தப்புரத்துக்குக் கொண்டு செல்லுமாறு தாதிகளை ஏவிவிட்டு, இறந்த வீரனின் ஈமக் கடன்களை அங்கதனைக் கொண்டு செய்விக்கிறான். உயிர் ஒளியை இழந்த உடல் தீயின் ஒளியாக மாறுகிறது.

எத்தகைய மாவீரன் மாய்ந்து விட்டான். மெய்வலிக்கும், மனவிரிவுக்கும் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தவன். மல்லமரில் வல்லவன். மறலியும் சிரதலம் குலையச் செய்யும்

சூரன். தன்னேரில்லாக் கொடை வள்ளல். சிறந்த சிவபக்தன். அருமை மனைவியையும் இனிய மைந்தனையும் பெற்றுப் பொலிந்தவன். செங்கோன்மைக்குச் சிறப்புத் தேடித் தந்த செம்மல். பிறருக்கு நேர்ந்த பழியைத் தனக்குற்றதாகக் கருதி நாணிய மேலோன். தன்னிரக்கம் அறியாத் தீரன். தன்னலம் கடந்த மேலோன். எவ்வளவோ இனிய நீர்மைகளை மருவியிருந்த சான்றோன் இறந்துவிட்டான். இராமனது இணையடி போற்றிய தன்னடக்க சீலன். மண்ணிலே விண்ணகம் அமைத்து மன்பதை உய்யப் பகலும், இரவும் பாடுபடும் அறத்தின் மூர்த்தியாகிய இராமனே அவனை அம்பு விட்டுக் கொன்றுவிட்டான். பரிவு மிகுதியால் மெய் நடுங்க, உயிர் குலைய, உள்ளம் உருக, கண்கள் பணிக்க நாம் கதறுகிறோம்.

வாலிவதை, உயர்நிலையிலுள்ள ஒரு மேன்மகன், விதிக்கு விலக்கான விபத்துக்குள்ளாகி மாய்வதை விண்டுரைக்கும் சோகக் கதையாகும். இடியென்றும், மின்னல் என்றும், நோய் என்றும், எரி என்றும், சூறை என்றும் தற்செயலாக மனிதனைத் தாக்கி வீழ்த்தும் விபத்துக்களை அல்லாமல், மனிதர் செயல்களால் விளையும் அழிவையே வாலிவதை பொருளாகக் கொண்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

நானிலத்தில் பொல்லாதவர்களே அல்லற் படுவார்களென்றும் நல்லவர்கள் இன்பம் துய்த்து வாழ்வார்களென்றும் ஒரு கருத்து உலவி வருகிறது. இது மனிதனது விருப்பத்தைக் குறிப்பதே அல்லாமல், உண்மையை உணர்த்துவதாகாது. உலக நன்மைகாகப் பாடுபடும் தூயோர், துன்புற்றுத் தீமிதித்துத் தியாகம் பல புரிந்தே தமது குறிக்கோளை அடைகின்றனர். ஒருவன் நன்காராய்ந்து நல்லவர் நட்பைக் கொள்ளாமல்,

அவசரப்பட்டுத் தீயநட்பு கொண்டால், அவன் சாவதற்கு ஏதுவாய் துன்பத்தினை இந்த வினையாலேயே அடைவான் என்பதை உணராத வாலி, இராவணன் இரந்து நிற்பதைக் கண்டு இரங்கி அவனைச் சுற்றமாகக் கொண்டான். வன்துணை யாய வாலி, வலியன்கொல்? என்று அனுமனிடம் இராவணன் வினவியதிலிருந்தும்,

உந்தைஎன் துணைவன் அன்றே
ஓங்குஅறச் சான்றும் உண்டால்

என்று அங்கதனிடம் அவன் உரைத்ததிலிருந்தும், வாலி இராவண நட்பின் திட்பத்தைத் தேர்ந்து தெளியலாம்.

வாலியின் மனம் தூயது. ஆனால் அவனது குறை திருத்தத்துக்கு உரியது அல்ல. சமுதாயத்துக்குச் சாத்தானாக வாய்த்திருக்கும் இராவண ஆட்சியை அழிக்க, வாழ்வின் பிரவாகம் திரண்டு சொல்லுங்கால், இராவண சகவாசம் என்ற குற்றம் புரிந்து, தடை மதிலென இடைவந்து நின்கிறான் வாலி. தடைமதிலைத் தயவுதாட்சண்யமின்றித் தகர்த்தெறிவதைத் தவிர அறத்துக்கு வேறு வழியில்லை. எனவே, வாலி வதை நிகழ்கிறது.

குற்றம் என்று உணர்ந்து உள்நோக்கத்துடன் செய்வது ஒன்று. குற்றம் என்ற தெளிவு இல்லாமல் செய்வது இன்னொன்று. வாலி தெரியாமல் செய்த குற்றத்துக்காக மாய்கிறான் என்பதைக் கண்டு நாம் கண்ணழியக் கலுழ்கிறோம். கடல் கடைந்த தோளனோடு உடல்கலந்த தாரை பதறும் பொழுது, நாமும் கையறு நிலையில் கதறுகிறோம். சிறியன சிந்தியாதானான இந்திரன் செம்மலின் சீர்த்தி நேரத்திகளை உணர்ந்து கடைப்பிடித்துத்

தூயோராக உயரத் துடிக்கிறோம். துன்பியல் நாடகக் கலையில் வல்லவனாக விளங்கும் கம்பனது மாட்சிக்கே வாலிவதை சாட்சியாகக் காட்சி தருகிறது.

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 12**

**தொலைநிலைத் தொடர்க் கல்வி இயக்ககம்**

# புனைகதையும் உரைநடையும்

**காலம் 3 மணிநேரம்** **மதிப்பெண்கள் 75**

**அ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**

1. அப்பத்தா சிறுகதை உணர்த்தும் கதைக் கரு விளக்குக.
2. காஞ்சனை கதையில் பயம் சிந்தனைகளை விளக்குக.
3. ஆயிஷாவின் பண்புகளை விளக்குக.
4. பனிமனிதனின் சாகச நிகழ்வுகளை விளக்குக.
5. பிச்சிப்பூ கதையில் வரும் மூர்த்தியாரின் பாத்திரப் படைப்பை விளக்குக.
6. இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.
7. முருகனின் பொருளும் பொதுமையும் குறித்து எழுதுக.
8. தமிழ் உணவுமுறைகளைத் தொ.பரமசிவன் குறிப்பிடும் கருத்தை விளக்குக.

**ஆ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**

1. பாரதி கிருஷ்ணக்குமாரின் சிறுகதைகளின் தனிமனித உணர்வுகளை விளக்குக.
2. அறிஞர் அண்ணாவின் செவ்வாழைக் கதையில் உழைக்கும் மக்களின் வாழ்வியலை விளக்குக.
3. தொ.பரமசிவன் நாட்டார் வழக்காற்றியல் மரபுகளை விளக்குக.
4. உரைநடையின் தொடக்ககால வளர்ச்சி நிலைகளை நா.வானமாமலை எவ்வாறு விளக்குகிறார்?
5. சிறியன சிந்தியாதான் வாலி என்பதை எஸ்.இராமகிருஷ்ணன் கருத்தின்வழி விளக்குக.
6. ஆயிஷாவிற்கு மறுக்கப்படும் கல்விச் சூழலை விளக்குக.
7. முருகனின் இயற்கைத் தன்மைகளை திரு.வி.க. வின்வழி விளக்குக.
8. வனதேவியின் மைந்தர்களாக ராஜம் கிருஷ்ணனின் குறிப்பிடும் கருத்துநிலைகளை விளக்குக.

**பாடநூல்**


1. பாரதி கிருஷ்ணகுமார், அப்பத்தா, த ரூட்ஸ் பதிப்பகம், சென்னை.
2. சிந்தனைச் சிறுகதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. இரா.நடராசன், ஆயிஷா, பாரதி புத்தகாலயம், சென்னை.
4. ஜெயமோகன், பனிமனிதன், கிழக்கு பதிப்பகம், சென்னை.
5. பொன்னீலன், பிச்சிப்பூ, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. ராஜம் கிருஷ்ணன், வனதேவியின் மைந்தர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. திரு.வி.க., முருகன் அல்லது அழகு, சாரதா பதிப்பகம், சென்னை.
8. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
9. நா.வானமாமலை, உரைநடை வளர்ச்சி, மக்கள் வெளியீடு, சென்னை.
10. எஸ்.ராமகிருஷ்ணன், சிறியன சிந்தியாதான், பானு பதிப்பகம், சென்னை.


**பார்வை நூல்கள்**


1. க.கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், மக்கள் வெளியீடு, சென்னை.
2. தா.வே. வீராசாமி, தமிழ் நாவல் இயல், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
3. கார்த்திகேசு சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. சி.சு. செல்லப்பா, சிறுகதை பிறக்கிறது.

5. அ.சஜன், தலித்திய இயக்கமும் இலக்கியமும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

6. தொ.மு.சி. ரகுநாதன், இலக்கிய விமர்சனம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

7. த. ராசு, புதிய நோக்கில் படைப்பிலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

**முனைவர் மு.ஜெகதீசன்**

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை,

திருவள்ளுவர் கல்லூரி,

பாபநாசம் – 627 425,

திருநெல்வேலி மாவட்டம்.